

கல்கி
பொங்கல் மலர்
KALKI
17-1-1965
30 காசு



பிரிட்டானியாவின்
2 அழகான பரிசு-டின்கள்!
இதோ! பிரிட்டானியாவின் வண்ணமிகு வரிசையில் சேர்க்கப்பட்டிருக்கும் 2 டின்கள்—'ரோஸெஸ்'&'பொகே' இவற்றுள் நற்சுவை கொண்ட பலரக பிரிட்டானியா பிஸ்கட்டுகள் அடங்கியுள்ளன. சிறப்பு வாய்ந்த இவற்றை எல்லா விசேஷங்களிலும் நல்ல பரிசாக வழங்கலாம்; காலியான டின்களும் மற்றப் பொருள்களை வைத்துக்கொள்ள மிக உத்தம மானவை!
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள்
இப்பொழுது வெளிநாடுகளிலும் புகழ் பெற்றவை

கல்கி

பொங்கல் மலர்




பொருளடக்கம்

குரோதி தை 4 — ஜனவரி 17

தருமம் பொங்குக ! — 5
ராஜாஜியின் கருத்துக்கள் — 7
மொழியில்லாமல் பேச முடியுமா? — 10
ஜீவகீதம் — 16
கண்டதும் கேட்டதும் — 28
ஆலயத்தில் ஆதவன் — 33
கந்தன் கருணை — 38
தண்டபாணியின் தர்மம் — 48
ராஜயோகம் — 54
கயல்விழி — 58
இன்று புதிதாய்ப் பிறந்தோம் — 66
வேற்றுமை — 90
பாமினிப் பாவை — 99
குடும்ப கௌரவம் — 106
ஆதார நிலை — 116

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ஏதோ ஒரு குடை !



மலர் 24 ● இதழ் 25

தருமம் பொங்குக!

நாம் வாழும் இவ்வுலக முழுவதற்கும் உணவளிப்பவன் கதிரவன். நாம் உண்ணும் உணவை நல்கும் பயிர் பச்சைகளுக்குப் பசுமையைத் தந்து, அவற்றுக்கு நம்மைப் போஷிக்கும் சக்தியை ஊட்டுபவன் கதிரவனே. புலியும், சிம்மமும், புலால் உண்பவர்களும் எந்தப் பிராணிகளை உண்டு ஜீவிக்கிறார்களோ அப்பிராணிகளிடம் ஊட்டமளிக்கும் சக்தியிருப்பதற்கும் காரணம் அவை தழை செடிகளை உண்பது தான். ஆக உலக முழுவதிலுமுள்ள சகல ஜீவராசிகளுக்கும் அன்னம் அளிப்பவன் ஆதித்தன். நெருப்பில் வேக வைத்தால் நுண்ணிய உணவுச் சத்துக்கள் செத்துப் போகும்; பச்சையாகவே உண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நெருப்புக் கோளமாகிய மார்த்தாண்டன்தான் இந்த நுண்ணிய உணவுச் சத்துக்களை உண்டாக்கி அற்புதம் செய்திருக்கிறான். தான் எதனையும் உண்ணாமலே பிரபஞ்சம் முழுவதற்கும் உணவு சமைத்து அளிக்கிறான் அத்தியாக மூர்த்தி !

கனல் மயமாக இருக்கும் கதிரவன்தான் மலர்களின் மென்மையையும் கனிகளின் இனிமையையும் படைக்கிறான்; நிறம் கூற முடியாமல் பேரொளியாய்த் திகழும் பரிதிதான் பச்சிலைகளின் பச்சையையும் பரிமள புஷ்பங்களின் பற்பல வண்ணங்களையும் தருகிறான். ஒன்பது கோடி மைலுக்கு அப்பாலிருந்தே பிரகாசத்தைப் பிரவகிக்கும் அப்பகலவன்தான் நாம் புசிக்கும் பண்டங்களிலெல்லாம் போஷணைச் சக்தியாக நம்முள் புகுந்து நம்மை வளர்க்கிறான். நெருப்பாகிய அவனேதான் நமக்கு நீரையும் வழங்குகிறான்—கடலின் உவர் நீரைத் தன் கோடானு கோடி கிரணக் கரங்களால் தூக்கி உயரே எடுத்துச் சென்று, உவர்ப்பை நீக்கி, இனிப்பை ஊட்டி மழையாகப் பொழிவித்து உயிரினங்களை வாழ்விக்கிறான்.

கிருமிநாசினிகளில் சூரிய ஒளிக்கு இணையானது எதுவும் கிடையாது என்பதை நாம் அறிவோம். தேக ஆரோக்கியத்தை சூரியக் கதிர் எப்படி வளர்க்கிறது என்பதை அறிஞர்கள் கூறுகிறார்கள்.

காலம் காலம என்பதாக ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அதனை வருஷங்களாகவும், ரிதுக்களாகவும், மாதங்களாயும், வாரங்களாயும், நாட்களாயும் நாம் அளவுபடுத்தி அறிய உதவி புரிபவனும் ஆதித்தன்தான். அவனின்றி உலக வாழ்க்கை கிடையாது.

உலகத்து ஜீவராசிகளுக்கு இத்தனை அளப்பரும் உதவி புரிந்து ஜகமெங்கும் மணமும் சுவையும் பெருக்கும் ஆதவன் வெறும் பௌதிகமான ஜட வஸ்துவாக இருக்க முடியுமா? அல்லவே அல்ல என்று நமது முன்னோர்கள் கண்டார்கள். தூரதிருஷ்டிக் கண்ணாடியால் ஆராய்ந்து ஸயன்ஸ் நிபுணர்கள் சூரியனின் ஆற்றலைக் காண்கிறார்களென்றால், ஞானதிருஷ்டியால் கண்ட முனிவர்களோ அவனது அன்பைக்கண்டார்கள். அழகுகளையும் அருள்களையும் செய்கிற சூரியனை அன்புக்குரிய தெய்வமாகக் கண்டார்கள். சூரியன் மட்டுமில்லை; உலகிலுள்ள ஒவ்வோர் அணுவிலுமே அடங்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா

— பாரதியார்

யுள்ள அபரிமிதமான சக்தியை ஸயன்ஸ் நிபுணர் அறிவால் காண்பது போல், ஞானியர் தம் அன்பால் அச்சக்தி சார்ந்து நிற்கும் சிவத்தை — அன்பும் அழகும் கொண்ட ஆன்மாவை—அணுவுக்குள்ளும் கண்டார்கள். தங்களுக்குள்ளும் அதே ஆன்ம வஸ்துவைக் கண்டவர்களாதலால், தங்கள் இதயத்தைத் திறந்து கொண்டு பிரபஞ்ச சக்திகளிடம் அன்பு செலுத்தி உறவாடினார்கள்; பக்தி செய்து வழிபட்டார்கள். அப்போது ஸயன்ஸ் சூத்திரங்களுக்குப் பதிலாக உயிருள்ள மந்திரங்களும், கவிதைகளும், கானமும் பிறந்தன. இந்த அன்புக்கும் அழகுக்கும் பிரதியாக சூரியசந்திரரும், தாரகைகளும், விண்ணும், மண்ணும் பாரிலுள்ள சகல இயற்கைச் சக்திகளும் தங்கள் இதயத்தைத் திறந்து அவர்களிடம் அன்பைச் சொரிந்து அநுக்கிரகம் செய்தன; பௌதிகமான நலன்களை மட்டும் அளிக்காமல் ஆத்ம க்ஷேமங்களையும் அள்ளி அளித்தன. ஒவ்வோர் அணுவுக்குள்ளிருந்தும் பரமாத்மா நம் முன்னோருடன் பேசிப் பழகிப் பரிபாலித்தது. இவ்வாறு அகமும் புறமும் எங்கும் அவர்கள் பரம்பொருளைக் கண்ட போதிலும், பரம்பொருளைப் பிரதிதினமும் மூன்று வேளைகளிலும் உபாசிக்கும் போது, இவ்வுலக வாழ்வின் பெரும் ஆதாரமாகிய ஆதவனிலேயே நித்திய சந்நியத்தை வைத்துப் பார்த்து வழிபட்டார்கள்.

வானந்தம் மண்ணினந்தம் வைத்து
வைத்துப் பார்க்க எனக்கு
ஆனந்தம் தந்த அரசே பராபரமே

என்ற தாயுமானப் பெருந்தகை பாடியது போல் வானத்தில் திகழும் சூரியனில் தொடங்கி நாம் வாழும் மண்ணாகிய பூமி உள்பட எங்கும் ஈசுவர சக்தியை நினைத்துப் பார்க்கவே ஏற்பட்ட திவ்விய தினம் பொங்கல். புவியின் வட பகுதியில் சூரியனின் ஒளி அருள் அதிகமாகப் பாயத் தொடங்கும் சங்க்ராந்தி என்ற சுபதினமும், சூரிய நாராயணனின் அருளில் பூமாதேவி பெற்றெடுக்கும் பயிர்கள் முழுச் செழிப்புப் பெற்று அறுவடையாகும் பொங்கல் என்ற மங்கல நாளும் ஒன்று சேர்ந்து, விண்ணில் நின்று ரட்சிக்கும் அப்பனையும், மண்ணாக நம்மை ஏந்தும் அன்னையையும் நாம் ஒருங்கே தொழும் பாக்கியத்தை அளிக்கின்றன.

சமீபத்தில் நிகழ்ந்த உற்பாதங்களினால் மனம் குழம்பி இயற்கை சக்திகளைத் தொழவும் வேண்டுமா என்று குழம்ப வேண்டாம். பெய்யக் கூடாத இடத்தில் பெருமழை பெய்ததும், உணவுக்காக நாம் பரிதவிப்பதும் நம் பாபங்களுக்காகச் சூரியநாராயணனும், நிலமடந்தையும் தந்த தண்டனை என்று தெளிந்து பொங்கல் நன்னாளிலிருந்து தருமத்தைப் பழகத் தொடங்குவோம். தருமம் வளர வளரப் பயிர் பச்சையும் வளரும்; நம் உள்ளத்தில் அருள் சுரந்தால் வானமும் தேவையறிந்து பொழியும்.

தருமமும் அருளும் அரசில் நிலவினாலே மக்களிடமும் பரவும். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி அல்லவா? அரசில் அதருமம் பெருகினால் சமுதாய வாழ்விலேயே அவநம்பிக்கை ஏற்பட்டுப் போகிறது. ஒன்றுபட்டு வாழ்ந்த விவசாயியும், வியாபாரியும், பொது மக்களும் பேதப்பட்டு நிற்கிறார்கள். அதன்பின் கதிரவனும் நிலமகளும் எவ்வளவு அருள் புரிந்தாலும் நாட்டில் அன்னத்துக்குப் பஞ்சம்தான் உண்டாகும். நமது தவறுகளுக்காகவே நாம் அநுபவிக்கிறோம். சூரிய நாராயணனும் பூமிதேவியும் செய்யும் கிருபையில் ஏதும் குறையில்லை.

கதிரவனையும் புவியையும் சேர்த்து நினைக்கும் போது அந்த விஸ்தாரமான சித்திரத்தைப் பூர்த்தி செய்ய கோ மாதா வந்து நிற்பாள். சூரிய ஒளியில் ஸ்நானம் செய்தபடி, பூமியின் மீது பரவிய பசும் புல்லை மேய்ந்து, அதனை இன்னமுதப் பாலாக்கி, தான் பெற்ற கன்றுக்கு மட்டுமின்றி, உலகுக்காகவும் சுரக்கும் அன்னையான பசுவைப் பொங்கலின்போது வணங்குகிறோம். அவள் அளித்த அமுதத்தில் அரிசியை இட்டுப் பொங்க வைப்பதால்தானே இப்பண்டிகைக்கே பொங்கல் என்ற பெயர் ஏற்பட்டது? ஏரிலே பூட்டப் பெற்று அமைதியுடன் உழைத்து, வயல்களின் வளத்தை வெளிப்படுத்தி விளைச்சலுக்கு உதவும் மாடுகளுக்காக மாட்டுப் பொங்கல் படைக்கிறோம். சமூக விழாவாக மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழும் பொங்கல் விழாவின் போது உடன்பிறந்தோருக்காகச் சோதரிகள் நோன்பு செய்ய, சோதரர்கள் அவர்களுக்கு அன்பளிப்புத் தந்து, குடும்ப ஒற்றுமையை மதுரமாக்கிக் கொள்கிறார்கள்.

இதுபோன்ற புனிதமும், சுபமும், சௌந்தரியமும் செறிந்த நன்னாட்களின் போது இவற்றை நமக்கு அமைத்துத் தந்து, பிரபஞ்ச முழுதும் ஒரு குடும்பமாக வாழ வழி கண்ட முனிவர்களை வணங்குவோம். தன் மேனியைக் கிளறி அதனை உழுது விதைப்போருக்கு விளைச்சலை அருளும் புனித் தாயின் பொறுமையை நாமும் கடைப்பிடிக்க முயலுவோம். சகல ஜீவராசிகளுக்கும் பாரபட்சமின்றி ஒளி தந்து வாழ்விக்கும் சூரியநாராயணன் நம் அகவிருளை நீக்கியருள வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

செங்கதிர்த் தேவன்
சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்
அவன் எங்கள் அறிவினைத்
தூண்டி நடத்துக

என்று அமரகவி தமிழ் செய்து தந்த அமுத மந்திரத்தை ஜபித்து உலகத்துக்கு ஒரு தீபமான அந்த சூரியனுக்கும் அவனது பேரொளியை எந்தப் பரம்பொருள் அளிக்கிறதோ அந்தப் பரம்பொருளின் பேரருள் ஞாலம் முழுவதற்கும் கிட்டப் பிரார்த்திப்போம். மண்பாண்டத்தில் பால் பொங்குவது போல் நம் மனப் பாண்டத்தில் தருமம் பொங்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.



ராஜாஜியின் கருத்துக்கள்

சென்ற ஆண்டு அமெரிக்க தொலைக் காட்சிப் பெட்டி — டெலிவிஷனில் காட்டப்பட்ட சிலகாட்சிகளைக் கண்டு குருஷேவ் அவர்கள் இப்படியும் ஒரு கோரமும் ஹிம்ஸையும், அசஹ்யமும் உண்டா என்று அருவருத்துக் கொண்டார். 'இந்த வெறி உணர்ச்சிதான் உங்கள் தேசப் பண்பைப் பிரதி பலிக்கிறதெனில் உங்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று அமெரிக்க நிருபரிடம்கூறினார். 'இளைஞர்கள் இந்த ஆபாசக் காட்சிகளை மணிக் கணக்கில் பார்க்கிறார்களே! அவர்களுடைய பிஞ்சு மனத்துக்கு இதுதானா உணவு? இதுபோல் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை உங்கள் நாட்டில் காட்டிவிட்டு ஏராளமான இளம் குற்றவாளிகள் இருப்பதற்கு ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்?' என்று குருஷேவ் கேட்டார்.

தீமை என்பது ஒரே மொத்தமாக வருவதில்லை. ஆப்பின் கூரிய முனை மட்டும் முதலில் நுழைகிறது. பிறகு தடிமனான பகுதிகளும் உள்ளே புகுந்து முழு உற்பாதமும் செய்கிறது. டெலிவிஷனாகட்டும், சினிமாவாகட்டும் — இவை ஆரம்பித்தவுடனேயே தீமை என்ற கோடரி முனை உள்ளே புகுந்து விடுகிறது. காலக்கிரமத்தில் முழு ஆயுதமும் புகுந்து குருஷேவ் அருவருத்த ஆபாசப்போக்குமக்களை நன்றாகப் பற்றிக் கொண்டு விடுகிறது. அந்த நிலை அடையும் போது இனி இதை மாற்றியமைக்கவே முடியாது என்று விசனிப்பதை விட வேறு வழியில்லை.

✽

வீட்டு வேலைக்காரனாக இருந்து ஓய்வு பெற்ற ஓர் ஏழைக் கிழவன் சமீபத்தில் வட ஆர்க்காடிலிருந்து தன் மகளைக் காண்பதற்காகச் சென்னை வந்தான். அரிசிப் பஞ்ச காலத்தில் தன் ஏழை மகளுக்குப் பாரமாயிருக்கலாகாது என்பதற்காகச் சிறிது அரிசியைத் துணியில் கட்டிக்கொண்டு வந்தான். ஜில்லா எல்லை தாண்டி அரிசி கொண்டு வருவது குற்றம் என்று கூறி அந்த ஏழையின் அரிசியை போலீஸ் அதிகாரிகள் வழியில் கைப்பற்றி விட்டார்கள். மக்களைத் துன்புறுத்திப் பார்ப்பதிலேயே அதிகாரம் பெற்றவர்களுக்கு ஒரு திருப்தி.

ரேஷன் கடை அரிசியை யாரும் நாடுவதில்லை. வெளியில் தாராளமாகக் கிடைக்கிறது. ரஸ்தாக்களின் நடை பாதைகளிலே அரிசி வியாபாரம் நடைபெறுவதைத் தினப் பத்திரிகைப் போட்டோப் படங்களில் பார்க்கிறோம். அரிசிக்குப் பஞ்சமில்லை என்ற தைரியமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். சர்க்காரின் கட்டுப்பாடுகளும், தடைகளும்தான் மக்களின் துன்பத்துக்குக் காரணம். அந்தப் போக்கை விடாமலே ஏழைக்குடியானவர் உட்பட அனைவரையும் கஷ்டப் படுத்துகிறார்கள்.

✽

இந்தியாவும் பாகிஸ்தானும் ராணுவ ரீதியில் கூட்டுச் சேர்ந்து சீனாவை எதிர்க்க வேண்டும் என்று விரும்புகிற யாவரும் அயூப்கான் அவர்கள் மீண்டும் பாகிஸ்தான் அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதில் திருப்தி கொள்வார்கள். உள்நாட்டு அரசியல்களின் காரணமாக அவர் சமீப காலத்தில் எத்தகைய பேச்சுக்கள் பேச நேர்ந்திருந்தாலும், பாதுகாப்புத் துறையில் இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் இணைந்த ஒருகொள்கையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று நிச்சயமாக விரும்புகிறவர். சக்தி வாய்ந்த கடற்படையும் விமானப் படையும் கொண்ட சீனாவை எதிர்க்க வேண்டுமானால் மேல் நாடுகளின் உதவி அத்தியாவசியம் என்பதையும் அயூப் அவர்கள் அறிவார். தேர்தலை முன்விட்டு அவர் பின்பற்ற வேண்டியிருந்த கொள்கைகளையும், அவர் பேசிய பேச்சுக்களையும் மறந்து இந்திய சர்க்கார் அவருடன் நட்புக்கொள்ள முயல வேண்டும்.

✽

பழைய காலத்து ஏற்றக் கிணறுகளில் ஒரு கழியின் இரண்டு முனைகளில் இரண்டு குடங்களை இணைத்திருப்பார்கள். ஒரு குடத்தில் தண்ணீர் நிரம்பி அது கிணற்றுக்கு வெளியே வந்து நீரை இறைக்கும்போது மறு குடம் கிணற்றுக்குள் முழுகி நீர் மொள்ளும். இப்படியே மாறி மாறி ஒரு குடம் உள்ளும் மற்றது வெளியும் ஏறியிறங்கும். சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு அதிக கிராக்கிப்படி தருவதும் அதன் விளைவாகப் பண வீக்கம் பெருகி விலை உயர்வதும், விலை உயர்ந்தால் அதிகப்படி கிராக்கிப்படி உண்மையில் உதவாமல் போவதும் இரட்டைக் குடங்கள் போல் மாறி மாறி வரும். இதுதான் சம்பள உயர்வின் ரகசியம். பரிகாரமாகாது.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களை மட்டும் பாதுகாத்தால் போதுமா? மற்ற லட்சக் கணக்கான மக்களின் நிலை என்ன? அரசாங்க சிப்பந்திகளின் சம்பள உயர்வுக்காக அவர்கள் அதிகவரி செலுத்த வேண்டும். பண்டங்களுக்கு அதிக விலை தரவேண்டும்.

விலைகள் ஏறிவிட்டதற்குக் காரணம் கண்டு அந்தக் காரணங்களை ஒழிப்பதே யாவருக்கும் உண்மையாகச் செய்யும் உதவியாகும்.

என்ன சேதி?

துர்க்காபூர் காங்கிரஸ்

துர்க்காபூர் காங்கிரஸைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. வழக்கமான வருஷாந்திரச் சந்தைகள் போலவே இவ்வாண்டும் பெருத்த படாடோபத்துடன் ஒரு பயனுமின்றிக் கூடிக் கலைந்துவிட்டது. சர்க்கார் அதிகாரிகளும் சோஷலிஸ்டுகளாக (அதாவது ஆளும் கட்சிச் சார்புடையவர்களாக) இருக்கவேண்டும், வெளிநாடு செல்லும் ராஜ தூதர்கள் காங்கிரஸ்காரர்களாகவே இருக்க வேண்டும் என்பது போன்ற கருத்துக்கள் காங்கிரஸ் எனப்படும் கம்யூனிஸத்துக்குச் சில வெளிப்படையான சான்றுகள். செய்த தவறுகளில் ஒன்றுக்குக் கூடப் பச்சாத்தாபப் படாமலும், பரிகாரம் தேடாமலும் காங்கிரஸார் மகாநாடு நடத்தியது பரிதாபம். இந்தக் கூட்டத்தில் அணுவளவேனும் ஏதாவது நல்ல அம்சம் இருக்குமாயின் அது அணுகுண்டுத் தயாரிப்பில் இந்தியா இறங்கக் கூடாது என்ற தீர்மானம்தான்.

சமநீதி கிடையாதா?

ஹிந்தி ஆதிக்கம் எவ்வளவு உக்கிரமாக இருக்கும் என்பதற்கு ஓர் உதாரணம்:

மத்தியப் பிரதேசத்தில் இந்தோரில் உதவி ஜில்லா மாஜிஸ்டிரேட்டாகவுள்ள ஸ்ரீ தூபே அவர்கள் ஒரு விண்ணப்பம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது என்பதால், ஹிந்தியில் இருந்தால்தான் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று கூறி அவ்வழக்கை அனுமதிக்க மறுத்துவிட்டார்.

ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ததன் பேரில், மேல் கோர்ட்டார் ஸ்ரீ தூபேயின் தீர்ப்பை ரத்துச் செய்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நியாயம் கிடைக்க ஹைகோர்ட் வரை போக வேண்டியதாயிற்று.

ஜான்ஸனின் அழைப்பு

அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜான்ஸன் அவர்கள் ருஷ்யத் தலைவர்களை அமெரிக்காவுக்கு வருமாறு அழைத்திருப்பது உலக சமாதானத்துக்கு ஒரு நல்ல சமிக்ஞை. தற்போது ருஷ்ய அரசாங்கத்தார் தங்களுடைய பொருளாதார சித்தாந்தத்தில் பல மாறுதல்கள் செய்து வருகிறார்கள். என்றாலும் அதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ருஷ்யத் தலைவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று அந்நாட்டின் அபிவிருத்தியை நேரில் காண்பது மிக நல்லது.

நிபுணரின் எச்சரிக்கை


நில உடைமைகளைத் துண்டு போட்டுச் சிறு சிறு சொத்துக்களாகப் பிரித்ததன் மூலம் காங்கிரஸுக்கு அதிக வோட்டுக்கள் கிடைத்திருக்கலாம். 'இடைத் தரகர்களை ஒழிப்போம்' என்று கிளம்பியதாலும் காங்கிரஸ் கட்சிக்கு அதிக ஆதரவு கிட்டியிருக்கலாம். ஆனால் இந்த நடவடிக்கைகளால் உற்பத்திக்கு எவ்வளவு குந்தகம் நேர்ந்துள்ளது என்பதை அனுபவத்தில் காண்கிறோம். இதனைப் புகழ் பெற்ற பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் சமீபத்தில் விளக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறார். நில உடைமைகளைத் துண்டு போட்டதாலும் இடையில் நிற்கும் விவசாயிகளை அப்புறப்படுத்தியதனாலும் நிர்வாகத் திறனில்லாதவரிடமும் மூலதனமில்லாதவர்களிடமும் விவசாயத் தொழில் வந்து விட்டது. இதுவே உணவுப் பிரச்னைக்குக் காரணம் என்று அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார். கட்சிச் சார்பு எதுவுமில்லாத பொருளாதார அறிஞரின் எச்சரிக்கையைக் காங்கிரஸ் கூட்டத்தினர் கவனிப்பார்களா?

அட்டைப்பட விளக்கம்

அட்சய பாத்திரம்

கௌரவருடன் சூதாடி, நாடிழந்து, தாரத்துடனும் தம்பியருடனும் வனம் வந்து விட்ட தருமபுத்திரரை அஸ்தினாபுரத்து வேதச் செல்வர்கள் பின்தொடர்ந்து வந்துவிட்டனர். காட்டிலும் பாண்டவருடன் வாழ்ந்து அவர்களது துயரத்தைத் தணிக்கும் திவ்விய சரிதங்களைக் கூறி அவர்களுக்காகப் பிரார்த்திப்பதே அந்தணர்களின் நோக்கம். ஆனால் அவர்களாலேயே தரும புத்திரருக்குப் புதுத் துயரம் நேரிட்டது. 'அதிதிகளாகிய அவர்களுக்குத் தன்னால் அன்னமிட இயலாமல் வறியவனாகப் போய்விட்டோமே; அவர்களாகவே அன்றோ தங்கள் உணவைத் தேட வேண்டியதாயிற்று?' என மனம் வருந்தினார் தருமர். அவரது வருத்தம் தீர தௌமிய முனிவர் ஓர் உபாயம் கூறி உபதேசம் செய்தார். அதன்படியே தருமபுத்திரரும் நீரில் நின்றபடி சூரியனைத் துதித்து மந்திரம் ஜபித்தார். சூரியபகவான் பிரசன்னமானான். அன்னமளிக்கும் அமுதசுரபியாகிய அக்ஷய பாத்திரத்தைத் தருமராஜனுக்கு வழங்கி யருளினன்.

இக் காட்சியையும்; இந்நாட்டு மாதரின் உபசரணைப் பண்பு மிளிர, அக்ஷய பாத்திரத்திலிருந்து தேவி திரௌபதி தவ முனிவருக்கு உணவு படைப்பதையும் ஓவியர் வினு இம் மலரட்டையில் தீட்டி, செயற்கைப் பஞ்சத்தில் மனம் சாம்பிய நம் எல்லோருக்கும் புது உற்சாகமூட்டுகிறார்.



மொழியில்லாமல் பேசமுடியுமா?

'இந்தக் காலத்தில் கர்ப்பவாசத்தின் போதே நாஸ்திக உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது' என்று ஒருவர் அறுபது ஆண்டுகளுக்கு முன் எழுதினார். அறுபது ஆண்டுகளுக்கு முன் ஸயன்ஸ் ஒன்றே பரமசத்தியம் என்று உலகம் நம்பியது போல் இன்று நாம் ஸயன்ஸைப் பூரணமாக நம்பவில்லை. எனவே, அதிர்ஷ்டவசமாக அன்றைக்கு இருந்த அளவு இன்று உலகில் நாஸ்திகம் இல்லை.

ஆயினும், இவ்வுலகில் புனித இந்தியாவின் தெற்குப் பாகத்தில் இன்றைக்கும் சில அரைகுறைப் படிப்பாளிகள் புனிதமாகக் கருதப்படும் எல்லாவற்றையும் மறுத்து வருகிறார்கள். அரைகுறைப் படிப்புக்கூடப் பெறாத தலைவர்கள் அந்த அரைகுறைப் படிப்பாளிகளுக்குச் செய்து வரும் போதனையின் விளைவு இது. சமய ஆசாரங்களைப் பார்த்து, 'இதெல்லாம் தவறு; அர்த்தமில்லாதது' என்று நாஸ்திகம் பேசும் போது, அதற்குக் காரணம் என்ன என்றே அவர்கள் யோசிப்பதில்லை; ஆனாலும் வெகு திடமாக மறுக்கிறார்கள். பக்தியிலும், பூஜையிலும், சமய வழிபாட்டுச் சடங்குகளிலும் பொருளே இல்லை என்று அவர்கள் எண்ணுகிறார்கள். சில சமயங்களில் அவர்கள் 'பெரிய மனசு' செய்து எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மகாசக்தி இருப்பது உண்மைதான், அது எல்லாப் பொருள்களிலும் உறைந்து இயக்குவிப்பதும் உண்மை என்று ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் இதைப்பற்றிப் பகுத்தறிவால் ஆராய்ச்சி செய்வதற்கு மேல், அந்த மகாசக்தியை ஒரு சமயக் கிரமப்படி வழிபட வேண்டிய அவசியத்தை அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. நாம் உள்பட, உலகம் முழுவதையும் இயக்கும் சக்தியோடு நாம் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு தான் வழிபாடு என்று அவர்கள் உணரவில்லை. அந்த வழிபாடே தருமத்தின் காப்பு என்பதை உணரவில்லை.

எல்லாவற்றிலும் ஒரு பெரும் சக்தி வியாபித்து இயக்குகிறது என்று ஸயன்ஸின் வழியில் ஒப்புக் கொள்கிறவர்கள் இன்னும் சிறிது சிந்தனை செய்தால், அறிவால் கிரகிக்க முடியாத அந்த சக்தியை இந்த அற்புதமான அழகிய உலகிலுள்ள சகல வஸ்துக்களிலும் வழிபாட்டின் மூலம் கிரகிக்கலாம் என்று காண முடியும். கல்லும், மரமும், சித்திரமும், சிலையும், இவற்றைவிட சூக்ஷ்மமான மானசிகச் சிந்தனை உருவங்களும் சர்வ வியாபகமான சக்தியை வழிபட உதவும் என்பதை நாஸ்திகர்களும் சிறிது ஆராய்ந்தால் உணர முடியும்.


உருவ வழிபாட்டைக் கேலி செய்பவர்கள் அதன் பொருளை மனத்தில் வாங்கிக் கொள்ள வேண்டும். பிரதிமைகளின் முன்பும், சித்திரங்களின் முன்பும், மற்ற சங்கேதங்களின் முன்பும் ஒரு ஹிந்து வணங்கும் போது அவன் அவற்றின் மூலம் சர்வ வியாபகமான சக்தியையே வணங்குகிறான். எவ்வாறு நாஸ்திகம் பேசுபவர்களும் தங்கள் தலைவர்களின் படங்களை வைத்து மரியாதை செய்வது அந்தப் படம் எழுதிய காகிதத்துக்கல்ல, தலைவருக்கே சேரும் என்று நினைக்கிறார்களோ, அவ்வாறே ஆஸ்திகர்கள் விக்கிரகத்துக்குச் செய்யும் வழிபாடு அந்த விக்கிரகம் குறிப்பிடும் பரம்பொருளுக்கே உரியது. பிரதிமையைக் கடவுளுக்கு மாறான ஒரு சக்தியாக எண்ணி பக்தர்கள் வழிபடுவதில்லை. பூதக் கண்ணாடியில் ஒளியை ஓரிடத்தில் குவிக்கும் மையப் புள்ளி (focus) போல், அவரவரது சமய சித்தாந்தங்கள் கூறும் உண்மைகளை ஒருமுகப்படுத்திப் பரம்பொருளின்பால் செலுத்தும் புனிதமான மைய ஸ்தானமே அவரவரும் வழிபடும் மதச் சின்னங்கள்.

விக்கிரக ஆராதனையை மறுப்பவர்களும் வழிபாட்டுக்காக ஒரு கோயில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கோயிலே சின்னமாகிறது. இல்லாவிடில் வேறு ஏதாவது சின்னம் பரம்பொருளின் அடையாளமாக உள்ளது. புனிதமான சமயக் கிரந்தத்தையே பரம்பொருளின் சின்னமாகப் பூஜிப்பதும் உண்டு.

சின்னம் என்கிற பேச்சும், அதன் அவசியத்தைப் பற்றிய வாதமும் ஒரு புறம் இருக்கட்டும். விக்கிரகத்தையும் இதர ஸ்தூல அடையாளங்களையும் வெறும் சின்னம் என்று மட்டுமே ஏன் எண்ண வேண்டும்? எங்கும் நிறைந்த சர்வ வியாபகமான சக்தி

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

யானது பக்தன் வழிபடும் விக்கிரகத்தில் மட்டும் இல்லையா? ஆண்டவன் 'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்' இருக்கிறான், ஆனால் பக்தன் தனது நிறைந்த நம்பிக்கையையும் அன்பையும் பொழிகிற மூர்த்தியில் மட்டும் இல்லை என்று சொல்வது முறையா? இப்படிச் சொல்வது அறிவின்மை மட்டுமல்ல, அரக்கத்தனமுமாகும். நாம் காண்கிற பௌதிக உலகில் உள்ள சின்னஞ்சிறு அணுவிலும் உறையும் பரம்பொருளின் பராசக்தி, நமது மனத்தில் எழுகிற மிக மங்கிய சிந்தனைச் சித்திரங்களிலும் உறைகிறது. ரிஷிகள் தந்துள்ள வருணனைகளின்படி நம் மனத்தில் நாம் உருவாக்கும் திவ்வியமான நாம ரூபங்களிலும் அந்தச் சக்தி நிச்சயமாக உறைகிறது. எனவே, இதெல்லாம் சின்னம் என்று சொல்வதால் முழுஉண்மையும் சொன்னதாகாது.



❀ ❀ ❀

சமய வழிபாடு என்ற பொதுக் கருத்தின் அவசியத்தை உணர்வதோடு, தனித் தனிச் சமய வழிபாடுகள் எவ்வளவு அவசியம் என்பதையும் நாம் உணரவேண்டும். தங்களுடைய மக்களை நல்ல சமய நம்பிக்கையுடன் வளர்க்க விரும்புகிறவர்கள் அவர்களை ஹிந்து சமயாசாரப்படியோ, அல்லது கிறிஸ்துவ மதம், இஸ்லாம் முதலிய ஒரு தனிப்பட்ட மத வழக்கப்படிதான் பயிலுவிக்க வேண்டுமே யன்றி, எல்லாவற்றுக்கும் பொதுவான மத உணர்வு என்பதை நேரடியாக ஊட்ட முடியாது. சமய உணர்வு வேண்டுமானால் இந்தக் கட்டுப்பாட்டை ஏற்றுத்தானாக வேண்டும். வேறு வழியில்லை. ஒருவருக்கு நாம் அழகை ரஸிக்கும் உணர்ச்சியை ஊட்ட வேண்டுமானால் 'அழகு' என்ற பொதுவான ஒரு தத்துவத்தைப் பற்றிக் கூறி அவரை அதில் ஈடுபடுத்த முடியுமா? அந்த அழகைத் தேக்கி வைத்திருக்கும் தாமரையையும், மல்லிகையையும், கோபுரங்களையும், மங்களமான பெண்களையும் அவர் போற்றுமாறு செய்வதே அழகுணர்ச்சிக்குப் போதனையாகும். 'தாமரையும், மல்லிகையும், கோபுரமும், சுமங்கலிகளும் வேண்டாம்; அவை அழகைத் தனித்தனி அம்சங்களாகப் பிரிப்பவை; அவற்றை வெறுத்து, அழகுத் தத்துவம் என்ற பொது உண்மையை ரஸியுங்கள்' என்று நாம் சொல்வோமா? இது போலத்தான் எந்தத் தனிசமயமும் இல்லாமல், பொதுவான சமய உணர்வைப் பெற முயல்வது. தத்துவ சூக்ஷ்மங்களை மட்டுமே மதிப்போம் என்று சொல்லி அவற்றைச் சாதகன் தியானிப்பதற்கு உதவும் ஸ்தூல சாதனங்களைப் பழிப்பது அறியாமையும், அகம்பாவமுமாகும். பாரத தேசத்தில் பிரத்தியட்சமாக வாழ்கிற மக்களிடம் அன்பு கொள்ளாமல், 'பாரத தேசத்திடம் மட்டுமே அன்பு கொள்கிறேன்' என்று சொன்னால்அதில் பொருள் உண்டா? தனித் தனியாக நாம் காணும் பிரத்தியட்ச அம்சங்களை மனத்தில்இசைத்துப் பார்த்து ஒருமைப்படுத்துவதன் மூலமே 'பொது உண்மையை' உண்டாக்குகிறோம். எனவே 'பொது உண்மையை மட்டும் போற்றுவேன்; அதனைத் தேக்கியுள்ள தனித் தனிப் பொருள்களைப் பொது உண்மைக்கு விரோதமாக எண்ணி ஒதுக்குவேன்' என்று கூறுவது சரியான தர்க்கமல்ல. உஷத்கால வானம் பலப்பல வருணங்களைத் தரிக்கிறது; அந்த வருணச் சாயல்களே நேத்திரானந்த உணர்ச்சியை அளிக்கின்றன. 'வானத்தையும் வருண பேதங்களையும் ஒதுக்கி வைத்துக் காலை அழகு என்ற ஒன்றை மட்டுமே கண்டு ஆனந்தமடைவேன்' என்றால் முடியுமா?

அவரவரும் தமது சமயத்துக்கு உண்மையாக இருத்தல் வேண்டும்; அதன் வழிபாட்டுக்கிரமத்திலுள்ள அம்சங்களைப் பின்பற்றி, அதன் மூலம் அந்த அம்சங்கள் குறிப்பிடும் பொது உண்மைகளைக் கிரகிக்க வேண்டும் — மக்கள் யாவரும் மத உணர்வுடன் இருக்க வேண்டுமானால் இது ஒன்றே உபதேசம். பல மதஸ்தர்கள் சேர்ந்து வாழும் தேசத்தில் அவர்கள் யாவரும் சமய உணர்ச்சி குன்றிப் போயிருக்கும் போது இதொன்றே தர்ம வாழ்வுக்குத் தலைசிறந்த உபதேசம். ஒவ்வொரு மதத்தினரும் பிற மதத்தினரிடம் இதையே கூற வேண்டும். இயற்

கைப் பொருள்களுக்குப் பதிலாக ரஸாயனச் சேர்க்கையின் மூலம் பல பொருள்களை ஒன்று சேர்த்துக் கலவை செய்வது போல், பற்பல மதங்களிலிருந்து சில அம்சங்களைச் சேர்த்துப் புது ரஸாயன மதம் செய்ய முடியாது. தத்துவ ரீதியில் செய்கிற அத்தகைய செயற்கை மதம் இதயத்துக்குகந்த சாரம் ஏதும் இன்றி வெறும் கபந்தக் கலவையாக நிற்கும். அட்டவணைப் பட்டியல் போலவும், அரசாங்க நமூனா போலவும் உள்ள அத்தகைய மதத்தினால் எவரும் ஆத்மானுபவத்துக்கு ஊக்கம் பெற முடியாது.



ரஸாயன மதங்கள் தத்துவ ரீதியில் சிறிது அறிவு புகட்டலாம். ஆனால் சமயம் என்பது அறிவுக்கும் அப்பாற்பட்டதை உணர்த்தவே ஏற்பட்டது. சித்தாந்தங்களைக் கற்பிப்பதால் அறிவூட்டுகிறோமேயன்றி, சமயத்தை ஊட்டவில்லை. அறிவு மட்டுமின்றி, எண்ணம், உணர்ச்சி, செயல் இவையாவற்றின் இயல்புகளும் அழகாக இணைந்த வாழ்க்கையின் முழுமையைப் பிரதிபலிப்பதே மதம். பகுத்தறிவினால் சில உண்மைகளை ஆராய்ந்து ஏற்பதோடு நில்லாமல், தர்ம உணர்வுகளையும் கலை உணர்வுகளையும் நன்நோக்கங்களையும் நம்பிக்கைகளையும் ஒருவன் பெற்று அவற்றின் மூலம் தன் நடத்தையையும், முழு வாழ்வையும் உருவாக்கிக் கொள்வதே உண்மையான சமய போதனை.

உலகில் உள்ள முக்கியமான மதங்களில் ஹிந்து மதம் ஒன்றிலேயே 'எல்லா மதங்களும் ஆண்டவனிடம் இட்டுச் செல்லும் பல மார்க்கங்கள்' என்பது ஒரு பிரதானமான கொள்கையாக உள்ளது. அவரவர் தமது மதத்தைப் பின்பற்றினாலும், யாரும் பிற மதத்தைப் பழிக்காமல், எல்லா வழிபாட்டு முறைகளையும் ஒரே போல் கருத உதவும் கொள்கை இது. ஹிந்து மதத்தைப் போல் மற்ற எம்மதமும் இவ்விஷயத்தை விசேஷமாக வலியுறுத்தவில்லை. அதற்குச் சரித்திர பூர்வமான காரணங்கள் உண்டு. காரணம் யாதாயினும், ஹிந்து மதத்தின் விசாலப் பான்மை ஈடிணையற்றது. இது காரணமாகவே ஹிந்து எவனும் மற்ற மதஸ்தர்களையும் அவரவர் மதத்தில் ஈடுபடுத்த முடியும். இந்த விசால மனப்பான்மை விட்டுக் கொடுக்கும் சுபாவத்திலோ, சுயமதத்தில் அசிரத்தையாலோ பிறந்ததல்ல. புனித சத்தியத்தை அநுபவித்த நம் முன்னோர்கள் அந்த சத்தியத்தை உண்மையான சிரத்தையால் வேறு விதங்களிலும் அடைய முடியும் என்று கண்டறிந்தே இக்கொள்கையை உருவாக்கினார்கள். எனவே, ஹிந்துக்களின் நிருவாகத்திலுள்ள கல்வி நிலையங்களில் எல்லா மாணவர்களின் மதங்களையும் போதிப்பதில் சிரமம் ஏதுவும் இல்லை. 'எல்லா மதத்தையும் ஒரு போல் மதிக்க வேண்டும்' என்பதை ஹிந்து மதம் அநுமதிப்பதோடு மட்டுமின்றி, அந்தக் கொள்கையை ஹிந்துக்கள் அனைவரும் நிச்சயமாகப் பின்பற்ற வேண்டும் எனவும் விதிக்கிறது.

ஃ ஃ ஃ

ஈசுவரனின் ஸ்வரூபமென்ன என்பது விடைகாணாத நிரந்தரக் கேள்வியாகும்.

இல்லதும் உள்ளதும் அல்லது
அவன் உரு எல்லை
இல் அந்நலம் புல்கு பற்றற்றே

என்று நம்மாழ்வார் பாடியதற்குமேல் சொல்வதற்கில்லை. நமக்குத் தெரிந்தவற்றுக்கும், நமது கற்பனைகளுக்கும் அப்பாற்பட்டது அவனது உருவம்; நல்லனவாக எவை இருந்தாலும் அவை யாவற்றுக்கும் அவனே நிலை என்ற ஒன்றை ஈசுவர லக்ஷணமாகக் கொள்வோம்; வேறு ஆசையின்றி அவனைப் பற்றிக் கொள்வதாலே அவனை உணரலாம் என்று ஆழ்வார் உபதேசிக்கிறார். உருவத்தில் அவனைப் பூரணமாகக் கிரகிக்க முடியாது என்று கூறிய நம்மாழ்வாரும் மக்கள் வழிபடும் ஆலயங்கள்தோறும் சென்று அர்ச்சாவதார மூர்த்திகளின் மீது தமது ஆன்மாவின் அன்பைப் பாடல்களாகப் பொழிந்தார்.

'எல்லையில்லாத நலம்' என்று ஆழ்வார் சொன்னபடி, உலகில் நல்லனவாக எவை உள்ளனவோ — அழகாக எவை உள்ளனவோ — அவை யாவும் ஆண்டவனின் ஓர் அம்சத்தைத் தம்முட் கொண்டவையே. பொருட்களின் நன்மை பயக்கும் ஆற்றலும், அழகும் அவனிடமிருந்தே வந்தவை. பெரு நன்மையும் பேரழகுமான ஆண்டவனை நாம் அநுபவிக்க வேண்டுமாயின், நம்மைச் சூழ்ந்துள்ள நல்ல, அழகிய பொருட்கள் எல்லாவற்றுக்கும் நமது அன்பையும் மதிப்பையும் அர்ப்பணிக்க வேண்டும். இவ்வாறு நம்மைச் சூழ்ந்துள்ள அழகும், நன்மையும் நிறைந்த பொருட்களில் மதத்தை விட உயர்ந்தது எது உண்டு? பேரழகும் பெரு நன்மையுமான ஆண்டவனை மனத்



def



def
PROUD OF YOUR WASH!
Swastik

தில் நிறுத்திக் கொள்வதற்காகவே நன்மையும் அழகுமாகக் கலந்து பெரியோர் தந்த மதச் சின்னங்களை நாம் அன்புடன் போற்ற வேண்டும். மக்கள் நீண்ட காலமாக வழிபட்டு வரும் சின்னங்களுக்குத் தெய்வத் தன்மை இல்லை என்று மறுத்து விட்டு, நாம் ஆராய்ச்சிகள் மூலம் காணும் எண்ணங்களாகிற மானசிகச் சின்னங்களை அவற்றினிடத்தில் நிறுவுவதில் அர்த்தமில்லை. பல்லாயிரம் ஆண்டுகளாகப் பலகோடி மக்களுக்கு ஆழ்ந்த சிரத்தையும் பக்தியும் தந்த ஆலயங்களும், புராணங்களும், கதைகளும், சமய நூல்களும் வேண்டாம் என்று தள்ளி, நமது புது ஆராய்ச்சிகளாலும், நம் மனத்தின் ஓட்டத்தில் எழும் மங்கிய புது மூர்த்தங்களாலும் தெய்வத் தன்மையை நிலைநாட்ட முடியுமா? 'சின்னம்' என்று சொல்லப்படுவதற்கு உள்ள தெய்வத்தன்மையும், சக்தியும் அவற்றின் மீது சாதகன் செலுத்தும் சிரத்தையில் உண்டானதே. எண்ணற்ற மக்களின் சிரத்தையைப் பெற்ற சமயச்சின்னங்களைக் காட்டிலும், மத உணர்வு என்று பொது உண்மைக்குச் சிறப்பான சாதனம் நம்மால் உற்பத்தி செய்ய முடியாது.



சிரத்தையே சாதகனை ஆன்மாநுபவத்துக்கு அழைத்துச் செல்கிறது என்பதால்தான் ஹிந்து மதமானது, யார் எந்த மதத்தில் ஒழுகினாலும், சிரத்தையுடன் பின்பற்றினால் அவன் பரம்பொருளை அடைவான் என்று கூறுகிறது.

'நம் மதம் ஒன்றேயல்லவா இவ்வாறு கூறுகிறது? மற்ற மதங்கள் ஒவ்வொன்றும் தான் மட்டுமே சத்திய அநுபவத்தைத் தருவதாக அல்லவா கூறுகின்றன?' என்று ஹிந்துக்கள் எண்ணி, பிற சமயங்களைத் தாழ்வாக எண்ணலாகாது. 'நம் வழி தெய்வத்திடம் நிச்சயமாக அழைத்துச் செல்லும்' என்ற கருத்தின் மீதே மற்ற மதங்கள் அவ்வாறு கூறுவதாகக் கருதி, இதுவும் பக்தியின் ஓர் உருவமே என்று உணர்ந்து அவற்றிடம் சகிப்புத்தன்மையும் மரியாதையும் காட்ட வேண்டும்.

ஃ ஃ ஃ

தனி மதம் எதையும் சேராமல் பொதுவான மத உணர்வு வேண்டுமென்கிற அறிவாளிகளுக்கு மீண்டும் சொல்கிறேன்: எந்த மொழியையும் பேசாமல் ஒரு பொது மொழியைப் பேசவேண் என்று கூற முடியுமா? ''எந்த ஒரு தனிப்பட்ட பாஷையும் பேசாமல், பொதுப்படையாகப் பேச முயல்வது எவ்வளவு இயலாத காரியமோ அதே போன்றதுதான் எந்த ஒரு சமயத்தையும் பின்பற்றாமல் பொதுவான ஒரு மதத்தைப் பின்பற்ற முயல்வது'' என்று ஸண்டாயனு என்ற அறிஞர் கூறியது முற்றிலும் உண்மை. 'எல்லோருக்கும் பொதுவாகச் சங்கீதம் இல்லையா?' என்று சிலர் ஆட்சேபிக்கலாம். சிறிது யோசித்தால் இந்த ஆட்சேபனை சரியில்லை என்று புரியும். சங்கீதத்தினால் எத்தனை பேருக்கு, எந்த அளவுக்கு எண்ணங்களைத் தெரிவிக்க முடியும்? எல்லா மக்களுக்காகவும் ஏற்பட்ட மதமானது சங்கீதத்தைப்போல ஓரளவுக்குச் சென்றால் போதுமா? இசையிலும் மொழி விஷயம் எப்படியானாலும், ராகம் என்று ஒரு தனி அம்சம் உண்டு. இன்னவொரு ராகத்தையோ, குறிப்பிட்ட சில ராகங்களை ஒன்றன்பின் ஒன்றாகவோ ஒருவர் பாட முடியுமேயன்றி, ராகம் என்ற தனி உருவம் இல்லாமல் சங்கீதம் என்ற பொதுத் தத்துவத்தை மட்டும் பாடிக் காட்ட முடியுமா? 'எனக்குத் தனித் தனி ராகங்கள் பிடிக்காது; பொதுவான இசைப் பண்பே பிடிக்கும்' என்கிறவர் ஆராய்ச்சியாளராக இருக்கலாம், சங்கீத ரஸிகராக மாட்டார்.

ஃ ஃ ஃ

மக்களுக்கு நன்னெறிகளை ஊட்டி, நிலைப்படுத்துவதற்குத் தெய்வ நம்பிக்கையும், மதமும் அவசியமில்லையென்று சிலர் நினைக்கிறார்கள். முகம் பார்க்கும் கண்ணாடிக்குப் பிரதிபலிக்கும் சக்தி தருவது எது? அதன் கீழ் பூசப்பட்டுள்ள தகரமும் பாதரஸமுமே. அந்தப் பூச்சு தேயத் தொடங்கினும் சிறிது காலம் வரையில் கண்ணாடியைப் பயன்படுத்தலாம். பூச்சு முழுவதும் போய் விட்டால் கண்ணாடி முகம் காட்டாது. ஆண்டவனும், மதமும் வேண்டாம் என்று விட்டால் மக்கள் அந்தப் பயனற்ற கண்ணாடியே ஆவர்.



ஜீவகீதம்

ஜெகசிற்பியன்



அத்தியாயம் ஒன்று

அநாமதேய சகாயர்கள்

செவிக்குச் சுவையான ஓர் இசைக்கோலமிட்டபின் கம்பீர ஓசையாகப் பதினொரு முறை முழங்கி ஓய்ந்தது, சென்னைமா நகராட்சி மன்றத்தின் மணிப் பொறி.

ஓய்வு என்ற பெயரில் சோம்பலையும், பொறுப்பின்மையையும், உல்லாச உணர்ச்சிகளையும் ஊக்கிவிட்டு மனித சக்தியை வீணடிப்பதற்கென்றே பிறந்து மாய்ந்த ஒரு ஞாயிற்றுக் கிழமையை அடுத்து, 'விழித்திரு, உழைத்திரு, பசித்திரு' என்னும் வாழ்வின் நித்திய கோஷத்தை நினைவுறுத்துவதற்காகப் பிறந்த ஒரு திங்கட்கிழமை.

அந்தக் கிழமையின் பெருமையைத் தானும் உணர்ந்தாற்போல் ககனக் கூரையை நோக்கி வெகு வேகமாகச் சுழன்றேறிக் கொண்டிருந்த கதிரவன் அன்று சற்றுக் கடுமையாகவே வெங்கனலை வாரி வீசிக்கொண்டிருக்க, அவ் விறுவிறுப்பான முற்பகலில், விரிந்து பரந்த சென்னைப் பட்டணம் எத்தனை சுறுசுறுப்பாகவும்

பரபரப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கும் என்பதற்கோர் ஒட்டுமொத்தக் காட்சியாக, அதன் கேந்திர பீடமான ரிப்பன் மாளிகை அப்போது விளங்கியது.

இரட்டை வாயில்கள் கொண்ட உயரமான மதில் சுவரின் உட்புற ஓரத்தே வெட்டித் தறித்த குட்டைச் செடிகள் குடை குடையாக வளர்ந்திருக்க, அவற்றினடியாகத் தொடங்கி மாளிகை முகப்புவரை மூன்று இட்டுக்களாகப் பிரிந்து சென்ற பச்சைப் பசும் புல்வெளிகளில் வனப்பமைய வளர்க்கப் பெற்ற வண்ண மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்க, அப் புல்வெளி வட்டங்களின் நடு நடுவே—எதிர்முகமாகவும் வலப்புறமாகவும்—கொள்கையில் வேறுபட்டுச் சேவையில் ஒன்றுபட்டு உயர்ந்து மறைந்த வீரப் பெரியோர் மூவர் செப்புச் சிலா வடிவங்களில் நிற்க, அவர்களைப் பிரதட்சிணம் செய்வதுபோல் 'உள்' வாயில் வழியே விநாடிக்கொரு காராக விரைந்து வருவதும், 'வெளி' வாயில் வழியே நகர்ந்து செல்வதுமாக இருக்க, அந்த 'உள்ளே', 'வெளியே' வாயில்களின் போக்குவரத்து விதிகளைக் கொஞ்சமும் சட்டை செய்யாமல் அவசரப் பரபரப்புடன் ஜனங்கள் உட்பிரவேசிப்பதும் வெளியேறுவதுமாக இருக்க, அப்படி வெளி வாயில் வழியே உள்ளே வந்து கொண்டிருந்த ஒரு தடித்த மனிதரை நோக்கி, வலப்புறப் புல்வெளி வட்டத்தின் மையத்தே புது மெருகுடனும் புன்னகை தவழும் முகத்துடனும் கம்பீரமாக நின்றிருந்த தேசபக்த வீரர் சத்தியமூர்த்தி சிலையின் நீண்ட நிழலில் படுத்துக் கிடந்த ஓர் இளைஞன் சடாரெனத் துள்ளியெழுந்து ஓடி வந்தான்.

இளமைக்கும் வாலிபத்துக்கும் இடைப்பட்ட 'ஆபத்தான — அநுதாபத்துக்குரிய' பருவம். இருபத்திரண்டு வயசு மதிக்கலாம். நோஞ்சலான மெலிந்த உடம்பு. கொஞ்சம் உயரமான வளர்ச்சி. மஞ்சள் நிறம். கவலை தேங்கிய நீண்ட முகமானாலும் அதிலே அளவோடு பொருந்திய கூரிய நாசியும், ஒளி வீசும் கண்களும், மெல்லிய உதடுகளும், குவிந்த மோவாயும் ஒரு கவர்ச்சியை இழைத்துக் காட்டின. சாதாரண வெள்ளைச் சட்டை, வெள்ளைப் பைஜாமா. காலில் ஒன்றுமில்லை.

இப்படி விளங்கிய அவ்விளைஞனைத் தொடர்ந்து, விக்டோரியா பப்ளிக் ஹாலுக்கும் ரிப்பன் மாளிகைக்கும் இடையேயுள்ள குட்டையான மதில் சுவரின் மேல் வரிசையாக உட்கார்ந்திருந்த ஐந்தாறு வாலிபர்கள் ஏதோ இரையைக் கண்டு விட்ட பருந்துகள் போல் கீழே குதித்துப் பாய்ந்து வந்தார்கள்.

''என்ன சார்! லைசென்ஸ் பணம் கட்டணுமா ?''

''வீட்டு வரியா சார்?''

''பி.பி. அட்வைஸா, சார் ?''

''வாங்க சார், நான் 'செலான்' எழுதித் தாரேன்!''

ஏக காலத்தில் அந்த ஐந்தாறு வாலிபர்களும் தம்மைச் சூழ்ந்து கொண்டு கையைப் பிடித்து இழுக்காத குறையாகக் கூவியழைத்ததைக் கேட்டுத் தயங்கிப் போய் நின்றார் தடித்த மனிதர்.

அவருக்கு இது புது அநுபவமல்ல; ஒவ்வொரு முறை வீட்டு வரி கட்ட வரும்போதும் இப்படி அவர்களின் வழி மறிப்புத் தொல்லைக்கு உள்ளாகிப் பழக்கப்பட்டவர்தாம். ஆகவே, அவர்களைப்பற்றி அவர் ஓரளவு தெரிந்தே வைத்திருந்தார்.

எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை படித்துவிட்டுப் பல் வேறு காரணங்களால் மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமலும், படித்த படிப்புக்கு ஏற்றதொரு நிலையான வேலை கிடைக்காமலும் இந்த நகர மன்ற அலுவலகத்தை நாளெல்லாம் வலைய வந்து கொண்டிருப்பவர்கள் அவர்கள். இங்கேதான் அவர்களது வாயையும் வயிற்றையும் நனைத்துக் கொள்வதற்கு வழிகாட்டி வைத்திருந்தான், அவர்களையெல்லாம் இட்டமுடன் இன்னபடி என்று எழுதிப் படைத்துவிட்ட ஆண்டவன்!

அது என்ன வழி?

தருமமிகு சென்னை மாநகரின் இந்த ஆட்சி மன்ற அலுவலகத்தில் என்னதான் அஷ்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்களாயிருந்தாலும் தங்களுக்கு ஆகவேண்டிய காரியத்தை அத்தனை எளிதாகச் சாதித்துக்கொண்டு போய் விட முடியாது. 'சென்றோம், வென்றோம்' என்று எதிர்பார்த்து வந்தால் ஏமாற்ற மடைவார்கள். குறைந்த பட்சம் ஒரு முக்கால் நாள் பொழுதையாவது வீணே தத்தம் செய்யத் தயாராயிருக்க வேண்டும். அத்துடன் இங்கே அந்தந்த இனத்துக்கெனப் பணம் செலுத்த அதனதன் விதிப்படி 'செலானை' நிறைவு செய்ய வேண்டுமானால் வெறும் படிப்பறிவு இருந்தால் மட்டும் போதாது; அதற்கென்று ஒரு தனிப் பயிற்சியே வேண்டும். மெத்தப் படித்துக் கிழித்தவர்கள்கூட இரண்டு


தங்கப்
பதக்கம்
பெறத் தகுந்தது!
Bata

மூன்று செலான்களைப் பிழைபட எழுதி எழுதிக் கிழித்துக் கசக்கிப் போட்ட பிறகுதான் ஒன்றைச் சரியாக நிறைவு செய்து முடிப்பார்கள். படித்தவர்களின் நிலையே இதுவானால், படிக்காதவர்களுடைய கதி? அவர்கள் அங்கே அந்தச் செலான்களை வாங்கி வைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்து விழிக்கிற விழி இருக்கிறதே. அது காணக் கிடைக்காத ஓர் அற்புத சோகக் காட்சியாகும்.

எப்படியோ 'செலானை' நிறைவு செய்து கொண்டாலும் பிறகு அததற்குரிய இலாகாக் கிளார்க்குகளைக் கண்டு பிடித்து அவர்களிடம் கையெழுத்து வாங்குவதற்குள் பாதி உயிர் போய் விடும். அப்புறம் பணம் கட்டும் கவுண்டருக்குப் போனால் அங்கே செலானைப் பரிசோதிக்கும் இடத்தில் ஒரு பெரிய நீண்ட 'க்யூ'வைக் கடந்து அதனைச் செல்லுபடியாக்கி விட்டு மீண்டும் மற்றொரு 'க்யூ'வில் புகுந்து இடிபட்டு, நெரிபட்டு, ஜேபியையும் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டு முன்னேறிப் பணத்தைக் கட்டவேண்டும். இங்கேயும் ஒரு பிரச்னை தலை தூக்கும். — அதாவது, ஒன்பது ரூபாய் தொண்ணூற்றாறு பைசாவுக்குப் பத்து ரூபாயாகக் கொடுத்தால், 'சில்லறை இல்லை, மாற்றிக் கொண்டு வா' என்று வெகு அலட்சியமாக உத்தரவு பிறக்கும். இதையும் ஒருவாறு சமாளித்துவிட்டாலும் பிறகு கட்டிய பணத்துக்குரிய ரசீது கைக்கு வந்து சேர மணிக்கணக்கில் காத்துக்கொண்டிருக்க வேண்டும்.

இம்மாதிரியான சங்கடங்களை ஓரளவேனும் சமாளித்து மீண்டு வர ஒரே வழி, அங்கே தோன்றாத் துணையாக வட்டமிட்டுக் கொண்டிருக்கும் இந்த 'ஆபத்சகாயர்'களிடம் போய்த் தஞ்சமடைந்து விடுவதுதான்!

'நமக்குள்ள குறைகளையெல்லாம் ஆண்டவனிடம் ஒப்படைத்து விட்டு நாம் நிம்மதியாக இருந்து விட்டால் நடப்பதெல்லாம் சரியாகவே நடந்து விடும்' என்று பெரியவர்கள் சொல்வதில்லையா? அது மாதிரி இந்த 'அநாமதேய சகாயர்'களிடம் நமது பணம் செலுத்தும் காரியத்தை ஒப்படைத்து விட்டால் அவர்கள் வெகு அழகாகவும் கச்சிதமாகவும் செலானை நிறைவு செய்து, அதில் எங்கெங்கே யார் யாரிடம் கையெழுத்து வாங்க வேண்



டும் என்ற தகவல்களைக் கூறி, அவற்றைச் சாதித்துத் தரக் கூடிய வித்தகர்களையும் பிடித்துக் கொடுத்துவிடுவார்கள். இவை யெல்லாவற்றுக்குமாகச் சேர்த்து அவர்களுக்கு அளிக்க வேண்டிய 'வட்டம்' இரண்டணாவோ நாலணாவோதான். சில சமயங்களில், இரு சாராருடைய சாமர்த்தியத்தைப் பொறுத்து இந்தத் தொகை கூடவோ குறையவோ செய்யலாம். ஏமாந்தவன் தொடையில் கயிறு திரிப்பது என்பது ஒரு நல்ல 'கலை' அல்லவா?

திகைத்து நின்ற தடித்த மனிதர் தம்மைச் சமாளித்துக்கொண்டு அழுத்தமான சிரிப்புடன் தலையாட்டியவாறே அங்கிருந்து மேலே நடக்க முற்பட்டார்.

முதலில் ஓடி வந்து சற்றுத் தொலைவிலே ஒதுங்கி நின்று கொண்டிருந்த இளைஞன், ''வாங்க சார், நான் செலான் எழுதித் தாரேன்!'' என்று மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தான்.

அவனுக்கு முன்னால் அந்த மனிதரை வளைத்துக்கொண்டு சென்ற மற்ற வாலிபர்கள் அத்தனை பேரும் சடாரென்று திரும்பி அவ்விளைஞனை எரித்துவிடுவது போல் முறைத்துப் பார்த்தனர்.

''யாருடா இவன், நம்ம பொழைப்பிலே வந்து கைவைக்கப் பார்க்கிறான்?''

''நாங்களே இங்கே டிங்கடிச்சுக்கிட்டுக் கிடக்கிறோம், இவன் வேறு வந்துட்டான் போட்டிக்கு!''

''போடா தம்பி, போ! மரியாதையாய்ப் போயிடு; வீணா உடம்பைக் கெடுத்துக்காதே!''

கோபமும் பயமுறுத்தலுமாக வீசப்பட்ட இந்த வசை மொழிகளைக் கேட்டு முகம் தொங்கித் தயங்கி நின்ற இளைஞன் அந்தத் தடித்த மனிதரைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தான். ஆனால் அவரோ அங்கு நடந்த ஜீவாதார உரிமைப் போராட்டத்தைக் கொஞ்சமும் இலட்சியம் செய்யாமல் மேலே நடக்கலானார்.

''இந்தக் கயிலாத்துப் பசங்களே இப்படித்தான்; வருகிற மனுசனை வழிமறிச்சுப் பேஜார்ப்படுத்தி விடுவான்கள்!... நீங்க வாங்க, சார்! நான் ஐஞ்சு நிமிஷத்திலே எல்லாத்தையும் முடிச்சுக் கொடுத்திடறேன்'' என்றவாறு மற்றொரு வாலிபன் அவரைப் பின்தொடர்ந்தான்.

''டேய், கோவிந்தா! போடா அப்பாலே! என்னைத்தான் அவர் வரச் சொன்னார். என்கிட்டேதான் அவர் எப்பவும் எழுதிக்கிறது வழக்கம். போடான்னா!'' என்று அவனை இடித்துத் தள்ளிவிட்டு முன்னால் பாய்ந்தான் இன்னொருவன்.



''அப்பனே! எனக்குச் செலான் எழுதிக்கொள்ளத் தெரியும்; உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போ!'' என்று அலட்சியமாகச் சொல்லிக் கொண்டே வேகமாக நடந்தார் பருத்த மனிதர்.

''சரியான சாவுக் கிராக்கிடோய், இது!'' என்று பின்னால் நின்ற வாலிபனொருவன் விசித்திரக் குரலில் கூறிக் 'குபுக்'கென்று சிரித்தான்.

வரி கட்ட வந்தவருடன் சற்றுத் தூரம் சென்றவன் 'இனிப் பயனில்லை' எனத் தெரிந்து கொண்டவனாய்ச் சட்டென்று திரும்பி, ''எவன்டா அந்த முந்திரிக் கொட்டை! முதல்லே வந்த கிராக்கியை முன்னாடிப் போய் வழிமறிச்சுட்டானே! கழுத்தாம்பட்டையிலே ரெண்டு வச்சுத் துரத்துங்கடா அவனே!'' என்று ஆத்திரத்துடன் சீறிச் சினந்தவாறு பாய்ந்து வந்தான்.

அடுத்த கணம் அவனது பிடரிமேல் ஓர் இரும்புக் கரம் படாரென்று வந்து விழுந்தது. ''இன்னா தொரை! உனக்கு மட்டும்தான் இந்த வேலை எழுதிக் கொடுத்திருக்குதா? இல்லே, நீ மட்டும் தான் இதுக்கு ஸ்பெஷலா லைசென்ஸ் கிலிசென்ஸ் வாங்கியிருக்கிறயா? என்னமோ உங்கப்பன் வீட்டுக் கிராக்கி பறி போயிட்டது மாதிரி அவனைப் போய் டபாய்க்கிறயே?'' என்று அடித் தொண்டையில் மிக மிக நிதானமாகவும் அலட்சியமாகவும் கேட்டுக் கொண்டே அவ்வாலிபனின் பிடரியை ஓர் அழுத்து அழுத்தித் தன் பக்கமாக இழுத்துத் திருப்பினான் ஒரு புதிய இளைஞன்.

அவனுக்கு வயசு இருபத்தி நான்கு இருக்கும்; குள்ளமான உருவம். உறுதி வாய்ந்த உடற்கட்டு; கரிய நிறம்; உருண்டை முகம்; அதில் வயசுக்கு மீறிய ஒரு வாலிப முரட்டுக் களை. உப்பிய கன்னங்கள்; தடித்த உதடு; செவ்வரி படர்ந்த சிறிய கண்கள்; நேர் வகிடு எடுத்துப் படிய வாரிய சம்மர்கிராப் தலை. புயலே அடித்தாலும் அது கலையாது; பூச்சி பொட்டுக்கள் புகுந்து கொண்டால் வெளியே வருவது சிரமம். பாரத நாட்டின் புகழ் பெற்ற கோயில்கள், ஸ்தூபிகள், வாயில்கள், சமாதிகள் முதலானவற்றின் அழகிய சித்திரங்கள் அச்சிட்டவினன் ஸ்லாக் சட்டை; நீல நிற நீளக் கால்சராய்; சிங்கப்பூர் ஸ்லிப்பர்—என்று இவ்வாறு ஒரு நீக்ரோ இனத்தவன் போல் தோற்றமளித்த அந்தப் புதிய இளைஞனின் பேய்ப் பிடியால் பொறி கலங்கித் தள்ளாடிய வாலிபன் திமிறித் தலை நிமிர்ந்தான். மறு கணமே அவனுடைய சப்த நாடியும் தளர்ந்து போய்விட்டது.

இதற்குள் மற்ற வாலிபர்கள், ''டேடேய்! யாருடா அவன்? யாருடா அவன்?'' என்று கேட்டுக் கொண்டே அங்கு ஓடி வந்தனர்.

அவர்களைச் சிறிதும் சட்டை பண்ணாத அந்த முரட்டு இளைஞன், ''ஏன்டா, பொழைக்கத் தெரியாத பயலே! இளிச்சவாயன் எவனாவது அம்பிட்டுக்கிட்டா அவனை ஒரேயடியா ஏறி மேய்ச்சுடலாம்னு முண்டாவை மடக்கிக்கிட்டு வந்துட்டியாடாங்க, சோமாறி!'' என்று அமர்த்தலாகக் கேட்டுக் கொண்டே தனது இடது கையை ஒரு 'ஸ்டைலா'கச் சுழற்றி ஓங்கினான்.

''அடடே! நம்ம நச்சி வாத்தியாரா? நான் யாரோ எவனோன்னுலே நினைச்சுப்பிட்டேன்!'' என்று குழைச் சிரிப்புடன் கூறிக்கொண்டே அந்த முரட்டு இளைஞனின் கையைத் தாவிப் பிடித்த ஒரு நோஞ்சலான வாலிபன், ''கோய்ச்சுக்காதே, வாத்தியாரே! நான் சொல்றதைக் கேளு!'' என்றவாறு பின்னால் திரும்பி, ''டாய், தாமு! நீ அப்பாலே போடா... போடான்னா!'' என்று தன் சகாவை முழங்கை முட்டியால் இடித்தான். பிறகு சட்டென்று நிமிர்ந்து, ''இன்னா, பிரதர்! இங்கே இன்னா நடந்துச்சு, ஏது நடந்துச்சுன்னு கண்டுக்காமயே கபால்னு நடுவிலே வந்து பூந்துட்டியே?'' என்று அவன் தோளில் கை போட்டான்.

வெகு அலட்சியமாகத் தன் தோளைச் சரித்து அவனது கையைத் தட்டிவிட்டுச் சற்றே நகர்ந்து சென்ற முரட்டு இளைஞன், தன்னையே வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்ற அந்த அப்பாவி இளைஞனை நோக்கி ஏதோ கண் சாடை காட்டி விட்டுத் திரும்பி, ''எல்லாம் நான் கவனிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன் தொரை! இப்ப நீ இன்னா சொல்றே?'' என்றவாறு தன் கால் சராய் ஜேபிகளைத் தட்டித் தடவிச் சிகரெட் பெட்டியொன்றையும், சிகார் லைட்டையும் எடுத்தான்.

இதற்குள் அங்கு மலைத்து நின்று கொண்டிருந்த புதிய இளைஞன் நகராட்சி மன்றத்தை நோக்கி மெல்ல நழுவிச் சென்றான். அவன் சென்றதை அவனுடைய 'எதிரிகள்' யாரும் கவனிக்கவில்லை; அவர்கள் கவனமெல்லாம் அந்த முரட்டு இளைஞனின்மீதே லயித்திருந்தது.

அத்தியாயம் இரண்டு

பேனா கண்டான்!

பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்க மாட்டாத ஒரு வாலிபன் தனது சகாவைப் பார்த்து, "யோவ்! யாரய்யா, அந்த ஆளு? அவன் கிட்டே போய் என்னமோ பெரிய ஞாயம் பேசிக்கிட்டிருக்கிறயே? அவனுக்கு இவன் என்ன வக்கீலா?" என்று கடுகடுத்த குரலில் கேட்டான்.

முரட்டு இளைஞனின் முகத்தில் கோபச் சிரிப்பு வெடித்தது. வாயாலோ அல்லது கையாலோ அவனுக்குச் சரியான பதில் கொடுக்கத் தயாராகிறவன் போல் தலையை ஆட்டிக் கொண்டே சிகரெட்டை வெகு நிதானமாகப் பற்ற வைத்தான் அவன்.

இந்தச் சமயம், தியாகராயரின் சிலைக்குப் பக்கவாட்டில் ஒரு பேபி டாக்ஸி வந்து நின்றது. அதிலிருந்து ஐந்து பேர்கள் அவசரமாக இறங்கினர். டிரைவரும் கீழே இறங்கி நின்றான். மீட்டர் கருவி ஒரு டஸ்டர் துணியால் மூடிக் கட்டப்பட்டிருந்தது.

எல்லாரும் இறங்கியபின் நடுத்தர வயதான ஒருவர் மிகவும் சாவதானமாக இறங்கினார். பார்வைக்கு எளிமையான தோற்றம்தான். வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, கழுத்தில் மப்ளர், கையில் ஒரு தோல் பை. ஆனாலும் அவர் முகத்தில் படீரென்று வந்து குடியேறிய மிடுக்கும் செருக்கும் அவரை ஒரு பெரிய புள்ளியாகத் தூக்கிக் காட்டின. அதற்கு ஏற்றாற்போல் அவரது பார்வையும் மேல் நோக்கியே மிதவையிட்டது.

சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு திரும்பிய முரட்டு இளைஞன் அவரைத் தொலைவில் பார்த்ததும் தன் தடித்த உதடுகளில் தொங்கிய சிகரெட்டைச் சட்டென்று இடது கையால் பிடுங்கிப் பின்னால் மறைத்துக்கொண்டு வலது கையால் சலாம் போட்டவாறு ஓரடி முன்னால் சென்றான்.

"யாரு, மிஸ்டர் நச்சியா? எங்கே ஆளையே காண்பதில்லை?" என்று ஓர் அலாரிப்புச் சிரிப்புடன் உரத்த குரலில் கேட்டார் அந்த மப்ளர்காரர்.

"இருக்கிறேன் சார்! உங்களைத் தான் இப்போ அடிக்கடி பார்க்க முடிகிறதில்லை" என்று மெல்லச் சிரித்துக் கொண்டே சொன்னான் நச்சி.

"படா, ஆளாச்சே நீ!.... சரி, சரி; சாயந்திரமா நம்ப வீட்டுப் பக்கம் வர்றியா? ஒரு விஷயம் பேசணும்; மறந்துடாம வாடா!"

"நேரமிருந்தா வரப் பார்க்கிறேன்; இல்லேன்னா ஒரு டாக்ஸி எடுத்துக்கிட்டு நீயே வந்துடு! இன்னா, வர்றியா, மச்சான்?"

முதலில் அந்த மப்ளர்காரரிடம் சிகரெட்டை மறைத்துக் கொண்டு சலாம் வைத்து, 'சார்' பட்டம் போட்டு மரியாதையாகப் பேசிய அவன் பிறகு அவரை ஏக வசனத்தில், 'மச்சான்' உறவுமுறையோடு விளித்ததை அவரோ அவரது சகாக்களோ பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் அவ்விளைஞனைச் சுற்றி நின்றுகொண்டிருந்த 'அநாமதேய சகாயர்கள்' அதை உன்னிப்பாகக் கவனித்து ஒருவரையொருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர். 'எந்தப் படியால் அளக்கப்படுகிறதோ அதே படியால் திருப்பி அளக்கப்படும்' என்கிற தத்துவ வாசகம் அவர்களுக்குத் தெரியாதா என்ன?

மப்ளர்காரருடன் வந்த ஒருவர் தம் ஜேபியிலிருந்து வெகு சிரமப்பட்டு ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து டாக்ஸி டிரைவரிடம் அலட்சியமாகக் கொடுத்து விட்டு, நகர மன்றத்தினுள் செருக்கும் மிடுக்குமாகப் பிரவேசித்துக் கொண்டிருந்த மப்ளர்க்காரரின் பின்னால் விரைந்து சென்று ஐக்கியமாகிக் கொண்டார்.

டாக்ஸிமீது ஒருக்களித்துச் சாய்ந்தவாறு அவர்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த டிரைவர், "ஊரை அடிச்சு உலையிலே போடற கேப்மாறிங்க!" என்று உள்ளார்ந்த சினத்துடன் முணுமுணுத்துக் கொண்டே நிமிர்ந்து, மீட்டர் கருவியைச் சுற்றிக் கட்டியிருந்த துணியை அவிழ்த்து உதறித் தன் தோள்மீது போட்டுக் கொண்டான். மூன்று பேர் மட்டுமே பிரயாணம் செய்ய வேண்டிய அந்தப் பேபி டாக்ஸியில் — அவ்விதியை ஒரு சிறு துண்டுத் துணி மூலம் அடித்துச் சாய்த்து விட்டு — ஐந்து பேரை ஏற்றிக் கொண்டு வந்து விட்டதற்கு எதிர் பார்த்த குறைந்தபட்ச கட்டணம்கூடக் கிடைக்கவில்லையென்றால் அவனுக்குக் கோபம் வராமல் இருக்குமா? தன் கோபத்தையெல்லாம் அந்த டாக்ஸியின் மேல் காட்ட முற்பட்டவன்போல் அதை முரட்டுத்தனமான வேகத்துடன் ஓட்டிக்கொண்டு வெளியேறினான்.

இந்தச் சிறு நாடகத்தை வெகு சுவாரசியமாக ரசித்துப் பார்த்துக்

கொண்டிருந்த நச்சி, "அவனைப் போய்க் கேப்மாறி என்கிறான் இந்த டாப்மாறி! இவன் செய்த 'குல்மால்' வேலைக்கு அவன் காட்டின 'கமால்' வேலை ஞாயந் தானே? அதுவே நாமாயிருக்கட்டும்—மூணு பேரோடு நாலாவதாக ஒரு குழந்தைப் பின்னே இருந்தால்கூட 'ஓவர் லோடு' ஏத்த முடியாது'ன்னு கையை ஆட்டிப்பிட்டுப் போயிடுவான்!" என்று முகத்தைப் பல்வேறு கோணங்களில் முறுக்கி முறுவலித்துத் தனக்குத்தானே பேசிக் கொண்டவன் சட்டென்று திரும்பி, "அது சரி; நீ முந்தி இன்னு சொன்னே பிரதர்? அவனுக்கு நான் வக்கீலான்னு கேட்டே இல்லே?" என்றவாறு அந்த அநாமதேய சகாயனை நோக்கி நடந்தான்.

"இரு வாத்தியாரே! நான் சொல்றதைக் கேளு, வாத்தியாரே!" என்று



பதறிக் கொண்டே நடுவில் பாய்ந்த நோஞ்சான் வாலிபன் அவனை அப்படியே அணைத்துப் பிடித்து அப்பால் தள்ளிக் கொண்டு போய் நிறுத்திவிட்டு, "என்னப்பா, நச்சி! என்ன இன்னைக்கு இப்படிக் கோவம் வருது உனக்கு? காலம்பற நாஸ்தா கீஸ்தா பண்ணலியா?" என்று கேட்டான் பயந்த சிரிப்புடன்.

"போவ்! யாரைப் பார்த்து இந்தக் கேள்வி கேட்கிறே? இப்ப நீ வர்றியா, பாயாவோட பரோட்டா வாங்கித் தாரேன்!" என்று அலட்சியமாகச் சொல்லித் தன் கால்சராய் ஜேபியிலிருந்த சில்லறையைக் குலுக்கிக் காட்டினான் நச்சி.

நாக்கில் ஊறிய ஜலத்தை விழுங்கிவிட்டு நிமிர்ந்த நோஞ்சான் வாலிபன் அசட்டுப் புன்னகையுடன், "அதெல்லாம் இடக்கட்டும், நச்சி! இங்கே இன்னு நடந்ததுன்னு தெரிஞ்சுக்காமல் நீபாட்டுக்குச் சும்மா ரேங்கிக்கிட்டுப் போறியே!.... இதோ பார், இந்தக் கஸ்மாலப் பொழைப்பை நம்பி நாங்கள் ஆறு பேர் தேவுடு காத்துக்கிட்டுக் கிடக்கிறோம் என்கிறது உனக்குத் தெரியுமில்லையா? ஆபீஸ் ஆரம்பிச்சு இவ்வளவு நேரமாகியும் எவனுக்குமே இன்னும் ஒரு நாலணா காசுகூடக் கிடைக்கலே. இந்த லட்சணத்தில் எங்களுக்குப் போட்டியா திடீர்னு அந்தப் பையன் வேற வந்து முதல் கிராக்கியையே மடக்கிப் பிடிக்கப் பார்த்தான்னா எங்களுக்குக் கோபம் வருமா, வராதா? நீயே சொல்லு தொரை!" என்றான் உள்ளார்ந்த ஆத்திரக் குரலில்.

முரட்டு இளைஞன் இதைக் கேட்டு ஒரு தினுசாகத் தலையாட்டிக்கொண்டே, "அட, சரிதான் போய்யா! ஆறு பேரோடு அவனும் ஒருத்தனா பொழைச்சுட்டுப் போகட்டுமே! நீயும் முதல்லே இப்படி வந்து மத்தவன்களுக்குப் போட்டியா இடம் பிடிச்சவன்தானே?" என்று கூறினான்.

அவனுடைய இந்தக் குத்தலான பதில் இன்னொரு சகாயனுக்கு ஆத்திரமூட்டியது. "போவ்! எங்கள் தொழிலிலே நாங்கள் எப்படியாவது அடிச்சுக்குவோம், கூடிக்குவோம்; நீ யாரையா நடுவிலே வந்து நுழைய?" என்று சீறினான்.

"நான் யாருன்னு கேட்கிறே?.... நான்தான் பிரதர் அந்தப் பையனை இங்கே இந்த வேலைக்கு அனுப்பி வைச்சேன்!" என்று கூறி ஓர் அவுட்டுச் சிரிப்புச் சிரித்தான் நச்சி.

அநாமதேய சகாயர்கள் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டார்கள்.

"ஓகோ! கமிஷனுக்குள்ளே கமிஷன் பிடிக்க இதிலேயும் வந்து பூந்துட்டியா? ஆங்—படா, கில்லாடி நைனா நீ!" என்று குறும்பாக நகைத்த நோஞ்சான் வாலிபன், "இதை அப்பவே சொல்லியிருக்கப்படாது? அந்தப் பையனை எங்கள் ஜமாவிலே சேர்த்துக்கிட்டிருப்போமே!" என்றான்.

அவன் சொன்னதைக் கவனியாதவன்போல் சிகரெட்டொன்றை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்ட நச்சி, அங்கிருந்த சகாயர்களுக்கெல்லாம் ரொம்பத் தாராளமாகச் சிகரெட் விநியோகம் செய்தான்.

புகையின் கனை பகையை மறக்கடித்தது.

"அது சரி, நச்சி! கொஞ்சம் முன்னாடி டாக்ஸியிலே வந்தாரே, அந்த

மழை

மணற் கரையில்—அலை
கூட்டும் — வரி
தீட்டும்!
மழை மண்ணில்—நிலை
மாற்றும் — கலை
தோற்றும்!
கடல் வண்ணம் — நிறம்
காட்டும் — இசை
மீட்டும்!
அடல் அலைகள் — இனம்
பேசும் — தினம்
வீசும்!
உயிர் மொண்டு — இறை
ஆக்கும் — முகில்
தேக்கும்!
உடல் கொண்டு — இகம்
கொட்டும் — சுகம்
காட்டும்!
இறை விண்ணில்—பெறும்
முத்து — மழை
வித்து!
குறை மனிதர் — தரும்
பரிசோ — பெரும்
விரிசல்!
தடை உண்டோ — கடல்
வீட்டில் — உடல்
கூட்டில்!
மடை உண்டோ — மழை
வானில் — நுழை
கானில்!!

மதுரநாதன்

மப்ளர்காரர் யார்?'' என்று ஓசி சிகரெட்டை ஒரு ஸ்டைலாகப் பிடித்துப் புகையை ஊதிக்கொண்டே வெகு அக்கறையாக விசாரித்தான் நோஞ்சான்.'

''எல்லாம் நம்ப தோஸ்துதான்! இதே மோர்மார்க்கெட்டில் 'எதை எடுத்தாலும் ஒன்றரையணா'ன்னு கத்திக்கிட்டு இருந்தவன் திடீர்னு தேர்தல்லே நின்னான். ஆனா அவுட் ஆனாலும் அவனோட பேரு நல்லா விளம்பரமாயிடுச்சு. ஏற்கனவே இந்தக் குப்பைத் தொட்டி ஆபீஸ் விவகாரமெல்லாம் அவனுக்கு அத்துப்படி. எந்த நரம்பை எப்படிப் பிடிச்சா எங்கே இருக்கிற சுளுக்கு விடும் என்கிறதெல்லாம் நல்லாத் தெரியும். அந்த 'நேக்'கிலேதான் இப்போ அவனுடைய வண்டி ஓடிக்கிட்டு இருக்குது. அவனுக்கு நான் ரொம்ப விஷயங்களிலே ஒத்தாசை பண்ணியிருக்கிறேன். அதையெல்லாம் அவன் மறக்கலே. அதனால் தான் இப்பவும் நம்பளைக் கண்டால் கொஞ்சம் 'ஜகா' வாங்கிக்கிட்டுப் போறான்'' என்று அலட்சியமாகச் சொல்லிக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்த நச்சி, ''நம்ம பையனை எங்கே காணோம்? கிராக்கி புடிச்சுட்டான் போலிருக்கு!'' என்றவாறு சத்தியமூர்த்தி சிலைக்கு எதிரே — அதை இரவு நேரத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காகப் புல் தரையில் அமைத்திருந்த 'ஃபோகஸ்—லைட்'டின் சிமிண்டுக் கட்டைமேல் - போய் உட்கார்ந்தான்.

''இன்னா, தாமு! இவன் ரொம்பப் பெரிய ஆளு; நமக்கு ஏன் வம்பு ?'' என்று இரகசியக் குரலில் கூறித் தன் சகாக்களை யெல்லாம் எச்சரித்து விட்டுப் பழையபடி மதில்சுவர் ஓரத்தை நாடி நடந்தான் நோஞ்சான். மற்ற அநாமதேய சகாயர்களும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

நகர மன்ற அலுவலகம் வெகு சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. பல்வேறு காரிய சித்திக்காக ஆண்களும் பெண்களும் ஆங்காங்கே நின்று கொண்டும், பரபரப்பாக நடந்து கொண்டுமிருந்தனர். அவர்களில்தான் எத்தனை பிரிவு, எத்தனை ரகம், எத்தனை தரம்! ஒவ்வொருவரும் ஒரு கவிதையாக, ஒரு நாவலாக, ஒரு காவியமாக, ஒரு நகைச்சுவைத் துணுக்காகக் காட்சியளித்தனர். மனித வர்க்கத்தின் சகலவிதமான உணர்ச்சிகளும் அங்கே வெள்ளமாக வெளிப்பட்டு வழிந்து கொண்டிருந்தன. அவர்களில் கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும், மனத்துக்கு ஆறுதலாகவும் கவலையின்றிக் காணப்பட்டவர்கள் அங்கு கும்பல் கும்பலாகக் கூடி நின்ற நகரசுத்தித் தொழிலாளர்கள்தாம்!

''ஏ, தம்பி! இங்கே வா !''

விசாரணைக் கவுண்டருக்கு எதிரே வராந்தாச் சுவரோரம் தயங்கி நின்று கொண்டிருந்த புதிய இளைஞன் அவலோடு திரும்பினான்.

ஒரு செலானை வாங்கி அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்த அந்தத் தடித்த மனிதர்தான் அவனை அழைத்தார். ''நீதானே கொஞ்சம் முன்னாடி என்னிடம் வந்து கேட்டது ?'' என்று கேட்டார்.

அவசரமாக ஓடி வந்த இளைஞன், ''ஆமாம், சார்! நான்தான் சார் !'' என்று பவ்வியப் புன்னகையுடன் கூறினான்.

அவனை ஏற இறங்கப் பார்த்த அவர், ''உன் பேரென்ன தம்பி?'' என்று வினவினார்.

''நாலணு சார்!''

''என்ன சொன்னே?''

சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டான் இளைஞன். எழுத்துக் கூலியாக ஒரு நாலணுவாவது சம்பாதித்து விட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளிலிருந்த அவன், அந்த நாலணுவையே மனத்தில் உருவகப்படுத்தி ஜபித்துக் கொண்டிருந்ததால் தன் பெயரைக் கேட்டதும் 'நாலணு' என்று சொல்லி விட்டான்! அவனுக்கு ரொம்பவும் வெட்கமாகி விட்டது. ''இல்லே, சார்! என் பெயர் நடனசபேசன்...'' என்றான்.

''பேரு நல்லாத்தான் இருக்குது!'' என்று தலையாட்டிக் கொண்ட இரட்டை நாடி மனிதர், ''எது வரையில் நீ படிச்சிருக்கிறே?'' என்றார்.

''டென்த் ஸ்டாண்டர்டு வரையில் படிச்சேன் சார்!''

''அதுக்கு மேலே எட்டலில்லையா?''

பையன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். பிறகு மௌனமாகத் தலை குனிந்து கொண்டான்.

''சரி சரி; இந்தா, இதைச் சீக்கிரம் எழுதிக் கொடு. நான் மூக்குக் கண்ணாடி எடுத்துக்கிட்டு வர மறந்துட்டேன்'' என்று கூறி ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்து விட்டு, செலானையும் வரி பில்லையும் கொடுத்தார் இரட்டை நாடி. அவர் எப்போதுமே இங்கு வரும்போதெல்லாம், 'மூக்குக் கண்ணாடியை எடுத்து வர மறந்து விடுவது' வழக்கமாயிருந்தது!

சபேசன் வரி பில்லையும் செலானையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே தன் சட்டை ஜேபியைத் தடவினான். பேனா இல்லை என்பது அப்போதுதான் அவனுக்கு நினைவு வந்தது. ''சார்! தயவுசெய்து கொஞ்சம் பேனா கொடுக்கிறீர்களா?''


வரிதாரருக்குக் கோபம் வந்து விட்டது. ''ஏண்டா, தம்பி! நீ இங்கே என்ன வேலை பார்க்க வந்தே? உனக்குப் பேனாவும் கொடுத்துக் கூலியும் கொடுக்கணுமா?'' என்று கடுகடுத்தார் அவர்.

''என்னிடம் பேனா இல்லை, சார்! இன்றைக்குத்தான் ஒன்று வாங்கணும் என்றிருக்கிறேன்!..... பரவாயில்லே, சார்! கோபிச்சுக்காதீங்க. இதோ, ஒரு நிமிஷத்திலே எழுதித் தந்து விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே பரபரப்புடன் அங்குமிங்குமாகப் பார்த்தான் சபேசன். பிறகு அப்படியும் இப்படியுமாக ஓடி இரண்டொருவரிடம் பேனா இரவல் கேட்டான். அவர்களில் ஒருவர் 'இங்க இல்லே' என்றார்; இன்னொருவர் 'இது உன் கைக்கு எழுத வராது' என்றார். இளைஞன் திகைத்து நின்றான். அவன் மனம் 'திக்திக்'கென்று அடித்துக் கொண்டது. வரிதாரர் செலானைப் பிடுங்கி வேறு யாரிடமாவது எழுதக் கொடுத்து விடுவாரோ என்ற பயம் பேயாகப் பிடித்து உலுக்கியது. அந்த நீண்ட வராந்தாவில் அநாமதேய சகாயனொருவன் வட்டமிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அவனுடைய பயப்பிராந்தி மேலும் பெருகியது. விசாரணைக் கவுண்டருக்குப் பக்கத்திலிருந்த மேசைமீது ஒரு மைக் கூடும் பேனாக் கட்டையும் கிடந்தன. ஆவலுடன் ஓடிப் போய் அந்தப் பேனாக் கட்டையை எடுத்துப் பார்த்தான். அதன் 'நிப்' நல்ல பாம்பின் நாக்குபோல் பிளவுண்டு நெளிந்திருந்தது. பிரம்மாவே வந்தாலும் அந்தப் பேனாக் கட்டையால் ஒரு வரிகூட எழுதிவிட முடியாது.

சபேசனின் படபடப்பு அதிகமாகியது. அழுமாட்டாக் குறையாகச் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தான். அவனுடைய பார்வையில் ஓர் அழகிய பேனா தென்பட்டது. ஆமாம்; பேனா மட்டுமேதான் தெரிந்தது. அந்தப் பேனாவையே குறியாகப் பார்த்துக் கொண்டு 'அதன்' அருகில் விரைந்து சென்றான்.

மாளிகையின் முகப்புக் கூடம் அது. அதற்கும் மேலே மாடிக்குச் செல்ல விசாலமான மரப் படிக்கட்டு. அந்தக் கூடத்தின் இருபுறச் சுவர்களிலும் நகர மன்ற உயர் அதிகாரிகளின் அலுவல் அறைகள் இருக்கும் தளங்களின் எண்கள் குறிக்கப் பெற்ற போர்டுகள் தொங்க விடப்பட்டிருந்தன. அப்படித் தொங்கிய ஒரு பெரிய போர்டின் இடதுபக்கவாட்டில் அந்த மாநகராட்சி மன்றத்தின் முதல் கமிஷனராகப் பணியாற்றிய கான்ரான் ஸ்மித் என்பவரது சலவைக்கல் சிலை காட்சியளித்தது. உட்கார்ந்த கோலத்தில் கம்பீரமாக விளங்கிய அந்தச் சிலையினருகே, பிரமிப்பும் பீதியுமாக மிரள மிரளப் பார்த்தவாறு ஒடுங்கி ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள் ஓர் இளம் பெண்.

மெலிந்த உடல்; களையான முகம்; ஒற்றைப் பின்னல்; அடக்கமான எளிய ஆடையணிமணிகள்; வறுமை நிழல் கவிந்த மேனியிலும் பருவத்தின் பூரிப்பு தேங்கிய ஒரு பளபளப்பு—என்றிவ்வாறு தோற்றமளித்த அப்பெண்ணின் கையில் ஒரு நீண்ட கவர் இருந்தது. சந்தன நிறச் சோளியின் வலது பக்கக் கழுத்து விளிம்பில் சாதாரணப் பேனா ஒன்றும் குத்திக் கொண்டிருந்தாள்! **(தொடரும்)**



நாகிரெட்டி-சக்ரபாணி
அளிக்கும்

விஜயா
கம்பைன்ஸ் புரொடக்ஷன்ஸ்

எங்க வீட்டுப் பிள்ளை

ஈஸ்ட்மென் கலர்

ELEGANT

டைரக்ஷன் · சாணக்யா

கண்டதும் கேட்டதும்

சி. ராஜேந்திரன்



கார்டிப் கோட்டையும் சுற்றுப்புறமும்.


சிறுவர் சிறுமியர்களுக்காகச் சிறுகதைகளும் நெடுங்கதைகளும் நிறைய எழுதும் ஒரு நாவலாசிரியை சில தினங்களுக்கு முன் என்னிடம் கூறினார்: ''முதன் முதலாக ஒருவரது நூல் புத்தக வடிவில் வெளியாகி அதன் முதல் பிரதி எழுத்தாளரின் கரத்துக்கு வந்து சேரும்போது அவருக்கு ஏற்படும் உள்ளக் கிளர்ச்சி அலாதியானது. அப்போது அவருக்கு உண்டாகும் மன நிறைவுக்கும் இன்பத்துக்கும் ஈடு இணையே இல்லை.''


இது நூற்றுக்கு நூறு உண்மை என்பது அனுபவ பூர்வமாக நான் கண்டதுதான். மேனாட்டு யாத்திரையிலும் இந்த விதமான ஓர் ஒற்றுமையை உணர்ந்தேன். முதன் முதலாக லண்டனில் நான்கு வருடங்களுக்கு முன் நான் விமான மார்க்கமாக வந்து இறங்கியபோது ஏற்பட்ட மெய்ச்சிலிர்ப்பு இம்முறை ஏனோ உண்டாகவில்லை — எழுத்தாளரின் கரத்துக்கு வந்து சேரும் அவரது இரண்டாவது புத்தகத்தைப் போன்று. இருப்பினும் இங்கு அவ்வப்போது நிகழும் வெவ்வேறு அனுபவங்கள் அந்த இரண்டாவது நூலில் எழுத்தாளருக்கு மிகவும் பிடித்தமான ஒரு சில பாராக்களைப் போல் என் நினைவிலும் தனித்துத்தான் நிற்கின்றன.

பத்திரிகைத் தொழிலில் உயர்தரப் பயிற்சி பெறுவதற்காகப் பிரிட்டனுக்கு நான் வந்து சேர்ந்திருக்கும் கார்டிப் நகரில் 'வெஸ்டர்ன் மெயில்', 'ஸவுத் வேல்ஸ் எக்கோ' ஆகிய பிரபல பத்திரிகைகளை வெளியிடும் 'தாம்ஸன் ஹவுஸ்' காரியாலயத்தில் பயிற்சி. கார்டிப்பிலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள பெனார்த் என்ற சிறிய ஊரில் 'இன்டர்நேஷனல் ஹவுஸ்' என்ற சர்வதேச விடுதியில் ஓர் அறை எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து மாடிகள் கொண்ட கட்டிடத்தில் ஐந்தாவது மாடியில் உள்ளது எனது ஐம்பத்தைந்தாவது அறை. மிகப் பெரிய நவீன கட்டடம். அங்குரார்ப்பணம் செய்த கோஷ்டியில் அடியேனும் ஒருவன். கட்டட வேலைகள் ஓரளவு பாக்கி இருக்கின்றன. 'லிப்ட்' வேலை செய்யத் தொடங்கவில்லை இன்னும். தொந்தி கரைய ஏற்ற வழிதான் என்று திருப்திப்பட்டுக் கொண்டு இறைக்க இறைக்க ஐந்து மாடிகளும் ஒரு நாளைக்கு ஐந்து முறை ஏறி இறங்குகிறேன்.

அன்று காரியாலயத்தில் வேலை முடிந்ததும் மாலை ஐந்து முப்பதுக்குக் கிளம்பும் ரயிலில் இடம் பிடித்தேன். பெனார்த் ஸ்டேஷனை அடுத்து உள்ள ஆல்பர்ட்டா பிளேஸ் என்ற சிறிய ஸ்டேஷனில் இறங்கினால் நான் தங்கியுள்ள சர்வதேச விடுதி சமீபந்

வேல்ஸ் இயற்கை அழகுக்குப் பேர்போனது. இயற்கைச் சூழலில் சுதந்திரமாக வளர்ந்து நல்விருத்தியாகத் திரியும்...





தில் உள்ளது என்பதாக யாரோ சொன்னார்கள். கூட மூன்று பென்ஸ் காசு தர வேண்டும். அவ்வளவு தான். பெர்னாத் ஸ்டேஷனில் ரயில் நின்றது. நண்பர்கள் சிலர் இறங்கினார்கள். கேள்விக் குறி கொண்ட முக பாவத்துடன் என்னை நோக்கினார்கள். அடுத்த ஸ்டேஷனில் இறங்குவதாக ஜாடை காண்பித்து விட்டுக் கையிலிருந்த பத்திரிகையில் பார்வையைச் செலுத்தினேன். ரயில் கிளம்பிச் சென்றது. ஒருசில நிமிடங்களில் மீண்டும் நின்றது. நான் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்து விட்டதோ என்று ஜன்னல் வழியாகப் பார்த்தேன். இல்லை, வெறும் மரங்களும் புதர்களும்தான் கண்களுக்குத் தெரிந்தன. சரி, கைகாட்டி இறங்குவதற்காக 'அவுட்டரில்' காத்திருக்கிறதுபோலிருக்கிறது. நம்ம ஊர் கதைதான் இங்கும்' என்று தீர்மானித்தேன். ஆனால் உண்மையில் அந்தப் பொல்லாத ரயில் ஆல்பர்ட்டா பிளேஸ் ஸ்டேஷனில்தான் நின்று கொண்டிருந்தது அப்போது. மிகச் சிறியதான அந்த ஸ்டேஷனின்பிளாட்பாரமும் நீளக் குறைவானதுதான்; நானோ நீண்ட ரயில் தொடரின் கடைசிப் பெட்டியில் அமர்ந்திருந்தேன். பிளாட்பாரத்தைக் காட்டிலும் ரயில் நீளமானதால் கடைசிப் பெட்டியில் இருந்த எனக்குச் செடிகளும் மரங்களும் மட்டுமே பார்வைக்குத் தட்டுப்பட்டதில் வியப்பில்லை அல்லவா?


ரயில் நகர ஆரம்பித்தது. இரண்டு விநாடிகளுக்குள் ஆல்பர்ட்டா பிளேஸ் ஸ்டேஷன் பிளாட்பாரமும் பெயர்ப் பலகையும் தென்பட்டன. மூன்று பென்ஸ் காசைக் கையில் எடுத்துக் கொண்டு நான் இறங்குவதற்குத் தயாரானேன். ஆனால் ரயில் நின்றால் தானே? போய்க் கொண்டேயிருந்தது.

"ஆல்பர்ட்டா பிளேஸில் இந்த ரயில் நிற்காதா?" என்று விசாரித்தேன்.

...குதிரைகளை அடக்கிப் பிடிக்கும் காட்சி.



கார்டிப் நகரில் இதமான வெந்நீர் நிறைந்த நீச்சல் குளம். நீச்சல் போட்டிகளும் இங்கு பல்லாயிரக் கணக்கான [பார்வையாளர்கள் முன் நடத்தலாம்.





பழமைப் பிரியர்களான பிரிட்டிஷார் 'மியூஸியம்' களில் அதிக சிரத்தை காட்டுகிறார்கள். கார்டிப் நகர் மியூஸியம் இது.

"நின்றுதானே மீண்டும் புறப்பட்டது!" என்று பதில் கிடைத்தது.

விஷயம் அப்போதுதான் விளங்கியது எனக்கு. இந்தக் குளிர்ப் பிரதேசத்திலும் கொஞ்சம் வியர்த்துத்தான் விட்டது. இந்த ரயில் இனி எவ்வளவு தூரம் சென்று நம்மை எங்கு கொண்டு விடுமோ என்ற நினைப்பு வயிற்றைக் கலக்க ஆரம்பித்தது.

அடுத்தாற்போல் வண்டி நின்றதும் அவசரம் அவசரமாய் இறங்கினேன். எதிரே பிளாட்பாரத்தில்



பிஜி கோஷ்டிக்கும் வெல்ஷ் கோஷ்டிக்கும் இடையில் மும்முரமான 'ரக்பி' விளையாட்டுப் போட்டி நடக்கிறது.

வேண்டியவரல்லவா? போகட்டும். இந்த ரயில் இந்த நேரத்தில் ஆல்பர்ட்டா பீனஸ் ஸ்டேஷனில் நிற்பது வழக்கமில்லை; என்றாலும் டிரைவரிடம் சொல்லி ஒரே ஒரு விநாடி உங்களுக்காகப் பிரத்தியேகமாக நிறுத்த ஏற்பாடு செய்திருக்கிறேன், சரிதானே?'' என்றார்.

நான் பிரமிப்பிலிருந்து நீங்கி அவருக்கு வந்தனம் தெரிவிக்கச் சற்று நேரமாகியது.

''நீங்கள் மூன்று பென்ஸ் காசு தரவேண்டும்'' என்றார் அவர்.

வேகமாக வந்து கொண்டிருந்த ரயில் கார்டிடம் என் பரிதாப நிலையை விளக்கினேன்.

''ஓ டியர்! ஓ டியர்!'' என்று அலுத்துக் கொண்ட அவர், ''இதோ பாருங்கள் இதே வண்டியில் மீண்டும் ஏறிக்கொள்ளுங்கள். காடக்ஸ்டன் என்ற ஸ்டேஷன் வரும். அங்கே உங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுத் தம் அலுவலைக் கவனிக்கப் போய்விட்டார். அவர் கூறியபடியே மறுபடியும் ரயிலில் ஏறிக் கொண்டேன்.

இலேசாக மழை தூறத் தொடங்கியது. இதமாக வெய்யிலும் அடித்தது. எதிரே இரட்டை வான வில்கள் ஏழு வர்ணங்களையும் காட்டி ஒன்றன் மீது ஒன்றாக எழுந்து நின்றன. அவற்றின் அழகில் சொக்கிப்போய் உட்கார்ந்திருக்கையிலேயே காடக்ஸ்டன் ஸ்டேஷன் வந்து விட்டது. இம்முறை விழிப்புடனிருந்து கீழே இறங்கினேன்.

கார்டு என்னை நோக்கி வந்தார். ''இப்போது நான் 'ஸைடிங்'குக்கு இந்த ரயிலைக் கொண்டு போக வேண்டும். நீங்கள் இந்தச் சுரங்கப்பாதை வழியாக இறங்கிப் போய் அதோ தெரிகிறதே அந்தப் பிளாட்பாரத்தில் காத்திருங்கள். ஒரு ரயில் வரும்; அதில் ஏறாதீர்கள்! நீங்கள் போகவேண்டிய இடத்துக்குச் செல்வதல்ல அது. அந்த ரயில் சென்ற பிறகு நான் இதே ரயிலை அந்தப் பிளாட்பாரத்துக்குக் கொண்டு வருவேன். என் முகத்தைப் பார்த்த பிறகு ரயிலில் ஏறுங்கள். அப்புறம் நான் கவனித்துக் கொள்கிறேன். பெனார்த்துக்குச் செல்லும் முதல் ரயில் இதுதான்; வேறு கிடையாது!''

அவருக்கு நன்றி செலுத்தி விட்டு அவர் சொன்னபடி நடந்து கொண்டேன்.

பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு மீண்டும் நான் ரயில் பிரயாணத்தைத் தொடங்கிய போது கார்டு நான் ஏறியிருந்த பெட்டிக்கே வந்து சேர்ந்தார்.

''உங்களை ரொம்பவும் சிரமத்துக்குள்ளாக்கிவிட்டேன்'' என்றேன் உபசாரமாக.

''அதெல்லாம் இல்லை; நான்தான் இன்னும் சற்று ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும். நீங்கள் அன்னியராயிற்றே. புது வேற்று முகங்களைப் பார்த்ததுமே நான் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது வழக்கம். தவறு நேர்ந்து விட்டது. இந்நேரம் நீங்கள் மாலை உணவை முடித்துக் கொண்டு நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்க

''மூன்று பென்ஸ்தானா? நான் ஏகப்பட்ட தூரம் பிரயாணம் செய்து விட்டேனே?''

''அதெல்லாம் விவரம் தெரியாமல் நடந்து போன தவறுகள். வேண்டுமென்றே பிரிட்டிஷ் ரயில்வேயை ஏமாற்ற நீங்கள் செய்த காரியமா என்ன? நீங்கள் தரவேண்டியது பெனார்த்திலிருந்து ஆல்பர்ட்டா பீனஸுக்கு வருவதற்கான கிரயம்தான்!'' என்றார் அவர்.

அந்த அன்புக்கும் பண்புக்கும் எதிரே பதில் பேசவே எனக்கு நா எழவில்லை. பேசாமல் மூன்று பென்ஸ் நாணயத்தை அவர் கையில் வைத்துவிட்டு ஆல்பர்ட்டா பீனஸ் ஸ்டேஷன் வந்ததும் கீழே இறங்கி விடுதியை நோக்கி நடந்தேன்.

வித்தியாசம் என்ன?

பிரிட்டனின் மேற்குப் பகுதியான வேல்ஸுக்கு என்னைப் போலவே புதிதாக வந்து சேர்ந்திருக்கும் பலரை வரவேற்கும் முகமாக கார்டிப்பிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸிலில் ஒரு சிறு வைபவம் நடைபெற்றது. கவுன்ஸிலின் வெல்ஷ் பிரதிநிதி மிஸ்டர் பார்க்ஹவுஸ் அன்று இங்கிலீஷ்காரர்களுக்கும் வெல்ஷ் மக்களுக்கும் உள்ள வேற்றுமையை விளக்கினார். ''ஓர் ஆங்கிலேயரைக் குறிப்பிட்ட இன்ன இடத்துக்கு எப்படிப் போக வேண்டும் என்று கேட்டால் 'நேரே போய், இடது பக்கம் திரும்புங்கள். மூன்றாவது தெருவில் வலதுபுறம் திரும்பி, இருபது கஜ தூரம் நடங்கள். பிறகு இடதுபுறம் திரும்பி ஏழெட்டு வீடுகள் தாண்டியதும் வலது பக்கம் ஒரு குறுகலான வீதி தென்படும்; அதன் வழியே நேரே போனால் ஒரு பெருஞ் சாலையை அடைவீர்கள். இடது பக்கம் திரும்பிக் கொஞ்சம் நடந்தால் நீங்கள் கேட்கிற இடம் வலதுபுறம் உள்ள வீதியில் நாலாவது கட்டடமாகும்'' என்று கூறி விட்டு நடப்பார்.

''இதேபோன்ற ஒரு கேள்வியை ஒரு வெல்ஷ் வாசியிடம் கேட்டால் அவர், ''நேரே போய் இடதுபுறம் திரும்புங்கள்; மூன்றாவது தெருவில் வலது புறம் திரும்பி இருபது கஜ தூரம் நடங்கள். பிறகு இடதுபுறம் திரும்பி ஏழெட்டு வீடுகள் தாண்டியதும் வலதுபுறம் ஒரு குறுகலான வீதி தென்படும். அதன் வழியே.... இந்தத் தொல்லை எதற்கு? என்னோடு வாருங்கள். நானே அந்த இடத்தை

உங்களுக்கு நேரில் காட்டிவிட்டுப் போகிறேன்'' என்பார்.

''இங்கிலீஷ்காரருக்கும் வெல்ஷ்வாசிக்கும் இதுதான் வித்தியாசம்'' என்றார் பார்க்ஹவுஸ். எல்லா இங்கிலீஷ்காரர்களும் இப்படித்தான் என்று கூறிவிட முடியாது என்றாலும் பார்க் ஹவுஸ் கூறியதில் கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்கிறது. அதிலும் லண்டனில் உள்ளவர்களுக்கு ஒரே பரபரப்பு; அவசரம். பிரிட்டனின் தலைநகரில் ஆல்ட்விச் பகுதியில் ஒரு தபால் நிலையத்துக்குள் சென்று விமானத் தபால் கடிதக் காகிதங்கள் சில வாங்கினேன். பிறகு இந்தியா கிளப் எங்கே இருக்கிறது என்று விசாரித்தேன். ''சொல்கிறேன்'' என்று தொண்டையை ஒரு முறை கனைத்துக் கொண்டு ஆரம்பித்த அந்தத் தபால் நிலைய ஊழியர், ''இடது பக்கம் திரும்பிப் போய் வலது புறம் சென்று பத்து கஜ தூரம் நடந்து...'' என்று கூறிக் கொண்டே போய், ''உங்களுக்கு எதிரே இந்தியா கிளப் தெரியும். மசாலா வாசனை எங்கிருந்து வருகிறது என்று மோப்பம் பிடித்துக் கொண்டே போங்கள். சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம்!'' என்று முடித்தார்.

அவரது ஹாஸ்ய உணர்ச்சியை ரொம்பவும் ரசித்து நானும் சிரித்தேன். ஆனால் இந்தியா கிளப்பைக் கண்டுபிடிக்க அரை மணி நேரமாயிற்று.


தமிழ் நாட்டினரின் உபசரிக்கும் பண்பு மிகவும் உயர்ந்ததுதான். வெல்ஷ் மக்களின் உபசாரம் அதற்குச் சற்றும் குறைந்ததல்ல என்பதோடு நம்மை விட ஒரு படி மேலாகவே இருக்கிறார்கள் பலவிதங்களில்.

ரக்பி என்பது வெல்ஷ் மக்களின் தேசிய விளையாட்டு. நான் வந்த புதிதில் பீஜித் தீவினருடன் வெல்ஷ் கோஷ்டி ரக்பி விளையாடுவதைப் பார்த்தேன். கால் பந்தாட்டத்தைப் போன்றல்லாது இதில் பந்தைக் கையாலும் பற்றிக் கொண்டு ஓடலாம். அவ்வாறு ஓடுபவரைக் கைநீட்டிக் கட்டிப் பிடித்திழுத்துத் தள்ளிப் பந்தைக் கவரலாம். கொஞ்சமென்ன, நிரம்பவே முரட்டுத்தனமான ஒரு விளையாட்டுத் தான்! விளையாட்டுப் போட்டியினைக் காட்டிலும் ஹெரால்ட் வில்சனின் தேர்தல் சொற்பொழிவையும் அலட்சியம் செய்துவிட்டு ஸ்டேடியத்தில் குழுமியிருந்த நாற்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் நடந்து கொண்ட விதம்தான் என்னை வெகுவாகக் கவர்ந்தது. ஆட்டம் தொடங்குவதற்கு அரை மணி முன்னதாகவே மைதானத்தில் பாண்டு வாத்தியம் முழங்க ஆரம்பித்து விட்டது. பாண்டு இசைக்கு ஏற்ப மக்களும் ஒரு குரலாக நாட்டுப் பற்றை வளர்க்கும் பிரபலமான பாடல்கள் பலவற்றைப் பாடினார்கள். ஆட்டக்காரர்கள் மைதானத்துக்கு வந்து சேர்ந்ததும் பிரிட்டனின் தேசிய கீதத்தையும் வெல்ஷ் தேசிய கீதத்தையும் மரியாதையாக எழுந்து நின்று உணர்ச்சியுடன் பாடினார்கள். நல்ல சாரல் காலத்தில் திருக்குற்றாலத்தில் செண்பகா தேவியின் அருகே நின்றால் எழும் ஓசையைப் போல் தேசிய கீதங்கள் கம்பீரமாக, ஆனால் இசையோடு இழைந்து அந்த மாபெரும் கூட்டத்தின் கண்டங்களிலிருந்து எழுந்தன. புளகாங்கிதமடைந்து விட்டேன் நான்.

பீஜித் தீவினர் இந்த ஆட்டத்தில் தோற்று விட்டது மெய்தான். ஆனால் ஆட்டத்தில் வெற்றி தோல்வியா முக்கியம்? வெற்றி பெற வேண்டும். அதற்காகச் சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி விடா முயற்சியுடன் போராட வேண்டும் என்ற மனப்பான்மை யல்லவா முக்கியம்? இறுதி விநாடி வரை பீஜித் தீவினர் விட்டுக் கொடுக்காமல் போராடியது காரணமாக மக்களின் பேரபிமானத்தைப் பெற்றார்கள். வெல்ஷ் ரக்பி கோஷ்டியினரே இதனால் வெகுவாகக் கவரப்பட்டுப் பீஜித் தீவுக் கோஷ்டியினரின் காப்டனைத் தோளில் தாங்கி ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். மக்களோ இதயபூர்வமான அன்புடன் மீண்டும் பாட ஆரம்பித்து விட்டனர். என்ன பாடல்? ஆருயிர் நண்பன் ஒருவனுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்புவதாக அமைந்த ஒரு பாட்டு.

சென்னையிலிருந்து நான் கிளம்பியபோது, 'அடடா! ஆஸ்திரேலியக் கோஷ்டி கிரிக்கெட் விளையாட வருகிறதே! அருமையான கிரிக்கெட் மாட்சைப் பார்க்காமல் போகிறோமே' என்ற மனக் குறை எனக்கு இருந்து கொண்டேயிருந்தது. நண்பர் ஒருவர் எனது மனநிலையை உணர்ந்தவராகச் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடந்தவற்றை ஓரளவு விவரமாகவே ஒரு கடிதத்தில் வரைந்திருந்தார். அதில் ஒரு வாக்கியம் பின்வருமாறு: ''மக்கள் ஒரேயடியாக உணர்ச்சி வசப்பட்டிருந்தார்கள். ஒருசில தருணங்களில் பந்து தங்கள் கையில் சிக்கிக் கொண்ட போது அதனைப் பெற்றுப் போகப் பவுண்டரி எல்லையைக் கடந்து வந்த ஆட்டக்காரரைப் பார்த்து, 'இங்க வாய்யா! என்னய்யா அவ்ட்ரே!' என்றெல்லாம் கத்தினார்கள்!...''

கிறிஸ்துமஸ் சமயத்தில் முக்கிய கடை வீதிகள் ஏதோ சொப்பன லோகம்போல் காட்சிதரும்.



இங்கும் தீபாவளி

நவம்பர் மூன்றாம் தேதி தமிழகத்தில் தீபாவளித் திருநாள். இங்கு நானும் நவம்பர் ஐந்தாந்தேதி தீபாவளி கொண்டாடுவதெனத் தீர்மானித்தேன். புத்தாடை புனைவதோ எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதோ பட்சணங்கள் உண்பதோ முடியாமல் இருக்கலாம். ஆனால் தீபாவளியின் மற்றொரு முக்கிய அம்சமான வாண வேடிக்கைகளை நவம்பர் ஐந்தாந் தேதி இங்கு நிறையக் காணலாம். அன்றுதான் கைபாக்ஸ் தினம். சிறுவர்களும் சிறுமியர்களும் தம்மூர்ச் சோளக் கொல்லைப் பொம்மை அளவினதாகப் பழந்துணியால் திருவாளர் கைபாக்ஸைத் தயாரிக்கிறார்கள். வீதி ஓரங்களில் இந்தப் பொம்மையை உட்காரவைத்து அருகில் நின்றபடி, ''கைக்கு ஒரு பென்னி தாருங்கள்'' என்று கேட்கிறார்கள். சுவரில் சாய்ந்தபடி கைகளை நீட்டிக் கொண்டு பரிதாபமாக உட்கார்ந்திருக்கும் கைபாக்ஸுக்கு நாம் தரும் காசுகளைக் கொண்டு பட்டாசு, வாணம் வாங்குவார்கள். பழைய குப்பை கூளங்களைச் சேகரித்துக் கொளுத்துவார்கள்; நாம் போகிப் பண்டிகையில் செய்வது போல.

கைபாக்ஸ் தினம் என்பது எப்படி ஏற்பட்டது? அது ஒரு சுவையான சம்பவம். பல்லாண்டுகளுக்கு முன்னால் கைபாக்ஸ் என்பவன் பாராளுமன்றத்தினடியில் ரகசிய அறை அமைத்து அதில் வெடி மருந்துகளைக் குவித்துப் பாராளுமன்றக் கட்டிடத்தையே தவிடுபொடியாக்கி விட முயன்றான். தக்க சமயத்தில் பிடிபடவே அவன் ஆசை நிராசையாயிற்று. மரண தண்டனை பெற்றான். அன்று முதல் நவம்பர் ஐந்தாந் தேதி அவன் சதிச் செயல் நிறைவேறவிருந்த தினம் கைபாக்ஸ் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. கைபாக்ஸ் பொம்மை செய்து அதைக் கொளுத்துவதும் வழக்கமாகிவிட்டது. தீமையின் அழிவைக் கொண்டாடுவதுதானே தீபாவளியின் அடிப்படைக் கதையும்!

ஆனால் ஒன்று. வாண வேடிக்கைகளைப் பொறுத்த மட்டில் இங்கே ஒரு நல்ல சட்டம் இருக்கிறது. பதின்மூன்று வயதுக்கு உட்பட்ட எந்தக் குழந்தைக்கும் வாணங்கள், பட்டாசுகள் விற்கப்பட மாட்டாது; அவர்களுடன் பெரியோர்கள் யாரேனும் வந்தாலொழிய.

தீபாவளி சமயத்தில் துணிக் கடைகளில் விசேஷ அலங்காரங்களும் கண்ணைக் கவரும் வகையில் விளம்பரங்களும் செய்யப்படுவது தமிழகத்தில் நமக்குப் பழக்கம்தானே? கார்டிப்பில் நவம்பர் மாதம் கடைத் தெரு விழா (Shopping Festival) தொடங்கிவிடுகிறது. கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டுக் கடைக்காரர்களெல்லாம் ஒன்று சேர்ந்து திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்கள். கடைகளின் வாசல்களில் உள்ள பெரிய கண்ணாடி அறைகளில் அலங்காரமாக நெஞ்சை ஈர்க்கும் விதத்தில் பொருட்களைப் பரப்புகிறார்கள். இது ஓர் அற்புதக் கலையாகவே வளர்ந்து வருகிறது.

பழமையும் புதுமையும்

நெஞ்சை அள்ளும் அற்புதமான ஆடைகளை அணிந்து துணிக்கடை வாயில்களில் கண்ணாடி அறைகளினுள்ளே நிற்கின்றன அழகுப் பதுமைகள். பதுமை என்பதையே நம்ப முடியாத உயிரோவியங்கள் அவை. இன்னும் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததற்கு ஏற்ப அதிகரித்துக் கொண்டே போகும் தேவைகள் — வகைவகையான நவீன உபகரணங்கள் — 'வாங்குங்கள் வாங்குங்கள்' என்று ஆசை காட்டுகின்றன. கொஞ்சம் நடந்து இப்பால் வந்தால் எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சரித்திரத்தையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் பழமையான கார்டிப் கோட்டையைக் காணலாம்.

பிரிட்டிஷ் மக்கள் முன்னேற்றத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். புதுமையை விரும்பி வரவேற்பவர்கள். ஆனால் பழமைப் பிரியர்கள். இன்றைய உலகில் முதல் தரமான ஜனநாயகத்தையும், பண்டைய நாளைய முடியாட்சியையும் ஒருங்கே இணைத்து வைத்து ஒன்றோடொன்று இணைந்து செயலாற்றுவதைக் கண்டு மனம் பூரிப்பவர்களல்லவா இவர்கள்?

வாழ்க்கைத்தரமும் நாகரிக வளர்ச்சியும் பெருகப் பெருகப் பிரிட்டனில் அறிஞர்களின் உள்ளத்தில் ஒரு பீதி படர ஆரம்பித்திருக்கிறது. அது கிராமிய வாழ்க்கை என்பதே இல்லாமல் போய்விடுமோ என்ற பேரச்சம் தான்! பழமைப் பிரியர்களான பலர் கிராமிய வாழ்க்கையை நிலைநிறுத்த அரும்பாடுபட்டு வருகிறார்கள். இருப்பினும் நானூறு ஐந்நூறு வருஷங்களுக்கு முற்பட்ட கிராமிய வாழ்க்கை இன்று பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட வேண்டியதாகி விட்டது. அப்படிச் செய்துமிருக்கிறார்கள். பழங்காலத்திய வைக்கோல் கூரை வேயப்பட்ட சிறு வீடுகளை அப்படியே பெயர்த்து எடுத்து வந்து செயிண்ட் பாகன் என்னுமிடத்தில் 'பெரிய மைதானத்தில் புனர் நிர்மாணம் செய்திருக்கிறார்கள். ''கிராமப்புறங்களில் இது போன்ற குடில்களில் வாழ்வோர் இன்று கிடையவே கிடையாதா?'' என்று கேட்டேன்.

''இல்லவே இல்லை என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது. எஞ்சியிருக்கும் ஒருசில வைக்கோல் கூரை வீடுகளிலும் மத்தியில் டெலிவிஷனும் மின்சார விளக்கும் இன்னும் ஓரிரண்டு நவீன உபகரணங்களும் நிச்சயம் இருக்கும். இது போன்ற குடில்களை நிர்மாணிக்கும் கலை மறைந்து வருகிறது. வைக்கோல் கூரை வேய வேண்டும் என்று நினைத்தாலும் அதனைத் திறமையாகச் செய்து முடிக்கக் கூடிய ஆட்கள் கிடைப்பது அரிது. ஆட்களைத் தேடிப் பிடித்தாலும் அவர்களுக்குக் கூலி கொடுத்து மாளாது. அருங்கலையாகி விட்டதால் அதற்கு மதிப்பும் பன்மடங்காகப் பெருகி விட்டது! அதைவிட நவீன பாணி வீடே கட்டிவிடலாம்!''

கட்டிடக் கலையின் சிகரமெனப் போற்றப்பட்டு இன்றைக்கும் உலகம் வியக்கும் வண்ணம் வானளாவி நிற்கும் தமிழகத்தின் கோபுரங்களையும் அவற்றின் அருகிலேயே உள்ள பனை ஓலைக் குடிசைகளையும் நினைத்து நெடுமூச்செறிந்தேன். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்னை!

ஆலயத்தில் ஆதவன்



சூரியனார் கோயிலிலுள்ள சூரியாலயத்தின் தோற்றம் — சூரியனார்கோவில் வாழ் சூரியதேவன்.

வி. ஆர். மணி எம். ஏ.

வானத்தில் வலம் வந்து ஒளி மழை பொழியும் கதிரவன் பண்டைக் காலத்திலிருந்தே உலகின் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு சமயங்களிலும் போற்றி வழிபட்டு வரப்படும் முழு முதற் கடவுளாவான். ஆயினும் வழிபாட்டிலும் இலக்கியத்திலும் சிற்பக் கலையிலும் இந்தியாவில் அவன் புகழ் சிறப்பிக்கப் பட்டிருப்பதைப் போன்று வேறெங்கும் இல்லை எனலாம். ரிக் வேதத்தில் பல மந்திரங்கள் அவன் மகிமையை விளக்குகின்றன. வைதிக மதத்தின் ஆணி வேராகிய காயத்ரி மந்திரம் பரம்பொருளை சூரியனிலேயே உபாசிக்கிறது. சூரியன் கடக, மகர ரேகைகளில் பிரவேசிக்கும் அயனங்களை, முக்கியமாக உத்தராயணமாகிய சங்கராந்தியை நாம் முக்கியமானவொரு சமுதாய விழாவாகக் கொண்டாடுகிறோம்.

'ஆதித்ய ஹிருதயம்' என்னும் கதிரவத் துதியை சூரிய வம்சத் தோன்றலாகிய இராம பிரான் மும்முறை மொழிந்து, ராவணனை வென்றதாக வால்மீகி இராமாயணம் நவிலுகிறது. 'காதிரக்ருஹ்ய சூத்திரம்' என்னும் பண்டைய சம்ஸ்கிருத நூல், சிறப்பும் செல்வமும் பெற சூரியனை உபாசித்தல் வேண்டும் எனக் கூறுகிறது. இவற்றினின்றும் சூரிய வழிபாட்டின் தொன்மைச் சிறப்பு வெளியாகிறது. கண்ணபெருமானின் மைந்தனாகிய சாம்பன் தனது அழகில் செருக்குற்றதன் காரணமாகச் சாபமுற்று நெடுங்காலம் பெரு வியாதியினால் சொல்லொணாத் துயர்கள் பட்டதையும், இறுதியில் சூரியதேவனுக்குக் கோயில் எடுப்பித்து வழிபட்டு முற்றும் குணம் பெற்றதையும் பவிஷ்யோத்தர புராணம் கூறுகிறது. தற்சமயம் பாகிஸ்தானில் உள்ள மூல்டானில் அமைந்துள்ள ஆதித்தனின் பழம் பெரும் ஆலயம் சாம்பனுடன் சம்பந்தப்படுத்தப் பெறுகிறது. ஆரோக்கியத்துக்கு அதிதேவதையாகக் கருதப்பட்டவன் ஆதவன். முக்கியமாக, திருஷ்டி சக்திக்கு அவனே தெய்வம். புராண காலத்திலிருந்து சரித்திர காலத்துக்கு வந்தால், உஜ்ஜயினியை ஆண்ட ஹர்ஷவர்த்தனின் அவையை அலங்கரித்த மயூரன் என்னும் கவி கண் பார்வையிழந்து அல்லலுற்று மீண்டும் பார்வை பெற வேண்டி 'சூரிய சதகம்' என்னும் துதியை இயற்றியதாக அறிகிறோம். ஹிந்து மதத்தின் ஆறு முக்கிய பிரிவுகளாக ஆறு முக்கியமான தேவதைகளின் வழிபாட்டை முறை செய்து தந்த ஷண்மதாசாரியாராகிய ஆதிசங்கரர் கதிரவனை இந்த ஆறு தெய்வங்களில் ஒன்றாகக் கொண்ட ஸௌர மதத்தை அளித்துள்ளார்.

தமிழகத்தில் கதிரவன் வழிபாடு ஆதி காலம் தொட்டே இருந்து வந்திருக்கிறது.

'ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!'

என்னும் சிலப்பதிகாரத் தொடரும்,

முந்நீர் மீமிசைப் பலர் தொழத்தோன்றி
ஏமுற விளங்கிய சுடரினும்

என்னும் நற்றிணை வாக்கும்,


'தயங்கு திரைப் பெருங்கடல் உலகுதொழத்
தோன்றி வயங்கு கதிர் விரிந்த உருகெழு
மண்டிலம்

என்னும் அகநானூற்று மொழியும்,

'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு'

என்னும் திருமுருகாற்றுப் படை விளக்கமும் சங்க காலத்திலேயே தமிழகத்தில் சூரியனைப் போற்றும் பண்பு மலிந்திருந்தமைக்குச் சிறிய எடுத்துக் காட்டுகளாகும்.





மாமல்லபுரம், அர்ஜுனன் தவச்சிற்பத்தில் சூரியனும் தேவியும் வானில் பறந்துவரும் காட்சி.

இனி சிற்பரீதியில் சூரிய வழிபாட்டினைப் பார்ப்போம்: கிறிஸ்துவ சகாப்தத்துக்கு முன்னர் வடபுலத்தில் பெரிதும் வழிபாடு பெற்ற கடவுளரில் கதிரவன் முதன்மையானவன். கிரேக்கப் பெரு மன்னனாகிய அலெக்ஸாண்டரைத் தனித்து எதிர்க்க நேரிட்ட இந்திய வேந்தன் போரஸ் தன் படை அணிவகுப்பின் முன்பு சூரியதேவனின் சிற்பமொன்றை வைத்து வெற்றி வேண்டிப் பிரார்த்தித்ததாக அக்காலத்திய கிரேக்க வரலாற்றாசிரியராகிய கர்டியஸ் தெரிவிக்கிறார். புளூடார்க் என்னும் வேறோர் ஆசிரியர் ஹைடாஸ்பஸ் நதிக்கரையில் சூரியனுக்கோர் ஆலயமிருந்ததாகக் கூறுகின்றார். அலெக்ஸாண்டர் காலத்திலேயே தக்ஷசீலத்தில் வேறொரு சூரியாலயம் இருந்த விவரத்தை பிலஸ்ட்ரடாஸ் என்னும் பிறிதோர் ஆசிரியரின் வரலாற்றுக் குறிப்பிலின்று அறிகிறோம்.


கி. மு. ஆறாம் நூற்றாண்டளவில் பௌத்த, சமணச் சமயங்கள் தலையெடுத்து அதன் விளைவாக இந்து சமயம் சற்றே வலிமை குன்றிய காலத்திலும் கூட சூரிய உபாசனை நீடித்தது என ஊகிக்கப்படுகிறது. பௌத்த மதமும் அவனை வழிபட்டது. வட இந்தியாவில் புத்தகயையிலும் பாஜாவிலும் உள்ள பௌத்த சமயத்தைச் சார்ந்த புராதனக் குடைவரைக் கோயில்களில் எழில் மிக்க சூரிய சிற்பங்களைக் காண்கிறோம். இவைகள் ஒரே சக்கரத்துடன் கூடியதும் நான்கு குதிரைகளால் இழுக்கப்படுவதுமான ரதத்தில் உஷஸ் என்னும் ஒளி தேவி சகிதமாகக் கதிரவன் இருளரக்கனை வீழ்த்தி வாகை சூடும் காட்சியைச் சித்திரிக்கின்றன. ஏறத்தாழ இதே பாணியில் அமைந்துள்ள சிற்பமொன்

அனந்தபூர் மாவட்டம், ஹேமாவதியிலுள்ள ஆதவன்.

★



ஆறே அங்குல அகலத்தில் சூரியோதயக் காட்சி: தஞ்சைமாவட்டத்திலுள்ள புஞ்சைபுகழ்த் துணையீச்சர் ஆலயம்.



குஜராத் மாநிலத்தில் மொதேராவிலுள்ள கதிரவன் கோயில்

றைக் கலிங்கத்தில் புவனேசுவரத்துக்கு அருகிலுள்ள கண்டகிரி குடைவரைக் கோயிலில் காணலாம்.

குப்தப் பேரரசர்கள் செங்கோலோச்சிய காலத்தில் இந்து சமயம் புத்துணர்வு பெற்றுப் புதுப் பொலிவுடன் பீடுநடை போடத் தொடங்கியது. எனவே, இக்காலத்தில் சூரிய உபாசனையும் மேம்பட்டிருக்க வேண்டும். நெசவுத் தொழிலாளர் பலர் தாசபுரம் என்னும் நகரில் ஒன்றுசேர்ந்து தமக்குள் ஒரு சங்கம் நிறுவிக் கொண்டு சூரியனுக்குக் கற்றளியொன்று எடுப்பித்த சுவையான செய்தியை மாண்டோர் கல்வெட்டின் மூலம் அறிகிறோம். பல குப்தகால சாஸனங்கள் 'நமோ சூர்யாய' என்னும் வாசகத்துடனேயே தொடங்குகின்றன. இந்திரபுரத்திலிருந்த சூரியன் கோயிலில் தினந்தோறும் விளக்கு எரிப்பதற்காக தேவவிஷ்ணு என்னும் ஓர் அந்தணப் பெருமகனுக்கு மானியமளித்ததாக ஸ்கந்த குப்தனது இந்தூர்ச் செப்பேடு பகருகின்றது. குப்த சாம்ராஜ்யத்தை அழித்த மிஹிரகுலன் என்னும் வெளிநாட்டு மன்னன்கூட குப்தர்கள் பணியைத் தொடர்ந்து கதிரவனுக்குக் கற்றளியெடுத்ததைக் குவாலியர் கல்வெட்டினின்று அறிகின்றோம். வர்த்தன வம்சத் தோன்றல்களாகிய ராஜ்ய வர்த்தனன், ஆதித்ய வர்த்தனன், பிரபாகர வர்த்தனன் போன்றோர் தம்மை 'பரமாதித்ய பக்தன்'— அதாவது, ஆதவனின் அருமையடியார் — என்றே பிரகடனப்படுத்திப் பெருமை கொள்கின்றனர்.

இஸ்லாமியர் படையெடுப்புத் தொடங்கி இந்து சமயத்தைச் சார்ந்த பல கோயில்களும் அவைகளில் இருந்த அருங்கலைப் பொக்கிஷங்களும் சிற்பங்களும் சின்னாபின்னமாக்கப்பட்ட காலத்திலும்கூட சூரியதேவனுக்கெனக் கோயில்கள் பலதொடர்ந்து எடுக்கப்பட்டது கதிரவன் வழிபாட்டின் பெருமையை விளக்கும். இதற்கு ஆதாரங்களைக் கஹதவால, சாஹமான, பாரமாரக் கல்வெட்டுக்கள் பகருகின்றன.








வட ஆர்க்காடு காவேரிப் பாக்கத்தில் காணும் ஆதித்தன்.

★

திருச்சி கீழ்க்குடைவரைக் கோயிலிலுள்ள சூரியன்.

★

சூரிய அஸ்திரதேவர் படிமம்: சூரியனார்கோவில்



கோனாரக் ஆலயத்திலுள்ள பிரம்மாண்டமான சூரிய ஊர்தி




சிறப்புமிக்க கோனாரக் ஆலயத்தினுடைய வெளித்தோற்றம்.

கலிங்கத்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் கீழைக் கங்க வமிசத்தில் தோன்றிய முதலாம் நரசிம்மதேவன், பன்னிரண்டாண்டுகளில் வசூலித்த வரித்தொகை முழுவதையும் செலவிட்டுப் பன்னீராயிரம் சிற்பிகளைக் கொண்டு எழுப்பிய கோனாரக் ஆலயமும் குஜராத்தில் உள்ள மொதேராவும் வட புலத்துப் புராதன சூரியாலயங்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

இவ்வாறு பல நூற்றாண்டுகளாக வட நாடெங்கும் ஆலயங்களில் வழிபாடு பெற்ற கதிரவன் தமிழக ஆலயங்களில் பெற்ற இடம் என்ன? கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட — அதாவது பல்லவர் காலத்துக்கு முற்பட்ட — கோயில்களோ, சிற்பங்களோ தமிழகத்தில் இல்லை. முதன் முதல் குடைவரைக் கோயிலை எடுப்பித்த பல்லவப் பெரு வேந்தர்களின் ஆலயங்கள் அனைத்தும் சிவனுக்கோ, விஷ்ணுவுக்கோ அல்லது துர்க்கைக்கோ அளிக்கப்பட்டன; வேறு கடவுளர்க்கல்ல. சங்க இலக்கியத்தில் சிறப்பிக்கப்பட்டிருக்கும் கதிரவனுக்குப் பழந் தமிழ் நாட்டில் தனி ஆலயம் இல்லாதது புதிராகவேயுள்ளது! ஆயினும் பல்லவர்களாலும் அவர்கள் கீழ் ஆண்டு வந்த குறுநில மன்னர்களாகிய முத்தரையர்களாலும் குடையப் பெற்ற குகைக் கோயில்கள் சிலவற்றில் சூரியனின் சிற்பங்கள் இல்லாமலில்லை. மாமல்லபுரம் தர்மராஜ ரதத்தில் கீழ்த் திசையில் இரண்டாம் தளத்திலுள்ள சூரிய வடிவமும், 'அர்ஜுனன் தவ'ச் சிற்பத்திலுள்ள உருவமும் திருச்சி மலைக் கோட்டை அடிவாரத்திலுள்ள பிறிதொரு சிற்பமும், வட ஆர்க்காடு மாவட்டம் காவேரிப் பாக்கத்தில் கண்டெடுக்கப்பட்டுத் தற்சமயம் சென்னை அரசினர் பொருட்காட்சி சாலையில் உள்ள மற்றொரு வடிவமும் குறிப்பிடத் தக்கவை. இவைகள் பல்லவர் பாணியில் நீண்ட கிரீடமும், சற்றே நீண்ட முகமும், தடித்த உதடுகளும் கொண்டு எழில் கமழும் கலை வடிவங்களாக மிளிருகின்றன.

பல்லவர்களின் செல்வாக்குக் குன்றிச் சோழர்களின் பெருமை ஓங்க ஆரம்பித்ததும் தமிழகமெங்கும் கற்றளிகளின் எண்ணிக்கை பெருகிற்று. ஒவ்வொரு சிவன் கோயிலின் பிராகாரத்திலும் சூரியன் உள்ளிட்ட பரிவார தேவதைகளுக்கெனத் தனித் தனி சிறு கோயில்கள் எடுப்பிக்கப்பட்டன. தஞ்சை மாவட்டம் கும்பகோணம் நாகேசவரன் ஆலயத்திலுள்ள சின்னஞ்சிறு சூரியன் கோயில் இவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு. கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட பராந்தக சோழனின் ஆட்சிக் காலத்தில் இச்சிற்றாலயத்தில் விளக்கு எரிப்பதற்காக மானியம் அளிக்கப்பட்ட செய்தி கல்வெட்டொன்றின் மூலம் தெரிய வருகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஜாம்பை என்னும் சிற்றூரிலிருக்கும் நாகரீசுவரம் என்னும் கோயிலினுள் பராந்தகனின் நாற்பதாவது ஆண்டில் 'ஸ்ரீ கண்டராதித்ய ஆதித்ய க்ருஹம்' என்பதாக சூரியனுக்கெனச் சிற்றாலயம் எடுப்பிக்கப்பட்டதாக ஒரு சாஸனம் பேசுகிறது. 'கண்டராதித்தன்' என்ற பெயரிலேயே 'ஆதித்தன்' பெயர் இடம் பெற்றிருப்பதும், தமிழ்ப்பெரு மன்னர் சிலர் தம்மை சூரிய வம்சாவளியினராகக் கருதியதும் நம் நாட்டில் ஆதித்தனுக்கிருந்த ஆதிக்கத்தைக் காட்டுகின்றன. தஞ்சை மாவட்டம் புஞ்சையிலுள்ள புகழ்த்துணையீசுவரன் கோயிலில் கர்ப்பக்கிருகத்தின் அதிஷ்டானத்தில் சுமார் ஆறே அங்குல அகலமும் மூன்றே அங்குல உயரமும் கொண்ட பல சின்னஞ்சிறு சிற்பங்கள் பல உள்ளன. இவற்றிலொன்று சூரியோதயக் காட்சியை மிக அபூர்வமாக விளக்குவதைக் காணும்போது சிற்பியின் கலை நுண்மையை எண்ணி வியக்கிறோம். வட்ட வடிவமான ஒளிப் பிழம்பு தன் சிரத்தின் பின்னே சுழல, இரு கரங்களிலும் தாமரை மலரேந்திய கதிரவன் குதிரைகளால் இழுக்கப்படும் ரதத்தினின்றும் தோன்றுகிறான்; அவனது தேவியராகிய சாயாவும் சம்க்ஞாவும் இருபுறங்களிலும் நின்று தம் வில்லேந்திய கரங்களால் இருளரக்கனை வீழ்த்துகின்றனர். சூரியனது ரதத்தைச் சாரதி ஓட்டிச் செல்வதையும், ஆயுதம் தாங்கிய இருளரக்கர்கள் சூரியனின் தேவியர் முன்னர் நிற்பதையும் காண்கிறோம். சின்னஞ்சிறு கல்லில் ஓர் இரதத்

அவந்தியில் கண்டெடுக்கப்பட்ட கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயத்தின் சித்திரம். சூரிய ஒளியின்கீழ் மன்னன் சூரியனேதானோ?



தையும் எண்மரையும் சமைத்துத் தன் கலைத் திறனுக்குச் சாசுவதமான சின்னம் தேடிக் கொண்டு விட்டான் யாரும் அறியாத சிற்பி !

கருநாடகத்தில் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள ஹேமவதியில் கண்டெடுக்கப்பட்டதொரு சூரிய வடிவத்தில் சோழர், நொளம்பர் ஆகிய இரு பரம்பரையின் கலை நுணுக்கங்களை இணைத்துக் காண்கிறோம்.


சூரியச் சிற்பங்களும் அவனது சிற்றாலயங்களும் முற்காலச் சோழர் கோயில்கள் சிலவற்றில் காணப்படினும் அவனுக்கென்று தனிக் கோயிலெடுக்கும் மரபு குலோத்துங்கசோழன் காலத்திலேயே தொடங்கியதாகத் தோன்றுகிறது. தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்துக் கருகில் சூரியனார் கோயில் என வழங்கும் சிற்றூரில் குலோத்துங்கன் ஒளிதேவனுக்கென கவின் மிக்க கற்றளியொன்று எழுப்பியுள்ளான். கோயிலின் மூலஸ்தானத்தில் இரு கரங்களிலும் தாமரை மலரேந்தியுள்ள கதிரவனையும், பிராகாரத்திலுள்ள பரிவாரா ஆலயங்களில் இதர எண் கிரகங்களையும், விமானத்தில் துவாதச ஆதித்யர்களையும் காண்கிறோம். சூரியதேவனின் பல வடிவங்களை விளக்கும் படிமங்கள் பல இக்கோயிலில் உள்ளன. இவையனைத்திலும் மிகச் சிறப்பு வாய்ந்ததும் அபூர்வமானதும் 'அஸ்திர தேவர்' என வழங்கும் செப்புப் படிமமே. நீண்ட திரிசூலமொன்றில் எழில் மிகு சூரியனைப் பொருத்தியுள்ள நூதனமானதோர் அஸ்திர தேவரை இங்கு காண்கிறோம். இத்தகைய சூரிய அஸ்திர தேவரை இந்தியாவிலேயே வேறெங்கும் காண்பது அரிது. உற்சவ மூர்த்திகள் விழாக் காலங்களில் வீதி வலம் வருகையில் அவர்களுக்குமுன் அஸ்திர தேவரை எடுத்துச் செல்வது மரபு. இவரை 'முன் பொறுக்கி சாமி' என்று விளையாட்டாகக் குறிப்பிடுவதுமுண்டு. இப்படிமம் பிற்காலச் சோழர் காலத்தில் சூரிய வழிபாடு பெருமை பெற்றிருந்ததையும், சூரியனது படிமமொன்று உற்சவ மூர்த்தியாக வீதிவலம் வந்ததையும் சொல்லாமல் சொல்லுகிறது.

குலோத்துங்க சோழனால் எடுப்பிக்கப்பட்டதால் இக் கற்றளியில் உள்ள மூலவரைக் 'குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயத்து சூரிய தேவர்' என்றும் 'குலோத்துங்க சோழ மார்த்தாண்ட தேவர்' என்றும் கல்வெட்டுக்கள் வருணிக்கின்றன. மார்த்தாண்டன் என்பது சூரியனின் மறு பெயர். இக்கோயிலின் நிர்வாகத்தை நடத்தவும், வரவு செலவுக் கணக்குகளைக் கண்காணிப்பது போன்ற பணிகளைப் புரியவும் உரிமை வழங்குவதற்காகப் பொது ஏலம் நடத்தப்பட்ட சுவை மிக்க செய்தியைக் கல்வெட்டொன்றின் மூலம் அறியலாம்.

தமிழகத்தில் முதன் முதலாகக் கதிரவனுக்கெனத் தனிப் பெருங் கோயில் எழுந்ததற்குச் சில காரணங்களை அனுமானிக்கலாம். குலோத்துங்கன் காலத்தில் வடபுலத்து அரசியலில் உன்னதமாக விளங்கியவர் கஹதவாலர் என்னும் ராஜபுத்திர வமிசத்தவர். இவர்களின் மூல முதற்கடவுள் சூரியனே என்பது வரலாற்று உண்மை. இக்கஹதவாலரின் சாஸனமொன்றிலிருந்து அது குலோத்துங்கசோழனின் நாற்பத்தொன்பதாவது ஆட்சி ஆண்டில் செதுக்கப்பட்டதாக அறிகிறோம். பிற்காலச் சோழ மன்னர்களுக்கும் — குறிப்பாகக் குலோத்துங்கனுக்கும் — கஹதவால வழித்தோன்றல்களுக்கும் தொடர்பு இருந்து வந்தமைக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும். சூரிய உபாஸனையில் பேரார்வம் கொண்டோரின் தொடர்பே குலோத்துங்கனைத் தமிழ் நாட்டில் சூரியாலயமொன்று எடுப்பிக்கத் தூண்டியிருக்க வேண்டும். இச்செயல் தமிழகத்தைப் பொறுத்தவரை ஒளிதேவனின் வழிபாட்டு வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தையே தோற்றுவித்தது.

இன்று அம்மரபு ஆலமரமாய் வளர்ந்துள்ளது. தற்போது ஒரு சின்னஞ் சிறு பிள்ளையார் கோயில் கட்டினாலும் அதற்கு அங்கமாகக் கதிரவனை மையமாய்க் கொண்ட நவக்கிரகங்களை அமைத்தால் தானே நம் மனம் நிறைகிறது ?

சூரியனுக்குச் சாயாதேவியிடம் சனியும், யமுனையும், சாவர்ணியும் பிறந்ததாகவும், ஸம்க்ஞா தேவியிடம் யமன், யமி, அசுவினி தேவர்கள், சிராத்ததேவன் ஆகியோர் பிறந்ததாகவும் நம்மில் சிலர் அறிந்திருப்போம். இவர்களோடு ரேவந்தன் என்ற சூரிய புத்திரனைப் பற்றியும் புராண வாயிலாக அறியலாம். இவனுக்கு ஒரு சிற்ப வடிவத்தைப் பஞ்சாபில் 'குலு' என்னுமிடத்தில் காண்கிறோம். மைந்தனின் படிமம் தந்தையின் தோரணவளையிலேயே வடிக்கப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். நன்றி: வி. கோபாலன்



11. சிறைப்பட்டான் அயன்!

சிவபெருமானின் பிரீதிக்காக நாரத முனிவர் ஒரு வேள்வி செய்ய விரும்பினார். அரி, அயன், இந்திரன், அந்தணர், அருந்தவர் முதலியவர்களுடன் பூவுலகில் யாகத்திற்கெனத் தகுந்த க்ஷேத்திரம் அமைத்து வேதாகம விதிப்படி வேள்வி செய்யத் தொடங்கினார். வேள்வி செய்யும்போது மந்திரம் மாறுபட்டதால் யாக அக்கினியிலிருந்து செவ்வானம் போன்ற நிறத்துடன் ஓர் ஆட்டுக் கடா தோன்றியது. ரஸாயனப் பரிசோதனைகளில் ஒரு பொருளுக்கு மாறாக வேறு உபயோகித்தால் விபரீதம் ஏற்பட்டுவிடு மல்லவா? ஒலிகளின் ரஸத்துக்குட்புகுந்து முனிவர்கள் கண்ட மந்திர நாதங்கள் மாறுபட்டாலும் இவ்வாறே ஆகும். ஒலிகளும் நம் கண்ணுக்குத் தெரியும் பொருட்களைப் போல் உள்ளே அணு சக்தி கொண்டுள்ளன.

கோர உருவத்துடன் வேள்வித் தீயினின்று எழுந்த ஆட்டுக் கடா பெரும் சினத்துடன் ஆரவாரம் செய்தது. அதனைக் கண்டு அங்கிருந்தோர் அனைவரும் அஞ்சி நடுங்கினார்கள். உயிர்களைக் கொல்ல நினைத்த அந்த ஆட்டுக்கடா அஷ்ட குலாசலங்கள் அசைந்தாட ஆர்த்தது. வயிரத்துக்கு நிகரான கொம்புகளை நிலத்தில் குத்தித் தூளி கிளப்பியது. அதனைக் கண்ட நாரத முனிவர் முதலியோர் நடு நடுங்கி யாகத்தை விட்டு வெளியேறினர். ஆட்டுக் கடா அவர்களைத் துரத்திச் சென்று போரிட்டது. போரில் சிலரது கால்கள் ஒடிந்தன; சிலரது குடல்கள் சரிந்தன. சிலர் கைகளை இழந்தனர். ஆட்டுக் கடா உயிர்களைத் துன்புறுத்தி உலகம் யாவும் அஞ்ச உலவியது. ஆகாயத்தில் பாய்ந்து சூரிய சந்திரர்களது தேர்களை அழித்தது. தேர்களில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளுடன் போர் புரிந்தது.

இதனைக் கண்டு அஞ்சி ஓடிய நாரதரும் மற்ற முனிவர்களும், தேவர்களும் கயிலை மலையை அடைந்தனர். மலையில் ஏறிச் செல்லும் போது எல்லா ஆற்றலும், எல்லா முதன்மையும், எல்லா அனுக்கிரகமும் உடைய எந்தை கந்தவேள் இலக்கத்தொன்பது வீரர்களுடன் கூடி விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவரைக் கண்டதும் சந்திரனைக் கண்ட கடல்போல் உவகை பொங்க உளம் மகிழ்ந்தனர். ''நாம் இதற்காகச் சிவபெருமானிடம் செல்ல வேண்டாம். நம் துய




ரத்தை நீக்கும்பொருட்டுக் குமரக்கடவுளே இங்கு எழுந்தருளி யிருக்கின்றார்'' என்று தங்களுக்குள் தெளிவு கொண்டனர். நம்பினோர்க்கு அருளும் எம்பிரான் முன் சென்று அவரது திருவடித் தாமரையில் வீழ்ந்து, ஓலமிட்டுத் துதித்தனர்.

''மூவர்கள் முதல்வா ஓலம்;
முக்கண்ணன் புதல்வா ஓலம்;
சேவலங் கொடியாய் ஓலம்;
சிறந்த சிற்பரனே ஓலம்;
தேவர்கள் தேவே ஓலம்;
தெய்வநா யகனே ஓலம்;
ஆவலுற் றருள்வாய் ஓலம்;
அறுமுக ஓலம்; ஓலம்!''

என அரற்றிப் போற்றினர்.

கந்தப் பெருமான் தேவர்களுடைய பெருந் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி, ''அஞ்சாதீர்கள்'' என்று அபயம் தந்தார்.

தம் அருகே நின்ற வீரவாகு தேவரைப் பார்த்து, ''வேள்வியில் தோன்றி உயிர்களைக் கொன்று எங்கும் திரிகின்ற ஆட்டுக் கடாவை நீ விரைந்து சென்று இப்பொழுதே பிடித்துக் கொண்டு வா'' என்று பணித்தருளினார். வீரவாகு தேவர் அவ்வாக்கையைச் சிரமேல் தாங்கி, ஆட்டுக் கடாவைத் தேடிச் சென்றார். ஆட்டுக்கடா பூமியில் உள்ளவர்களைச் சிதைத்து, கீழ் ஏழுலகிலும் சென்று அங்குள்ளோரை வதைத்து, சுவர்க்க லோகம் முதலிய மேல் உலகங்களையும் தன் கொம்பால் தகர்த்து நாசஞ் செய்து, நான்முகனின்




உலகமாகிய சத்திய லோகத்தில் இறுமாந்து ஆரவாரித்து நின்றது.

வீரவாகு தேவர் அதன் கொம்பை அநாயாசமாகப்பற்றிக் கரகர வென்று சப்தம் உண்டாகுமாறு இழுத்துக் கொண்டுபோய்த் திருக் கயிலாய மலை வந்தடைந்து முருகன் திருமுன் விடுத்துப்பணிந்து நின்றார். தேவர் யாவரும் கண்டு நடுங்கிய ஆட்டினை வீரவாகு தேவர் அவ்வளவு எளிதில் அடக்கியது எவ்வாறு? ஆறுமுகனின் அருளாலும் ஆறுமுகனிடம் அவருக்கிருந்த அளப்பரும் பக்தியாலுமேயாகும்.

முருகக் கடவுள் முறுவல் பூத்து, தேவர்களையும் முனிவர்களையும்பார்த்து, ''ஆட்டுக் கடா நம்மிடம் வந்துவிட்டது. இனி நீங்கள் அஞ்சாது யாகத்தை இனிது முடியுங்கள்'' என்று அருளிச் செய்தார்.

தேவர்கள் எல்லையில்லாத திருப்தியும் ஆனந்தமும் அடைந்தனர். ''எம் பெருமானே! அடியேங்கட்கு இன்னும் ஒரு வரம் தரவேண்டும். இவ்வாட்டுக் கடாவை வேறெங்கும் விடாமல் தாங்கள் வாகனமாக ஏற்றுக்கொண்டு அருளுதல் வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டனர்.

கொடியவர்களே அடியவர்களை விடப் பாக்கிய சாலிகள்! எம்பிரானுடனேயே எப்போதும் இருப்பார்கள். நடராஜன் பாதத்தின் கீழே அநவரதமும் முயலகன் வாழ்வது போலும், துர்க்கையம்பிகையின் திருவடியின் கீழே மகிஷன் நிரந்தரமாய் வாழ்வது போலும், முருகனுடன் ஆட்டுக் கடா வாழலாயிற்று. முயலகனும் மகிஷனும்



போல் ஆடு அஞ்ஞானத்தைக் குறிக்கும். ஞானமூர்த்தி அஞ்ஞானத்தின் மீது ஆரோகணித்தார்.

ஆண்டவனுக்கு வேண்டுவது வேண்டாதது எதுவுமே இல்லை. நமக்குத் தீயனவாகத் தோன்றுபவையும் இறைவனுக்கு வேண்டாதன அல்ல. நம்மிடமிருந்து அவற்றைப் பிரித்துத் தன்னிடமே வைத்துக் கொள்வான்.

அக்கினிக்கு வாகனம் ஆடு. முருகப் பெருமான் அக்கினியேதான். அக்னி பூ என வேதத்தால் பிரதிபாதிக்கப்படுபவன். எனவே ஐயனும் ஆட்டை வாகனமாகக் கொண்டு அருளினார். அக்கினி தேவனுக்குள்ளே யிருந்து அதற்கு வெப்பம் தரும் மூலாக்கினி தேவன் தானே என்பதைக் காட்டுதற் பொருட்டு ஆட்டு வாகனத்துடன், அண்டங்களிலெல்லாம் பவனி வந்தார். ஜனனமற்ற முழுமுதற் பொருள் என்பதால் அஜன் என்று பெயர் கொண்ட ஆறுமுகச் சிவனாரை அஜவாகனன் என்பதாலும் வேதங்கள் "அஜன்" என்று அழைக்கின்றன.



முருகப்பெருமான் மும்மலத்தை அடக்கியவர் என்பதாலேயே அவருக்கு மயில், ஆடு, யானை என மூன்று வாகனங்கள். ஆணவம், கன்மம், மாயா என்று மலங்கள் மூன்று. நமது இயல்பிலேயே, நமது அமைப்பின் அணுவிலேயே, உள்ளது 'நான் – எனது' என்ற இரு கூறு கொண்ட ஆணவ மலம். நமது செயல்களில் வந்து சேருவது கன்ம மலம். நாம் பரம்பொருளிடமிருந்து பிரிந்து பேதமாய் அஞ்ஞான வாய்ப்பட்டு நிற்பது மாயா மலம்.

ஆன்மா என்று உளதோ அன்றே ஆணவ மலமும் உண்டு. அதன் வேகத்தை அடக்கவே கன்ம, மாயா மலங்கள் உள்ளன. தன் இயல்பால் செருக்கு மிகுந்த மயில் ஆணவ மலம். தனது செயலால் மதம் பிடித்த யானை கன்ம மலம். அறிவற்ற ஆடு மாயா மலம்.

காலா காலத்தில் மலம் நீங்காதாயின் எப்படி நோயற்ற வாழ்வு வாழ முடியாதோ அவ்வாறே இம் மும்மலம் நீங்காது போனால் ஆன்மாவுக்கு உய்வு இல்லை. 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' என்று மணி வாசகர் பாடியது போல் இறைவனிடமிருந்து ஜீவர்களை வேறு படுத்திஞற்போல் மாயா மலத்துக்காட்படுத்தும் அம்பாள்தான் மும்மலத்தைப் போக்கவும் ஜீவர்களைத் தூண்டி, அவர்களை நல்வழியில் 'வளர்த்தெடுத்து' அருள்கிறாள். மும்மலத்திலின்றும் நீங்கிப் பசுபதியுடன் சேரவேண்டும்.

இருவினை மலமூன்று இவையோடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும் வகை பரமசுக மதனையருள்

சிவபெருமான் அருள் முன்னால் முருகப் பெருமானிடம் மயில்போல் அடங்கியிருக்கிறது ஆணவ மலம்; ஆடுபோல் ஒடுங்கியிருக்கிறது மாயா மலம்; கட்டுண்ட யானைபோல் முடங்கியிருக்கிறது கன்ம மலம்.

குமரக் கடவுள் ஆட்டுக் கடாவை வாகனமாகக் கொண்டு எல்லா உலகங்களிலும் உலவிப் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்து இலக்கத்தொன்பது வீரர்களும் சூழ வெள்ளி மலையின் கண் எழுந்தருளியிருந்தார். ஒருநாள் பிரமதேவர், இந்திராதி தேவர்களுடனும், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்யாதரர் முதலிய கணங்களோடும் சிவபெருமானைச் சேவிக்கும் பொருட்டுத் திருக்கயிலாய மலையை அடைந்தார். சிவ சந்நிதிக்குச் செல்லும் வழியில் முதல் கோபுர வாயிலின் வடபால் செவ்வேள் லீலை புரிந்து கொண்டிருந்தார். பிரமனைத் தவிர மற்ற எல்லோரும் யான் - எனது என்னும் செருக்கின்றி முருகப்பிரானை வணங்கி வழிபட்டனர். பின்னர் திருக்கோயிலினுட் சென்று சிவபெருமானையும், உமாதேவியாரையும் வலம் வந்து துதித்துத் திருவருளைப் பெற்றுத் திரும்பினார்கள்.

திரும்பி வரும் வழியில் இலக்கத்தொன்பது வீரர்கள் புடைசூழ நவரத்தின சிங்காதனத்தில் எழுந்தருளி முருகவேள் திருவிளையாடல் செய்து கொண்டிருந்தார். எல்லாத் தேவர்களும் ஆறுமுக வள்ளலை வலம் வந்து அடிமலர் தொழுது தோத்திரம் புரிந்து சென்றனர். மூவர்களுக்கும் தேவர்களுக்கும் எட்டாத முழுமுதலாகிய முருகப் பெருமானைக் கண்ட பிரம தேவர், 'இவன் ஒரு பாலன்தானே, இவனை நானும் வணங்க வேண்டுமா?' என நினைத்து இறுமாந்து சென்றார்.

'சிவன் வேறு; தான் வேறு அன்று; மணியும் ஒளியும் போல் வெறும்

தானும் ஒன்று' என்பதையும், மூருகனுடைய தன்னையொழித்துச் சிவபெருமானை வழிபடுவோர்க்குத் திருவருள் உண்டாகாது என்பதையும் பிரமன் வாயிலாக உலகுக்கு உணர்த்த எண்ணிய முருகப் பெருமான் அயனின் செருக்கை அகற்றி நல்லருள் பாலிக்கவும் திருவுளங் கொண்டார்.

தருக்குடன் செல்லும பிரமனை அழைத்தார் கந்தன். பிரமதேவர் ஆறுமுகனை அணுகி அகங்காரத்துடன் சிறிது கைகுவித்து வணங்காத பாவனையாக வணங்கினார்.

முருகப் பெருமான் பிரமனை நோக்கி "நீ என்ன தொழில் செய்கின்றாய்?" என்று வினவினார். முருகனின் கம்பீரக் குரலே எத்தொழிலுக்கும் அதிபராக, மற்றைய தேவரை அவரவரது தொழிலில் செலுத்துபவர் அவர்தான் என்பதைப் புலப்படுத்தியது. பிரமனுக்கும் சிறிது அச்சமுண்டாயிற்று.

"சிவபெருமான் ஆணையினாலே படைக்கும் தொழில் செய்கின்றேன்" என்று நடுங்கிக் கொண்டே கூறினார்.



"படைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கும் உனக்கு வேதம் வருமோ?" என்று முருகவேள் வினவினார்.

"சிவபெருமான் அளவற்ற வேத சிவாகமங்களை அருளிச் செய்து அவற்றுள் சிலவற்றை யான் உய்யும் பொருட்டு எனக்கு உபதேசித்துள்ளார்; அவற்றை நான் உணர்வேன்" என்று நான்முகன் கூறினார்.

கந்தவேள் அதைக் கேட்டு நகைத்தார். பிரமன் வேதத்தை அறிந்திருந்திருந்தானே யன்றி உணர்ந்திருக்கவில்லை என்பதை ஐயன் தெரிந்து கொண்டே நகைத்தார். "நன்று நன்று! வேத உணர்ச்சி நினக்கிருக்குமாயின் முதல் வேதமாகிய இருக்கு வேதத்தினைச் சொல்லக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

வேதங்களுக்கெல்லாம் முன் சொல்லப்படும் 'ஓம்' என்ற குடிலை மந்திரத்தைக் கூறி, இருக்கு வேதத்தைச் சொல்ல ஆரம்பித்தார் பிரமதேவர். அப்பிரணவ மந்திரத்தையே தமது திரு முகங்களில் ஒன்றாகவுடைய வேத மந்திரஸ்வரூபராகிய ஐயன் திருநகை செய்து, "பிரமனே நில்! நீ முதலில் சொன்ன ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் யாது?" என்று கேட்டார்.

பிரமன் பிரணவத்தின் பொருள் தெரியாது விழித்தனன். அவனது கண்கள் சுழன்றன; நாணமுற்று விக்கித் திகைத்தான்.

முகத்தில் ஒன்றதா அவ்வெழுத்
துடையதோர் முருகன்
நகைத்து முன்னெழுத்தினுக்
குரைபொருளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன்
வெள்கினன் வீழ்த்து
திகைத்து நீத்தனன் கண்டிலன்
அப்பொருள் திறனே

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், எல்லா மந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாயும், மற்றைத் தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், காசியில் இறப்பவருக்கு எம்பெருமான் உபதேசித்தருளும் தாரகப் பிரமமாயும் விளங்கும் பிரணவத்தின் பொருளை ஆராயலானன் பிரமன்.

தாரகம் என்ற சொல்லுக்குத் தாண்டச் செய்வது என்று பொருள். எதனைத் தாண்டச் செய்வது? பிறவிப் பெருங்கடலைத் தாண்டச் செய்வது. பிறவிக் கடலைக் கடக்க உதவுவதால் ஓம் என்பது தாரக மந்திரம் எனப் பெற்றது.

கர்ப்ப ஜன்ம ஜராமரண ஸம்ஸார மஹத்பயாத் ஸந்தாரயதி தஸ்மாத் தாரகம் என்கிறது தாரகோபநிஷதம்.

தாரகப் பிரமத்தின் பொருள் பிரமதேவருக்கு விளங்கவில்லை. அவ்வாறெனில் நாம் எம்மாத்திரம்? யாருமே தங்களது அறிவால் விளங்கிக் கொள்ளக் கூடிய தத்துவமன்று. அது இறைவனிடம் அடைக்கலம் புகுந்தால் அவனது அருளால் மட்டுமே பிரணவப் பொருளை உணரலாம்.

மாமலர்ப்பெருங் கடவுளும்
மயங்கினன் என்றால்
நாமினிச்சில அறிந்தனம்
என்பது நகையே.

என்கிறார் கச்சியப்பர்.

பிரணவப் பொருள் அறியாத பிரமதேவர் 'சிவபெருமானிடம் வேதங்களைப் பாடம் கேட்டபோது இதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் போனேனே' என்று எண்ணி எண்ணி ஏங்கினார். பிரமதேவர் மயங்குவதைக் கண்ட முருகப் பெருமான் "பிரணவத்தின் பொருளை அறியாத நீ படைத்தல் தொழிலை எவ்வாறு புரிவாய்?"


உங்கள் கூந்தலின் உண்மையான
அழகை வெளிப்படுத்த
கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
COLGATE
HAIR OIL
பளபளப்புடனும், அடர்த்தியுடன் இளமைத் துடிப்போடும் விளங்கும் நீண்ட கூந்தலின் ரகசியம் தினந்தோறும் குளிக்குமுன் மயிர்க் கால்களிலும், கேசத்திலும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் தேய்த்துக்கொள்வதே என்பதை லக்ஷக்கணக்கான குடும்பத்தினர் அறிந்திருக்கின்றனர். அதன் உன்னதமான நறுமணத்திலும் நீங்கள் பரவசமடைவீர்கள்... கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் உங்கள் கேச வளர்ச்சிக்கு உதவுவதைக் கண்டு நீங்களே ஆனந்தமடைவீர்கள்!
அதன் பரவசமூட்டும் நறுமணத்தை உங்கள் குடும்பத்தினர் விரும்புவர்
எகானமி சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கூந்தலுக்கு அழகும் நறுமணமும் சேர்க்க ரோஸ், லவண்டர், மல்லிகை ஆகிய 3 வசீகரிக்கும் சுகந்தங்களில் கிடைக்கிறது.

என்று சினந்து கூறிப் பிரமதேவரின் நான்கு தலைகளும் குலுங்கும் வண்ணம் குட்டினார்.

எட்டெழுத்தைக் குடுமியிற் பயன்
　　இசைத் தென்றே
கட்டுரைத் திலன் மயங்கலும்
　　இதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மையதோ
　　வெனச் செவ்வேள்
குட்டினான் அயன் நான்குமா
　　முடிகளும் குலுங்க

ஒன்றினைச் செய்யு முன் அதன் பொருளை உணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் விபரீதமாகும். உலகைப் படைப்பதாகச் சொன்ன பிரமனோ அதன் உட்பொருளாக உறையும் பிரணவ வார்த்தையையே அறிந்திருக்க வில்லை. இதனால்தான் முருகன் அவ்வளவு சினம் கொண்டார்.

பிரமதேவனின் நான்கு தலைகளிலும் முருகப் பெருமான் தமது பன்னிரண்டு கரங்களையும் தலைக்கு மூன்று விதம் வைத்துக் குட்டினார். பிரமதேவரின் எட்டு நாசிக்குத் துவாரங்களிலும் உதிரம் வந்தது. அவரது சிகை விபூதி போல் துகள் பட்டு உதிர்ந்ததாம். இதை அருணகிரியார் கூறுகிறார்:

நாலுமுக னாதிபிர மாவுமென
　　ஆதரவுற
பாதபிர மாவைவிழ மோதிபொரு
　　வேலகென
நாலுசிர மோடு சிகை துளிபட
　　தாமழிய விடுவோனே.

பிரமதேவனின் அகங்காரம் முழுதும் தொலைந்து புனிதனாகும்படி குமார மூர்த்தி தமது திருவடியால் அவனை எற்றித் தள்ளிப் பாத தீட்சை தந்தருளினார். கற்பகோடி காலம் கடுந்தவம் புரிந்தாலும் கிடைத்தற்கரிய எம்பெருமான் திருவடி பிரமதேவர் மேல் படுவதற்கு அவர் எத்தகைய புண்ணியம் செய்தாரோ?

கந்தக் கடவுள் வீரவாகு தேவரை நோக்கி, "தம்பி! இருண்ட மனத்தனாகிய இவனைச் சிறையிடுக" என்று கட்டளையிட்டார். வீரவாகு தேவரும் மற்ற வீரர்களும் பிரமதேவரின் கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டி, அவரைக் கந்தவெற்பில் ஒரு குகைக்குக் கொண்டு போய் "முருகவேளை நம்பி என்னுமையால் கம்பி என்னைக் கடவாய்" என்று சிறை வைத்தனர்.

அயனைச் சிறைபுரிந்த பின் கந்தக் கடவுள் படைப்புத் தொழிலைத் தாமே ஏற்கத் திருவுளம் கொண்டார். முத்தொழிலுக்கும் தலைவராம் முருகப் பெருமான் கந்தவெற்புக்குச் சென்று ஒரு திருமுகமும் நான்கு திருக் கரங்களும் கொண்டு, ஒரு திருக் கரம் ஜபமாலையும், ஒரு திருக்கரம் கமண்டலமும் தாங்க, மற்றைய இரு திருக் கரங்களும் வரதமும் அபயமும் வழங்க, படைப்புத் தொழிலை மேற்கொண்டருளினார். நவ வீரர்கள், இலக்க வீரர்கள், இந்திரன், திருமால், தேவர்கள், இருடியர் முதலிய கணத்தவர்கள் எம்பெருமானைச் சூழ்ந்து துதித்து நின்றார்கள்.


ஒருகரந் தனிற் கண்டிகை
　　வடம்பரித்(து) ஒருதன்
கரதலந் தனிற் குண்டிகை
　　தரித்திரு கரங்கள்
வரதமோ டபயந்தரப்
　　பரம்பொருள் மகனோர்
திருமுகம் கொடு சதுர்முகன்
　　போலவீற் றிருந்தான்.

மூவர்களை முத்தொழில் புரிய நியமித்த எம்பெருமான், தாமே இப்போது



சிருட்டித் தொழில் புரிந்ததால் அதற்கேற்பத் திருமகள் நாயகனும் காத்தல் தொழிலும், உருத்திரமூர்த்தியால் அழித்தல் தொழிலும் புரிய முடியவில்லை. முருகப் பெருமான் அவற்றையும் தாமே செய்தருளி முத்தொழிற்கும் தாமே முதல்வர் என்பதைக் குன்றின்மேலிட்ட விளக்கென உணர்த்தி யருளினார்.

சொற் பிரபஞ்சம், பொருட் பிரபஞ்சம் என்னும் இரு வகைப் பிரபஞ்சங்களையும் கந்தவேள், தாம் நிமித்தக் காரணராக நின்று, முதற் காரணமாகிய மாயையிலிருந்தும், துணைக் காரணமாகிய சக்தியைக்கொண்டும் படைத்து, காத்து, அழித்து திருவருள் புரிந்தார். செவ்வேட் பரமன் புரியும் படைப்பில் தோன்றிய ஆன்மாக்கள் பெற்ற பேற்றை அளவிட்டுக் கூற வல்லார் யார்? அப்படைப்பில் வந்த யாவரும் புண்ணிய வடிவாகவே விளங்கினர். பாவம் என்பது அறவே நீங்கிற்று. எங்கும் மெய்ஞ்ஞானம் மிளிர்ந்தது; சிவ மணம் கமழ்ந்தது. (தொடரும்)



பொங்கலோ பொங்கல்
நன்றாயிருக்கு, எழுந்திருங்கோ! இந்தப் பஞ்ச காலத்திலெயாவது இலை போட்டாலும் டக்குனு உட்கார்ந்து விடணுமா! அது காக்கைக்குக் கரைக்குப் போட்டிருக்கேன்!
மாப்பிள்ளே! நல்ல சகுனம் கழுதை கத்துகிறது! கிளம்புங்கோ கச்சேரிக்கு!
குங்குமம் மட்டும் இட்டால் போதும் மேக்கப் பண்ண வேண்டாம்!

தண்டபாணியின் தர்மம்

கோமதி ஸ்வாமிநாதன்



உள்ளூர்ப் பள்ளிக்கூடம் விழாக் கோலம் பூண்டிருந்தது. பள்ளிக்கூடத்தை ஒட்டியிருந்த திறந்த வெளி அரங்கத்தை அழகு படத் தோரணங்களாலும் பூச்செடிகளாலும் அலங்கரித்திருந்தார்கள். நிகழவிருக்கும் விழாவில் பொதுமக்கள் கலந்துகொள்ள வாய்ப்பாக நானூறு ஐந்நூறு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. பாதி நாற்காலிகளில் பார்வையாளர்கள் வந்து அமர்ந்து விட்டார்கள். குறிப்பிட்ட நேரத்துக்கு இன்னும் சில நிமிஷங்கள் இருந்ததால் ஒலிபெருக்கி மூலம் நாதஸ்வர இசை இனிமையாகப் பரவிக் கொண்டிருந்தது.

பள்ளிக்கூடக் காம்பவுண்டை ஒட்டிய சாலையில் வழக்கம் போல் மாலை வேளை உலாவுதலை, குளக்கரை வரையில் மேற்கொண்டு நடந்த பரசுராமன் செவிகளில் அந்த நாதசுர இசை மோதியது. எட்டிப் பார்த்தார். பள்ளிக்கூடத்தில் என்ன விழா என்று அவருக்குத் தெரியாது. ஊருக்குப் புதியவர். அவர் பிள்ளை கோபாலன் ஒரு மாதத்துக்கு முந்தித்தான் இந்த ஊருக்கு உத்தியோக மாற்றலாகி வந்திருக்கிறான். மற்றொரு பிள்ளையுடன் வசித்து வந்த பரசுராமன் கோபாலனின் குழந்தைகளைக் கட்டி மேய்க்கலாமென்று வந்து சேர்ந்தார். அறுபது வயதைத் தாண்டியவர் அவர்.

'என்ன விசேஷமாக இருந்தால் என்ன? இன்றைக்கு இங்குதான் சற்று பொழுதைப் போக்கலாமே' என்று பரசுராமன் பள்ளிக்கூட கேட் வழியாக உள்ளே நுழைந்தார். உற்சாகம் மிகுந்த மாணவ வரவேற்புக் குழுவினர் அவரை நேராக முதல் வரிசையில் கொண்டு போய் உட்கார்த்திவிட்டார்கள். தலைமை உபாத்தியாயரும் பரசுராமனை உள்ளூர்ப் பிரமுகர்களில் ஒருவர் என்று நினைத்துக் கரம் குப்பினார். ரிட்டயர்டு தாசில்தார் ரங்கசாமியின் சாயல் தம்மிடம் கொஞ்சம் இருக்கிறது என்று பரசுராமனுக்குத் தெரியாதே!

அந்தத் தனியார் பள்ளிக்குப் புதிதாக விஞ்ஞானப் பரிசோதனை சாலைக் கட்டடம் எழுப்ப ஐம்பதினாயிரம் ரூபாய் நிதி உதவி செய்திருக்கும் தொழிற் பிரமுகர் திருவாளர் தண்டபாணியின் உருவப் படத்தைத் திறந்து வைப்பதற்கான விழாதான் அன்று நடக்கவிருக்கிறது என்று பரசுராமன் பக்கத்தில் இருந்தவரைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

ஐம்பதினாயிரத்தை அள்ளிக் கொடுக்கக் கூடிய அளவுக்குத் தண்டபாணி என்ற தொழிற் பிரமுகர் யாரும் இந்தப் பக்கம் இருப்பதாகத் தெரியவில்லை பரசுராமனுக்கு. அவர் தமிழ் நாடு முழுதும் சுற்றி வருபவர். பிள்ளை, பெண், உறவினர் என்று பல ஊர்களிலும் அவருக்கு வரவேற்பு உண்டு.

அந்த ஐயத்தையும் பக்கத்திலிருந்தவர் போக்கினார். தண்டபாணி பரம்பரை பரம்பரையாகப் பம்பாயிலேயே தொழில் நடத்துபவராம். அவருக்கு இந்தப் பக்கத்தில் மனிதர்கள் யாருமே கிடையாதாம். ஏன்? அவர் பிரமச்சாரியாகவே வாழ்ந்து வருகிறாராம்!

அப்படியானால் ஏதோ ஒரு மூலையில் உள்ள இந்தச் சிற்றூர்ப் பள்ளிக்கூடத்தினிடம் அவர் கவனம் திரும்பக் காரணம் என்ன என்ற கேள்வியும் பரசுராமன் உள்ளத்தில் எழுந்தது. அதற்கும் விடை கிடைத்தது. தன் மாணவர்களை அழைத்துக் கொண்டு ஒரு சமயம் வட இந்தியாவுக்குத் தலைமை உபாத்தியாயர் சுற்றுலா போயிருந்த போது எதிர்பாராதவிதமாகப் பரோடா போகும் ரயிலில் அவர் தண்டபாணியைச் சந்திக்க நேர்ந்ததாகவும், கல்வி வளர்ச்சியில் அவர் மிகுந்த அக்கறை காட்டியதாகவும் அப்போது இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டதாகவும் பதில் வந்தது.

விழாவுக்குத் தலைமை வகித்துப் படத்தையும் திறந்து வைக்க இசைந்திருந்த பக்கத்து ஊர் ஜில்லா முன்சீப் சிதம்பரம் பந்தலுக்குள் நுழையவும் நாதசுரம் கெட்டி மேளமாக ஒலித்தது. பள்ளிக்கூட நிர்வாகத்தினர் பிரமாத உபசரிப்புடன் விழாத் தலைவரை மேடைக்கு அழைத்து வந்து அமரச் செய்தார்கள். தலைவர் சிதம்பரத்தை எங்கோ முன்னால் பார்த்திருப்பதாகப் பரசு





ராமனுக்கு ஒரு பிரமை. ஆனாலும் நினைவுக்கு வரவில்லை. திறக்கப்பட வேண்டிய படம் திரைச் சீலையால் மூடப்பட்டு மேடையின் ஒரு பக்கத்தில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கு நேராகத்தான் முன் வரிசையில் பரசுராமன் உட்கார்ந்திருந்தார்.

தலைமை ஆசிரியர் தம் வரவேற்பு உரையை நீண்டதாகவே அமைத்துக் கொண்டார். தாம் தண்டபாணியை முன்பு சந்தித்ததை விவரித்தார். அவர் பள்ளிக்கூடமே போனதில்லையாம். அதற்காகவே இந்தப் பள்ளிக்குப் பண உதவி செய்வதில் ஆர்வம் காட்டுகிறாராம். புதுக் கட்டடத்துக்குத் தம் பெயர் வைப்பதையோ, தம் படத்துக்குத் திறப்பு விழா நடத்துவதையோ அவருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லையாம். வெகு சிரமப்பட்டுப் படம் திறக்க மாத்திரம் அனுமதி வாங்கினார்களாம். 'தண்டபாணியே அனுப்பிய புகைப்படத்தைப் பெரிதாக்கியிருக்கிறது. அதை இந்தப் பள்ளியின் பழைய மாணவரும் இன்று உயர்ந்த பதவியில் இருப்பவருமான சிதம்பரம் திறந்து வைப்பது இந்தப் பள்ளி செய்த பாக்கியம்' என்று முடித்தார் தலைமை ஆசிரியர். அவருடைய சம்பிரதாய வேண்டுகோளுக்கிணங்கத் தலைவர் கயிற்றை இழுத்துக் கரகோஷத்துக்கிடையே படத்தைத் திறந்து வைத்தார். மேடையில் அமைக்கப்பட்டிருந்த ஒளி துல்லியமாகப் படத்தின் உருவத்தில் விழுந்தது.

பரசுராமன் மூக்குக்கண்ணாடியை நன்றாகத் துடைத்துக் கொண்டு படத்தை உற்றுக் கவனித்தார். கூடவே திடுக்கிட்டார். மேலும் சில நிமிஷங்கள் கவனித்துப் பார்த்த பிறகு "அட பாவி! நீயா?" என்ற வார்த்தைகள் அவரை அறியாமல் அவர் அதரங்களிலிருந்து வெளிப்பட்டன. நல்லவேளையாகத் தலைவரின் நகைச்சுவைப் பேச்சில் லயித்திருந்த அக்கம்பக்கத்தினர் அவரைக் கவனிக்கவில்லை!

பரசுராமன் அந்தப் பேச்சைக் கவனிக்கவில்லை. அவர் நினைவு அந்த விழாவிலேயே இல்லை. முப்பது வருடங்களுக்கு முன்னுலே போய் விட்டது:

"என்னப்பா, தண்டபாணி! நீ வாடகையையும் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. ஆனால் ஒழுங்காகப் பாதி ராத்திரிக்கு மேலே ஒரு நாளைப்போல் வாசற்கதவை வந்து தட்டி, வீட்டில் உள்ள மற்ற குடித்தனக்காரர்களைத் தூங்க விடாமல் அடிக்கிறாய்! எனக்கு வாடகை பாக்கி நஷ்டமானாலும் பரவாயில்லை. நீ காலி பண்ணி வேறு எங்கேயாவது போய்விட்டால் தேவலை" என்றார் பரசுராமன். பரசுராமனின் தந்தைக்குச் சொந்தமான அந்த மதுரை வீட்டின் பின் கட்டுப் பகுதியில் தண்டபாணி தன் மனைவி கைக் குழந்தைகள் சகிதம் குடியிருந்தான். தண்டபாணிக்கு மேல மாசி வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் சமையல் வேலை.

தண்டபாணியின் குடும்பம் அந்த நாட்களிலேயே சுபிட்சமாக நடந்ததாகத் தெரியவில்லை. தண்டபாணி வாங்கும் சம்பளம் ஒழுங்காக வீடு வந்து சேராது. சீட்டாட்டக் கோஷ்டியினர் ஆட்டம் என்ற பெயரில் பெரும் பகுதியை அபகரித்துக் கொண்டு விடுவார்கள். தண்டபாணி மனைவி கங்கா ஓர் அப்பாவி. கணவனை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டாள். அவள் கண்டு கொண்டிருந்த கனவெல்லாம் என்றாவது ஒரு நாள் சொந்தக் கடை வைத்து முதலாளியாக மாட்டாரா என்பதுதான்!

சில நாட்கள் பாதி ராத்திரியில் பின் கட்டில் தடதடவென்று அடி விழும் சத்தம் கேட்கும். ஆனால் கங்கா வாயைத் திறக்க வேண்டுமே! தண்டபாணி சீட்டாட்டத்தில் கோட்டை விட்டிருக்கிறான் என்றறியலாம்.

ஒரு நாள் முன்னிரவு நேரம். பரசுராமன் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.



பின்கட்டிலிருந்து வாசல் பக்கம் வந்த தண்டபாணி அவரைப் பார்த்து, "அண்ணா! உங்களிட்ட சில முக்கிய விஷயங்கள் சொல்லணும். அந்தத் தெரு மூலைக்கு வருகிறீர்களா? இங்கு பேசினால் யாராவது வந்துகொண்டிருப்பார்கள்" என்றான். அந்த வேளையில் தண்டபாணியைப் பார்ப்பது அபூர்வம். ஆனாலும் அவன் குரலில் பதற்றம் இருந்தது.

இருவரும் சந்தடி மிக்க தெரு மூலைக்கு வந்தார்கள். "அண்ணா! இந்தக் கவரில் நூறு ரூபாய் இருக்கிறது. உங்களுக்கு ஆறு மாத காலத்துக்கான வாடகை முப்பது ரூபாய் போக மீதியை வைத்துக்கொள்ளுங்கள். கங்கா எப்போதாவது உதவி கேட்டால் கொஞ்சம் கொஞ்சம் கொடுங்கள். நான் ஒரு பெரிய மனிதருடன் வட இந்திய யாத்திரை போகிறேன். சமையல் தொழில் தான்! திரும்ப நாலைந்து மாதங்களாகும்!" பரசுராமனுக்குப் பதில் சொல்லுவதற்கு அவகாசம் கொடுக்காமல் தண்டபாணி அங்கிருந்து நடந்து விட்டான்.

நான்கு நாட்கள் கழித்துத் தண்டபாணியின் ஹோட்டல் முதலாளி இரண்டு போலீஸ்காரர்களுடன் கங்கா குடியிருந்த இடத்தைச் சோதனை போட வந்தபோது பரசுராமனுக்கு விஷயம் புரிந்தது. தண்டபாணி நான்கு நாட்களுக்கு முன் முதலாளி பெட்டியைத் திறந்து அகப்பட்ட பணத்தைச் சுருட்டிக் கொண்டு வந்து விட்டானாம். என்ன தேடியும் ஆள் அகப்படவில்லை என்றதின் பேரில் போலீசுக்குப் புகார் போயிற்று.

நல்ல வேளை! கங்கா இருந்த இடத்தில் செப்புக் காசு கூட இல்லை. முதலாளி ஏமாற்றத்துடன் போனார். தண்டபாணியின் அவசரம் இன்றுதான் பரசுராமனுக்குப் புரிந்தது. அவர் கங்காவிடம் போய் அந்த நூறு ரூபாய் விவகாரத்தைச் சொல்லி, "தாயே! உன் புருஷன் இன்னும் சில காலம் தலைகாட்ட மாட்டான் என்றுதான் நினைக்கிறேன். இந்த இடத்திற்கு நீ வாடகை ஒன்றும் தரவேண்டாம். உன் குழந்தைகளைப் பெரியவர்களாக்கும் பொறுப்பு உன்னைச் சேர்ந்துவிட்டது. நீ ஏதாவது உழைத்துப் பிழைக்க வழி பார்! பக்கத்துத் தெரு ஜமீந்தார் வீட்டில் கூடமாட ஒத்தாசை செய்ய ஆள் தேவையாம். போய்ப் பார்! இந்தா நூறு ரூபாய்" என்று கொடுத்துவிட்டு வந்தார்.

அப்புறம் ஒரு வருடம் கங்கா அங்கே இருந்தாள். தண்டபாணியிடமிருந்து தகவல் இல்லை. அவனைப் பம்பாயில் பார்த்ததாக யாரோ தகவல் சொன்னார்கள். கங்கா பக்கத்து ஊரில் தூரத்து உறவினர்களுடன் தங்கப் போவதாகச் சொல்லி வீட்டைக் காலி பண்ணிவிட்டுப் போய்விட்டாள். அப்புறம் அவர் கங்காவையோ அவர் குழந்தைகளையோ பார்க்கவில்லை. அவர்கள் நினைவு மாத்திரம் இருந்தது. தண்டபாணி இனிமேல் தலைகாட்ட மாட்டான் என்ற ஊகம் மாத்திரம் உண்டு.

அதே தண்டபாணி! வலது கண்ணுக்குக் கீழ் அதே பெரிய மச்சம்! வளைந்த மூக்கு. சந்தேகமில்லை. என்னதான் படத்தில் சேட் டோப்பி வைத்திருந்தாலும் அந்தக் கண்களிலிருந்து அவனுக்கே உரித்தான பார்வையை எடுக்க முடியாதே!... அன்று ஐந்து ரூபாய் வாடகை கொடுக்க இயலாமல் தவித்தவன் இன்று நன்கொடையாக எப்படி ஐம்பதினாயிரம் கொடுக்க முடிந்தது? எப்படிச் சம்பாதித்தான்...?

பரசுராமன் சிந்தனையை மேடையில் அப்போது கணீரென்று எழுந்த பேச்சொலி தடுத்து நிறுத்தியது. பள்ளிக் கமிட்டியைச் சேர்ந்த பிரமுகர் பேசிக் கொண்டிருந்தார்:

"திருவாளர் தண்டபாணி இன்று ஒரு லட்சாதிபதியாக இருந்தாலும் அவர் ஆதி நாட்களில் பள்ளிக்கூடம் போகக் கூட வசதி இல்லாதவராகத்தான் இருந்திருக்க வேண்டும். பல வருடங்களுக்கு முன் அவர் கையை உதறிக் கொண்டு அஹமதாபாத்திலிருந்த பெரிய மில் அதிபர் ஜீவன்லாலின் அந்தரங்க வேலைக்காரராகத்தான் வந்து சேர்ந்தாராம். நாளடைவில் ஜீவன்லாலின் அபிமானத்துக்குப் பாத்திரமானார். தம் யோக்கியதையால்! நாணயத்தால்! விசுவாசத்தால்! ஜீவன்லாலின் குமாரர்கள் பெரியவர்களாகிப் பொறுப்பேற்றுக் கொண்ட போது தங்கள் குடும்பத்துக்கு விசுவாசமாக உழைத்த தண்டபாணியைத் தங்கள் பாகஸ்தராகவே ஆக்கிக் கொண்டார்கள். அதிகமாக எழுதப் படிக்கத் தெரியாத அவர் தம் அறிவினாலும் ஆற்றலினாலும் உயர்ந்தார். இப்படி உதார குணமுள்ள வள்ளல்களினால் சமூகம் உயர்கிறது......"

கரகோஷம் காதைப் பிளக்க எழுந்தது. கைதட்டாதவர் பரசுராமன் ஒருவர் தான். அவருக்கு உதார குணம், அறிவு, ஒண்டிக் கட்டை என்ற வார்த்தைகள் ஆத்திரத்தை எழுப்பின. பெற்ற குழந்தைகளையும் மனைவியையும் அநாதரவாக விட்டுப் போனவன் இன்று பெரிய மனிதனாகத் திகழ்கிறான்.

நிகழ்ச்சி நிரலில் கண்டிருந்த ஒருவர் எதிர்பாராத காரணங்களால் வரவில்லை. அந்த நேரத்தை ஈடுகட்டத் தலைமையாசிரியர், முன் வரிசையில் இருந்த பிரமுகர்களில் யாராவது சில வார்த்தைகள் பேச விரும்புகிறார்களா என்று ரகசியமாக விசாரித்தார். அந்த வாய்ப்பை ஒரு திட்டத்துடன் பயன்படுத்திக் கொள்ள முன் வந்தார் பரசுராமன்.

தண்டபாணியின் பெயரைக் குறிப்பிடாமல் பழைய மதுரைக் கதையை ஆரம்பித்தார். முடிவில் ஆவேசத்துடன் தண்டபாணியின் பெயரைச் சொல்லி, "இன்று இப்படித் தர்மம் செய்து தம் மனச்சாட்சியைச் சமாதானப்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும் அவரை எல்லோரும் தனிக் கட்டை என்று குறிப்பிடுவதிலிருந்து அவர் தம் மனைவி குழந்தைகளை அப்புறம் சந்தித்து சம்ரட்சணை செய்ய முன்வரவில்லை என்றுதான் ஊகிக்க வேண்டியிருக்கிறது. திருவாளர் தண்டபாணி இப்போதாவது தம் மனைவி குழந்தைகள் எங்கிருக்கிறார்கள் என்று தேடிக் கண்டுபிடித்து மறு வாழ்வளிக்க முன் வருவாரானால், இப்போது செய்திருக்கும் நன்கொடை போல் பன்மடங்கு பெரிய நன்கொடையைச் சமூகத்துக்குச் செய்தவராவார்" என்று கூறிப் பரசுராமன் நிறுத்தினார்.

மறந்து போய்க்கூட யாரும் கைதட்டவில்லை. அதற்குப் பதிலாக, 'உட்கார்! நிறுத்து! பேசாதே' என்ற கூக்குரல்கள்தான் எழுந்தன. தலைமை ஆசிரியர் கையைப் பிசைந்து என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

விழாத் தலைவர் சிதம்பரம் மேஜையில் தட்டி அமைதியை உண்டாக்கினார். பரசுராமனைத் தம் பக்கத்திலிருந்த நாற்காலியிலேயே அமரச் செய்து விட்டு எழுந்தார். ''சபையோர்களே! இந்தப் பெரியவர் இப்போது பேசியது உங்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கி விட்டிருக்கலாம். ஆனால் அதுவே என் உள்ளத்தில் ஆழ்ந்த சிந்தனையையும் தோற்றுவித்திருக்கிறது. என் நினைவு தெரிந்து நான் என் தந்தையைப் பார்த்ததில்லை. என் பெயருக்கு முன் உள்ள எழுத்து 'டி.' என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். என் தாயார் பெயர் கங்காதான். என் தாயார் மதுரையில் வசித்ததைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்... தகப்பனார் காணாது போனது பற்றியும் விவரித்திருக்கிறார்கள். எப்படியோ சிரமப்பட்டு உழைத்து ஊர் ஊராக மாறி என்னைப் படிக்க வைத்து உருவாக்கிய பெருமை அவர்களுக்குச் சேரும். நான் வாரச் சாப்பாடு சாப்பிட்டு, உபகாரச் சம்பளம் வாங்கிப் படித்து முன்னுக்கு வந்தவன். என் தந்தையைப் பற்றித் தெரிந்து கொள்ள நான் முயற்சி எடுத்துக் கொண்டேன். பலனில்லை. இப்போது இந்தப் பெரியவர் பேச்சிலிருந்து என் தந்தையைக் கண்டுபிடித்து விட்டதாகவே கருதுகிறேன். இன்று அவர் வந்து பேசியிருக்காவிட்டால் இந்த விஷயம் எனக்குத் தெரியவே தெரியாமல் போயிருக்கும். ஆகவே இந்தப் பள்ளி நிர்வாகத்தின் சார்பிலும் என் சார்பிலும் இந்தப் பெரியவருக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.''

படம் ஏற்படுத்திய அதிர்ச்சியைவிட இது பன்மடங்கு அதிக அதிர்ச்சியை ஏற்படுத்தியது பரசுராமனுக்கு. கடைசி வரிசையில் கறுப்புக் கோட்டு தலைப்பா சகிதம் உட்கார்ந்திருந்த ஒரு முதியவர் எழுந்து, ''எனக்கு இரண்டு நிமிடங்கள் பேச அனுமதி கொடுங்கள். என்னைப் பற்றித்தான் இரண்டு வார்த்தைகள். இரண்டே நிமிஷம்'' என்று கூறி மேடையை நோக்கி வந்தே விட்டார். தலைமையாசிரியருக்கு வேறு வழியில்லை.

''அன்பர்களே! திருவாளர் தண்டபாணி பம்பாய்க்குப் போய்ப் பணக்காரர் ஆனாரே! அவர் சும்மா இருக்கவில்லை. கையில் பணம் சேர்ந்ததும், மனைவி மக்களைத் தேடித் தமிழ் நாட்டுக்கு வந்தார். எங்கு தேடியும் அவர்களைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. சில ஆண்டுகள் இந்த ஊரில் அந்தக் குடும்பம் தங்கியிருந்ததாகத் தகவல் வந்தது. அவர் பையன் இந்தப் பள்ளியில் படித்தானாம். ஆனால் அதற்கு மேல் ஒன்றும் தெரியவில்லை. விரக்தியுடன் பம்பாய்க்குத் திரும்பி ஏகாங்கியாகவே இருந்தார். அவர் ஆதி நாட்களில் முதலாளியின் பணத்தைத் திருடி விட்டு ஊரை விட்டு ஓடினார் என்பது தோட்டக்காரரின் கற்பனை. தண்டபாணியை ஓர் அடியாளாக உபயோகித்துத் தம் விரோதி ஒருவரைத் தாக்க அந்த தோட்டக்காரர் பணம் கொடுத்தார். தண்டபாணி அந்தத் தலைவரை அடி வாங்க வேண்டியவருக்குச் சொல்லி எச்சரித்து விட்டுக் கிடைத்த பணத்தை வீட்டில் சேர்க்க ஏற்பாடு செய்து விட்டுத் தலைமறைவாய்ப் போனார். எங்கே பிறகு தனக்கு விரோதமாகத் தோன்றி விடுவாரோ தண்டபாணி என்ற நினைப்பில் தோட்டக்காரர்தான் போலீசுக்குப் பொய் வழக்குக் கொடுத்தார். அதனாலேயே தண்டபாணி பல காலம் குடும்பத்துடன் தொடர்பு கொள்ளவில்லை. அந்தத் தண்டபாணிக்கு இந்தப் பள்ளி விழாவில் கலந்து கொள்ள ஆசை அதிகம். நேரில் வந்தால் பெரிய விளம்பரமாகப் போய்விடுமோ என்று பயந்தார்; தம் மகன் படித்த பள்ளிக்கு உதவுவதில் அவருக்குத் தம் மகனைக் காணும் உணர்ச்சி தோன்றும் போல் இருந்தது. யாருக்கும் சொல்லாமல் ரகசியமாக வந்து கலந்து கொண்டு ரசித்தார். எதிர்பாராத விதமாக மகனையே கண்டார்!'' முதியவர் நிறுத்தினார்; எல்லோரும் அரங்கத்தில் வந்திருப்பவர்களில் யார் தண்டபாணியாக இருப்பார் என்று பார்வையைத் திருப்பினார்கள்.

''தேடிப் பார்க்க வேண்டாம்! நான்தான் அந்தத் தண்டபாணி'' என்று சொல்லித் தலைப்பாகையை எடுத்தார் முதியவர்.

''அண்ணே! நீர் அன்றும் உதவினீர்; இன்றும் உதவினீர்! நீர் மாத்திரம் குறுக்கே மேடையில் ஏறிப் பேசாமலிருந்திருந்தால் நான் வந்த சுவடு தெரியாமல் போயிருப்பேன். ஆனால் நீர் பேசியதால் என் பையன் பேசினான். நான் அவனைக் கண்டு கொண்டேன். இந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்வதென்றே தெரியவில்லை. ஆம்! இந்தப் பள்ளிக்கு இன்னொரு ஐம்பதினாயிரம் நன்கொடை கொடுக்கிறேன். அதைக் கொண்டு எழும் கட்டடத்துக்கும் 'பரசுராமன் பிளாக்' என்று பெயர் சூட்டப்படும்.''


தண்டபாணி உணர்ச்சி பரவசம் நிறைந்த குரலில் பேசினார். இதைக் கேட்டுச் சபையோர் கரகோஷம் செய்தனர். தலைவரைப் பார்த்த தண்டபாணியின் கண்கள் குளமாகின!

தலைமையாசிரியர் நன்றி நிறைந்த கண்களுடன் பரசுராமனைப் பார்த்தார்! அதில் தான் எத்தனை மரியாதை!

உறுதி

தமிழ்மகன்

காதலில் நின்றவன் கையடித்தே - ஒரு
கணமதில் தந்தான் உறுதிகளை! - அக்
காதலும் போக உறுதிகளும் - ஓடிக்
காற்றொடு காற்றாய் மறைந்தனவே!
தேர்தலில் நின்றவன் வாயடித்தே - இனம்
தேடியும் தந்தான் உறுதிகளை! - அத்
தேர்தலும் போக உறுதிகளும் - எங்கே
தேடியும் நில்லா தொழிந்தனவே!


18
என்ன தேடுகிறீர்கள்?
பெட்டிகள் எல்லாம் கலைந்து கிடக்கின்றன. புத்தகங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் யார்
அன்று நாம் போனதும் அறையைப் பார்க்கவில்லை.
ஆமாம்! மற்றவர்களின் சாமான்கள் இருக்கிறதா பார்க்கணும்.
இவை எப்படி இங்கே வந்தன? இவை யார், எதற்காக எப்பொழுது இங்கே கொண்டு வந்து போட்டார்கள் என்று நான் கேட்கிறேன்.
போட்டார்களா? உனக்குத் தெரியாமல் திருடும் கிளெப்டோமேனியா வியாதியும் உண்டு போலிருக்கிறது.
பட்டாணிக் கடலையா, செட்டியார் திருடினார்? இவள் நம் குடும்பத்து. ஒத்துக்கொள்ளாது. வேண்டாம்.
ஹா! அதோ ஒரு பாம்பு!
ஆம், பாம்பு, பாம்பு!


உலகம் புடலங்காய் மாதிரி நீண்டு இருக்கிறதென்று சொல்கிறார்கள்!
பாம்பு என்று சொல்லியும் பயப்படாமல் இருக்குமா? சில சமயம் மனோவியாதியால் காது பாதிக்கப்படுவதுண்டு.
அவனுக்குப் பார்வைதானில்லையே காது கொஞ்சம் செவிடு!
வாருங்கள் மோபாய்! உங்களுக்கு டெலிபோன் செய்யவேண்டுமென்று இருந்தேன்.
அக்கா வா! இப்படித் தான் என்னை வைத்து கொண்டு இருக்கிறார் இந்த டாக்டர்.
இவனோடு பேசிவிட்டு வாருங்கள். நாங்கள் போகிறோம்.
மோபாய் தான் ராஜேஷைப் பற்றித் தெரிந்துகொண்டு வந்த தகவல்களைக் கூறுகிறாள்.


ராஜா அங்கே வருகிறாரா? அதுதான் நான் சில நாட்கள் இங்கே காணப்படுவதில்லை. ஏதாவது சாக்குச் சொல்லு. என்னை அழைத்துக் கொண்டு போ. திரும்பிக் கொண்டு வந்து விடுவதாகச் சொல். பணம் கொடுத்துவிடு.
நீங்கள் அவளைக் குணப்படுத்தி விடுவோம் என்று சொல்வதைக் கேட்கச் சந்தோஷம். என் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அவளை அழைத்துக் கொண்டு போய்விட்டு வருகிறேன். இந்தாருங்கள் செக்.
சரி. அவளை அழைத்து வரச் சொல்கிறேன்.
நான் தயார்!
போகும்போய்ச் சீக்கிரம் திரும்பி விடு.
என் அறையில் என்ன திருடப்போகிறீர்கள்?
நான் உன்னை அந்த வீட்டு வாசலில் விட்டுப் போகிறேன். நீ அரைமணி நேரத்தில் கதவைத் திறந்துவை.
மிஸ்டர்... ராஜா...
ஆமாம், நான்தான். தாங்கள்...

கயல் விழி

அகிலன்

இரண்டாம் அத்தியாயம்

புலவரின் தூது

கயல்விழி தங்கியிருந்த மாளிகைக்குள் விழுப்பரையர் நுழைந்தபோது அவர் கரங்கள் ஒரு வெண் பொற்கலத்தைத் தாங்கிக் கொண்டிருந்தன. அதில் திருநீறு, குங்குமம், மஞ்சள், மலர் மாலை, பழங்கள் முதலிய மங்கலப் பொருள்கள் நிறைந்திருந்தன. விழுப்பரையரின் பாதங்களில் விழுந்து வணங்கி விட்டு அவற்றைப் பயபக்தியோடு ஏற்றுக் கொண்டாள் கயல்விழி.

''அங்கயற்கண்ணி அம்மையைத் தரிசித்து விட்டு, அவருடைய பிரசாதங்களோடு உன்னைக் காண வந்திருக்கிறேன்'' என்று கூறிக் கொண்டே அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தார் விழுப்பரையர்.

கயல்விழி பிரசாதங்களை எடுத்து அணிந்து கொண்டாள். அப்போது அவளிடம் அவள் தந்தையாரைப் பற்றி விசாரித்துக் கொண்டே, அவளுடைய தோற்றத்தில் தென்பட்ட மாறுதல்களைக் கவனித்தார் விழுப்பரையர். உடல் துரும்பாக இளைத்திருந்தது. முகத்தில் வழக்கம் போல் களை குலுங்கவில்லை. ஆடை ஆபரணங்களில் அவளுடைய அலட்சியம் தென்பட்டது. கண்களில் உயிரை வைத்துக் கொண்டு அங்கு நடமாடினாள் கயல்விழி.

''கயல்விழி! உனக்கு நேர்ந்த துன்பம் என்னவென்று அறிந்து கொள்ளலாமா?'' என்று மிகுந்த பரிவோடு கேட்டார் விழுப்பரையர்.

''ஒரு துன்பமுமில்லையே! மகிழ்ச்சியோடுதானே இருக்கிறேன்?'' என்று புன்னகை பூக்க முயன்றாள் கயல்விழி. அவளுடைய முயற்சி அவளது மனத் துயரை மிகைப்படுத்திக் காட்டியது.

''முன்பு ஒரு முறை அவர் உன்னை விட்டுப் பிரிந்து போனதாக நினைந்து



உன்னையே வாட்டிக் கொண்டாய். அதையாவது என்னால் உணர முடிந்தது. இப்போது அவரே உன்னை அரண்மனைக்கு அழைக்கும்போது நீ அவர் அழைப்பை மறுத்து விட்டு அதற்காக வருந்துகிறாய். இளவரசராகப் பிறந்தது அவருடைய குற்றமல்லவே? இந்த நாடு செய்த பாக்கியமல்லவோ அது?''

''இல்லை, இல்லை; அதனால் எனக்குத் துன்பமில்லை'' என்று பதறினாள் கயல்விழி.

''அவர் இளவரசராக இருந்தாலும் இனி அவர் பேரரசராக வளர்ந்தாலும் அவரால் என்றுமே உன்னை மறக்க முடியாது. உன்னை மறக்க முடியாதபடி நீ அவரிடம் வளர்ந்து விட்டாய். நீ அவருக்காகச் செய்திருக்கும் பணிகளை யெல்லாம் நினைத்துப் பார்.''

அவள் எதையும் நினைத்துப் பார்க்கக் கூடிய மன நிலையில் அப்போது இல்லை. எப்போதும் ஒரே ஒரு நினைவு தான் அவளிடம் திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டிருந்தது. சுந்தர பாண்டியனிடம் நெருங்கிப் பழகியதனால் அவனுக்கு அபசாரம் செய்துவிட்டதாகவே அவள் நம்பத் தொடங்கினாள். வேறு எதையுமே சிந்திப்பதற்கு அவள் மனம் மறுத்து விட்டது.

''செல்வமும் செருக்கும் மிகுந்த ஆடலணங்காக இருந்த நீ அவருக்காகக் கிராமந்தோறும் நகரந்தோறும் நடன மாடினாய். அவருக்காக உன்னுடைய சொந்த நலன்கள் எல்லாவற்றையுமே இழக்கத் துணிந்தாய். அவருக்காக மட்டுமின்றி, அவருடைய இலட்சியத்துக்காகவும்



உன்னையே அர்ப்பணித்துக் கொண்ட பெண்மணி நீ. அவருடைய கனவுகள் நனவாகப் போகும் இந்தச் சமயத்தில், இலட்சியத்தின் வெற்றி தலைவாயிலில் வந்து நிற்கும் இந்த வேளையில், நீ அவரைப் புறக்கணிக்கலாமா?''

''நான் அவரைப் புறக்கணிக்கிறேனா? அபசாரம்! அபசாரம்!'' என்று தன் செவிகளைப் பொத்திக் கொண்டாள் கயல்விழி. ''தயைசெய்து அந்த அளவுக்கு என்னை உயர்த்திக் கூறாதீர்கள். நான் அவர் அன்புக்குப் பாத்திரமாகக் கூடாதவள். கூத்தாடிப் பிழைக்கும் பாணர் குலமங்கை நான்.''

விழுப்பரையரால் அவள் போக்கை உணர்ந்துகொள்ள முடிந்தது. காலம் காலமாக இரத்தத்தில் ஊறியுள்ள பழைமைப் பண்புக்கு மாறாக அவளால் நினைத்துப் பார்க்கவும் தெம்பில்லை என்று நினைத்தார். அரசர்கள் தெய்வங்களாக மதிக்கப்படுபவர்கள்; அரச குலம் தெய்வ குலமாகப் போற்றப் படும் குலம்.

கயல்விழியை அழைத்துக் கொண்டு மேல் மாடத்துக்கு வந்தார் விழுப் பரையர். எட்டுத் திசைகளிலும் சுட்டிக் காட்டினார். மதுரைமா நகரமே மாபெரும் பாசறை போன்று விளங் கியது. திரும்பிய திசைகளிலெல்லாம் யானைக் கூட்டங்கள், குதிரைக் கூட் டங்கள், தேர்க் கூட்டங்கள், வீரர்களின் கூட்டங்கள்!

''இந்த அற்புதக் காட்சிக்கு மூல காரணமாக விளங்கும் தூய சக்தி எது தெரியுமா? அன்பு! உன் அன்பு! நீ அவரிடம் கொண்ட மாசற்ற அன்பு!''

''இல்லை; அவர் மனித உருவில் நடமாடும் தெய்வப் பிறவி. அவருடைய போராற்றலுக்கு முன்னால் என் அன்பு அற்பத்திலும் அற்பமானது. என் அன்பைச் சொல்லி அவர் ஆற்றலுக்கு மாசு கற்பிக்க வேண்டாம்'' என்று முறையிட்டாள் கயல்விழி.

பேதைப் பெண்ணின் அறியாமையைக் கண்டு நகைப்பதா அல்லது சினங் கொள்வதா என்று விழுப்பரையருக்குப் புரியவில்லை. சுந்தரபாண்டியனின் ஆற்றலில் அவள் கொண்டிருந்த நம்பிக்கை அவளுடைய அன்பின் ஆற்றலை அவருக்குச் சுட்டிக்காட்டியது.

''கயல்விழி! இளவரசனின் போராற்றலை நான் என்றுமே குறைத்து மதித்ததில்லை. இந்த நாட்டையே தமது குடை நிழலில் வைத்துக் காக்கும் மிகப் பெரிய ஆலமரம் போன்றவர் அவர். ஆனால் அந்த ஆற்றலுக்கு வானமுதமாக அமைந்து விட்டது உன்னுடைய அன்பு. எத்தனையோ வகை அன்புகளிலும் தலைவன் தலைவிக்குரிய அன்பு இருக்கிறதே, அதுதான் எல்லையற்ற சக்தி வாய்ந்தது. தியாகச் சுடர் விட்டு உலகையே காப்பாற்றும் வலிமை அதற்கு உண்டு. வள்ளுவரின் அறத்துப் பாலை நீ அவருடன் ஒன்றிப் படித்திருக்கிறாயல்லவா?''

அப்படிப் படித்த நாட்களையும் படித்தவாறே வாழ வேண்டுமென்று இன்பக் கற்பனைகள் எழுப்பிய நாட்களையும் எண்ணிப் பார்த்தாள் கயல்விழி. ''அப்போது அவர் புலவர்; நான் கூத்தாடிப் பிழைப்பவள். இனிமேல் தலைவி என்ற சொல்லே என்னைச் சுட்டு விடுமென்று அஞ்சுகிறேன்.''

கோபம் வந்து விட்டது விழுப் பரையருக்கு. குரலைச் சிறிது கடுமையாக்கிக் கொண்டார்.

''இங்கே இந்த நகரத்துக்குள் குழுமியிருக்கும் லட்சோப லட்சம் வீரர் கூட்டத்தையும் நினைவில் வைத்துக் கொள். இதற்கு முன்பு போரில் இந்த நகரம் தீப்பட்ட காட்சியையும் நினைவில் வைத்துக் கொள். முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக அடிமைப்பட்டுத் துன்புற்ற நாடு, அதன் முந்நூறு ஆண்டுப் பாவத்துக்கும் பிராயச்சித்தம் செய்யத் துடித்துக் கொண்டு நிற்பதைப் பார். இப்போது சொல்: இளவரசர் அவருடைய இலட்சியத்தில் வெற்றி பெற வேண்டுமென்று நீ நினைக்கிறாயா, இல்லையா?''

விழுப்பரையரின் குரலில் தொனித்த வேகம் கண்டு நடுநடுங்கிப் போனாள் கயல்விழி. மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாள். அவளால் வாய் திறந்து பேச முடியவில்லை.

''இத்தனை வீரர்களின் உள்ளத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கையாக, தியாகத் திருவிளக்காய்ச் சுடர் விடும் அவர் வெற்றி பெற வேண்டுமா? கூடாதா? இந்த நாடு வாழ வேண்டுமா? அழிய வேண்டுமா? மறுமொழி சொல்; அதை உடனே சொல்!''

''அவருடைய வெற்றியைக் காணவே இந்த உயிர் இன்னும் உடலோடு துடித்துக் கொண்டிருக்கிறது'' என்று நாத் தழுதழுக்கக் கூறினாள் கயல்விழி.

''எப்படி அவரால் வெற்றி பெற முடியும்?'' என்று கேட்டார் விழுப் பரையர். ''அவருடைய உயிருக்குயிரான நீ, வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் அவர் குதித்திருக்கும் இந்த வேளையில் அவரிடமிருந்து

இருமலை அகற்றுக

இருமல்

அகல விரைவான, கெடுதலற்ற, நிச்சயமான நிவாரணி

க்ளைகோடின்

டெர்ப் வசாகா

இந்த ஆறு காரணங்களால், க்ளைகோடின் இருமலுக்கு சிறந்த நிவாரணி:



1. எந்தவிதமான இருமலுக்கும், எப்பொழுதும் சிறந்தது
2. மருத்துவர்களால் அனுமதிக்கப்பட்ட சரியான பார்முலா
3. சிறுவரும் பெரியோரும் விரும்பும் இனிய சுவை
4. சிபார்சு செய்யப்பட்ட அளவில் உட்கொண்டால் கெடுதல் செய்யாதது
5. 4-வித சிக்கனமான சைசுகளில் கிடைக்கிறது
6. அலம்பிக்கின் நம்பகமான தரம்

Alembic

30 வருடங்களுக்கு மேலாக இருமலுக்கு வீட்டிலேயே குணமளிக்கும் நிவாரணி

TV 1282 TAM EVEREST

பிரிந்து விட்டால் எப்படி அவரால் வெற்றி பெற முடியும்? வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைப்பது போலல்லவோ நீ அவருக்குத் துன்பம் தருகிறாய்? இளவரசரும் மனிதர்தானே? அவருடைய மனத் துக்குத் துன்பம் தருவதற்கு இதுவா உற்ற நேரம்? முதலில் நமது வெற்றி! அந்த இலட்சியம் நிறைவேறும் வரையில் வேறு எந்தச் சிந்தனையுமே உனக்குக் கூடாது. வேறு நினைவுகள் உன்னை வாட்டுவதற்கு நீ இடமளித்தால் நீ அவருக்கும் இந்த நாட்டுக்கும் துரோகம் செய்கிறாய் !''

''நான் என்ன செய்ய வேண்டும்?''

''இப்போதே நீ அரண்மனைக்கு என்னோடு புறப்பட்டு வருகிறாய். அங்கே உன்னை அன்போடு வரவேற்கக் கோப்பெருந் தேவியார் காத்திருக்கிறார்கள். அரசரும் தேவியாரும் உன் மீது கொண்டுள்ள பற்றுதலை நீ இனி மேல்தான் தெரிந்து கொள்வாய். அங்கு வந்து இளவரசரின் குறிப்பறிந்து நீ என்றும் போல் மகிழ்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும்.''

கயல்விழிக்கு அது மீற முடியாத கட்டளையாகத் தோன்றியது. அதுவே சிறந்த வழி என்பதும் புலப்பட்டது. எனினும் சற்றே தயங்கினாள்.

''நான் வருகிறேன். இளவரசரின் ஆணைகளைச் சிரமேற்கொண்டு அவருக்குப் பணி புரிகிறேன். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள்; ஒரே ஒரு வரம் தாங்கள் என் சார்பில் இளவரசரிடம் கோர வேண்டும். அந்த வரம்....''

''என்ன அது?''

''நான் ஒரு பணிப் பெண். வேளமகளிர் போன்ற நிலையில் உள்ள பணிப் பெண். அரண்மனையில் அடிமைப் பெண்ணாக இருப்பதையே நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். என்னைப் பணிப் பெண்ணாகவே அவர் கருத வேண்டும்.''

''முதலில் போர் முடியட்டும். உன் விருப்பத்தைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். இப்போது நீ புறப்பட்டு வந்து அவருடைய முகத்தில் புன்னகை தவழச் செய். அவருக்குக் களிப்பூட்டுவதே உன் முதற் பணி என்று முடிவுசெய்துகொள். போருக்குச் செல்பவர் வெற்றி பெற்றுத் திரும்ப வேண்டும் !''

விழுப்பரையரின் கடைசிச் சொல் மந்திர சக்தி பெற்று அவளை ஆட்டுவித்தது. தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டே, ''போருக்குப் பெண்களும் உடன் செல்லலாமா?'' என்று கேட்டாள்.

மூன்றும் அத்தியாயம்

பணிபுரிய வந்தனள்

தமது பாதங்களில் வந்து வீழ்ந்த கயல்விழியை இரு கரங்களாலும் மெல்லப் பற்றித் தூக்கினார் கோப்பெருந் தேவி. அச்சத்தோடு அவர் பிடியிலிருந்து விலக முயன்ற கயல்விழியை அவர் நழுவ விடவில்லை. அன்புப் பெருக்கோடு அணைத்துக் கொண்டு அவள் நெற்றியில் முத்தமிட்டார். கயல்விழிக்கு மெய்சிலிர்த்தது. தன் தகுதிக்கு அப்பாற்பட்டதொரு பெரும் பாக்கியம் தன்னை வந்து அணைத்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டாள்.

''கயல்விழி! நடந்தவற்றை யெல்லாம் புலவர் என்னிடம் கூறியிருக்கிறார். நீ அரசருக்கு முன்பாகவே சபையில் வந்து சுந்தரபாண்டியனுக்காக வாதாடினாயாமே ? அவ்வளவு துணிவு மிக்க பெண்ணா என்னைக் காண்பதற்கு அஞ்சிக் கொண்டு விலகியிருந்தாய் ? மகளே! நானும் உனக்கொரு தாய் ! உன்னுடைய தமக்கையம்மா, நான்?''

தாய்ப் பாசத்தை அறியாத கயல்விழிக்கு அந்த அன்புப் பெருக்கைத் தாங்க முடியவில்லை. பாண்டிய நாடு முழுவதுக்குமே தாயான கோப்பெருந் தேவியா இவ்வளவு கனிவோடு தன்னிடம் பேசுகிறார் ?

''நான்.... நான் பாணர் குலப் பெண்.... கூத்தாடிப் பிழைத்தவள்... நான் உங்கள் அடிமை. உங்கள் பணிப் பெண்ணாக இருக்கவும் தகுதியற்றவள்'' என்று தடுமாறினாள் கயல்விழி.

கோப்பெருந்தேவி சிரித்தார். ''நீ கூறுவது அவ்வளவும் மெய்தான். நானுமே எங்கள் அரசருக்குப் பணிப் பெண்தான்; அடிமைதான். நாம் நமது தலைவருக்கு அடிமைப் பெண்ணாக, அந்தரங்க அமைச்சராக, தாயாக, தாதியாக இருக்க வேண்டியவர்கள் தாம். நம்முடைய பெருமையே அதில் தானே இருக்கிறது ?''

கயல்விழியின் பொன்னெனிர் மேனி நடுங்கியது. தலைவிக்குரிய தகுதியைத் தேவியாரே குறிப்பிடுகிறாரே!

"இதோ பார்! நம்முடைய பரம்பரைப் பண்பு உன்னையும் என்னையும் வெறும் மானுடப் பெண்களாக மட்டும் மதிக்கவில்லை. நாம் நம் தலைவருடன் வாழும் காலம் வந்தவுடனேயே திருமகளாக, கலைமகளாக, புவிமகளாக, சய மகளாக மாறுகிறோம். நீ திருமகளின் அருள் பெற்ற சயமகள் என்பதை முன்னமேயே உணர்த்தி விட்டாய். நீ எந்தக் குடியில் பிறந்து எப்படி வாழ்ந்திருந்தால் என்ன? சுந்தரபாண்டியனின் அன்பைப் பெற்றவுடனேயே நீ அரச குலத்தவளாகி விட்டாய். அவனுக்குப் பணி செய்து உன்னை வளர்த்துக் கொள்; அவன் மக்களுக்குப் பணி செய்து நாட்டை வளர்த்து விடுவான்."

ஓர் இரகசியம் முதன் முறையாகக் கயல்விழியின் உள்ளத்தில் பதிந்தது: வீட்டின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி; வீட்டின் வளமே நாட்டின் வளம். பெண்ணே பொறுமை மிக்க புவிமகள்; வெற்றிகளைத் தேடித் தரும் சயமகள். இவ்வளவு பண்புகளையும் அவள் தேடிப் பெற்றுத் தன் தலைவனுக்குத் தர வேண்டும். அவன் உலகையே ஒரு குடை நிழலில் காக்கும் உத்தமனாக வீறு பெற்று வளர்வான்.

"என் குறைகளையெல்லாம் பொறுத்து என்னை ஏற்றுக் கொள்ளுகிறீர்கள். தலைவியாக வரும் தகுதியற்ற நான் அவருக்குத் தலைமைப் பணிப் பெண்ணாகவேனும் இருக்க முயல்கிறேன்" என்று நன்றி பொங்கக் கூறினாள் கயல்விழி.

"நாடு தன்னுரிமை பெற்று அவன் தலைவனாகும்போது நீதான் தலைவியாகப் போகிறாய். சுமைகளை ஏற்றுக் கொள்ளவும் இப்போதிருந்தே பழகிக் கொள்!" என்று சிரித்துக் கொண்டே கூறினார் கோப்பெருந்தேவி. "அரசருக்கும் எனக்கும் வயதாகிறதல்லவா? எங்களுக்குச் சிறிது அமைதியும் ஓய்வும் வேண்டுமல்லவா?"

மிகப் புனிதமான அந்த எதிர் கால்க் கனவுகள் பற்றிக் கற்பனை செய்யவே கயல்விழி தயங்கினாள். அவளுடைய உள்ளமெல்லாம் அப்போது சுந்தர பாண்டியனிடம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவனைச் சென்று காண அவள் துடித்தாள்.

"இந்தா. இவற்றை எடுத்துக் கொண்டு அவனைப் போய்ப் பார். நீ விரும்பியது போலவே இப்போதே உன்னை இங்கு பணிப் பெண்ணாக நியமித்து விடுகிறேன்!" என்றார் கோப்பெருந்தேவி.



"ரேஷன் கார்டைக் கழுதை தின்னுட்டுது சார்!"
"இதென்ன அதிசயம்! அந்தப் புழுத்துப்போன ரேஷன் அரிசியைத் தின்றிருந்தாலல்லவா நீங்க ஆச்சரியப் படணும்!"

செங்கதலிகளையும் மாங்கனிகளையும் ஒரு பொன் தட்டில் வைத்துக் கயல்விழியிடம் நீட்டினார் அரசியார். ஒரு கலத்தில் தண்ணீரும் வந்தது. அவற்றை எடுத்துக் கொண்டு சுந்தர பாண்டியனின் கூடத்துக்குள் அடிமேல் அடி எடுத்து நடந்தாள் கயல்விழி. எல்லாமே அவளுக்குப் புதுமையாகத் தோன்றியது.

விழுப்புரையரிடமிருந்து செய்தியைக் கேட்டதிலிருந்து ஒவ்வொரு கணத்தையும் யுகமாக்கி அவளுக்காகக் காத்திருந்தான் சுந்தர பாண்டியன். காலம் காலமாகப் பிரிந்திருந்தவளை மீண்டும் சந்திக்கப் போகும் பரபரப்பு அவனுக்கு. சில தினங்களாக அவ்விடம் குடிகொண்டிருந்த இனம் புரியாத சோர்வு அவனை விட்டுப் பறந்து விட்டது.

"வருக! வருக! வெற்றித் திருமகளே வருக!" என்று குதூகலத்துடன் அவளை அழைத்துக் கொண்டே எழுந்து வந்தான் சுந்தர பாண்டியன். வந்தவன் அவளது இரு கரங்களையும் மெல்லப் பற்றி அழைத்துச் சென்றான். அவளுடைய கரங்கள் நடுங்கின. பழங்களும் தண்ணீரும் கரங்களில் இருந்ததால் அவள் அவற்றை இறுகப் பற்றிக் கொண்டாள். குனிந்த தலையை நிமிர்ந்து இன்னும் அவள் சுந்தரபாண்டியனைப் பார்க்கவில்லை. (தொடரும்)




1788
THE E.I.D.-PARRY GROUP
1964

தாமஸ் பாரி கட்டிய வீடு


1788ல் ஓர் சிறிய வர்த்தகக் கம்பெனியாக ஸ்தாபிக்கப்பட்ட பாரீஸ் நம் நாட்டிற்கு 176 ஆண்டுகளாக சீரிய முறையில் நற்பணி புரிந்துள்ளது. கடந்த ஒன்றேமுக்கால் நூற்றாண்டு காலத்தில் அது அடைந்த ஆச்சரியகரமான முன்னேற்றத்தின் பயனாக ஏற்பட்டுள்ளதுதான் இன்றைய இ. ஐ. டி. – பாரி குரூப். தேசத்தின் பொருளாதாரத் துறையில் மிக முக்கியப் பங்குகொண்டுள்ள ஒன்பது கம்பெனிகள் இதில் இணைந்துள்ளன.

சீரிய முறையில் ஸ்திரமான வளர்ச்சியடைந்த நிலையில் தன்னுடன் இணைந்துள்ள இதர கம்பெனிகளுக்கு, தேசத்தின் வளர்ச்சிக்கு மிக்க அத்தியாவசியமான ரசாயன உரங்கள், சர்க்கரை, மிட்டாய் தினுசுகள் ஸானிடரி சாமான்கள், ஆஸிட்ஸ், கெமிகல்ஸ், தொழிற்துறைகளுக்கான ஆல்க்கால் போன்றவைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதோடு தனது ஸ்தாபனத்தை அபிவிருத்தி செய்வதில் ஊக்கமும் தன்னம்பிக்கையும் அளிக்கிறது.

இ. ஐ. டி. – பாரி குரூப், மதராஸ்



தேசத்தின் பாதுகாப்புப் பணியில் உங்கள் கடமையைச் செய்யுங்கள்



இன்று புதிதாய்ப்

இந்தப் பங்களாவில் இருக்கிற எல்லாப் பொருள்களுமே விலை உயர்ந்தவைதாம். யாரோ ஒரு ரசிகர் சிங்கப்பூரிலிருந்து வரவழைத்துக் கொடுத்த அந்த உயர்தர ரெப்ரிஜிரேடரின் விலை மூவாயிரம் ரூபாய். போர்டிகோவையே அடைத்துக் கொண்டு ஜெட் விமானம் ஒன்று இறங்கி வந்து நிற்பது போலத் தோன்றும் இந்தப் புதிய காரின் விலை முக்கால் லட்சம். இப்படியே இந்த வீட்டிலிருக்கும் ரேடியோகிராம், டேப் ரிக்கார்டர் எல்லாவற்றையும் உயர்ந்த விலைக்குத்தான் தேடி வாங்கியிருந்தான் அவன். நிம்மதியும் இப்படி எதாவது ஓர் உயர்ந்த விலைக்குக் கிடைக்க முடிந்தால் அதையும் தாராளமாக விடு நிறைய மனம் நிறைய வாங்கி வைத்து விடலாம். ஆனால் நிம்மதியின் அதிகபட்சமான உயர்ந்த விலை என்னவாக இருக்க முடியுமென்பதுதான் புரியவில்லை. பல சமயங்களில் எந்த சௌகரியத்தையோ அடைய முடியாமல் அல்லது அநுபவிக்க முடியாமல் தான் மீதம் விட்டிருப்பது போல் ஒரு சலிப்பை அவன் தனக்குத்தானே அந்தரங்கமாக உணர்ந்திருக்கிறான்.

வாழ்க்கையில் இந்த விநாடி வரை இது ஒரு பெரிய புதிராகத்தான் இருக்கிறது. செல்வமும், சௌகரியங்களும் வாழ்க்கையில் இல்லாதவரை அவற்றுக்காகத் தவிக்கிறோம். செல்வமும் சௌகரியங்களும் ஏற்பட்டபின் அவற்றோடு நிழலாக வந்து சேர வேண்டிய புகழுக்காக ஏங்குகிறோம். புகழ் என்பது மிகப் பல சமயங்களில் ஒரு மனிதனுடைய செல்வாக்கின் நிழலாகவோ பிரதிபிம்பமாகவோதான் இருக்கிறது. செல்வமும் எதிர்பார்த்தவையும் எதிர்பார்க்கின்றவையும் ஆகிய சௌகரியங்களும், அவற்றின் நிழலாய் இணைந்து வந்து சேருகிற புகழும் எல்லாம் கூடி நிறைந்து விட்டாலோ... இவற்றால் அடைய முடியாத இவற்றோடு தொடர்ந்து வந்து சேராத வேறு எதையோ எதிர்பார்த்து மனம் சலிக்கிறது. திருப்தியை எதிர்பார்க்கும் அதிருப்தியோடு ஏங்குவதுதான் வாழ்க்கையாய் இருக்கிறது. அவனைப் பொறுத்த வரையிலோ எதற்காக அதிருப்திப்படுகிறோம் என்று அவனுக்கே புரியாத—அவனே நினைத்துப் பார்க்க முடியாததோர் அதிருப்தி அவனுக்கு உள்ளே அரித்துக் கொண்டிருந்தது. சொந்த அபிப்பிராயங்களோடு இன்னொருவருடைய ஆதிக்கமோ ஆணையோ இல்லாத சுயமான விருப்பு வெறுப்புகளோடு ஒரு நாள் — ஒரே ஒரு நாளாவது வாழ்ந்து விட்டு அப்புறம் சாக வேண்டுமென்று பல சமயங்களில் அவன் தனக்குள் நினைத்திருக்கிறான். ஒரு காலத்தில் அதாவது பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்குமுன் ராஜமுந்திரி புகை வண்டி நிலையத்தில் ஹௌரா மெயிலும், வால்டேர் போகிற பாஸஞ்சரும் வந்து நிற்கிற வேளையில் பச்சை பச்சை

மணிவண்ணன்

பிறந்தோம்



யாகவும் 'சீப்' ஆகவும் அர்த்தமுள்ள ஏதோ ஒரு சொருசான தெலுங்குப்பாட்டைப் பாடிக் கொண்டு பிச்சைக்குத் திரிந்த காலத்தில் அவளைச் சுற்றி இருந்த உலகம் ஒரே இருட்டாயிருந்தது. இப்போதோ அவளைச் சுற்றிப் பிரகாசமாக — கண்ணைக் கூச வைக்கிற அளவு பிரகாசமாக இருக்கிறது. உள்ளே— மனத்துக்குள்ளே மட்டும் எப்படி யென்று சொல்ல முடியாதபடி ரொம்ப இருண்டு போயிருக்கிறது.

''ஸாமீ! பெத்த மனுஷுலு நேனு போஞ்சே சேசி நாதுரு நிறுது ஐயிந்தி. தயசேசி ஒக போஜுனுனிகி டப்பு சவண்டி'' என்று இரயிலுக்கு இரயில், ஆளுக்கு ஆள், முகத்துக்கு முகம் கெஞ்சிக் கதறி யாசகம் செய்து வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்த

காலத்திலோ சுற்றி இருண்டு போயிருந்தாலும் — அநாதரவான — அநாதையான அவள் மனத்தில் எந்த நம்பிக்கையும், எந்த ஆசையும் இல்லாத காரணத்தாலேயே அவற்றின் மறுபுறங்களான அவநம்பிக்கையும் நிராசையும் இருளாகி மறைக்காமல் அவளைச் சுகமாகவும் பிரகாசமாகவும் விட்டிருந்தன.

டைரக்டர் பொன்னுரங்கம் என்கிற சக்தி மிக்க மனிதர் தன்னைச் சென்னைப் பட்டினத்துக்கு அழைத்துப் போய் சினிமா ஸ்டாராக்கி விடப் போகிறாரென்றோ, அந்த நட்சத்திர வாழ்க்கை தன்னை வேகமாக இத்தனை உயரத்தில் கொண்டு வந்து நிறுத்தி வைத்துவிடப் போகிறதென்றோ, ஒரு டஜன் வருடங்களுக்கு முன் ராஜமுந்திரி ஸ்டேஷனில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த போது அவள் சொப்பனம்கூடக் கண்டதில்லை. ஏதோ சினிமா சம்பந்தமான காரியமாகக் கல்கத்தாவுக்குப் போய் விட்டுத் தமிழில் படம் எடுப்பதற்காக அங்கே ஒரு வங்காளிக் கதையைக் காதும் காதும் வைத்தாற்போல் விலைக்கு வாங்கிக் கொண்டு அதில் முக்கிய பாத்திரமேற்று நடிக்க ஒரு புது முகம்கிடைக்க வேண்டுமே என்ற தவிப்புடன் திரும்பி வந்து கொண்டிருந்த போது டைரக்டர் பொன்னுரங்கத்தின் கண்களில் ராஜமுந்திரி ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் அவள் தென்பட்ட வேளையை அவருடைய அதிர்ஷ்டம் என்பதா? அல்லது அவளுடைய அதிர்ஷ்டமென்றே கூறுவதா? எப்படிக் கூறினாலும் தவறில்லை தான். 'தயசேசி ஒக போஜனமிப்பிடப்பு சவண்டி' என்று கிழிசலும் கந்தையுமாக வந்து நின்ற பதின்மூன்று வயதுக் கன்னியைப் போஷாக்குக் கொடுத்து வளர்த்து ஆளாக்கினால் அந்த முகம், அந்த உடம்பு, அந்தக் கண்கள், அந்தப் பல் வரிசை எல்லாம் எப்படி எப்படிக் கவரும் வசீகர வனப்புடன் உருவாகும் என்று காமிராக் கண்களுடன் பார்த்துக் கிளர்ச்சியும் கவர்ச்சியும் மிக்க அழகை ரசிக்கக் காத்திருக்கும் சினிமா ரசிகர்களின் இலட்சக்கணக்கான விழிகள் இந்த நாவிலை வனப்புக்கு எப்படி எப்படி மயங்கி வசீகரிக்கப் படும் என்பதையும் எடைபோட்டுத் தற்செயலாகக் கிடைத்த அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வங்காளத்தில் வாங்கிய கதைக்காக ஆந்திராவில் கிடைத்த கதாநாயகியுடன் ஊர் திரும்பினார் பொன்னுரங்கம். ''தி ஃபேஸ் தட் லாஞ்ச்ட் எ தவுஸண்ட் ஷிப்ஸ்'' என்று கிரேக்க அழகி ஹெலனைப் பற்றிச் சரித்திரம் புகழ்ந்ததைப் போல, ''இந்தப் புது முகத்தை வைத்துக் கொண்டு தென்னிந்தியத் திரைப்பட உலகத்தை என்னென்ன பண்ணுகிறேன்; பாருங்கள்'' என்று தைரியமாக மற்றவர்களுக்குச் சவால் விட்டார் பொன்னுரங்கம். 'தி ஃபேஸ் தட் வில் லாஞ்ச் எ தவுஸண்ட் ஷிப்ஸ்' என்று இரண்டொரு நெருங்கிய நண்பர்களிடம் இந்தப் புது முகத்தைப் பற்றி அவர் பெருமையாகச் சொல்லிய போது, 'இந்த முகத்தினால் ஓர் ஓட்டைப் படகைக்கூட அசைக்க முடியாது பொன்னுரங்கம்!' — என்று அவரைக் கேலி செய்து சிரித்தவர்களும் உண்டு. அப்படிக் கூறியவர்கள் எல்லாம் வெறும் கண்களால் மட்டுமே அந்த முகத்தைப் பார்த்தார்கள். அவரோ முட்டை, பால், பழம், பாதாம்பீர், தக்காளி எல்லாம் கொடுத்துப் போஷாக்குச் செய்து மாற்றியபின் அந்த முகமும், அந்த உடம்பும், அந்த விழிகளும் சுவாரஸ்யம் தேங்கிய அந்த உதடுகளும் திரையில் இனிமேல் எப்படி எப்படித் தெரியும் என்று காமிராக் கண்களால் பார்த்தார். கடைசியில் அவர்தான் வெற்றி பெற்றார். ஹௌரா மெயில் ராஜமுந்திரி நிலயத்தில் நின்ற சில நிமிஷங்களுக்குள் பொன்னுரங்கம் பிரயாணம் செய்து வந்து கொண்டிருந்த முதல் வகுப்புப் பெட்டி ஓரமாக ஒதுங்கி வந்து, ''ஸாமீ! பெத்த மனுஷுலு!'' என்று ஒரு வேளைக்குச் சோறு வேண்டிப் பிச்சை கேட்டவளிடம், அந்த முகத்தையும் உடம்பையும் ஏற இறங்கப் பார்த்து விட்டு, 'மதருஸுக்கு வந்தால் சினிமாவில் நடிக்கலாம்' என்று அவர் கூறிய போது அவள் கூச்சமும், பயமுமாக மருண்டாள். அதே முதல் வகுப்புப் பெட்டியில் உடன் பிரயாணம் செய்த தெலுங்கர் ஒருவர் 'பொன்னுரங்கம் பெரிய டைரக்டர் என்பதையும் அவரோடு மதருஸ் போனால் முன்னுக்கு வரலாம்' என்பதையும் அவளுக்குத் தெலுங்கில் மொழிபெயர்த்து விளக்கினார்.

அதெல்லாம் பழைய கதை. மதருஸுக்கு வந்தபின் அவள் நன்றாகத் தமிழ் பேசி நடிக்கத் தயாராகி விட்டாள். பொன்னுரங்கம் அவளுக்கு முதலில் தமிழ் கற்பிக்கத் தான் ஏற்பாடு செய்தார். முதலில் கொச்சை கொச்சையாக மழலைத் தமிழ்தான் வந்தது. பின்னும் நாளாக நாளாகத் தமிழை நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டுவிட்டாள் அவள். சினிமாவுக்கு அழகும் கவர்ச்சியும்தானே ஏகபோகமான பாஷை? அவற்றைப் பிறவியிலேயே தன்னோடு கொண்டு வந்திருந்தாள் அவள். 'ல'வை 'ள'வாகவும், 'ழ'வை 'ல'வாகவும் சிதைத்து ஆரம்ப காலத்தில் அவள் பேசிய மழலைத் தமிழ்கூட ரசிகர்களுக்கு அவ்வளவு பெரிய மாசாகத் தெரியவில்லை. முகத்தின் அழகும், சிரிப்பின் கவர்ச்சியும், கண்களின் துறுதுறுப்பும் ஒன்று சேர்ந்து பாஷையின் குறையை மறைத்து விட்டன. ராஜமுந்திரி ஸ்டேஷனில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த காலத்தில் அவள் பெயர் பொம்மி. மதருஸுக்கு அழைத்து வந்து நடை உடைகளையும் பழக்கவழக்கங்களையும் நாகரிகமாக மாற்றியது போல் பெயரையும் நாகரிகமாக மாற்றி விட்டார் பொன்னுரங்கம். அவளுடைய கண்கள் துறுதுறுவென்று அலை பாய்ந்து காண்பவர்களைக் கொள்ளை கொண்டு சபலமும் சலனமும் அடைய வைக்கிற அழகுடன் இருந்த காரணத்தால் 'வண்டு' என்று அவளுக்குப் பெயர் வைத்திருந்தார் பொன்னுரங்கம். 'அவளையும் அவள் அழகையும் பார்த்து அப்புறம் அந்தப் பெயரையும் சொல்லிப் பார்க்கும் போது அது கொஞ்சம் 'செக்ஸியாக' இருக்கும் என்று யாரோ ஒரு நண்பர் பொன்னுரங்கத்திடம் அபிப்பிராயம் தெரிவித்தார்.

டாடாவின் ஷாம்பு





அபூர்வமான பளபளப்பைத் தருகிறது.



நவநாகரீக மாதர்கள் டாடாவின் ஷாம்புவையே உபயோகிக்கின்றனர். காரணம் கூந்தலைச் சுத்தம் செய்வதற்கெனவே விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. அது. கூந்தலைத் துப்புரவாகவும், சுலபமாயும் சுத்தம் செய்கிறது டாடாவின் ஷாம்பு. கொழிக்கும் அதன் நுரை கூந்தலிலுள்ள தூசியை அகற்றி, கூந்தலைப் பட்டுப்போன்ற மென்மையுடனும். பளபளப்புடனும் மிளிரச் செய்கிறது. நறுமணத்திற்கோ கேட்கவேண்டாம். கூந்தல் சுத்தமாகவும், நறுமணத்துடனும் இருக்கநீங்களும் டாடாவின்ஷாம்புவைஉபயோகியுங்கள்.

எழில்மிக்க, மிருதுவான, பரிமளக் கூந்தலுக்கு — டாடாவின் ஷாம்பு!

81-TS-69 TAM

'அப்படி இருந்தால் கூட நல்லதுதான்! அதுவே அந்தப் பெயருக்கும் அதை உடையவளுக்கும் ஒரு வெற்றி' என்று சிரித்துக் கொண்டே அந்த நண்பருக்குப் பதில் சொல்லி யிருந்தார் பொன்னுரங்கம்.

இதெல்லாம் ஆரம்ப காலத்தில் நிகழ்ந்தவை. வண்டு என்ற பெயர் அவளுக்குப் பிடிக்காமல் போனகாலத்தில் அவளே தனக்குத் தானாக 'அலங்காரி' என்று ஒரு புதுப் பெயர் சூட்டிக் கொண்டாள். ஆனாலும் பத்திரிகைக்காரர்கள் பழைய பெயரை மறக்கமுடியாததனாலோ அல்லது பழைய பெயரின் தொனியை ஒட்டி எழுகிற உணர்ச்சிகளை மறக்க முடியாததனாலோ அலங்காரி என்னும் எழுதி அதற்குப் பின்னால் பிராக்கெட்டில் 'வண்டு' என்றும் போட்டுக் கொண்டிருந்தார்கள். வண்டின் அறுதுறுப்பான விழிகளில் மயங்க ஆரம்பித்த சினிமா ரசிகர் உலகம் அந்த விழிகள் விரித்த வலையிலிருந்து மீள முடியாமல் தவிக்கத் தொடங்கி யிருந்தது. அவளைச் சுற்றி ஒளி படரத் தொடங்கியது. அவள் மனத்தில் மட்டும் இன்னும் இனம் புரியாத பயம். கண்களைச் சுழற்றி உடம்பைக் கவர்ச்சிகரமாகக் காண்பித்து, ஏதோ ஒரு புது மாதிரியான விதத்தில் இன்னும் இந்த உலகில் தான் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதாகவே ஒரு தாழ்வு மனப்பான்மை அவளுள் அந்தரங்கமாக நிறைந்திருந்தது. சமூக வாழ்க்கையில் ஒரு சௌகரியம் உண்டு. இளகிய மனமுள்ளவர்களிடம் குழிந்த வயிற்றையும், தளர்ந்த உடலையும் ஒடிந்த நொண்டிக் கையையும் காண்பித்துப் பிச்சை எடுக்கலாம் என்றால் வேறொரு சாராரிடம் உடம்பின் வளர்ச்சியையும், வனப்பையும் காண்பித்துப் பிச்சை எடுக்கலாம். இரண்டாவது வகையில் இலட்சக் கணக்காகப் பிச்சை கிடைக்கும். ராஜமுந்திரி ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் இரயில் நிற்கிற நேரத்துக்குள் அவசர அவசரமாக ஓடியாடிப் பிச்சை எடுத்தாக வேண்டியிருந்ததைப் போல் அல்லாமல் ரொம்ப நாகரிகமாகவும் நாசூக்காகவும் — அது பிச்சை என்று—யாரும் அங்கீகரித்துக் கொள்ளாதபடி இந்தப் புதுப் பிச்சையை அவள் அவசரமின்றி நிதானமாக எடுக்க முடிந்தது. இதில் மனத்தில் எவ்வளவுக்குத் தாழ்வு மனப்பான்மை இருந்ததோ அவ்வளவுக்கு மற்றொரு பகுதியில் பெருமிதமும் இருந்தது. அவளுடைய பெருமிதத்தை அவள்தான் பட முடியும். இன்னொருவர் அடைய முடியாத அந்தப் பெருமிதத்துக்கு அவள் ஒருத்



"உனக்கு முடி இறக்கறதுக்குப் பிரார்த்தனை பண்ணிண்டிருக்கேன்."

"அட சாமை! அப்படின்னு முதல்லே வளர்றதுக்குப் பிரார்த்தனை பண்ணிக்கோ!"

தியே சொந்தக்காரி. கோடிக்கணக்கான மக்களின் அபிப்பிராயங்களைத் தன்னுடைய ஒரே சிந்தனையில் உருவாக்கிக் கொண்டு தலைவனாக நிமிர்ந்து நிற்கிற ஓர் அரசியல்வாதியை விட அவளால் அதிகம் சாதிக்க முடியும். அந்த அரசியல்வாதி இரவு பதினொரு மணிக்கு ஓரிடத்தில் கூட்டம் போட்டுப் பேச ஆரம்பித்தால் பத்துப் பேர்கூட உட்கார்ந்து கேட்கத் தயாராயிருக்க மாட்டார்கள். அதே நேரத்துக்கு எந்தப் போக்கு வரவு வசதிகளும் இல்லாத ஏதோ ஒரு மூலையில் எந்த வசதிகளும் அற்ற டூரிங் தியேட்டரில் அவள் நடித்த படம் ஓடினால் கூட ஆயிரக்கணக்கான மக்கள் இரவு இரண்டு மணி வரை கண் விழித்துப் பார்க்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் அபிப்பிராயங்களை உருவாக்குகிறவர்கள். அவளோ எல்லோருடைய அபிப்பிராயத்திலும் நிறைந்திருப்பவள்.

இந்தப் பத்துப் பன்னிரண்டு வருடங்களில் அவள் எவ்வளவோ முன்னேறி விட்டாள். தனி பங்களா, தனிக் கார், தனி ஆட்கள் எல்லாம் அவளுக்கு ஏற்பட்டுவிட்டன. இப்போது டைரக்டர் பொன்னுரங்கம்கூட அவளைப் போல் அவ்வளவு பெரிய பணக்காரரில்லை. அவள் அவரையும் மிஞ்சிவிட்டாள். பொன்னுரங்கத்தோடு ஒட்டியிருந்து அவருடைய பங்களாவிலேயே தங்கி அவர் ஒப்புக்கொள்ளச் சொல்கிற படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டு, அவர் வேண்டாம் என்று மறுக்கச் சொல்கிற படத்தில் நடிக்க மறுத்து அவள் அவருடையவளாக இருந்த காலம் வேகம் வேகமாக இருளில் ஓடி மறைந்து விட்டது. அந்தப் பின்தங்கிப் போய் விட்ட இருளில் பொன்னுரங்கத்தை உட்கார்த்தி வைத்துவிட்டு அவள் வேகமாக முன்னால் ஓடி வந்து வெளிச்சத்தில் — கண்ணைக் கூச வைக்கும் வெளிச்சத்தில் நின்று வெகு நாட்களாகிவிட்டது. நடிக்கிற உலகத்தில் பல மெய்யான உணர்ச்சிகள்கூட நாளடைவில் நடிப்பைப் , போலப் போலியாகத்தான் போய் விடும். நன்றியும் அதில் ஒன்றுதான். பொன்னுரங்கம் அவளை நன்றி மறந்தவள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாராம். அவர் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதையும் கூட மறந்துவிட வேண்டிய வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தாள் அவள். ஆரம்ப காலத்தில் தான் முன்னேறுகிற வேகத்தைப் பார்த்து அவளே உள்ளூறப் பயந்தாள். இத்தனை வேகமாக முன்னேறினால் அழிந்துபோய் விடுவோமோ என்ற பயத்

தோறும், பதற்றத்தோடும் நினைவு மூகமாகப் பழைய வாழ்க்கையை அடிக்கடி திரும்பிப் பார்த்திருக்கிறாள் அவள். தனி பங்களா, ரெப்ரிஜிரேடர், ஏர்கண்டிஷன், கார் எல்லாம் அவளுடைய வசதிகளாக, இருந்து கொண்டே சில சமயங்களில் அவளைப் பயமுறுத்தி வந்தன. உயரத்தில் போகப் போக இனி மேலே போவதற்கு உயரமில்லாமல் ஏறிய வேகத்தில் மறுபடி கீழே இறங்கிவிட நேருமோ என்ற பயத்தை அவளும் அடிக்கடி உணர்ந்திருக்கிறாள். ரொம்ப உயரத்துக்கு ஏறிப் போய்விடுவதில் ஒரு சிரமம் உண்டு. எத்தனை உயரம் ஏறி இருக்கிறோமோ அத்தனை உயரத்திலிருந்தும் கீழே விழுந்தாக வேண்டும். இத்தனை உயரம் ஏறி மேலே வருவதற்கு— இவ்வளவு வேகமாக வந்து சேருவதற்கு அவள் எதை எதையோ இழந்திருக்கிறாள் — விட்டுக் கொடுத்திருக்கின்றாள். எத்தனையோ பட முதலாளிகள் அவளிடம் பழகினார்கள். எத்தனையோ டைரக்டர்கள், கதாசிரியர்கள், மேக்கப் நிபுணர்கள், காமிராக்காரர்கள் எல்லாரும் நெருங்கிப் பழகினார்கள். அத்தனை பேரும் அசுத்தமாகப் பழகினார்கள் என்றோ ஆபாசமாகப் பழகினார்கள் என்றோ சொல்லி விட முடியாது. அதே போல் எல்லாருமே சுத்தமாகப் பழகினார்கள் என்றோ ஆபாசமாகப் பழகவே இல்லை என்றோ சொல்லி விடவும் முடியாது. ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு விதமான பழக்க வழக்கங்களை அல்லது நடைமுறைகளைத் தனக்குத் தானே கற்பித்துக் கொண்டிருக்கிறது. அப்படிக் கற்பித்து வழக்கமாயிருக்கிற நடைமுறைகளை மட்டுமே அந்தத் தொழிலைப் பொறுத்த வரை அதன் 'ஒழுக்கம்' என்று வைத்துக் கொண்டால் அவளும் 'ஒழுக்க'மாகத்தான் வாழ்ந்திருக்கிறாள். ஒழுக்கத்துக்கு வேறு விதமான அர்த்தத்தையோ விளக்கத்தையோ கற்பித்து நீங்களோ நானோ அவளுடைய சுத்த அசுத்தத்தை ஆராய ஆரம்பித்தால் அவள் நிச்சயமாகத் தோற்றுப் போய் விடுவாள். அந்தத் தோல்வியோடு அவள் எத்தனை எத்தனையோ வார்த்தைகளால் சொல்லமுடியாத பாவங்களுக்காக மன்னிப்புக் கோர வேண்டியிருக்கும். ஒவ்வொரு பார்வையிலும் ஒரு சிரிப்புத் தெரிய ஒவ்வொரு சிரிப்பிலும் ஒரு பார்வை தெரிய அவள் தன் இரசிகர்களைப் படத்தில் தோன்றி மயக்குவதைப் போலவே படாதிபதிகளையும், டைரக்டர்களையும்கூட மயக்கியிருக்கலாம். அது அவள் பாவமா? உள்ளே நிறைந்திருக்கிற பாவங்களுக்காக நாம் யாரையும் மன்னிக்கத் தயாரில்லையானால் இந்த உலகில் பிரகாசமான ஒளியில் நிற்கிற பல பிரமுகர்களும், பணக்காரர்களும், வி.ஐ.பி.க்களும்கூட மன்னிக்கப்படாமலே போய்விடுவார்கள். அவர்களை எல்லாம் நாம் மன்னிப்பதில்லையா? அலங்காரி என்கிற வண்டையும் நாம் அப்படியே மன்னித்துவிட வேண்டியதுதான். வண்டாயிருந்தால் ஒற்றைப் பூவில் மட்டுமே தேனுண்ண வேண்டுமென்று நியதி வைத்துக் கொண்டு கட்டுமா? 'எ ஃபேஸ் தட் வில் லாஞ்ச் எ தவுஸண்ட் குட் ரூமில்' என்று அலங்காரியைப் போற்றிப் பேசும் போது படாதிபதிகளிலிருந்து பத்திரிகைக்காரர்கள் வரை ஒரேமாதிரிப் போற்றிப் புகழ்ந்தார்கள். அத்தனை புகழும் அவளுடைய ஒழுக்கத்துக்காக என்று நீங்களோ நானோ எடுத்துக் கொண்டு சிரமப்பட வேண்டியதில்லை. ஒழுக்கத்துக்காக வேறு யாரோ ஒரு கடுமையான சத்தியவானையோ, படிதாண்டாப் பத்தினியான ஒரு பட்டிக்காட்டுக் குடும்பப் பெண்மணியையோ புகழ்ந்து விட்டுப் போகட்டும். வெறும் ஒழுக்கமும், கலை ஒழுக்கமும் ஏதோ ஓர் இடத்தில் அப்பட்டமாக வேறுபட்டுத் தான் ஆக வேண்டும். அப்படியல்லாமல் வெறும் ஒழுக்கத்துக்காக மட்டுமே மனிதர்களைப் புகழ்வதென்று வைத்துக் கொண்டால் பல அற்புதமான கலைஞர்களைப் புறக்கணித்துக் கீழே தள்ளிவிட நேரிடும். ஆனால் அப்படிக் கலைஞர்களைக் கீழே தள்ளிவிடுகிற அளவு கடுமையாகவும் இந்த உலகம் என்றுமே இருந்ததில்லை. வெறும் ஒழுக்கத்தைப் பற்றி மறந்து மன்னித்து விட்டுக் கலை ஒழுக்கத்தை மட்டும் புகழ்ந்து கலைஞர்களைத் தூக்கி வைத்துப் புகழும் பலவீனம் எந்தக் காலத்திலும் இன்று உண்டு. இந்தக் காலத்தில் அது அதிகமாகவே இருக்கிறது. அலங்காரிக்கு இந்தத் தத்துவமெல்லாம் புரியாது. தன்னைப் பற்றிய சிறுமைகளையும் பெருமைகளையும் பல முறை தன் மனத்தையே தராசுத் தட்டுக்களாகப் பிரித்து அவள் தனக்குள் நிறுத்திருக்கிறாள். ஒரு தட்டில் எதையாவது அளவாக வைத்தால்தான் இன்னொரு தட்டில் இருப்பதை நிறுக்க முடிவது போல் அவளுடைய சிறுமைகளும் பெருமைகளை நிறுப்பதற்குப் பயன்பட்டு அளவாயிருந்தனவே ஒழியச் சிறுமைகளாக மட்டுமே இருக்க வில்லை. படங்களில் பல காட்சிகளில் அவள் விரசமாகத் தோற்றமளிப்பதாகச் சிலர் குறை சொல்லுகிறார்கள். மட்டரகமான அர்த்தமுள்ள பின்னணிப் பாடல்களுக்கு ஏற்ப உடலை ஆட்டி வளைத்துக் கண்களைச் சாய்த்து — ஒய்யாரமாய் நகைத்து அவள் சில காட்சிகளில் நடனமாடுவதைக் குறை சொல்லியும் சிலர் விமரிசனம் எழுதுகிறார்கள். ஆனால் இந்தக் குறைகளாலும், விமரிசனங்களாலும் அவளைக் கீழே தள்ளிவிட முடியவில்லை. அப்படி அவள் நடனமாடிய படங்கள் அதிக நாட்கள் ஓடி அதிகப் பணம் சம்பாதித்துக் கொடுப்பதாகத்தான் படாதிபதிகள் சொல்லுகிறார்கள். எத்தனை அபிப்பிராயங்கள்! அவற்றில்தான் எத்தனை பேதங்கள்! இன்னொருவருடைய ஆதிக்கமோ, ஆணையோ இல்லாத சுயமான விருப்பு வெறுப்புக்களோடு ஒரு நாள் ஒரே ஒரு நாளாவது வாழ்ந்துவிட்டு அப்புறம் சாக வேண்டுமென்று இப்படிப் பல சமயங்களில் அவள் தனக்குள் நினைப்பது பழக்கமாகி விட்டது. ஏதோ ஒரு மாதிரியான விதத்தில் முன்னைவிட அதிகப் பிரகாசமான இடத்தில் நின்றுகொண்டு முன்னைவிட அதிகம் வசதியுள்ள சூழ்நிலைகளோடு இன்னும் இந்த உலகில் தான் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதாகவே பல சமயங்களில் தன் மனம் குத்திக் காட்டுவதை அவளால் மறுக்கவும் முடியவில்லை. அழகு, புகழ், பணம், செல்வாக்கு இவை எல்லாவற்றுக்கும் அப்பால்

வாழ்வில் தான் எதையோ இழந்து மீதம் விட்டிருப்பதைப் போல அவள் உணர்ந்தாள். அப்படி மீதம் விட்டிருப்பது எது என்று புரிந்தால் அப்படிப் புரிந்து கொண்ட மறு கணமே அதை அடைந்து அதை அடைந்த பின்பு புதியதாக அந்த விநாடிதான் இந்த உலகில் பிறந்தது போல் நிம்மதியாக வாழ லாம். அதுவும் புரியவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு டிரைவர் முனிசாமி — அவனுடைய புது மண மனை வியை அழைத்துக்கொண்டு அவளைப் பார்க்க வந்திருந்தான். அவனுக்குக் கலியாணமான பின் முதன்முறையாக அப்போதுதான் அந்தப் பெண்ணை அவன் - மனைவியை—அவன் அங்கே அழைத்துக் கொண்டு வந்திருந்தான். கல்யா ணம் எங்கோ வெளியூரில் நடந்தது. அவன் தன் கலியாணத்துக்கு ஊர் சென்றபோது முழுமையாக ஆயிரம் ரூபாய் அன்பளிப்புக் கொடுத்து அனுப்பி யிருந்தாள் அவள். முனிசாமி அவளுக்கு மிகவும் நம்பிக்கை யானவன். அவளுடைய வாழ்க்கையின் அந் தரங்கமான பலவீனங் களில் சிலவற்றைக்கூட அவன் அறிவான். அத னால் அவனை மனக் குறையின்றி வைத்துக் கொள்வதில் அவள் அதிக அக்கறை காட்டு வது உண்டு. இலட்ச ரூபாய் சம்பளம் கொடுத்தால் கூட அவ னைப் போல் நம்பிக்கை யான நன்றியுள்ள டிரைவர் கிடைக்க மாட்டான் என்பது அவள் அபிப்பிராயம். அவன் கலியாணமாகி ஊரிலிருந்து திரும்பிய பிறகு அவளே, "முனி சாமீ! உன் வீட்டுக் காரி எப்படி இருக்காள் பார்க்க வேண்டாமா? ஒரு நாள் அவளை இங்கே அழைத்துக் கொண்டு வாயேன்" என்று கூறியிருந்தாள். அவன் தன் மனை வியை அழைத்துக் கொண்டு வந்த தினத் தில் அந்தப் பெண்ணையும் அவனையும் அங் கேயே தன் பங்களாவில் சாப்பிடச் சொல் லிப் போகிறபோது விலையுயர்ந்த பட்டுப் புடைவை ஒன்றும் வெற்றிலை பாக்குப் பழங் களோடு மஞ்சள் குங்குமமும் வைத்துக் கொடுத்து அனுப்பி யிருந்தாள் அலங்காரி. அப்படி அவனும், அவன் மனைவியும் வந்து சென்ற தினத்தன்று இரவு அவள் முதல் முதலாகச் சில புதிய சிந்தனைகளைச் சிந்தித்தாள்.


'கலியாணம் என்கிற பேரில் ஓர் ஆண் பிள்ளைக்குக் கழுத்தை நீட்டிவிட்டு அவ னுடைய குடும்பத் தொழுவில் வந்து கட்டுப் படுகிற ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில் என்னென்ன அனுபவங்கள் கிடைக்கும்? என்னென்ன உரிமைகளும் உறவுகளும் வாழ் வில் அவளுக்கு உண்டு?' என்றெல்லாம் அன்றிரவு அவள் தற்செயலாகச் சிந் தித்தாள். 'அடிமையாக வாழ்வதற்கு யாரா லும் முடியும். ஆனால் சிலரால்தான் சுதந்திர மாக வாழ முடியும்' என்று ஏதோ ஒரு படத்துக்கு மனப் பாடம் செய்திருந்த தமிழ் வசனம் ஒன்று நினைவு வந்தது அவளுக்கு. 'ஒரே ஒரு புருஷனுடைய மனத்தில் மட்டும் நாயகியாக நிறைந்திருந்து திருப்திப்படுகிற வளைவிட இலட்சக்கணக்கானவர்களின் மனத் தில் — நினைவில் கனவில் ஒரு தவிப்பாய் நிறைந் திருக்கிற நான் எத்தனைய பாக்கியசாலி' என்று நினைத்தபோது தான் உயர்ந்தவள்— புகழ் பெற்றவள் — இணையற்றவள் என்ற பெருமை அவளுக்கு ஞாபகம் வந்தது. முனி சாமியின் மனைவியைப் போல் தானும் உலகம் புரியாத பட்டிக்காட் டுப் பெண்ணாக ராஜ முந்திரி ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் பிச்சை எடுத்த காலம் ஒன்று இருந்தது அவ ளுக்கு நினைவு வந்தது. ஆனால் அதை இப் போது நினைக்க வேண் டிய அவசியமும் அவ காசமும் அவளுக்கு இல்லை. 'சென்றதினி மீளாது. இன்று புதி தாய்ப் பிறந்தோம்' என்று ஆரம்பிக்கிற பாரதியார் பாட்டை ஏதோ ஒரு திரைப் படத்தில் அவளுக்காக இன்னொரு பாடகி பின் னணி பாடியிருந்தாள். என்றாலும் அவளே வசனம் போல இரண் டொரு காட்சிகளில் அந்தப் பாடல் வரிகளை முணுமுணுக்க வேண்டி யிருந்ததன் காரண மாக வசனகர்த்தா குறித்துக் கொடுத் திருந்தபடி அவள் அந்த வரிகளை மனப் பாடம் பண்ணியிருந்தாள். நல்லதும் சரி, கெட்டதும் சரி, சென்றது இனி மீளாது தான். அவளுடைய பழைய பிச்சைக்கார வாழ்க்கை இனி அவளுக்கு மீண்டும் வரப் போவதில்லை. இன்று அவள் வாழ்கிற வாழ்க்கையோ அவளே மறுபடி புதிதாய்ப் பிறந்து அநுபவிப்பது போன்ற சுகபோக வாழ்க்கை! அவள் எங்கே? வாழ்க்கைத் தொழுவில் சிக்கிக் கொண்ட முனிசாமியின் மனைவி எங்கே? முனிசாமியின் மனைவியாகிய அவளும் அழகாகத்தான் இருந்தாள். ஆனால் முனிசாமியின் மனைவியாகிய அந்தப் பட்டிக் காட்டுப் பெண் அழகாகஇருக்கிறாளென்பதற் காக யாரும் அவளை நினைத்துத் தவிக்கப்போவ தில்லை. அழகாயிருந்தாலும் முனிசாமியின் மனைவியால் தன்னைப்போல் ஒரு பிரகாசமான



"இன்று, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு புது ஒப்பந்தம் ஆயிற்று என்றாயே, எந்த சினிமா கம்பெனியில் நடிக்க?"
"நடிப்பா? சினிமா சான்ஸ் கேட்டு, படி. ஏதுவுமில்லை என்று எழுதிக் கொடுத்தேன்!"

நட்சத்திரமாகி ஜ்வலிக்க முடியாது என்று நினைக்கும்போதே தன்னுடைய உயரமும் அவளுடைய தாழ்வும் அலங்காரிக்கு ஞாபகம் வந்து அவளைப் பூரிக்க வைத்தன. ஒருத்தனுக்கு மனைவியாக வாழாதது ஒரு குறையாக அவளுக்குத் தோன்றவில்லை. இப்படி அவள் நினைக்க ஆரம்பித்ததே அவளுடைய குறை அல்லது பலவீனம் என்று நீங்கள் வாதிடலாம். அதை அவளும் உணர்வாள். ஆனால் ஒப்புக் கொள்ள மாட்டாள். இந்த விஷயத்தில் தன் புகழை முதலாக வைத்துக் கொண்டு மட்டுமே அவளுடைய அபிப்பிராயத்தை அவள் படைக்கிறாள். ஆகவே சராசரி உலகம் அல்லது சராசரி மனிதர்கள் இதைப் பற்றி என்ன நினைக்க முடியும் என்பதைப் பற்றி அவள் கவலைப்பட முடியாது. இன்னொருவரும் தன்னைப் பற்றிய அபிப்பிராயத்தைப் படைக்க முடிகிற உலகம் அவளுக்குச் சலித்துப் போயிருக்கலாம். அதனால்தான் பல சமயங்களில் பிறருடைய அபிப்பிராயம் தன்னைப் பாதிக்கவோ கட்டுப்படுத்தவோ செய்யாமல் ஒருநாளாவது வாழ்ந்துவிட்டு அப்புறம் சாகவேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. இப்பொழுதே அவள் அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இதைவிட இன்னும் சுதந்திரமாக எப்படி வாழ்வது என்று அவளுக்கும் புரியவில்லை. ஒன்றும் புரியாமல் எதையோ புரிந்து கொள்ளத் தவிக்கும் மனத்துடன் அவசியமாகவோ, அவசியமின்றியோ ஒவ்வொருவரோடும் தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளும் வேளையில் தான் வாழ்வில் இன்னும் எதையோ இழந்து மீதம் விட்டிருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. அப்படி நினைப்பதையும் தவிப்பதையும் தவிர்த்துவிட அவளால் முடியவில்லை. அதைத் தவிர்த்து விட்டால் ஏதோ ஒரு புது மாதிரியான விதத்தில் முன்னைவிட அதிகப் பிரகாசமான இடத்தில் நின்று கொண்டு முன்னைவிட அதிகம் வசதியுள்ள சூழ்நிலைகளோடு தான் இன்னும் இந்தச் சமூகத்திடமிருந்து எதையோ பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிற வேறொரு பிரமை வந்து அவளை வாட்டத் தொடங்கும். விமான நிலையத்திலோ, இரயில் நிலையத்திலோ பொதுக்கூட்ட மேடைகளிலோ, அவள் தோன்றினால் மேலே நடக்கவிடாமல் வளைத்துக் கொண்டு ஆயிரக் கணக்கான மக்கள் அவளைப் பார்க்கத் தவிக்கிறார்கள். ஒரு முறை அவள் விமான நிலையத்தில் காத்திருந்தபோது அவளைப் பார்க்க அலைமோதிய கூட்டத்தில் சிக்கிக் கீழே மிதிபட்டு ஒரு கல்லூரி மாணவன் இறந்து போனதாக மறுநாள் பேப்பரில் போட்டிருந்தது. அதிலும் கூட ஒருவிதத்தில் அவளுக்குப் பெருமைதான். முன் காலத்தில் தேர்த் திருவிழா, கோவில் போன்ற சமூகப் பொது வழிபாட்டுக்குத்தான் இவ்வளவு கூட்டம் கூடும். ராஜமுந்திரியில் கோதாவரி யாற்றங்கரையில் அந்த ஜில்லாவின் ஜனங்கள் முழுவதும் ஒன்று கூடுகிறாற்போல் நடைபெறும் தெலுங்கு நாட்டின் பழைய திருவிழா ஒன்று அடிக்கடி அவள் நினைவுக்கு வரும். அந்த ஆற்றங்கரைத் திருவிழா வருடத்தில் ஒரே ஒரு நாள்தான் நடக்கும். பட்டினத்தின் வீதிகளிலோ அவளுக்குத் தினம் தினம் திருவிழாப் பட்ட பாடு. அவள் வீட்டை விட்டு வெளியே கிளம்பினாலே ஒரு திருவிழாத்தான். நின்றால் திருவிழா. நடந்தால் திருவிழா. ஜனங்கள் ஒவ்வொரு தலைமுறையில் ஒவ்வொரு விதமான தெய்வங்களை வழிபடுகிறார்கள். இந்தத் தலைமுறைக்கு நட்சத்திரங்களும், அரசியல் தலைவர்களும்தான் தெய்வங்கள். கையெழுத்துக் கேட்டும், புகைப்படம் கேட்டும் அலங்காரிக்குத் தினந்தோறும் ஆயிரக் கணக்கான கடிதங்கள் வருகின்றன. பத்திரிகை நிருபர்கள் பேட்டிக்கு வருகிறார்கள். 'எமது புத்தாண்டு மலரில் கவர்ச்சி நடிகை அலங்காரி (வலது) நேயர்களின் கேள்விக்குத் தானே பதில் அளிக்கிறார். நேயர்கள் தங்கள் கேள்விகளை விரைவில் அனுப்பி வைக்கக் கோருகிறோம்' என்று பத்திரிகையில் விளம்பரம் போட்டுவிட்டு ஒவ்வொரு நாளும் குவிகிற கடிதக் குவியல்களோடு அவளை வீடு தேடி வந்து சந்தித்துக் கேள்விகளைப் படித்துக் காண்பித்து அவள் சொல்கிற பதில்களைப் பயபக்தியோடு எழுதிக்கொண்டு போகிறார் ஒரு பத்திரிகை நிருபர். வந்திருந்த கேள்விகள் எல்லாவற்றையும் பார்த்தபோது அவற்றிலிருந்து வேறு வேறான மனித இயல்புகள் அவளுக்குத் தெரிந்தன.

இந்த மனிதர்களுக்குத்தான் எத்தனை விதமான அபிப்பிராயங்கள்? அபிலாஷைகள்? எத்தனை விதமான ஆசாபாசங்கள்? தங்களுடைய சொத்துக்களைக் குறிப்பிட்டுத் தங்களை அவள் திருமணம் செய்து கொள்ள முடியுமா என்று அவளை அசட்டுத்தனமான கேள்விகள் கேட்டிருந்தார்கள் சிலர். 'நடிகர்களில் யாருடன் நடிப்பது அவளுக்கு விருப்பமானது?' என்று குறும்புத்தனமாகக் கேட்டிருந்தார்கள் சிலர். உங்களுடைய கடைக்கண்களின் பார்வையிலும், சிரிப்பிலும் மனம் கிறங்கிப்போய் என்னுடைய இரவுகளை எல்லாம் உறக்கமின்றிக் கழிக்கின்றேன். அந்த வேதனை தீர ஒரு மருந்து சொல்வீர்களா?' என்று சில அசடுகள் அவளை வினவியிருந்தன. கடுமையான 'கிரிடிக்கு'களை விட ஆபத்தானவர்கள் பைத்தியக்காரத்தனமான இரசிகர்கள்தாம் என்பது அவளுக்குப் புரிந்திருந்தாலும் இந்தப் பச்சையான கேள்விகள் பாராட்டு மாலை சூடும் கடிதங்கள் எல்லாம் சேர்ந்து உள்ளுற அவளைக் குறுகுறுப்புக் கொள்ளச் செய்திருந்தன. 'எனக்கு மட்டும் தான் இப்படிக் கடிதங்கள் வரும். இரசிகர்கள் என்னை மட்டும்தான் இப்படிக் குருட்டுத்தனமாக மோகிக்கிறார்கள், நான் பலருடைய நினைவுகளிலும், கனவுகளிலும் நிறைந்திருப்பவள். இந்தக் கேள்விகளுக்கு நான் என்னென்ன பதில்களை எப்படி எப்படிச் சொல்லப் போகிறேன் என்பதை எதிர்பார்த்து என்னுடைய இரசிகர் குழாம் அந்தப் பத்திரிகையின் ஒவ்வொரு பக்கத்தையும் ஒவ்வொரு வரியையும் ஆவலோடு புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும். தர்ம அதர்மங்களுக்குக் கூட நான் பயப்படாமல்



"எங்கப்பா சானிடரி இன்ஸ்பெக்டர் தான் என்று எப்படிக் கண்டுபிடிச்சே?"

"உங்க வீட்டு முன்னாலே நிறைய குப்பையும் கூளமும் குவிஞ்சிருக்கிறதைப் பார்த்துத்தான்!"

இருக்கலாம். என்னோடு நான் சேர்ந்து அரண் செய்துகொண்டு விட்ட பெரும் புகழும் பணமும் வசீகரமும் கோட்டைச் சுவர்களாக இருந்து நான் எதைச் செய்தாலும் எதைச் சொன்னாலும் என்னைக் காப்பாற்றும். ஒரு சில அர்த்தங்களோடு நான் சிரிக்கிற சிரிப்பை ஒருசில நளினமான தொனிகளோடு நான் பேசுகிற பேச்சை, ஒருசில சிங்காரமான சாயல்களோடு நான் கண்ணசைத்துப் பார்க்கிற பார்வைகளை என்னுடைய இரசிகர்கள் எல்லாருடைய முன்னிலையிலும் அவர்கள் எல்லாரும் அனுபவிக்கும்படி நான் தாராளமாகச் சிரிக்கவும், பேசவும், பார்க்கவும் முடியும். டிரைவர் முனிசாமியின் மனைவியைப் போல் அழகாயிருந்தாலும் கூட வாழ்க்கைத் தொழுவில் ஒருவனுக்குக் கழுத்தை நீட்டிக் கட்டுண்டுவிட்ட காரணத்தால் அத்தகைய சிரிப்பையும் பேச்சையும் பார்வையையும் கணவனைத் தவிர வேறெந்த இரசிகனுக்கு முன்னாலும் அவள் சிரிக்கவோ பேசவோ, பார்க்கவோ முடியாமல் போய் விடுகிறது. வாழ்க்கையில் என்னைப் போல் ஒருத்திக்குள்ள சௌகரியமும் அவளைப் போல் ஒருத்திக்குள்ள அசௌகரியமும் இது தான். ஒருவனுக்கு மனைவியாகி அவனுடைய வாரிசு மக்களாகப் பேறெடுக்கக் குழந்தைகளை உற்பத்தி செய்யும் இயந்திரமாகி வாழ்கிற வாழ்வைக் காட்டிலும் யாருக்கும் மனைவியாகாமல், அதே சமயத்தில் 'இவள் நம்முடைய மனைவியானால்?' — என்கிற ஏக்கமும் தவிப்பும் பல பேருடைய மனத்தில் நிரந்தரமாக உண்டாகும்படி வாழ்கிற என் கவர்ச்சியான வாழ்க்கை எத்தனை வசீகரமான அமைப்புடையது? டிரைவர் முனிசாமியின் மனைவியோ, இன்னும் ஏதோ ஒரு சாதாரணப் பெண்ணோ, பவுடருக்கும் வாசனைத் தைலங்களுக்கும், செண்ட் வகைகளுக்குமாக மாதம் இரண்டாயிரம் ரூபாய் செலவழிக்க முடியாது. நான் உபயோகிக்கிற 'செண்ட்' வகைகளின் பெயர்களையும் விலை விவரங்களையும் கேள்விப்பட்டால் அவர்கள் ஒருவேளை மலைப்பும் வியப்புங்கூட அடையலாம்.

மார்லின்மன்றோ உபயோகித்துப் புகழ்பெற்ற 'சானல் நெம்பர் ஃபைவ்' என்ற 'செண்ட்' இக்கினியூண்டு பாட்டில் விலை ஐம்பது ரூபாய். 'கிளியோபாட்ரா' என்று இன்னொரு 'செண்ட்' உண்டு. அது கால் அவுன்ஸ் விலை நூறு ரூபாய். மிட் நைட், ஈவினிங் இன் பாரிஸ், லண்டன் நைட், மிஸ்ச்சிஃப், டாபு, பிளாக்கெட், விபோலி, ஷாண்ட்டா மரியா, ஃபுளு நைட், சாலிமர்-இதெல்லாம் நான் உபயோகித்து அலுத்துப் போன 'செண்ட்' வகைகள். தோலை மிருது மிருதுப்பாகவும், மலர்ச்சியாகவும், வாசனையாகவும் வைத்துக் கொள்வதற்காக 'இண்ட்டிமேட் ஸ்கின் ஃபெர்ப்யூம்' என்று நியூயார்க்கிலிருந்து பாட்டில் அறுபது ரூபாய் வீதம் வரவழைக்கிறேன்; என் இரசிகர்களின் விருப்பத்தை நான் அதிகமாகக் கவர்வதற்கு இதெல்லாம் சேர்ந்துதான் காரணம். தனியாக நான் மட்டும் காரணமில்லை. நான் நிற்கிற இடத்தில் நறுமண நளினங்களின் உலகம் ஒன்று காற்றில் பிறந்து உலவும். நான் மணமகள். அதாவது நறுமணங்கள் என்னிலிருந்து பிறந்து விளைந்து நான் நிற்கிற சூழ்நிலையில் வந்து உலவும்படி வாழ்கிறவள்.

நான் என்னைக் கேட்கப்படும் பச்சை பச்சையான கேள்விகளுக்கெல்லாம் கூடக் கூச்சமில்லாமல் பதிலளிக்கிறேன் என்று சிலர் என்னைக் கேலி பண்ணுகிறார்கள். அதைப் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. ஒரு பெரிய பஸ் கம்பெனி முதலாளியின் மகன் டபிள் எம். ஏ. பட்டம் பெற்ற மேதாவி. 'நான் உங்களைத் திருமணம் செய்து கொள்ள முடியுமானால் எத்தனை பாக்கியசாலியாயிருப்பேன் தெரியுமா?' என்று எனக்கு மிக மிக அந்தரங்கமாகக் காதல் கடிதம் எழுதியிருக்கிறான். அந்தக் கடிதத்துக்கு நான் என்ன பதில் எழுதினேன் தெரியுமா? 'எனக்கு அடுத்தடுத்து ஆயிரம் பிறவிகள் தொடர்பாக இருக்குமானால் உங்களைப் போல் எனக்காக உருகித் தவிக்கும் ஒவ்வொருவரையும் அடுத்தடுத்து ஒவ்வொரு பிறவியிலும் மணந்து கொண்டு அவர்களையெல்லாம் வரிசையாகத் திருப்திப்படுத்தி விட்டு அப்புறம் நானும் திருப்தி அடைவேன்' என்று நான் சற்றுத் திமிராகவே எழுதிய பதில் எப்படியோ பத்திரிகைகள் வரை பிரபலமாகி — யாரோ ஒரு நிருபர் என்னைத் தேடி வந்து, 'நீங்கள் இன்ன பஸ் கம்பெனி அதிபரின் புதல்வரை மணந்து கொள்ளப் போவதாகவோ அல்லது மணந்து கொண்டு விட்டதாகவோ ஒரு பலமான வதந்தி இருக்கிறதே?' என்று என்னைக் கேட்டார். 'அப்படி யாரையாவது கலியாணம் செய்து கொள்வதாயிருந்தால் ஞாபகமாக உங்களுக்கு இன்விடேஷன் அனுப்புகிறேன்; போய் வாருங்கள்' என்று அந்த நிருபரிடமும் கொஞ்சம் திமிருடனேயே பதில் சொல்லி அனுப்பினேன் நான்; 'தமிழ் நாட்டு மர்லின் மன்றோவின்

திமிரான பதில்' என்று பத்திரிகைகளில் அந்தப் பிரச்னை ஒரு பெரிய விஷயமாக அடிபட்ட காலத்தில் அவை என்னைப் பற்றி ஒரு தினுசாக எழுதின.

மனிதர்கள் உள்ளே நினைக்கும் போது எதைப் பற்றியும் பச்சை பச்சையாகத்தான் நினைக்கிறார்கள். பேசும் போதும் எழுதும் போதும் அப்படிப் பேச முடியாமல் எழுத முடியாமல் பாஷை ஒரு பெரிய போர்வையாக வந்து விழுந்து மறைத்து விடுகிறது. பாஷை தான் மனிதனைக் காப்பாற்றுகிற ஒரே கௌரவம். அந்தக் கௌரவப் போர்வையைக் கழற்றி வைத்து விட்டுப் பார்த்தால் ஒவ்வொருவனுடைய நினைப்பும் ஒவ்வொரு விதத்தில் பச்சையாகவே இருக்கிறது. இப்படி நினைக்கிறவர்களுடைய கௌரவத்தைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? மர்லின் மன்றோவாமே; மர்லின் மன்றோ? அவளுக்கென்ன குறை வந்து விட்டது. வாழ்ந்த போதிலும் கோடிக் கணக்கானவர்களை மயக்கினாள். 'செத்த பின்பும் கோடிக்கணக்கானவர்களின் மனங்களில் ஒரு பெண் ஆண் பிள்ளைகளை எப்படி எப்படி மயக்கி வசீகரித்துப் பைத்தியங்களாக அடிக்க முடியும்?' என்ற இலட்சணத்துக்கு ஓர் இலட்சியமாக இன்னும் அவள் தானே நிறைந்திருக்கிறாள்? இந்தப் பயல்களால் அந்தக் கேடுகெட்டவளை இன்னும் மறக்கவாவது முடிகிறதோ? ஒவ்வொருவனுக்கும் அவனது மனம் எப்படி எப்படிச் சீர் கெட்டுப் போய் நினைக்கிறதோ, அதை மறைக்கவும், மறக்கவும் பாஷை மட்டும் கருவியாக இருந்து போர்த்தி மறைத்து, நாகரிகமாக்கா விட்டால் எத்தனை பேருடைய அசல் ஒழுக்கம் இந்த உலகத்துக்கு நிர்வாணமாகுமோ ?' — என்று துணிவும் கோபமும் கலந்த சிந்தனைகள் இந்த உலகத்தைப் பற்றி அவன் மனத்தில் அடிக்கடி எழுவதுண்டு.

சோப்புக்காரர்கள் 'அவளுடைய மேனியழகுக்கு ஒரே காரணமாயிருப்பது தங்கள் சோப்புத்தான்' என்று விளம்பரம் போடும் போது விளம்பரக் கவர்ச்சிக்கு உபயோகித்துக் கொள்வதற்காக அவள் ஒரு புகைப் படத்துக்கு 'போஸ்' கொடுத்திருந்தாள். அது மிக மிக ஆபாசமாக இருப்பதாகப் பலர் அவளைக் குறை கூறினார்கள். ஆனால் அந்தப் படத்தோடு சோப்பு விளம்பரத்தை வெளியிட்டால்தான் சோப்பு விற்பனையாகும் என்று சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் கருதினார்கள். தங்கள் சோப்பை வாங்குகிறவர்களின் ஒழுக்கத்தை அவ்வளவு குறைவாக எடைபோட்டு முடித்த எண்ணத்தை எண்ணியவர்களுடைய மனம் ஆபாசமாகப் படவில்லை இந்த மக்களுக்கு. படத்தில் ஆபாசமாகத் தோன்றியதற்கு அவள் மட்டும் காரணமில்லை என்று ஏன் இந்த ஜனங்களுக்குப் புரிய மாட்டேனென்கிறது? சாதாரணமாக இப்படிப்பட்ட படங்கள் ஆபாசம் என்று நினைக்கும் எண்ணமுடையவர்கள் கூட இதைக் காரணமாக வைத்து ஜனங்களைக் கவர்வதும் சம்பாதிப்பதும் ஆபாசமென்று விட்டுவிட முடிவதில்லை. நாய் விற்ற காசும் குரைப்ப இல்லையே? எது கௌரவம், எது அகௌரவம் என்று புரிந்துகொள்ள முடியாமல் பல சமயங்களில் தயங்கி நின்றிருக்கிறான் அவன். பாஷை தான் மனிதனுடைய ஒரே கௌரவமாக இருந்து அவனுடைய உள் நினைவைப் போர்த்திக் கொண்டிருக்கிறதென்று அவன் முன்பு நினைத்ததுண்டு. இப்போது பணத்தைப் பற்றியும் அப்படி நினைக்கிறான் அவன். பாஷை மனிதன் நினைத்ததை அல்லது நினைக்கிறதைப் பேசும் கருவி என்று அதற்குப் பெரியவர்கள் இலட்சணம் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் அதே பாஷை உள்ளே நினைக்காததையும் பேசும். ஆனால் பாஷைதான் உள்ளே மனிதன் நினைத்ததை அல்லது நினைக்கிறதை மறைக்கவும் கருவியாக இருக்கிறதென்பதை அவர்கள் மறுக்க முடியாது. பணமும் பாஷையும்தான் கௌரவம் என்பதை உலக நடைமுறை அவனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தது. எல்லாருக்கும் தெரிகிற அளவு அத்தனை உயரத்துக்கு இப்படி மேலே ஏறி வந்து விட்டால் இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். வேறென்ன செய்வது? ராஜமுந்திரி ஸ்டேஷன் பிளாட்பாரத்தில், பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவரை அவள் எப்படி இருக்க வேண்டுமென்பதையோ, எவ்வளவுக்கு ஆபாசமாக இருக்கலாம்? எந்த அளவுக்குமேல் ஆபாசமாக இருக்கக் கூடாது என்பதையெல்லாமோ நிர்ணயிக்கவோ, வரையறுக்கவோ முன்வரவில்லை இந்த உலகம். ஓர் இளம் பெண் அங்கங்கள் சரியாக மறைக்கப்படாமல் கிழிசல் பாவாடை தாவணியுடன் எல்லாருடைய கண்களும் காணப் பொது இடமாகிய இரயில் நிலையத்து மேடையில் பிச்சை எடுப்பதுகூட ஆபாசம்தான்! அப்போது அந்த ஆபாசத்தை மறைக்க இந்தப் பெரிய மனிதர்கள் நிறைந்த கௌரவமான சமூகத்திலிருந்து எத்தனை பேர் முன் வந்தார்கள்? வயிற்றுக்கில்லாமல் பிச்சைக்கு நிற்கும் தன்னைக் கிழிந்த உடைகளின் பலவீனத்தைக் கொண்டு வெறியோடு பார்க்கிற பல மனிதர்களை அவள் அந்தக் காலத்தில் சகஜமாகச் சந்தித்திருந்தாள். அதனால்தான் மனிதனுடைய உள் நினைப்பை மறைக்கிற ஒரே கௌரவம் பாஷை மட்டுமே என்று அவள் முடிவு செய்திருந்தாள். மனிதர்களையும் இந்த உலகத்து விவகாரங்களையும் பற்றி அவளுக்குள் வலுவான முடிவுகள் உண்டு. 'ராஜமுந்திரி ரயில் நிலையத்து மேடையில் செருப்பில்லாமல் பிச்சைக்கு நடந்த அதே கால்கள் தான் இன்று சாந்தோம் கடற்கரையை அநுபவித்துக் கொண்டு இந்தப் பட்டுக் கம்பளம் விரித்த பங்களாவுக்குள் நடந்து கொண்டிருக்கின்றன' என்று அவளே தனக்குள் சில சமயங்களில் சிந்தித்துப் பார்ப்பாள். ஐம்பது படங்களுக்கு மேல் நடித்துப் படவுலக வாழ்க்கைக்கு ஒரு பொன் விழாக் கொண்டாட வேண்டிய அநுபவம் அவளுக்கு வந்தாயிற்று. இரவிலும் பகலிலுமாக எத்தனை படங்களுக்கு எத்தனை 'கால்ஷீட்'டுகளோ போய் வந்தாயிற்று. இப்போதோ அசைக்க முடியாத தன் ஸ்தானத்திலும் புகழிலும் நம்பிக்கை வைத்து விட்ட காரணத்தினால் 'இன்று சௌகரியப்

படுமென்று தோன்றவில்லை: 'ரொம்பத் தலை வலியாயிருக்கிறது' என்று கால்ஷீட்டையே ரத்துச் செய்து ஏற்கெனவே ஷூட்டிங்குக்குத் தயாராகப் போட்டு வைத்த 'ஸெட்'டும் செய்து வைத்த ஏற்பாடுகளும் வீணாகும்படி செய்கிற அவ்வளவு தைரியமும் 'ஸீனியாரிட்டி'யும் வந்து விட்டன அவளுக்கு.

'பொன்னுரங்கம்தான் அவளை ஆளாக்கினார். அவர்மேல் கூட அவளுக்கு நன்றியில்லை' என்று பலர் இப்போது அவளைக் குறை சொல்லுகிறார்கள். அதைப் பற்றி அவள் கவலைப்படுவதில்லை. பிச்சை எடுத்துப் பெறுவதற்குத்தான் நன்றி கூறியாக வேண்டும். உழைத்துப் பெறுகிற எதற்குமே நன்றிகூற வேண்டிய அவசியமில்லை. மாடிப் படியில் ஏறுகிறோம். நாம் ஏறினால்தான் படிகள் நம்மை மேலே கொண்டு போய் விடுகின்றன. ஏறாமலே நிற்கிற ஆளைப் படிகளாகவே மேலே தூக்கிக் கொண்டு போய் விட்டு விடமாட்டா. ஏறினால்தான் மேலே போகலாம். மேலே போய் நின்றவுடன் ஏறி வரக் காரணமாயிருந்த படிகளைக் கீழே திரும்பிப் பார்த்து எங்காவது நன்றி கூறுகிறோமா? பொன்னுரங்கம் அவளைப் படியாக இருந்து மேலே ஏற்றி விட்டார். அவளுக்குப் பதிலாக அவரே 'மேக் அப்' போட்டுக் கொண்டும் புருவத்தைக் கத்திரித்துக்கொண்டும் பென்ஸிலால் கோடு கீறிக் கொண்டும் நடித்தா அலுத்துப் போனார்? நன்றிக்கு அவர் எதிர்பார்க்கிற அர்த்தம் தேடி வந்தபோதெல்லாம் பத்தாயிரம், இருபதாயிரம் என்று அள்ளிக் கொடுக்க வேண்டும் என்பது. அதற்கு அவள் தயாராயில்லை. ஒரு காலத்தில், கந்தையும் கிழிசலுமாகப் பிச்சைக்காரியாக இருந்த தன்னை ராஜமுந்திரி ஸ்டேஷன் பிளாட்பாரத்திலிருந்து கோடம்பாக்கம் ஸ்டுடியோ வரை அழைத்துக் கொண்டு வந்து சேர்த்த காலத்தில் — ஒரு பெண் பிள்ளை எதை எதையெல்லாம் சர்வ சாதாரணமாக இன்னொருத்தரிடம் விட்டுக் கொடுத்து இழந்துவிட முடியாதோ அதையெல்லாம் கூடப் பொன்னுரங்கத்திடம் அவள் விட்டுக் கொடுத்திருக்கிறாள். அதைப் பொன்னுரங்கமும் மறந்திருக்க முடியாது. கூட நடந்து வந்தவள் ஏதோ ஓர் அவசரத்தினாலோ அவசியத்தினாலோ நாலு கெஜம் முன்னால் வேகமாகப் போய்ச் சேர்ந்து விட்டாள் என்பதற்காக மட்டும் அவளை நன்றியற்றவள் என்று கூறுவது என்ன நியாயம்? மனிதர்கள் நிஜமாக இவ்வுலகில் ஒழுக்கத்தை மட்டுமே கௌரவிக்க வில்லை: ஒழுக்கத்தை விடப் பணத்தையே அதிகமாகக் கௌரவிக்கிறார்கள் என்பதைப் பல சமயங்களில் அவள் அநுபவ ரீதியாகப் புரிந்து கொள்ள நேர்ந்திருக்கிறது. அவளுடைய பங்களாவுக்கு அருகில் உள்ள மைதானம் ஒன்றில் இராமாயணக் கதையை உபன்யாஸம் செய்த கதாகாலட்சேபக்காரர் ஒருத்தரைக் கௌரவிப்பதற்காக அங்கு சீதா கல்யாண வைபவத்தை அவர் விவரித்த தினத்தன்று ஒரு ஜோடி பட்டு வேஷ்டியும் பட்டுப் புடைவையும், வெற்றிலை பாக்கும் பழமும் எடுத்துக் கொண்டு போய் அவளே நேரில் காணிக்கை வைத்தாள். அவ்



குலோப்ஜான் சாப்பிட்டவரிடம் சர்வர்: ஏன் சார்! பேசாம ஒரு 'பிளாட்டிங்' பேப்பர் கொண்டு வரட்டுமா?

வளவுதான்! மறு நாளிலிருந்து கதாகாலட்சேபத்தின் நடுவில், ''நட்சத்திரமணி அலங்காரியம்மாள் மகா உத்தமி! மகா புனிதவதி! ஸ்திரீ தர்மமாகிய ஒழுக்கத்தை விட்டுவிடாமல் நடிப்புத் திறமையையும் காப்பாற்றி வருகிறாள்'' என்று புகழத் தொடங்கிவிட்டார் அந்தக் கதாகாலட்சேபம் செய்பவர். தன்னைப்பற்றி அவர் அப்படிப் புகழ்ந்தபோது அவளுக்கே கேட்பதற்குக் கூச்சமாகவும் பயமாகவும் இருந்தது. ஒழுக்கத்திற்காக யாரை யாவது புகழ வேண்டுமானால் ஒரு கடுமையான விரத நியமங்களில் தவறாத சந்நியாஸியைத் தேடிப் பிடித்துப் புகழ்ந்து தொலைக்கட்டுமே? ஒரு சினிமா நட்சத்திரத்திடம் ஒழுக்கத்தை எதிர்பார்த்து அதைப் புகழ ஏன் ஆசைப்படுகிறார்கள்? ஒரு சந்நியாஸியை அவருடைய உடல் அழகுக்காக மட்டும் புகழ்ந்தால் எப்படிப் பொருத்தமாயிருக்குமோ அப்படித்தான் ஒரு நட்சத்திரத்தை ஒழுக்கத்துக்காக மட்டும் புகழ வேண்டும் என்று நினைப்பதும் பொருத்தமாயிருக்கும்! இருக்கிற தகுதிக்காகப் புகழ வேண்டும். இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிற தகுதிக்காகவும் சேர்த்துப் புகழ்வதில் ஏதாவது அர்த்தமிருக்க முடியுமா? ஒவ்வொருவரும் கடைப்பிடித்தே தீரவேண்டுமென்று அறநூல்கள் வற்புறுத்துகிற ஒழுக்கம் வேறு. ஒவ்வொரு துறையிலும் தவிர்க்க முடியாமல் அநுசரித்துப் போயாக வேண்டுமென்று அந்தத் துறையின் அநுபவம் கற்பித்துக் கொடுக்கிற ஒழுக்கம் வேறு: சினிமாவில் சேர்ந்தபின் அறநூல்கள் சொல்கிற ஒழுக்கம் தோற்று அநுபவத்தில் பிடிபடுகிற ஒழுக்கமே வந்துவிடுமானால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்? ஒழுக்கத்திற்காகத் தன்னை யாராவது புகழத் தொடங்

னால் அவளுக்கு ரொம்ப ரொம்பக் கோபம் வரும். தன்னிடம் இருக்க முடியாத ஒன்றைத் தான் கடைப்பிடிக்க முயன்று தோற்ற — கொஞ்சம் தாராளமாகவே தோற்றுப் போன — ஒன்றைத் தன்மேல் புனைந்து புகழ்வதை அவள் ஒருபோதும் விரும்பவில்லை. ஏதோ அந்தச் சாஸ்திரிகள் பகவத் விஷயத்தைச் சொல்கிறாரே என்பதற்காக அவரைக் கெளரவிக்கப் போக அவர் அவளைச்சரியாக அகெளரவப்படுத்திவிட்டார்.

'நல்ல நடிகை. வசீகரமான தோற்றமுடையவள். நன்றாக நடிக்கிறாள்' என்று மட்டும் சொல்லிப் புகழ்ந்திருந்தால் அவருக்கும் கெளரவமாயிருந்திருக்கும், அவளுக்கும் கெளரவமாயிருந்திருக்கும். அப்படியில்லாமல் யாரும் நம்ப முடியாத ஒரு தகுதிக்காக அநாவசியமாக அவளைப் புகழ்ந்து தோத்



திரம் செய்ய ஆரம்பித்ததன் மூலம் அசல் வாழ்க்கையில் கூடப் பவர் மேக் — அப் ஒன்றும் செய்து கொள்ளாமலே பணத்துக்காக இப்படி நடிக்கிறார்கள் என்று அவள் அவரைப் பற்றி நினைக்க நேர்ந்ததுதான் மிச்சம். ஒரு குறிப்பிட்ட துறையில் உள்ள கலைஞர்கள் சிலரைப் பற்றி மட்டும் 'அவர்கள் ஒழுக்க சீலர்கள்தான்' என்று யாராவது அடிக்கடி சொல்லி வற்புறுத்த நேர்ந்தால் அப்படி வற்புறுத்துவதன் மூலமே அவர்கள் ஒழுக்கமில்லாதவர்களாயிருக்க நேர்வதுதான் பெரும்பாலும் சாத்தியம் என்ற எதிர்மறை உண்மையின் பிரஸ்தாபம்தான் ஞாபகத்துக்குக் கொண்டு வரப்படும். தன்னுடைய அழகையும், அதன் வசீகரத்தையும் கவர்ச்சியையும் தான் அவள் இந்த உலகத்துக்கு நிரூபிக்க முயன்றாளே ஒழிய ஒழுக்கத்தை மட்டும் நிரூபிப்பதற்காக ஸ்டுடியோவின் கிரீன் ரூமுக்குள் நுழையவில்லை; கசாப்புக் கடைக்காரர் மேல் சன்மார்க்கத்தைச் சார்த்தி வைத்துப் புகழ்வது போல்தான் இருக்கும் அவளை ஒழுக்கத்துக்காகப் புகழுவதும். தன்னை எதற்காகப் புகழக் கூடாதோ அதற்காக மற்றவர்கள் புகழுவது அவளுக்கே அகெளரவமாகத் தோன்றியது. ஒரு மனிதனை அவனிடம் இல்லாத தகுதிக்காகப் புகழ்வதை விட வேறெந்த விதமாகவும் அதிக பட்சம் அவமானப்படுத்திவிட முடியாது. அலங்காரி அந்த ஒளிமயமான திரை உலகிற்குள் பிரவேசித்தபோது பிச்சைக்காரியாகத்தான் பிரவேசித்தாள். தனக்குத் தெரியாமலே ஏமாறியோ ஏமாற்றப்பட்டோ அவள் எதையும் இழக்கவில்லை. தெரிந்துதான் இழந்தாள். இதை இதை இழந்து இப்படி இப்படி விட்டுக் கொடுத்தால்தான் இங்கு முன்னேற முடியும் என்ற இரகசியத்தைப் பூர்விக வாழ்க்கையில் பிச்சைக்காரியாகத் திரிந்த ஓர் ஏழை எவ்வளவு அழுத்தமாகவும் அவசியமாகவும் புரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவு அழுத்தமாகவும் அவசியமாகவும் புரிந்துகொண்ட பின்புதான் அவள் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் நடந்து வந்து முன்னேறியிருந்தாள். ஒரு தொழிலுக்கு வந்த பின் அதன் பழக்க வழக்கங்களிலிருந்து தப்ப முயல்வது அசாத்தியம். உடம்பையே இலஞ்சம் கொடுத்து முன்னுக்கு வரவேண்டிய தொழிலாக அது இருக்கிறது என்பதை உள்ளே வந்த சூட்டோடு அவள் புரிந்து கொண்டாலும் அப்படிப் புரிந்து கொண்டதற்காகப் பயந்து போய் வந்த வழியே திரும்பி ஓடிவிடவில்லை. அதுதான் அவள் முன்னேறியதன் இரகசியம். கணவன்மார்களுக்கு அடங்கிய மனைவிமார்களாக வாழும் எத்தனையோ பல குடும்பப் பெண்கள் அவள் கட்டிக்கொள்கிறமாதிரி ஸ்டைலில் புடவை கட்டிக் கொள்வதற்கும் அவள் வெட்டித் தைக்கிறமாதிரிச் சோளி வெட்டித் தைப்பதற்கும் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். 'டு டேய்ஸ் ஸ்டைல் டுமாரோஸ் ஃபேஷன்' — என்பது போல் அவளுடைய இன்றைய ஸ்டைல் நாளைய ஃபேஷனாகச் சமூகத்தில் உருவாகிக் கொண்டிருந்தது. அப்படிக் குடும்பப் பெண்களின் ஃபேஷனையே உருவாக்கிக் கொண்டிருந்த அவளோ டிரைவர் முனிசாமியின் மனைவியிலிருந்து இன்னும் எத்தனையோ பல குடும்பப் பெண்களோடு தன்னைக் காரணமில்லாமலே எதற்காகவோ அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு அவர்களிடமுள்ள எது தன்னிடம் இல்லாமல் குறைகிறதென்று அந்தரங்கத்தில் மனநிம்மதி இழந்து தவித்திருக்கிறாள். அபிப்பிராய பேதங்களுக்கு இடமில்லாமல் கோடிக்கணக்கான ரசிகர்களின் அபிப்பிராயமாகவே அவள் நிரம்பி யிருந்தும் அவளுடைய கலைக் கர்வம், அழகுச் செருக்கு, செல்வத் திமிர் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு மிகமிக இரகசியமாக அவளுக்குள்ளேயும் சில ஆற்றாமைகள் உண்டு!

அந்த ஆற்றாமைகள் என்னென்ன என்று அவளை இன்னும் பேர் கண்டுபிடிக்க முடி

யாத புதிர்களாக அவை இருந்தன. திருப்தியின் உயரத்தில் ஏறி நின்று எதற்கோ அதிருப்திப்பட்டுக் கொண்டிருந்தாள் அவள். அந்தஸ்தின் சிகரத்தில் ஏறி நின்று கண் பார்வைக்குத் தெரியாமல் வழியாரம்பத்தில் மங்கிப்போய்விட்ட எந்த அவமானத்துக்கோ இன்னும் தலைகுனிந்து கொண்டிருந்தாள் அவள். தான் ஒரு வேளைச் சாப்பாட்டுக்குப் பணம் தேடிய காலம் போய் வேகமாகத் தன்னைத் தேடி வந்து குவிந்துவிட்ட பணத்துக்கு ஒவ்வொரு செலவாகக் கண்டுபிடித்துப் பங்களா, இன்னொரு பங்களா, வேறு வேறு தெருக்களில் ஐந்தாறு வீடுகள், பெரிய கார், சிறிய கார், ஏர்க்கண்டிஷன் செய்த கார் — ரேடியோ வைத்த கார் — ரெப்ரிஜிரேடர், — பாரிஸ் சென்டுகள், பட்டுப் புடைவைகள் எல்லாம் தேடித் தேடி வாங்கிய பின்னும் கடையில் இன்னும் எதையோ வாங்காமல், அல்லது வாங்க முடியாமல் மீதம் விட்டிருப்பது போன்ற அந்தத் தவிப்பை அவள் மறக்க முடியவில்லையே!'

'சென்றதினி மீளாது! இன்று புதிதாய்ப் பிறந்தோம்' — என்று பழைய படம் ஒன்றிற்காக மனப்பாடம் செய்த பாடல் வரிகளில் வருவதைப்போல் 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்று நினைத்துக்கொண்டு இந்த விநாடியிலிருந்து இனி நிம்மதியாக வாழ்ந்து விடலாம் என்கிற எண்ணத்தோடு பல வேளைகளில் பழமையை மறந்து மேலே நடக்க முயன்றிருக்கிறாள் அவள். 'நடிகை அலங்காரி திருப்பதி சாமியைக் கும்பிட்டு 5000 ரூபாய் செலவில் வைர அங்கி சார்த்தினாள். இரசிகர் கூட்டம் அவளைச் சூழ்ந்து வழி மறித்தது. திருப்பதி சாமிதான் தன் நடிப்புத் திறமைக்கெல்லாம் காரணம் என்று அலங்காரி நமது நிருபரிடம் கூறினார்' என்று உலக கௌரவத்துக்காகப் பத்திரிகைகளில் செய்தி வரும்படி அடிக்கடி திருப்பதி போவாள் அவள். உலகினர் தன்னைக் கவுரவமாக நினைக்கச் செய்வதற்கு இப்படி அவள் முயலும் முயற்சிகள் பல. அப்படி முயலும்போதெல்லாம் கடந்த காலம் ஒரு கெட்ட ஞாபகார்த்தமாகவும் எதிர்காலம் ஓர் அடைய முடியாத இலட்சியமாகவும் தெரிந்து முன்னைவிடப் பிரகாசமான சூழ்நிலையில் முன்னைவிட அதிகமான வசதிகளோடு தான் இன்னும் இந்த உலகில் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதாகவே தோன்றும் அவளுக்கு. அப்படிப் பிச்சை எடுப்பதற்கு இன்னும் எதை மீதம் விட்டிருக்கிறோம் என்பதும், அவளுக்குத் தெளிவாகப் புரிந்து விடவில்லை. ஒருவருடைய கௌரவ அகௌரவங்களைத் தீர்மானம் பண்ணுகிற அபிப்பிராயமும் உரிமையும் இந்தச் சமூகத்தில் அந்த ஒருவர் தவிர மற்ற எல்லாருக்கும் இருந்து தொலைக்கிறதே என்கிற பயத்தினால்தான் அவள் இப்படியெல்லாம் குறைவாக நினைக்கிறாள். ஆகவே இன்னொருவருடைய அபிப்பிராயமும் ஆதிக்கமும் பாதிக்காமல் ஒரு நாள் ஒரே ஒரு நாளாவது வாழ்ந்து விட்டு அப்புறம் தான் சாக வேண்டும் என்று அவள் தவித்ததிலும் வியப்பில்லை. கௌரவ அகௌரவங்களைத் தீர்மானிக்கிற உரிமை சமூகத்தினிடமும் மற்றவர்களிடமும் இருந்ததனால் அசல் கௌரவத்தையோ அசல் அகௌரவத்தையோ அவள் சரியாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ள முடியாமலே இருந்தது. இவ்வளவு பெரிய நகரத்திலே எத்தனையோ பெரிய — பெரிய திரைப் பட அரங்குகள் இருக்கின்றன. எவ்வளவு பிரமாதமான திரைப்படமும் கடந்த பத்து வருடங்களில் நூற்றைம்பது நாட்களுக்கு மேல் சேர்ந்தாற்போல ஓடியதே இல்லை. அப்படியிருக்கும்போது சமீபத்தில் அவள் நடித்துப் பிரபலமான 'மல்லிகை மாலை' என்ற படம் இருநூறு நாட்கள் ஓடி இருநூற்றைம்பது நாளும் ஓடி, மூந்நூறாவது நாள் கொண்டாட்டத்தையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. தயாரிப்பாளர்களும் டைரக்டர்களும் அந்த மூந்நூறாவது நாள்



விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். அந்தப் படத்தின் வெற்றிக்கு முழுக்க முழுக்க அவள்தான் காரணம். அதில் அவள் நடித்த பெருமையைப் பாராட்டி விமரிசனம் எழுதிய உள்ளூர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று 'ஷீ வாக்ஸ் இன் ப்யூட்டி' என்று தலைப்புப் போட்டு அவளை உலக நட்சத்திரமாக உயர்கிற சாமர்த்தியம் நம்முடைய தமிழ்நாட்டு அலங்காரிக்கு இருக்கிறதென்று பொருள்பட எழுதியிருந்தது. அந்த விமரிசனம் வெளிவந்த பிறகு பத்திரிகைகளும், சுவரொட்டிகளுமாக அந்தப் படத்திற்குச் செய்த விளம்பரத்தில் எல்லாம் அவள் படத்தைப் போட்டு 'ஷீ வாக்ஸ் இன் ப்யூட்டி' என்றே விளம்பரம் செய்யலானார் தயாரிப்பாளர். அந்தப் படம் மிகி

ளான சில மாதங்களில் அதில் தான் நடித்திருக்கும் பாகத்தைப் பாராட்டி வந்த கடிதங்களை எண்ணியபோது இலட்சத்து ஐம்பதினாயிரம் கடிதங்களுக்கு மேல் குவிந்திருப்பதை எண்ணி அவள் தனக்குள்ளே பூரித்தாள். அவள் ஒரு விநோதமான பெண். அவளிடம் நிறையக் கர்வம் உண்டு. ஆனால் கர்வப்படும்போதே 'நான் இப்படிக் கர்வப்படுவதற்குத் தகுதியானவள்தானா' என்று மற்றொரு பக்கத்தில் சந்தேகப்பட்டுக் கொண்டேதான் அவள் அந்தக் கர்வத்தைப் படுவாள். கலை சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டிருக்கிற எல்லாரிடமும் என்னென்ன பலவீனங்கள் உண்டோ அவை எல்லாம் அவளிடமும் உண்டு. சொல்லப் போனால் கொஞ்சம் அதிகமாகவே உண்டு. சக நடிகர்களிடம் அபிப்பிராயம் கேட்கக் கூசுவாள் அல்லது அவர்களுடைய அபிப்பிராயத்தையும் புகழையும் அலட்சியம் செய்வதுபோல் இருப்பாள். அதே சமயத்தில் மனத்தில் தாங்க முடியாத ஆவலோடு கார் டிரைவர் முனிசாமியிடமோ வேலைக்காரி அங்கம்மாவிடமோ 'அந்தப் படத்திலே நான் எப்படி நடிச்சிருக்கேன் முனிசாமி?' — என்றும், 'ஏண்டி அங்கம்மா! 'மல்லிகை மாலேலே' என் நடிப்பு உனக்குப் பிடிச்சிருந்துதாமா?' - என்றும் வலுவில் போய் அபிப்பிராயம் கேட்டுக் கொண்டு அவர்கள் அபிப்பிராயம் சொல்லத் தயங்கினாலும் அதை அவர்களுடைய நாவிலிருந்து பிடுங்கி எடுத்துக் கொள்ளாத குறையாகத் துளைப்பாள். வலுவில் தேடி வந்து அபிப்பிராயமும் புகழும் தருகிறவர்களை அலட்சியமாகச் செவி சாய்த்துக் கேட்காதது போல் துரத்தி விட்டு அபிப்பிராயமும் புகழும் தரத் தங்களுக்குத் தகுதியும் யோக்யதையும் இல்லையே என்று கூசி மௌனமாகப் பயந்து இடப்பவர்களிடம் போய் அவற்றைக் கேட்டுக்கொண்டு நிற்பாள் அலங்காரி. கூச்சம், வெட்கம் எல்லாம் அவளிடமிருந்து விலகிக் கழன்று போய் வெகுநாட்களாகி விட்டன. டிரைவர் முனிசாமியிடம்கூட அவள் தாராளமாகவும் சர்வ சாதாரணமாகவும் பேசுவாள். சில மாதங்களுக்கு முன் அவனுக்குக் கலியாணமாகி மனைவியுடன் அவன் ஊருக்குத் திரும்பி வந்த அன்று இரவு எட்டு மணிக்கு ஏதோ ஒரு ஸ்டுடியோவில் மேக்கப்போடு இருந்தவள் அந்த மேக் — அப்பைக் கலைக்காமலே காரருகில் முனிசாமியிடம் வந்து கண்ணைச் சிமிட்டிக் குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டே, "நீ சீக்கிரமாக வீட்டுக்குப் போய்ச் சேரு அ[illegible]னே! உன் சம்சாரம் கோபித்துக்கொள் [illegible] போகிறாள். போகிறபோது பூக்கடை[illegible] நல்ல பூவாக வாங்கிக் கொண்டு போ. / — இன்று நான் ஷூட்டிங் முடிந்து திரும்பப் பன்னிரண்டு மணியோ, ஒரு மணியோ ஆகும்! இங்கிருந்து ஏதாவது ஸ்டுடியோ காரில் வீட்டுக்குப் போய்க்கொள்கிறேன். அல்லது வில்லன் ஆனந்தகுமாரிடம் என்னை வீட்டில் 'டிராப்' செய்துவிட்டுப் போகச் சொல்லிக் கொள்கிறேன். இந்தா; இதை வைத்துக் கொள். பீடாக் கடையில் சம்சாரத்துக்கு ஏதாவது வாங்கிக்கொண்டு போ. சும்மா போய் நின்றுபோ……அப்புறம் நாளைக்குத் தெரியுமா சேதி? நானே நாளைக்கு அவளைக் கூப்பிட்டு விசாரிப்பேன்" என்று ஆண்பிள்ளையாகிய அவனே வெட்கப்பட்டுத் தலைகுனிகிற அளவு அரட்டை யடித்து ஐந்து ரூபாய்ப் பணத்தையும் அவனிடம் கொடுத்தனுப்பினாள் அவள். கலியாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக வாழ்கிறவர்களின் வாழ்க்கையை எல்லாம் ரொம்பக் கண்டு அனுபவித்தவள்போல் தான் அப்படி அவனிடம் பேசியதை எண்ணி அப்புறம் அவள் தனக்குத் தானே நினைத்துத் தான் கூறியதை யெல்லாம் முனிசாமி அவனுடைய மனைவியிடம் அந்தச் சின்னஞ் சிறு ஓட்டுக் குடிசையில் மல்லிகைப்பூச் சரிந்து உதிர்ந்த தலையணை மேல் காதும் காதும் ஒட்டினாற்போல் எத்தனை இரகசியமாக எவ்வளவு நகைப்புக்களுக்கிடையே எப்படி எப்படிச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருப்பான் என்று கற்பனை செய்தும் களிப்பாள். திரையில் எத்தனை படங்களில் எத்தனை கதாநாயகர்களோடு மல்லிகைப் பூச் செறிய கட்டில்களில் அருகமர்ந்து முதலிரவுக் காட்சிகளில் அம்மி மிதித்து அருந்ததி பார்த்த அசல் மணப் பெண்கூடத் தோற்றுப் போகும் படி நடித்திருக்கிறாள் அவள்! அசல் வாழ்க்கையும் அப்படித்தானே இருக்கப் போகிறது! புது மணப் பெண் நாணுவதாகப் பல இடங்களில் அவள் நடித்திருக்கிற படங்கள் எத்தனை எத்தனையோ? நாணப்பட்டு நாணப்பட்டு நடித்து ஒவ்வொரு புதுப் படத்தில் நடிக்கும் போதும் நாணமும் காதலும் சலித்து ஊசிப்போன விஷயங்களாக மாறியிருந்தன அவளுக்கு.

"என்ன முனிசாமி! அந்தக் 'காதல் சொர்க்கம்'கிற படத்திலே லவ் ஸீன்லே நான் கொஞ்சம் தாராளமாகவே நடிச்சுப்பிட்டதாக இந்தப் பத்திரிகைக்காரனுகள்ளாம் வயிற்றெரிச்சல் படறானுகளே? நீ என்ன நினைக்கிறே?" — என்று அவனிடம் அவள் காரில் ஒரு நாள் இருந்தாற்போலிருந்து தொடங்கிப் பேசிக்கொண்டு வந்தாள்.

"எதெதை எப்பிடி எப்பிடி நடிக்கணும்னு உங்களுக்குத் தெரியாதாம்மா? நான் என்னத்தைப் புச்சா சொல்லப் போறேன்?" — என்று அப்போது, ரொம்ப 'டிப்ளமேட்' ஆகப் பதில் சொல்லித் தப்பித்துக்கொண்டான் முனிசாமி. இன்னொருவனுடைய அபிப்பிராயத்தை எதிர்பார்க்க அவசியமில்லாத விஷயத்துக்குக் கூட இப்படி முனிசாமியிடமும் வேலைக்காரி அங்கம்மாவிடமும் வாயளந்து பார்ப்பது அவளுக்குப் பிடிக்கும். தான் நிற்கிற உயரத்திலிருந்து பார்க்கும்போது முனிசாமி ஓர் ஆண்பிள்ளை என்றோ — அந்த மீசை முளைத்த ஆண்பிள்ளையிடம் தான் சில விஷயங்களைப் பேசுவதற்குக் கூசவேண்டுமென்றோ அவளுக்குத் தோன்றியதே இல்லை. ஒரு டஜன் வருஷங்களுக்கு மேல் ஸ்டுடியோ லைட்டுகளின் வெளிச்சத்தில் கூசிக் கூசிக் கூச்சமே அவளிடமிருந்து அற்றுப் போய் விட்டது. அழகாக மேக்கப் போட்டுக் கொண்டு வந்து அருகில் நின்று




பொங்கல் வெளியீடு
பாரத மாதா பிக்சர்ஸ்
பழநி
வசனம் - சோலைமலை • பாடல்கள் - கவிஞர் கண்ணதாசன்
இசை - விஸ்வநாதன்-ராமமூர்த்தி • காமிரா - G. விட்டல்ராவ்
கலை - H. சாந்தாராம்
திரைக்கதை டைரக்ஷன் A. பீம்சிங்
ஸ்டுடியோ - ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிடோன்
லைசென்ஸ் ஆப் நியூடோன் ஸ்டுடியோஸ் (பி) லிட்., சென்னை-10.
ELEGANT



தரத்தை
விரும்புவோர்
அணிகின்றனர்
ஸிர்ஸில்க்
ஸிர்ஸில்க் உயர்ரக நெசவுத்துணிகள்
இறங்குதலிலும், உணர்ச்சியிலும், நிறங்களிலும் மிகச் சிறந்தது.
டாபெட்டா, ஸாடின், க்ரேப், சாதாரணமும் ப்ரின்டெடும்
ஸர்ஸில்க் லிட்., ஸர்பூர், காகஸ்நகர், ஆந்திர பிரதேஷ்.
தென் இந்தியாவுக்கு ஸப் ஏஜண்டுகள்:
ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிமிடெட்
கெம்பகௌடா ரோடு, பெங்களூர்-9
4, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை-1
ஹைதராபாத்துக்கு ஸப் ஏஜண்டுகள்:
ரங்டா & கம்பெனி
தாஜ் பில்டிங்
பத்தர்கட்டி, ஹைதராபாத்

கொஞ்சுகிற ஓர் ஆண் நடிகனோடு அவள் நாணிக் கண் புதைத்துக் காதல் 'டயலாக்' பேசும்போது உள்ளம் உருகியோ தவித்தோ அப்படிப் பேசுவதில்லை. திரையில் பார்த்தால் அப்படி உள்ளமுருகித் தவித்துப் பேசுவது போலவே தோன்றும்படி செய்து விடுகிற சில பழகிப்போன முக பாவங்களைக் கொண்டு இயந்திரமாக இயங்கி நடித்து முடித்து விடுகிறாள் அவள். அது தொழில்தான். அவள் எல்லைவரைதான் தொழில். அவளுடைய எல்லைக்கு அப்பால் ரசிகர்களின் பூமியில் அது பிரவாகிக்கும்போது அவர்கள் அதற்குக் கலைப் பெயர் சூட்டிக் கௌரவித்து விடுகிறார்கள்.

ஒரு நாள் — புதிதாக நடிப்புத் துறைக்கு வந்த ஓர் இளம் நடிகனோடு அவள் ஒரு படத்தில் காதல் காட்சியில் நடிக்க வேண்டியிருந்தது. தேர்ந்த பாவங்களின் சேர்க்கையாலும் காதல் என்றால் இந்த இந்த விதமான ஃபார்முலாக்களில் நடித்தால் திரையில் அது இப்படி இப்படிக் கவர்ச்சியாக இருக்கும் என்று அவளுக்குப் பழகிப் போயிருந்த அமைப்புக்களாலும் அவள் வரையில் பிரமாதமாக அதில் நடித்து விட்டாள். அந்தப் புது நடிகர் அக்காட்சி பிரமாதமாகவும் தத்ரூபமாகவும் வர வேண்டுமே என்று அதிகமாகக் கவலைப்பட்டு — அதிகமாக அக்கறை காட்டிச் செயற்கையாக — அது நடிப்பு என்று பளிச்சென்றுத் தெரிவது போலவே நடித்துப் பாழாக்கி விட்டார்.



செட்டிலிருந்து வெளியே வரும்போது அவள்தான் அந்த நடிகரிடம், "அலட்டிக் கொள்ளாமல் நடியுங்க ஸார்! அப்போது தான் நன்றாக வரும். நீங்களும் நானும் ஆளுக்கு இலட்ச ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு — முடிந்ததும் மேக் — அப்பைக் கலைத்துவிடலாம் என்கிற தைரியத்தோடு தான் காதலிக்கிறோம். நிஜமாகவே காதலிப்பது போல் இப்படிப் பயந்து சாகிறீர்களே? எதுக்கு இந்தப் பயம்? இயற்கையாக நடியுங்க. நடிக்கிறோம்கிறதை நினைச்சுக்கிட்டே நடிக்காதீங்க. அசல் வாழ்க்கையிலேதான் இப்படிக் காதலிச்சா பெற்றோர்கள் பிளியைக் கட்டி இழுத்துப்பிடுவாங்க. ஒரு தமிழ் சினிமாவிலே வர்ர காதலுக்கே இத்தனை நடுங்கறீங்களே? நிஜமாகவே வாழ்க்கையிலே நீங்க யாரையாவது காதலிச்சீங்களோ; அவ்வளவுதான்! உங்களை நம்பினவள் தேறாளா..." என்று தேர்ந்த அனுபவசாலியாக நின்று அவள் அறிவுரை கூறினாள். அந்த நடிகன் வெட்கப்பட்டுத் தலை குனிந்து ஆண்பிள்ளையின் தைரியத்தோடு எதிர் நின்று பேசிய அவளுக்கு நாணிப் பெண் பிள்ளையின் கூச்சத்தோடு சிரித்தான். அவளோடு இணை கொடுத்துக் கதாநாயகர்களாக நடிப்பதற்கு இரண்டொரு பெரிய நடிகர்கள் தான் இருந்தனர். சினிமாத் துறையிலும் அதற்கு முன்னாலும் அவள் வந்த வழியோ வளர்ந்த விதமோ நாசூக்கானதோ நளினம் நிறைந்ததோ அல்ல. ஆனால் அந்த நடிப்புக் கலையின் சூட்சமங்களில் அலட்சியமாகவும் அநாயாசமாகவும் இணையற்ற விதத்தில் தேர்ந்திருந்தாள் அவள். கண்ணைச் சுழற்றி ஒரு சிரிப்புச் சிரித்து 'அத்தான்! என்னை மறந்துட மாட்டீங்களே?' என்று யாரோ ஒரு திரை அத்தானிடம் இன்னும் பெயர் சூட்டப்படாத ஏதோ ஒரு தமிழ்ப் படத்துக்காக அவள் வசனம் பேசிக்காதல் காட்சியில் நடித்துவிட்டால் படம் வெளிவந்து பார்க்கும் போது தத்ரூபமான காதல் கனிவுடன் இருக்கும். ஆனால் வாழ்க்கையில் அவள் யாரையும் அப்படிக் காதலித்ததில்லை. காதலிக்க நேர்ந்ததுமில்லை. காதலிக்கவும் முடியாது. இந்த வழியின் ஆரம்பத்தில் எங்கோ ஒரு மூலையில் இருளடைந்த சில அறைகளில் சில பட முதலாளிகளிடமும், சில முரட்டு டைரக்டர்களிடமும், சில திரைக் கவிஞர்களிடமும் முன்னேற வேண்டிய அவசியத்துக்காகவும், அவர்களே அதை எதிர்பார்த்து வழிமறித்து நின்ற காரணத்தினாலும் உடம்பையே லஞ்சம் கொடுத்து மீட்டிருக்கிறாள் அவள். அபலைகளாக அங்கு வருகிற எல்லாரும் அந்த உலகத்தில் அப்படித் தடுக்கி விழத்தான் வேண்டும். அந்த உலகத்தில் அது சர்வ சாதாரணம். ஆதலால் காதலைப்பற்றி அவள் ரொம்பப் பெரிய அபிப்பிராயம் வைத்தவளில்லை. ஆனால் படம் பார்க்கிறவர்கள் காதலைப் பற்றி ரொம்ப ரொம்பப் பெரிய அபிப்பிராயம் வைக்கும்படி அவளால் அதைத் தத்ரூபமாக நடிக்க முடியும். காளிதாசனுடைய சகுந்தலையும், ஷேக்ஸ்பியரின் கதாநாயகி ஜூலியட்டும் திரும்ப வந்து எப்படிக் காதலிப்பது என்று தன்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு போய் மறுபடி காதலித்துப் பார்க்கிற அளவுக்குக் காதலைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பவள் போல அவளால் அதை நன்றாக நடிக்க முடியும். அது அவளுக்குத் தொழில்.

'மல்லிகை மாலை' என்ற படம் அவளுடைய காதல் நடிப்பின் சிகரம். கவிஞன் ஒருவனைக் காதலிக்கும் நாட்டியக் கணிகையாக அவள் வந்து அவனை அடைய முடியாத நிராசையுடன் தவிப்பதாக வளர்கிற கதை அது. அதில் அவள்தான் கதாநாயகி. படத்தில் அவளுடைய கவர்ச்சிகரமான நடனங்களும் இருந்தன. இதுவரை எந்தப் படத்திலும் காண்பிக்காத அத்தனை அதிகமான நடிப்புச் சாமர்த்தியத்தை அவள் இந்தப் படத்தில் காண்பித்திருந்தாள். இந்தப் படத்தின் நடுவே ஒரு காட்சியில் தன் காதலனாகிய கவிஞனின் படத்துக்கு யாருமறியாமல் திருட்டுத்தனமாக அவள் ரோஜாப் பூ மாலை தொடுத்துப் போடுவதாகவும் அப்போது ஒரு பாட்டுப் பாடுவதாகவும் வருகிறது.

'ராஜாவே! உனக்கு நானோர் ரோஜாப் பூ. எனக்கு நீயே பூஜைக்குரியவன்..... உன் மனத்துள் நானோர் ரோஜாப் பூ' என்று கேட்பவர்களை வசீகரித்து மயங்க வைக்கும்படியான ட்யூனில் இனிமையானதொரு பாட்டு அந்தக் காட்சியில் வருகிறது. அதை அவளுக்காக ஒரு பிரபல பின்னணிப் பாடகி மிக நன்றாகப் பாடியிருந்தாள். கதை, நடிப்பு, பாட்டு எல்லாவற்றிலும் சிறந்து பெயர் பெற்றுப் பணம் குவித்த அந்தப்படத்தின் மூந்நூறாவது நாள் விழாவன்று முதல் காட்சியில் அவள் தியேட்டரின் மேடையில் தோன்ற வேண்டுமென்று ஏற்பாடாகியிருந்தது. அதற்கு முன்தினம் தற்செயலாக ஏதோ பேசிக் கொண்டிருந்தபோது,

"என் சம்சாரம் இந்தப் படத்தைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டுச்சம்மா! அதுக்கு இதுவரை பார்க்க ஒழியலே. முடிஞ்சா ரெண்டு பாஸ் வாங்கிக் கொடுங்கம்மா!" என்று டிரைவர் முனிசாமி அலங்காரியிடம் கூறியிருந்தான்.

"பாஸ் எதுக்கு முனுசாமி? நாளைக்கு அந்தப் படம் மூந்நூறாவது நாளிலே நான் தியேட்டரில் மேடைமீது தோன்றுவதற்குப் போகணும். உன் சம்சாரத்தையும் இங்கே அழைச்சிட்டு வந்துடு. நம்ம கூடவே வந்து படம் பார்க்கட்டும்" என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்லியிருந்தாள் அலங்காரி. முனுசாமியோ அவன் மனைவியோ வேலைக்காரர்களாக அவளுக்குத் தோன்றியதேயில்லை. அவர்களிடமும் அவள் சகஜமாகப் பழகுவாள். முனிசாமியின் மேல் அவளுக்கு அளவற்ற நம்பிக்கை. பல சமயங்களில் அவனை வீட்டு மனுஷனாக அக்கறையுள்ள உறவினனை நடத்துவது போல் நடத்தியிருக்கிறாள் அவள்.

"மூந்நூறாவது நாள் விழான்னுக் கூட்டம் தடபுடல் படுமே அம்மா? அந்தக் கூட்டத்துலே வவுறும் புள்ளையுமா அதே இழுத்தடிக்க வாணும்னு பார்த்தேன்..." என்று அவன் தயங்கியபோது "அதெல்லாம் முடியாது. நம்மோடத்தான் வரணும்! வயிறும் பிள்ளையுமா இருக்கிறதுனாலேதான் சொல்றேன். நாம போறப்போ நம்மோட காரிலே வர்ரதே நல்லது..." என்று செல்லமாகவும் உரிமையாகவும் அவனை வற்புறுத்திச் சம்மதிக்கச் செய்துவிட்டாள் அவள். அந்த 'மல்லிகை மாலை' படத்தில் வேறு பலரும் நடித்திருந்தாலும் வேறு பலருடைய சாமர்த்தியங்களும் அதில் இணைந்திருந்தாலும் அதன் வெற்றிக்கு அவளே காரணம். 'ராஜாவே! நானோர் ரோஜாப்பூ' என்று காதலனின் படத்தை வைத்துக் கொண்டு நடனமாடிப் பாடும்போது ஓர் இளம் பெண் தனிமையில் செய்கிற காதல் சேஷ்டைகளைப் பார்வையிலும் அசைப்பிலும் நடையிலும் செய்கையிலுமாகத் தத்ரூபம் கனியப் பண்ணியிருந்தாள் அவள். அந்தப் படத்தில் அவள் நடித்த நடிப்பின் சிறப்பைக் கொண்டு மட்டுமே, 'ஷீ வாக்ஸ் இன் ப்யூட்டி' என்று அதற்குத் தலைப்புப் போட்டுப் பத்திரிகைக்காரர்கள் அதைப் புகழ்ந்து எழுதியிருந்தார்கள். அந்தப் புகழுக்கும் பெருமைக்கும் படத்தின் வெற்றிக்கும் வருவாய்க்கும் தானே காரணம் என்பதால் அவள் அந்த மூந்நூறாவது நாள் விழாவன்று திருவிழாக் கொண்டாடத் தயாராகிவிட்ட தேவதையாக இருந்தாள். அந்தக் கொண்டாட்டத்தின்போது தன் குடும்பத்தோடு கலந்து இணைந்து தனக்கு மிகவும் வேண்டியவர்களாகிவிட்ட டிரைவர் முனிசாமியும், அவனது வயிற்றுப் பிள்ளைக்காரியான மனைவியும் உடனிருந்து படத்தைக் காணப் போகிறார்களே என்பதில் இன்னும் அதிகமான கர்வத்தை அடைந்திருந்தாள் அவள். முனிசாமியின் மனைவியும் அவனும் தியேட்டருக்குத் தன்னோடு கூட வரப் போகிறார்களே என்பதற்காகத் தனியாகக் கர்வப்பட ஒன்றுமில்லையானாலும் ஏதோ ஒரு நுணுக்கமான அந்தரங்கம் அவளைக் கர்வப்பட வைத்திருந்தது. அவன் மனைவியைத் தாங்கள் திரைப்படக் கொட்டகைக்குப் போகும்போது தங்களோடு காரிலேயே அழைத்துச் செல்லத் தீர்மானித்திருந்தாள் அவள். தானே நடித்து வெற்றி பெற்ற அந்தப் படத்தை — ஒரு பட்டிக்காட்டுப் பெண் — தன்னுடன் அருகிருந்து கண்டு இரசிக்கும்போது அவளுடைய முகத்தில் என்னென்ன சாயல்கள் ஏற்படுகின்றன? — படத்தைப் பார்த்து அவள் எப்படி எப்படி வியக்கிறாள்? — என்பதை எல்லாம் அவளிடமிருந்து பாமரையின் கௌரவமான வாய்ப்

பேசக வடிவம் வருமுன்னே தானாகவே தன் கண்களால் அவனைக் கண்டு மகிழ எண்ணியிருந்தாள் அலங்காரி.

“ஏய் முனிசாமி! பிள்ளைத்தாய்ச்சின்னு வேறே சொல்றே! படம் முடிஞ்சதும் நேரே காரிலே நம்மோடவே பங்களாவுக்குத் திரும்பி அங்கேயே ஒரு வாய் சாப்பிட்டுவிட்டுப் போகட்டும்” என்றும் முன்னேயே அவனிடம் சொல்லி வைத்திருந்தாள் அவள்.

பொன் நிறத்தில் கையகலத்துக்குச் சரிகைக் கரையிட்ட ஒரு வெண் பட்டுப் புடவை அணிந்து, 'வி' கழுத்து சோளியுடன், அஜந்தா ஸ்டைலில் ஒரு கொண்டையும் போட்டுக் கொண்டு அதன் மேல் நாஜுக்காக ஒரு சுற்று அரும்பினாற்போல் மலர்ந்தும், மலராமலும் இருந்த மல்லிகைச் சரத்தையும் சுற்றிக் கொண்டு, உடம்பில் மணக்க மணக்க 'லிபோலி' என்ற பெயருடைய ஜெர்மன் 'செண்ட்'டையும் ஸ்பிரே செய்து கொண்ட பின், கையில் எடுத்து மடிப்பைப் பிரித்தவுடன் கமகமக்கக் கூடிய 'பிர்மெனிச்' என்கிற ஜெனிவா செண்டையும் கர்ச்சிப்பின் உள் மடிப்பில் நாலு சொட்டுக் கொட்டி மடித்துக்கொண்டு பாதத்தின் தந்த நிறத்தை எடுத்துக் காட்டுகிறாற்போல் கறுப்பு நிறத்தில் சரிகை இழையோடிய பாதரட்சைகளையும், அணிந்து கொண்டபின் வசீகரமானதோர் அழகுத் தேவதையாக அந்த முந்நூறாவது நாள் விழாவுக்குப் புறப்பட்டிருந்தாள் அவள். டிரைவர் முனிசாமியின் மனைவி காரின் முன் ஸீட்டில் அவளருகே உட்கார்ந்து கொண்டு வந்தாள். அலங்காரியின் சரீரத்திலிருந்து மனத்தைக் கிறங்க அடிக்கக் கூடிய வாசனைகள் பரவிக் காருக்குள் கமகமத்துக் கொண்டிருந்தன. அருகிலிருக்கிறவர் தான் புகழ்வதற்கும் வியப்பதற்கும் அப்பாற்பட்ட நிலைமைக்கு உயரத்திலிருப்பவராயிற்றே அதனால் தான் அவரைப் புகழலாமோ கூடாதோ என்று நாணத்தோடு கூசித் தயங்கிப் பயந்து, அந்தப் பயத்தினாலும் கூச்சத்தினாலுமே தான் அந்த உயரத்துக்குத் தலை வணங்கி அடிமையாகி விட்டதை மௌனமான ஊமைத்தனத்தோடு அந்த வியப்பையே பாஷையாக்கிப் பேசிவிட்டு மனத்தை மறைக்கத் தெரியாத பச்சைத்தனத்துடன் மலைத்திருக்கிற அப்பாவியை அதற்குக் காரணமான செல்வாக்குக்காரன் தன் உயரத்தில் ஏறி நின்று கொண்டு பார்த்து இரசிப்பதில் எத்தனை சுகமிருக்கும் தெரியுமா? அந்தச் சுகத்தை அநுபவிக்க ஆசைப்பட்டுத்தான். அவள் முனிசாமியின் மனைவியை அருகேயமர்த்திக் கொண்டு படம் பார்க்கத் துணிந்திருந்தாள். நேரான வாழ்க்கை இன்பங்கள் சலிக்கச் சலிக்க வேறுவிதமான வக்கிர நிலைகளில் மோகம் சாயும் — 'செக்ஸ்' பர்வர்ஷன்ஸ் போல நேரான புகழ் எப்படி எப்படியெல்லாம் வந்து சேர முடியுமோ அப்படி அப்படியெல்லாம் வந்து அதை ஒன்று விடாமல் அடைந்து அநுபவித்துச் சலித்த பின் வக்கிரமான நிலைகளில் புகழைத் தேடி அடைகிற 'பர்வர்ஷன்' அவளுக்கு வந்திருந்தது. அது ஒரு நுணுக்கமான விஷயம். அதை இதற்கு மேல் இங்கே விளக்கிச் சொல்லிக் கொண்டிருப்பதனாலேயே அதன் 'சுவாரஸ்யம் கெட்டுப் போகலாம். திரைப் படத்தின் இடைவேளை நேரத்தின் போதுதான் அவள் அந்த முந்நூறாவது நாள் விழாவில் மேடையில் தோன்றி இரசிகர்கள் முன்னிலையிலே சில வார்த்தைகள் பேச வேண்டுமென்று படத் தயாரிப்பாளர் ஏற்பாடு செய்திருந்தார். அவளோ முனிசாமியின் மனைவிக்குத் தானே அருகிலிருந்து தன்னுடைய நடிப்பின் சிகரமாகிய அந்தப் படத்தைக் காண்பிக்க வேண்டுமென்று, காட்சி ஆரம்பிக்கிறபோதே அங்கு வந்திருந்தாள். தியேட்டருக்குள்ளே நுழைவதற்குள் இரசிகர்கள் கூட்டம் வெள்ளமாகச் சூழ்ந்து கொண்டு மொய்த்து விடாமல் இருப்பதற்காகப் படம் ஆரம்பித்து நியூஸ் ரீல் போட்டுத் தியேட்டர் வாசலில் கூட்டமின்றி வெறிச்சோடிப் போன பிறகே அவள் அங்கு சென்றிருந்தாள். அப்படி யிருந்தும் அவள் வரப் போகிறாள் என்ற முன் தகவல் தெரியுமாதலால் தியேட்டர் நிர்வாகிகள், பட முதலாளி, டைரக்டர் ஆகியோர் வாசலில் அவளை வரவேற்கக் காத்திருந்தார்கள். தியேட்டர் நிர்வாகி அவளுக்குப் போடுவதற்காக வாங்கி வைத்திருந்த மாலையை முனிசாமியின் மனைவி கையில் கொடுத்துத்தான் அவளுக்குப் போடச் சொன்னார். அப்புறம் முனிசாமியின் மனைவியை உடனழைத்துக்கொண்டு பால்கனியில், சௌகர்யமாக ரிசர்வ் செய்யப்பட்டிருந்த ஸீட்டுக்கு அவள் போனாள். முனிசாமி பல முறை அந்தப் படத்தைப் பார்த்திருந்ததனால் இடைவேளையின்போது 'அம்மா' மேடையில் தோன்றுகிற நேரத்துக்கு மட்டும் உள்ளே போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியவனாக ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு காரிலேயே உட்கார்ந்து கொண்டான். 'அம்மா'வுக்கு முன்னால், அவன் ஸிகரெட் பிடிப்பதில்லை. டைரக்டர்களில் பலரும், நடிகர்களில் சிலரும், 'அம்மா'வுக்குப் பக்கத்தில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு 'ஸிகரெட்' பிடிப்பார்கள். சில குறிப்பிட்ட பட முதலாளிகள் டைரக்டர்கள், நடிகர்களுக்குத் தீப்பெட்டியை எடுத்துக் குச்சியை உரசி அம்மாவே 'ஸிகரெட்' பற்ற வைத்து விடுகிற காட்சியையும் அவன் கண்டிருக்கிறான். அவர்கள் நிலை வேறு. அவன் நிலை வேறு. ஆனாலும் அவன் இதைப் பற்றியெல்லாம் பலமுறை தனக்குள் பச்சை பச்சையாகச் சிந்தித்திருக்கிறான். அம்மாவிடம் அவனுக்குப் பயமும் வியப்பும் உண்டு. ஒரு பெண்பிள்ளை. அதுவும் தனியாக ஒரு பெண்பிள்ளை இப்படி இலட்சக்கணக்கான இரசிகர்களை மயக்கிக் கோடிக்கணக்கில் பணம் குவித்து விட்டாளே என்ற மலைப்பின் அடியாகப் பிறந்த பயம்தான் அது. பயத்தைத் தவிர ஒரு நியாயமான ஊழியனுக்குத் தன்னை வைத்துக் காப்பாற்றுகிற எஜமானியிடம் இருக்க வேண்டிய விசுவாசம் எந்த அளவோ அந்த அளவுக்குச் சிறிதும் குறையாத விசுவாசமும் அவனிடம் அவளுக்கு உண்டு. மதிப்பு மட்டும் ஏனோ ஏற்படவே இல்லை. அவளுடைய புகழ் மின்னல் மின்னலாக வெட்டு

“ப்ரின்ஸ் பிளேடு
சிறகைப்
போன்ற
மென்மை தரும்
பிளேடு”



கரடுமுரடான தாடியுடைய ஒருவர் - சொல்வதைக் கேளுங்கள்-'ப்ரின்ஸ்' பிளேடினால் க்ஷவரம் செய்து கொள்வது ஒரு சிறகை உபயோகிப்பது போன்றதாகும்! அவ்வளவு மழமழப்பானது...அவ்வளவு சுத்தமானது... அவ்வளவு இதமானது...உங்கள் ரேஸர் மயிர்க்கால்களினூடே சென்று, அந்தப் பரவசமான ஆய்மையின் உணர்வை உங்களுக்குத் தருகிறது— ப்ரின்ஸ் பிளேடின் விசேஷ ப்ளூரோ கார்பன் ஓரம் தான் இதற்குக் காரணம்.

மேலும், ப்ரின்ஸ் பிளேடுகளும் அதிகமான க்ஷவரங்கள் செய்து கொள்ளலாம். இந்த, மேலும் மேலும் அதிகமான மனிதர்கள் ப்ரின்ஸ் பிளேடை உபயோகிக்கின்றனர்...நீங்கள் இதுவரை பார்த்துக்கொள்ளவில்லையானால், உடனே ப்ரின்ஸ் பிளேடு உபயோகிக்க ஆரம்பியுங்கள்.



ப்ரின்ஸ் பிளேடு



ப்ளூரோ கார்பன் ஓரம் கொண்டது

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: முல்லர் & பிப்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

கிற ஒவ்வொரு பிரகாசத்திலும் அவளை மதித்தாக வேண்டும் போல் இருக்கிறதே என்று ஒரு கணம் மருண்டு சலனமடைந்து அடுத்த கணமே இந்தப் புகழை உருவாக்கிக் கொண்டு வளர அவள் எந்தெந்த நிலையில் எப்படி எப்படி இருந்திருக்கிறாள் என்பதையெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டு அந்தச் சலனம் தணிந்து மருட்சி நீங்கி எப்போதும் போலச் சாதாரணமாக நினைக்கப் பழகிக் கொள்வது அவன் வழக்கமாகி யிருக்கிறது. அன்று படத்தின் இடைவேளையில் அவன் தியேட்டருக்குள் போனபோது—'அம்மா' மேடையில் தோன்றி மழலை மாறாத தெலுங்குத் தமிழில் நாலு வாக்கியம் பேசியதையும் அதற்குள் இரசிக சிகாமணிகள் விசிலடித்து ஆரவாரம் செய்ததையும் அவன் கண்டான்.

ஓர் இரசிகன் தியேட்டரின் — அத்தனை பெரிய அமைதியினூடே—தான் யார்—எங்கே உட்கார்ந்திருக்கிறோம் என்று பிறர் கண்டு பிடிக்க முடியாத பகிரங்கமான மறைவில் தன்னை மறைத்துக் கொண்டு உதடுகளைக் குவித்து 'இச்' என்ற சப்தத்தைப் பலமாக எழுப்பி அடுத்த விநாடி அங்கிருந்த எல்லாரையும் கொல்லென்று சிரிக்க வைத்தான். இன்னொரு இரசிகன் 'ராஜாவே! நானோர் ரோஜாப் பூ' என்று கீச்சுக் குரலில் படத்தில் அவள் பாடுவதாக வருவது போல் பாட முயன்று தியேட்டரில் உடனடியான கேலிச் சிரிப்பலைகளை எழுப்பினான். திரையில் தோன்றி நடித்தவளே நேரில் தோன்றினால் இரசிகர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று நேரில் கண்ட போது அந்த நட்சத்திரத்திடம் ஊழியனாக வேலை பார்க்கிற அவனுக்கே உடம்பு கூசியது. என்ன காரணத்தினாலோ அன்று அந்தப் படத்துக்குத் தன் மனைவியோடு வந்து அவளை அலங்காரியோடு சேர்ந்து உட்கார அனுப்பியது தவறாகவும் குறைவாகவும் தோன்றியது அவனுக்கு. தன் மனைவியின் கௌரவம் அகில உலகப் புகழ் பெற்ற அந்த நட்சத்திரத்தோடு சரிசமானமாக உட்கார்ந்து அவள் நடித்த படத்தையே அவளருகிலிருந்து பார்ப்பதால் மதிப்பு மிகுந்து கூடுவதாக நினைக்கத் தோன்ற வில்லை அவனுக்கு. எக்கச் சக்கமாக ஏதோ அசிங்கமான காரியத்தைப் பண்ணி விட்டதாகத் தான் தனக்குள் அவன் நினைத்தான். படம் முடிந்து காரைத் தியேட்டர் வாசலில் ஓட்டினாற் போலக் கொண்டு வந்து நிறுத்திய போது அலங்காரியும் அவன் மனைவியும் சேர்ந்தாற்போல நடந்து வந்தாலும் பாட்டுப் பாடியும், சீட்டியடித்தும், கண்ணைச் சாய்த்துப் பார்த்தும் அலங்காரியை வளைக்க முயலும் இரசிகர் கூட்டத்தினிடையே தன் மனைவியும் கூட நடந்து வருவதைப் பார்த்து அவனுக்கு என்னவோபோல் இருந்தது. குஷ்டரோகக்காரன் மேல் தெரியாத்தனமாகக் கைபட்டுவிட்ட அருவருப்பை உணர்ந்தான் அவன். வழக்கம் போல எஜமானியம்மாளுக்குக் காரின் பின் ஸீட் கதவைத் திறந்து விடுகிற கடமையை அன்று மறந்தவனாக முன் ஸீட் கதவைத் திறந்து தன் மனைவியை முதலில் காருக்குள் ஏறச் சொல்லிச் சிடுசிடுத்தான் அவன். அப்புறம்தான் பின் ஸீட் கதவைத் திறந்து இரசிகர் கூட்டத்தின் 'ஆட்டோகிராப்' வேட்டையில் சிக்கி மீண்டு வந்து கொண்டிருந்த அலங்காரியை ஏற்றிக் கொண்டான். அதற்கு அப்புறமும் காரைச் சுற்றி இரசிகர்களின் ரசாபாசங்கள் ஓயவில்லை. ஒருத்தன் 'ராஜாவே நானோர் ரோஜாப் பூ' என்று பாட்டுப் பாடி அந்தப் பாட்டின் போது அவள் ஆடியிருப்பது போல் நாட்டியமாடிக் கொண்டே காரை வழி மறித்தான். இன்னொருத்தன் வேறு ஏதோ அசிங்கமாகச் சொல்லிச் சிரித்தான்! வேறொரு துணிச்சலான இரசிகன் தன் கையில் இருந்த மல்லிகைப் பூ மாலையைக் காருக்குள் அலங்காரியின் மேல் விழும்படி வீசினான். அதே பாணியைப் பின்பற்றி இன்னொருத்தன் கைக் குட்டையை வீசி எறியப் போய் அது முன் ஸீட்டில் பதற்றத்தோடும் பயத்தோடும் அமர்ந்திருந்த முனிசாமியின் மனைவியினது மடியில் வந்து விழுந்தது. அதை எடுப்பதற்காக அந்தக் கைக்குட்டைக்கு உரியவன் முனிசாமியின் மனைவியைத் தொடாத குறையாகக் காருக்குள் கையை விட்ட போது பின்ஸீட்டில் மாலையை எறிந்து எஜமானியம்மாளை இரசிகர்கள் அவமானப்படுத்திய போதெல்லாம் பொறுமையாக இருந்துவிட்ட அதே டிரைவர் முனிசாமி, 'டேய், கம்னாட்டி! தோலை உரிச்சுப்பிடுவேன்' என்று இப்போது ஒரு கூச்சல் போட்டானே பார்க்கலாம்! பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்த அலங்காரியே அந்தக் கூப்பாட்டைக் கேட்டு நிலை கலங்கிப் போய் விட்டாள். அடுத்த விநாடியே டிரைவர் முனிசாமி தன் மனைவியோடு காரிலிருந்து கீழே இறங்கி, ''மன்னிச்சுடுங்கம்மா! இதோ ஒரு அஞ்சு நிமிஷத்திலே நான் வந்திடறேன்'' என்று பின் ஸீட்டில் அமர்ந்திருந்த எஜமானியம்மாள் பக்கம் திரும்பிப் பார்க்காமலே சொல்லி விட்டுக் கூட்டத்தை வழி விலக்கிக் கொண்டு எங்கோ போனான். அப்படிப் போன போது அலங்காரி ஒரு பெரிய ஆச்சரியத்தைப் பார்த்தாள். தனக்கு வழி விடாமல் மேலே விழுந்து மோதிக் கண்ணைச் சாய்த்துக் காதல் பாட்டுப் பாடி மாலையை வீசிக் கைக்குட்டையை அசைத்து வம்பு செய்த அதே கூட்டம் ஊர் பேர் தெரியாத அந்தப் பட்டிக்காட்டுக் கர்ப்பிணி வெளியே போவதற்கு மரியாதையோடும், பயத்தோடும் விலகி வழி விடுவதைக் கண்டு அவளும் தானும் எந்த இடத்தில் எந்தக் காரணத்தால் கௌரவத்தை அடைவதில் வித்தியாசப்படுகிறோம் என்று புரிந்து கொள்ள முயன்று ஒன்றும் புரியாமல் மனம் குழம்பிப் பெருமூச்சு விட்டாள்.

டிரைவர் முனிசாமியின் மனைவிகூட நல்ல அழகிதான்! பருவமும் குறுகுறுப்பான இளமைதான். அவளைப் பார்த்துக் காதல் பாட்டுப் பாடவோ, கண்ணசைக்கவோ இத்தனை ஆயிரம் ஜனங்கள் பயந்து நடுங்கி மரியாதையாக வழி விலகுகிறார்களே! இந்த இடத்தில்தான் ஒரு பெண் என்ற முறையில் நான் அடைகிற கௌரவமும், அவள் அடைய முடிந்த கௌரவமும் வித்தியாசப்படுகிறதென்று புரிந்து கொண்டு — ஏங்கினாள் அவள். அவள் ஏங்கிய ஏக்கத்தை மேலும்

வளர்ப்பது போல் காருக்குள் கையை விட்டுக் காதல் பாட்டுப் பாடித் தோளைத் தொட முயன்று மேலும் மேலும் அவள் அங்கு காத்திருக்க நேர்ந்த ஒவ்வொரு விநாடியும் அட்டூழியம் செய்தது அந்த இரசிகர் கூட்டம். பத்து நிமிஷம் கழித்து முனிசாமி திரும்பி வந்தபோது தனியே அவன் மட்டும்தான் வந்தான். கூட்டத்தில் முண்டியடித்துத் திரும்பி வந்ததில் அவனுடைய சட்டை கிழிந்து தலைமயிர் கலைந்து கோரமாயிருந்தது. உள்ளே ஏறிக் கதவை அடைத்துக் கொண்டு காரை ஸ்டார்ட் செய்து அவன் கைகள் ஸ்டியரிங்கை வளைத்த போது, ''உன் சம்சாரத்தை எங்கே போகச் சொன்னே? வீட்டுக்கு வந்து சாப்பிடலாம்னு சொல்லி இருந்தேனே ?'' என்று அவள் சற்றுக் கோபத்துடனேயே கேட்டாள்.

''டாக்ஸி பிடிச்சு ஏத்தி வீட்டுக்கு அனுப்பிச்சுட்டேம்மா.... சாப்பாடு இன்னிக்கி வேணும். இன்னொரு நாளு அதைச் சாப்பிடக்கூட்டியாறேம்மா !'' என்று மனம் நினைப்பதை மறைக்கும் கௌரவமான பாவனையில் அவளுக்கு மறுமொழி கூறினன் அவன். இந்தப் பதிலைக் கேட்டதும் அலங்காரிக்கு அவனை அப்போதே வேலையை விட்டு நிறுத்தி விட வேண்டும் போல அவ்வளவு கோபம் வந்தது. பற்களைக் கடித்தாள் அவள்.


''ஏண்டா, ராஸ்கல்! நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன். என்னை அநாதையாக அத்தனையாயிரம் கோமாளி ரசிகர்களின் கூட்டத்தினிடையே நிராதரவாகக் காரில் இருக்கும்படி செய்து கேலிக் கூத்துக்கு ஆளாக்கி விட்டுப் பத்திரமாக உன் மனைவியின் கௌரவத்தைக் காப்பாற்றி அவளை வீட்டுக்கு அனுப்ப டாக்ஸி தேடிக் கொண்டு போய் விட்டாயே நீ? எத்தனை பெரிய நன்றிகெட்ட வஞ்சகன் நீ? என் கௌரவத்தைவிட உன் பட்டிக்காட்டு மனைவியின் கௌரவம் உனக்குப் பெரிதாகப் போய் விட்டதோ?'' என்று மிக மிகக்கடுமையாக அவனைக் கேட்க நினைத்து அந்த நினைப்பின் பச்சைத் தனத்தைப் பாவனையில் மறைத்துக்கொண்டு ''சீக்கிரம் வீட்டுக்குப் போ! எனக்கு உடம்பே சரியில்லே. தலையை வலிக்கிறது'' என்று வேறெதையோ ஒப்புக்குப் போலியாகச் சொல்லி வைத்தாள்.



இலட்சோப இலட்சம் இரசிகர்களின் மனத்தில் ஆசை நாயகியாக — வரிக்கப்படாத ஆசை நாயகியாக இருந்து அவள் அடைந்திருக்கிற புகழ் வேறு — ஒரே ஒரு மீசை முளைத்த ஆண் பிள்ளைக்கு மனைவியாக இருந்து ஓர் இந்துக் குடும்பத்துப் பெண் அடைகிற கௌரவம் வேறு. தன்னுடைய புகழும் அவளுடைய கௌரவமும் ஏதோ ஓர் எல்லையில் வித்தியாசப்படுவதைப் புரிந்துகொண்டபோது ரொம்ப நாள் புரியாமல் இருந்த ஒரு பெரிய உண்மை புரிந்தது போல் அவள் அன்றிரவு கண் கலங்கி அழுதாள். அப்படி அழுது கொண்டே இன்னொருவருடைய ஆதிக்கமோ ஆணையோ இல்லாமல் ஒரு நாள் — ஓரே ஒரு நாளாவது வாழ்ந்துவிட்டு அப்புறம் சாகவேண்டும் என்று வழக்கமாக வருகிற தவிப்பை அந்த விநாடியிலும் அவள் உணர்ந்தாள். கண்களைச்சுழற்றி உடம்பைக் கவர்ச்சிகரமாகக் காண்பித்து, ஏதோ ஒரு புது மாதிரியான விதத்தில் புது மாதிரியான சௌகரியங்களோடு இன்னும் இந்த உலகில் தான் பிச்சை எடுத்துக்கொண்டிருப்பதாகவே தோன்றித் தன்னைத் தானே அருவருப்போடு பார்த்துக் 'கொண்டாள் அவள். வாழ்க்கையின் அசல் கௌரவத்தை வருகிற வழியில் எந்த இடத்தில் தான் தவற விட்டிருக்கிறோம் என்பது இப்போது அவளுக்கே தெளிவாகப் புரிந்தது. இந்த விநாடியில் அவளுடைய வசதிகள் எல்லாம் பெரிதாக விசுவரூபமெடுத்துப் பூதாகாரமாகத் தோன்றி அவளையே பயமுறுத்துகின்றன. மூச்சு இரைக்க இரைக்க மேலே ஏறிவந்த அத்தனை உயரத்திலிருந்தும் உடனே கீழே தலைகுப்புற விழுந்துவிட்டது போல் தோன்றுகிறது அவளுக்கு. தன்னுடைய பெருமைகளை நிறுப்பதற்குத் தன் சிறுமைகளையே எடைக் கற்களாக வைக்கவும் இப்போது அவளுக்குப் பொறுமை இல்லை. அழகு, புகழ், பணம் செல்வாக்கு இவை எல்லாவற்றுக்கும் அப்பால் வாழ்வில் தான் இழந்து மீதம் விட்டிருப்பது எது என்று இன்று அவளுக்குப் புரிந்து விட்டது. 'சென்றதினி மீளாது. இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்று கவிஞர் பாடியிருக்கிறார். 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்று எண்ணிக்கொண்டு நாளையே இதையெல்லாம் மறந்துவிட்டு அவள் வாழத் தொடங்கலாம். ஆனால் அதுவும் இனி முடியாது! அவள் இழந்தது எதுவோ அது மீளாத கௌரவம். 'இன்று புதிதாய்ப் பிறந்த'தாக நினைக்கும் போதே 'நேற்று இழந்தது இனி மீளாது' என்பதும் சேர்ந்து ஞாபகம் வரத்தானே செய்யும் ?' ஆனாலும் பரவாயில்லை. இதற்காக எல்லாம் பயந்து தற்கொலை செய்து கொள்ள அவள் வாழ்வில் அத்தனை பெரிய கோழையுமில்லை. கடந்த காலத்தை ஒரு கெட்ட ஞாபகமாகவும் எதிர்காலத்தை ஓர் அடைய முடியாத லட்சியமாகவும் வைத்துக் கொண்டு அவளும்கூட நிச்சயமாக இந்த உலகத்தில் வாழ முடியும். ஆம்! அவளும்கூடத்தான் !

வேற்றுமை

நான் தங்கியிருந்த சர்வதேச இல்லத்தின் ஐந்தாவது மாடியிலிருந்து பார்த்தபோது பெஜுர்த் என்ற பெயர் கொண்ட அந்தச் சிற்றூர் வெரே எழில் மயமாகக் காட்சியளித்தது. எதிரே 'கோல்ப்' விளையாடவென்று உருவான பசுமையான மைதானம். அதிகாலை நேரமானதால் அதில் படிந்திருந்த பனித் துளிகளைப் பாழடிக்கும் மனித நடமாட்டம் இன்னும் உருவாகவில்லை. ஸீகல் எனப்படும் கடற் புறாக்கள் மட்டும் மரகதப் பச்சைக் கம்பளத்தின் சுகத்தினை அனுபவித்துக் கொண்டு இங்கு மங்குமாய்த் தத்தியும் பறந்தும் திரிந்தன. வலதுபுறம் மேட்டுப் பாங்கான பூமியில் வரிசை வரிசையாக அமைந்தவையும் படிப் படியாக உயர்ந்து நிற்பவையுமான வீடுகள். வெகு தூரத்தில் வெண்மையான புகையைக் கக்கி வெளிப்படுத்தும் தொழிற்சாலைப் புகைபோக்கி. இடதுபுறமோ இளங்காலைச் சூரிய ஒளியில் தங்க மயமாகத் தகதகக்கும் கடல்; அதன் அருகிலே அமைந்திருந்த நடைபாதை.



கடலின் சிற்றலைக் கரங்கள் 'வா வா' என்று என்னை அழைப்பதுபோல் தோன்றியது. அறையில் அடைந்து கிடக்கும் என்னைப் பரிகசித்துக் கடற்கன்னி சிரிப்பது போல் ஒளி சிதறியது.

ஐந்தாவது மாடியில் இருந்த நான் படிகளில் விரைந்து இறங்கி அரை நிமிஷத்தில் தரை மட்டத்துக்கு வந்து சேர்ந்தேன். கடற்கரை நோக்கி ஒருநடை போட்டேன்.

ஆங்காங்கே காலாற அமர்ந்து பேசவென்று சில அகலமான மர ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. எதிரே ஒரு 'பெஞ்ச்'சில் ஆணும் பெண்ணுமாய் இருவர் நெருங்கி அமர்ந்து இனிய ரகசியங்களை ஒருவருக்கொருவர் ஓதிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு கணம் துணுக்குற்று நின்றேன்.

பிரிட்டனில் ஆணும் பெண்ணும் வெளிப்படையாகப் பலர் முன்னிலையிலும் இழைவது என்பது ஓர் அதிசயக் காட்சியல்ல. இவர்களுடைய முதுகுப் புறத்தைத்தான் என்னால் பார்க்க முடிந்தது.

எனினும் சந்தேகமேயில்லை!

என் மூச்சைச் சில விநாடிகள் உள்ளுக்குள்ளேயே நிறுத்திவைத்த விஷயம் அவர்களில் பெண் வெண்மை நிறத்தவள் என்பதும் ஆண் கருமையானவன் என்பதும்தான்.

அடுத்த கணமே என்னை நானே சுதாரித்துக் கொண்டு மேலே நடந்தேன். "எவ்வளவு கீழ்த்தரமான நினைப்பு? 'இனவேற்றுமை நிற வேற்றுமை யெல்லாம் ஒழிய வேண்டும்; எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இவ்வுலக மக்கள் என்ற லட்சிய நிலைமையை எட்டிப் பிடிக்க வேண்டும்' என்று வாய் கிழிய வாதாடுவதோடு சரிதானா? கருமையையும் வெண்மையையும் அருகருகே பார்க்கும் போது திகைப்பானேன்? 'மனத்தால் நீ இன்னும் உயர வேண்டும், அப்பனே!' என்று என்னை நானே நொந்துகொண்டு வெட்கித் தலைகுனிந்தபடியே சென்றேன்.

"ஹலோ! ராஜேந்திரா !"

அழைத்தவன் ஆப்பிரிக்காவில் உள்ள நைஜீரியாவிலிருந்து வந்தவன். பெயர் மஜோமி. என்னுடனேயே சர்வதேசவிடுதியில் ஐந்தாவது மாடியில் தங்கியிருப்பவன்தான்.

ஆரம்பத்தில் ஏற்பட்ட திகைப்பினாலும் அந்த இருவரையும் பின்புறத்திலிருந்துதான் பார்த்திருந்தேனென்பதாலும் பின்னர் சற்று நேரம் சிந்தனையில் ஈடுபட்டிருந்து விட்டதனா

ஜெயந்தி



ஹூம் அவளை உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளத் தவறி விட்டிருந்தேன் தான்.

மஹோமி இப்போது என்னை அழைத்ததும் ஒரு குட்மார்னிங் சொல்லிவிட்டு அவர்களை நெருங்கினேன்.

''என் சிநேகிதி லோமியாவை நீ சந்தித்ததில்லையே?'' என்று கூறி அவளை அறிமுகப் படுத்தினான் மஹோமி.

''சிநேகிதி மட்டும்தானா?'' என்று குறும்புத்தனமாய்க் கேட்டுப் புன்முறுவல் செய்தாள் அவள்.

''இல்லை, அதைவிட நெருக்கமானவள்தான். 'மை ஸ்வீட் ஹார்ட்' !''

''எப்போதும் மப்பும் மந்தாரமுமாய் அழுது வடிந்துகொண்டிருக்கும் 'பிரிட்டிஷ் வானம்' இன்று இத்தனை பிரகாசமாய் ஒளிர்ந்து மகிழ்வதன் காரணம் புரிகிறது'' என்றேன் அவளுடைய நீல விழிகளை நோக்கியபடியே. அழகுற மைதீட்டப்பெற்று வளைப்பு மிகுந்து தோன்றிய அவள் புருவங்கள் வளைந்து உயர்ந்தன. ரொம்பக் குள்ளமானவள் அவள். ஐந்தடிக்கும் குறைவுதான். அவளிடம் பொருந்தியிருந்த மற்ற இலட்சணங்கள் இந்தக் குறை தெரியாத வண்ணம்

நிறைவு பெற்று விளங்கின: முகத்தை உயர்த்தி என்னை அவள் அண்ணாந்து நோக்கிய போது, பளிங்கினாலான கழுத்துக்குப் பஞ்சின் மென்மை கூட்டியது போலிருந்தது. சிவந்த அதரங்கள் பிரிந்து குவிந்து. ''என்ன காரணமோ?'' என வினவின.

''நீ வீட்டை விட்டு வெளியே கிளம்பி விட்டாய். சூரியனுக்கு உன்னைப் பார்த்துக் கொண்டே யிருக்கவேண்டும் என்ற ஆசை. யாருக்குத்தான் இராது இந்த ஆசை ?''

செர்ரி பழங்களாகச் சிவந்தன அவள் கன்னங்கள். ஆனால் அவள் வெட்கித் தலை குனியவில்லை. என் வார்த்தைகளை விரும்பி ஏற்றவளாக முத்துப் பல் வரிசை தோன்றச் சிரித்து ரசித்தாள். ''எத்தனை அழகாகப் பேசுகிறீர்கள் !'' என்று வியந்தாள்.

''ஏய்! ஏய்!'' என்று கலவரமடைந்தவன் போலக் குறுக்கே புகுந்தான் மஹோமி. ''நீ சிறுகதைகள் நாவல்கள் எழுதுபவன் என்பது எனக்குத் தெரியும். வர்ணனைகளை அள்ளி வீச வேண்டாம்.''

''எல்லாரிடமும் இப்படிப் பேசத் தோன்றுகிறதா? ஸோபியாவைப் பார்த்ததும் கற்பனைகள் பிரவாகமாகப் பெருக்கெடுக்கிறது!''

''சரிதான்! உன்னை இவளிடம் நெருங்க விடுவதே எனக்கு ஆபத்தாக முடியும் போல் இருக்கிறதே !''

அவன் தோள்களைப் பற்றி அழுத்தியபடி, ''கவலைப்படாதே! எனக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகளும் இருக்கின்றன '' என்றேன். ''இல்வாழ்க்கையில் அமைதியை விரும்புகிறவன் நான்!'' எல்லோருமாகச் சேர்ந்து சிரித்தோம்.

''இதற்கு முன்பே நான் உங்களைச் சந்தித்திருக்கிறேன். நினைவிருக்கிறதா?'' என்றாள் ஸோபியா.

''நன்றாக நினைவில் இருக்கிறது. போன ஜன்மத்தில் உன்னைத் தவிர வேறு யாரையும் நான் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டிருக்கவே முடியாது!''

''வேடிக்கை மனிதர்!'' என்று உடல் குலுங்கச் சிரித்தபடியே கூறினாள் அவள். ''ராயல் ஹோட்டலில் பார் அருகே வந்து தக்காளிப் பழ ரசம் கேட்ட ஒரே அதிசய மனிதர் நீங்கள்தான். உங்களை நான் எப்படி மறக்க முடியும் ?''

''ஓ! ஆமாம், ஆமாம்!'' என்று நினைவு கூர்ந்தவனாகச் சிரித்தேன் நான். பிரிட்டனில் 'பப்' என அழைக்கப்படும் மதுக் கடைகள் நிறைய உண்டு. 'பார்மெய்ட்' எனப்படும் பெண் அங்கே மது விற்றுக் கொண்டிருப்பாள். நண்பர்கள் நாளை நினைக்குமளவுக்கு நாளுக்காக மதுவைக் கொஞ்சம் கொஞ்சமாய் அருந்தியபடி அமர்ந்து உரையாடுவார்கள். ஒரே ஒரு தருணம் அந்தப் பக்கம் நண்பரொருவருடன் போக நேர்ந்தபோது ''டொமாடோ ஜூஸ்'' என்று கேட்ட என்னைப் புரிந்து கொள்ள இயலாமல் விழித்த பார்மெயிட்தான் இந்த ஸோபியா.

''என் நண்பர் மது அருந்துவதில்லை'' என்று விளக்கினார் உடன் வந்தவர்.

அத்துடன் ஸோபியாவை நான் மறந்து விட்டேன். இன்று மீண்டும் அவளைச் சந்திக்கும் வரையில். ஆனால் மஹோமி அடிக்கடி மது அருந்தச் சென்றதுடன் மது விற்ற மங்கையையும் கவர்ந்திருக்கிறான் குறிப்பிட்ட அந்த 'பப்'பிலே !

வெய்யிலடித்தால் பிரிட்டிஷ் மக்களுக்கு ஒரே சந்தோஷம். வருஷத்தில் ஐந்தாறு மாதங்களில் சூரியனைக் காண்பதென்பதே அரிதான ஒரு குளுமையான சீதோஷ்ண நிலையில் காலத்தை ஓட்டுபவர்கள் அல்லவா அவர்கள் ! சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் வானம் அழுது வடியாமல் ஒளிர்ந்தால் அவர்கள் மகிழ்ச்சிக்குக் கேட்கவே வேண்டாம். தின்பண்டங்களை ஒரு கூடையில் அடைத்துக் கொண்டு காரிலேறிக் கிளம்பி விடுவார்கள் 'பிக்னிக்'குக்கு. ஏதாவது ஓர் ஆற்றங்கரைப் பக்கமோ அல்லது ஒரு பூங்காவிலோ ஜமுக்காளத்தை விரித்து அமர்ந்து ஆனந்தமாய்ப் பேசிப் பொழுது போக்குவார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் எனக்கும் வேலை இல்லைதான். பத்திரிகைத் தொழிலில் உயர் பயிற்சி பெறுவதற்காகப் பிரிட்டனின் மேற்குப் பகுதியான வேல்ஸுக்கு வந்திருந்தேன் நான். பெனார்த்தில் சர்வ தேச இல்லத்தில் வசித்தபடி தினம் ரயிலேறி ஐந்து மைல் தொலைவிலிருந்த வேல்ஸின் தலைநகரான கார்டிப் நகருக்குச் சென்று அங்குள்ள பிரபல பத்திரிகைக் காரியாலயத்தில் பணியாற்றிப் பயனடைந்து வந்தேன். மஹோமியும் இதற்காகவே என்னைப் போலவேதான் 'ஸ்காலர்ஷிப்' பெற்று வந்திருந்தான் நைஜீரியாவிலிருந்து. பத்திரிகைத் தொழில் பயிற்சியுடன் கூடவே காதல் பயிற்சியும் அவன் அடைந்து வருவது குறித்து எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

வெய்யில் வீண் போகாமல் எங்கெங்கோ சுற்றியலைந்து விட்டு மாலைப்பொழுதில் சர்வதேச இல்லத்துக்குத் திரும்பினேன். இல்லத்தின் 'வார்டன்' ஒரு கிறிஸ்துவப் பாதிரி. ''பத்திரிகையாளர் இன்று என்ன செய்தி கொண்டு வருகிறார்?'' என்று கேட்டபடியே புன்னகையுடன் என்னை வரவேற்றார் ஜோன்ஸ்.

''என்னைப் பொறுத்தவரை மகிழ்ச்சிகரமான செய்தி இல்லை. ஸ்மித்விக் பகுதியில் நிற வேற்றுமை தேர்தல் பிரசாரத்தில் இழுக்கப்பட்டது குறித்து ஓர் அறிஞரின் சிறு கட்டுரை வெளியாகியிருக்கிறது. பாருங்கள்'' என்று கூறியபடியே ஞாயிறு இதழ் ஒன்றினை அவரிடம் நீட்டினேன்.

பத்திரிகையைப் பெற்றுக் கொண்ட ஜோன்ஸ் வருத்தத்துடன் தலையை அசைத்தார். ''அமெரிக்காவில் நிற வேற்றுமை பெரிதுபடுத்தப்படுவதாக எண்ணினேன். இங்கும்-''

''பிரசாரம் நடைபெற்ற முறை தவறுதான். ஆனால், ஸ்மித்விக்கில் நிலவுவது நிற வேற்றுமை என்று எனக்குத் தோன்றவில்லை. பொருளாதாரப் பிரச்னை'' என்றார் அவர். ''பக்கத்து வீட்டில் வசிப்பவர் கருப்பென்று

பச்சை நிறத்தவராகிலும் கூடச் சண்டை போடத்தான் செய்வார்கள்!''

''அப்படியென்றால்?''

''மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் உலகின் மற்றப் பகுதிகளிலிருந்தும் பிரிட்டனில் குடியேறும் கருநிறத்தவரால் பாதிக்கப்படக்கூடியவர்கள் தொழிலாளர் சமூகத்தினர்தான். அந்தத் தொழில் சமூகத்தில் வெள்ளையருக்கு வாய்ப்புக் குறைந்து விடுமோ என்ற அச்சம் ஒருவேளை காரணமாயிருக்க வேண்டும்.''

அவர் பூசி மெழுகுவதாகவே எனக்குத் தோன்றியது.

''நீங்களாகும் இப்படிச் சொல்லுகிறீர்கள். ஆனால் ஸ்மித்விக்கில் இந்தியக் குடும்பம் ஒன்றுக்கு மாதத் தவணைகளில் பணம் கட்டிச் சொந்த உடைமையாக்கிக் கொள்ளும் வகையில் அரசினரின் வீடு ஒன்று ஒதுக்கப்பட்டது என்பதற்காகப் பெரிய ஆட்சேபணைகளைக் கிளப்பியிருக்கிறார்களே, வெள்ளையருக்குத்தான் இதிலும் முதலுரிமை இருக்க வேணுமா?'' என்று மறுபடியும் அவரை வம்புக்கிழுத்தேன் நான். ''இந்தியாவிலிருந்து வந்தவர்களானாலும் அவர்களும் இன்று பிரிட்டிஷ் பிரஜைகள்தானே?''

''இந்தியத் தூதராலயத்திலிருந்து ஸ்மித்விக்குக்கு நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்து திரும்பியவரின் அறிக்கை இதோ இன்னொரு பக்கத்தில் வெளியாகியிருக்கிறதே அதைக் கவனித்தாயா?'' என்று ஒரு செய்திக் குறிப்பைப் பத்திரிகையில் சுட்டிக்காட்டினார் பாதிரி ஜோன்ஸ்.

தமது அபிப்பிராயத்தில் ஸ்மித்விக்கில் நிறத் துவேஷம் ஏதும் பாராட்டப்படுவதாகத் தோன்றவில்லை என்றதுடன் பிரிட்டனில் உள்ள இந்தியர்கள் தாங்கள் தனி உலகில் வாழாது சூழ்நிலையுடன் ஒன்றிவிட முயல வேண்டும் என்று ஆலோசனையும் கூறியிருந்தார் இந்திய தூதராலய அதிகாரி.

''எல்லோரும் சமம் என்று கூறப்படும் ருஷ்யாவில்கூடச் சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான சம உரிமை உண்டு என்பார்கள்'' என்று விதண்டாவாதம் செய்தேன் நான்.

''எண்ணெய் நீரை ஒதுக்குகிறது என்னும் போது நீர் எண்ணெயுடன் சேர மறுக்கிறது என்பதை எளிதாக மறந்து விடுகிறோம்'' என்றார் ஜோன்ஸ். ''ஸ்மித்விக்கும் அமெரிக்காவும் எப்படியாவது போகட்டும். உலக நாடுகள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொள்ளட்டும், இனத் துவேஷம், நிறத் துவேஷம் பாராட்டட்டும். இந்த சர்வதேச இல்லத்தை நாம் ஒரு குட்டி ஐ.நா.வாக நடத்துவோம். இங்கே இந்தியனும் பாகிஸ்தானியும் இழைவார்கள். செஞ்சீனனும் தென் வியட்நாமியனும் இன்னுயிர் நண்பர்களாய் விளங்குவார்கள். கம்யூனிஸ்டும் ஜனநாயகப் பற்றுக் கொண்டவரும் அன்பொழுகப் பழகுவார்கள். தென் ஆப்பிரிக்க வெள்ளையரும் நீக்ரோவும் தோளை வளைத்து அணைத்தபடி நிற்பார்கள். சரிதானே?''

அவர் கூற்றை நிரூபிப்பதே போல் அந்நேரத்தில் மஜோமியும் ஸோபியாவும் கரம் கோத்தபடி வாயிலைத் தாண்டி உள்ளே நுழைந்து வந்தார்கள்.

அவர்களைக் கண்டு ஜோன்ஸின் முகத்தில் வெற்றிப் பெருமிதமும், மகிழ்ச்சிப் பூரிப்பும் பொங்குவதைக் கண்டேன்.

மஜோமிக்கும் ஸோபியாவுக்கும் இடையில் நெருக்கமான பிணைப்பு ஏற்பட்டு வருவதைக் கவனித்து வந்தேன் நான். நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போன இந்த நெருக்கம் எனக்குக் கலக்கத்தை உண்டுபண்ணியது. அடிக்கடி அவர்கள் தனிமையை நாடினார்கள். மஜோமி அவளை ஐந்தாவது மாடியிலிருந்த தன் அறைக்கு அழைத்துப் போவான். கதவையும் தாளிட்டுக்கொள்வான். சர்வதேச இல்லமான அந்த நவீன கட்டடத்தின் சுவர்கள் பழங்காலத்திய பாணியில் கனமாக அமைந்தவையல்ல. ஒளியை மறைக்கும், ஒலியைத் தடுக்காது. பக்கத்து அறையில் அவர்கள் சல்லாபிப்பதும் சரஸமாடுவதும் சிரித்து மகிழ்வதும் நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எனக்குக் கேட்கும். பாரத நாட்டுப் பண்பில் ஊறித் திளைத்த எனக்கு அவர்களின் இந்த நடவடிக்கைகள் ஏதேதோ விபரீதக் கற்பனைகளைத் தோற்றுவித்தன. பிரிட்டனில் நான் இருப்பதையும் நாகரிக வேறுபாடுகளையும் எனக்கு நானே நினைவூட்டிக் கொண்டு தவறான முடிவுகளுக்கு வரக் கூடாதெனப் பிரயாசைப்பட்டேன்.

அன்று என் மனைவிக்குக் கடிதம் எழுத எண்ணியபோது அவளுடைய பிறந்த நாள் சமீபிப்பது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. மஜோமிக்கு ஸோபியா கொடுத்திருந்த சில பரிசுப் பொருள்களுள் அழகிய மலர்கள் அச்சடிக்கப்பட்டிருந்த கடிதம் எழுதும் தாள்கள் கட்டும் ஒன்று. பிறந்த நாளன்று என் மனைவிக்குக் கிடைக்கப் போகும் என் கடிதம் வெற்று வெள்ளைக் காகிதத்தில் இராமல் மறு பக்கத்தில் வண்ண மலர்கள் அச்சடிக்கப்பட்டிருந்த தாளில் அமைந்திருந்தால் நன்றாயிருக்குமே என்று தோன்றியது. மஜோமியிடம் அத்தகைய தாள்களுள் ஒன்றிரண்டைக் கோரிப் பெற்று வரலாம் என எண்ணியவனாய் அவன் அறையை அணுகிக் கதவைத் தட்டினேன்.

''ஒன்றென்ன, பத்து வேண்டுமானாலும் தருகிறேன்'' என்று கூறிய அவன் மேஜை டிராயரைத் திறந்து தேடலானான். அப்படித் தேடுகையில் அவன் கரத்தில் ஒரு புகைப்படம் தட்டுப்பட்டது. அதை நானும் கவனித்துவிட்டேன் என்பதைக் கண்டதும் அதனை என் பக்கமாக நீட்டினான்.

படத்தில் மஜோமியுடன் வேறு மூவரும் இருந்தார்கள். ''உன் தகப்பனார், தாயார், தங்கையுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட படமா?'' என்று கேட்டேன்.

மஜோமி சிரித்தான். ''சரியான நிலைமையை அப்படியே மாற்றிவிட்டாயே! மனைவி, மாமனார், மாமியார் ஆகியோருடன் நான் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது!''

''என்ன? என்ன!''

"ஏனப்பா இப்படி விழிக்கிறாய்? என்ன நேர்ந்துவிட்டது உனக்கு?"

"இல்லே ஒன்றுமில்லே. உனக்குத் திருமணமாகவில்லே என்று எண்ணியிருந்தேன்."

"எனக்குக் கல்யாணமாகி இரண்டு வருஷங்களாகி விட்டன. அடுத்த ஏப்ரலில் ஒரு குழந்தையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!"

"அப்படியானால் ஸோபியா?"

"அதுவா?" என்று கேட்டுப் பெரிதாக நகைத்தான் அவன். "இங்கே எப்படியாவது பொழுது போக வேண்டும் பார்! மூன்று நான்கு மாதங்கள் பெண் துணையின்றி எப்படிக் கழிப்பது?"

மேனையைப் பற்றிக் கொண்டு நிலை தடுமாறுது சமாளித்தேன் நான். "மஜோமி! நீ என்ன சொல்கிறாய்? விளையாடுகிறாயா?"

"அப்படியொன்றுமில்லே" எனக் கூறிப் புகைப்படத்தை என்னிடமிருந்து நிதானமாகத் திரும்பப் பெற்றுக் கொண்டான் மஜோமி. அதில் காணப்பட்ட இள மங்கையைச் சுட்டிக் காட்டியபடியே கூறினுன்: "என் மனைவி இருக்கிறாளே அவளும் என்னைப் போல் கருப்புத்தான். ஆனால் அவள் கால் தூசுக்குச் சமமாக மாட்டாள் இந்த ஸோபியா! என் மனைவிக்கு என்னிடம் எத்தனே அன்பு தெரியுமா? என்னை விட்டுப் பிரிந்து அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பாள். கூடுமானால், நாளைக்கே அவளிடம் பறந்து சென்றுவிடத் துடிக்கிறேன் நான்."

"மஜோமி!" என்று ஏதோ கூற வாயெடுத்தேன் நான். வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

"இதோ பார்!" என்று மஜோமி விடாமல் தொடர்ந்தான்: "இந்த வெள்ளேயர்கள் தங்களைப் பற்றிப் பெரிதாக நினைத்துக்கொள்கிறார்கள். நம் போன்ற கருப்புத் தோல் படைத்தவர்களை மட்டமாக மதிக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களை மட்டமாக மதிக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. உண்மையும் அதுதானே? விரலை அசைத்துப் புன்னகையை உதிர்த்தவுடன் என்னிடம் இந்த ஸோபியா ஓடிவந்துவிடவில்லேயா? பசப்பு வார்த்தை பேசியதும் படுக்கையைக் கூடப் பகிர்ந்துகொள்ள இவள் தயங்கவில்லேயே? இப்படிப்பட்ட வெள்ளேயர்கள்தான் தங்களை மேலானவர்களாகக் கருதிச் செருக்குக் கொண்டு அலைகிறார்கள்!"

"அப்படியொன்றும் பெரிய அளவில் இங்கு யாரும் நிறத் துவேஷம் பாராட்டுவதாக எனக்குத் தெரியவில்லேயே? ஏதோ ஐந்தாறு பேர்கள் குறிப்பிட்ட ஓரிரு இடங்களில் இருக்கலாம்......"

"ஆகா! உனக்குத் தெரியாது! நிறத் துவேஷம் பாராட்டுவதில்லே என்று சொல்லிக் கொள்வதிலேயே இவர்களுக்கு ஒரு பெருமை! அன்பொழுகப் பேசுவார்கள். நம்மிடம் நெருங்கிப் பழகுவார்கள். அவர்கள் மனத்துள் என்ன இருக்கிறது தெரியுமா? விஷம்!"

"உன் மனத்தைத்தான் யாரோ நஞ்சூட்டிக் கெடுத்திருப்பதாய் எனக்குத் தோன்றுகிறது, மஜோமி! அது எப்படியோ போகட்டும். ஸோபியாவைப் பற்றி யோசித்துப் பார்! நீ செய்தது சரியா? அவள் உன்னை மனமார நேசித்தாள். முழுமையாக நம்பினுள். அவளை இவ்விதமாக ஏமாற்றி மோசம் செய்யலாமா?"

"எத்தனே வருஷங்களாக இவர்கள் நம் நாடுகளை ஆண்டு நம்மை மோசம் செய்திருக்கிறார்கள்! அதை மறந்துவிட்டாயே! என் தோல் கருப்பு என்பதால்தானே என்னை இவர்கள் மட்டமாக மதிக்கிறார்கள்? ஆனால் வெள்ளைத் தோல் படைத்தவன் செய்யக் கூடிய எதையும் என்னாலும் சாதிக்க முடியும் என்று நிரூபித்திருக்கிறேன் பார்! கரு நிறத்தவனுயினும் வெள்ளைத் தோல் கொண்டவளை என் வயப்படுத்துவது எனக்குக் கடினமாக இல்லேயே!"

எதற்காகவோ, யாருக்காகவோ பழிக்குப் பழி வாங்கிவிட்டு, வெற்றிப் பெருமிதத்துடன் அவன் கொக்கரிப்பதுபோல் எனக்குத் தோன்றியது. 'ஐயோ! இது என்ன விபரீதப் பரிசோதனே!' என்று கூவ நினைத்தேன். பேசமுடியாமல் நெஞ்சை அடைத்தது.

வெளியே இருந்து விம்மல் ஒலியும், யாரோ ஓடுவது போன்ற சத்தமும் எழுந்தன. குதிகால் உயர்ந்த காலணி அணிந்துதான் யாரோ ஓடுகிறார்கள். ஸோபியா! ஆம், அவளாகத்தானிருக்க வேண்டும். ஒளியை மறைத்து ஒலியைத் தடுக்காத மெல்லிய சுவர்களாயிற்றே! என்னவெல்லாம் அவள் கேட்டாளோ? என்ன செய்யப் போகிறாளோ?

கதவைத் திறந்து கொண்டு வராந்தாவில் ஓடினேன். மாடிப் படிகளில் மளமளவென்று அவள் இறங்கி ஓடும் ஓசை கேட்டது. பின்தொடர்ந்தேன்.

அவள் படிகளில் இறங்கவில்லே. உருண்டு விழுந்து கொண்டிருந்தாள்.

"ஸோபியா!" என்று அலறியபடியே வேகமாகப் படிகளில் இறங்கிச் சென்றேன்.

என் கூக்குரல் கேட்டு ஓடி வந்த பாதிரி ஜோன்ஸ் எனக்கு முன்னுல் அவளை அடைந்து விட்டார். மயங்கி விழுந்து கிடந்த அவளது சிரத்தைத் தமது மடியில் தாங்கிக் கொண்டார்.

நீர் ததும்பி நின்ற கண்களால் என்னை ஏறிட்டு நோக்கி, "டாக்டருக்குப் போன் செய்கிறாயா?" என்று கேட்டார்.

"எண்ணெய் நீரை ஒதுக்குகிறது என்னும் போது நீர் எண்ணெயுடன் சேர மறுக்கிறது என்பதை எளிதாக மறந்து விடுகிறோம்" என்று முன்பு அவர் கூறிய சொற்கள் அலை அலையாக அலைகடலின் பேரிரைச்சலாகத் திரும்பத் திரும்ப என் செவிகளினுள்ளே முட்டி மோதி வந்தன.

டெலிபோனிருந்த பக்கம் செல்லுமுன்னர் அண்ணாந்து மாடிப் படிகளின் கைப்பிடிச் சுவர் விளிம்பினை நோக்கினேன். மஜோமி எட்டிக்கூடப் பார்க்கவில்லே.

பாமினிப்



பாவை

கௌசிகன்

ஆயிஷா அளித்த முத்திரை மோதிரத்தை வாங்கிக்கொண்ட யூசப்கானின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. ''சிறைப்பட்டிருக்கும் உனக்கு இங்கொரு சகோதரர் இருப்பதாக எனக்கு நீ சொல்லவில்லையே?'' என்று புரிந்துகொள்ள முடியாத புதிராக நிற்கும் அவளைப் புதுமையாகப் பார்த்தான் அவன். அவனது ஐயத்தைத் தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது அவளுக்கு. பிறப்பால் இல்லாது அன்பின் பிணைப்பால் தன் சகோதரனை வேங்கடாத்திரியைப் பற்றிச் சுருக்கமாக அவனிடம் கூறினாள். பதவி மோகம் கொண்டலையும் திருமலை தன்னைப் பணயமாக்கி வகுத்த திட்டங்களையும் அது பயனில்லாது போகும்படி தன் சகோதரனாகிவிட்ட வேங்கடாத்திரி புரிந்த செயல்களையும் விளக்கினாள் ஆயிஷா. உடன்பிறந்தவர்கள் மூவரில் ஒருவரைத் தன் அன்புச் சகோதரனாகவும் மற்ற இருவரையும் தனது பரம விரோதிகளாகவும் ஆக்கி இருக்கும் விதியின் விபரீத விளையாட்டைச் சொல்லும் போது அவள் விழிகள் குளமாயின.

''விதியின் கைப்பாவையாகிவிட்ட என் வாழ்வு இன்னும் எப்படியெல்லாம் மாறப் போகிறதோ?'' என்று பெருமூச்சுடன் மௌனமானவள் சட்டென்று ''நீங்கள் இங்கு இனியும் தாமதிப்பது விபரீதமாக முடியும். உடனே கிளம்புங்கள்'' என்று துரிதப்படுத்திப் பரபரத்தாள்.

''ஆயிஷா! உன்னை இத்தனை அபாயங்களின் நடுவே விட்டு நான் மட்டும் ஏன் தப்பிச் செல்ல வேண்டும்'' என்று தயங்கினான் யூசப்கான்.

விரக்தியோடு சிரித்தாள் அவள். ''விஜயநகரத்துக்கு வேவு பார்க்க வேஷமணிந்து வந்தபோது இப்படியொரு சந்திப்பு ஏற்படுமென்று எண்ணினீர்களா? இல்லையே. அப்படி இருக்க, இப்போது நானில்லாது நீங்கள் இங்கிருந்து செல்லத் தயங்குவது நியாயமில்லை. நான் இங்கிருந்து கிளம்புவதைவிட, நீங்கள் அங்கு போவது முக்கியம். நேரத்தை வீணாக்காதீர்கள்'' என்று வேண்டிக் கொண்டாள் ஆயிஷா.

விவாதிக்க விரும்பாத அவள் மன நிலையைப் புரிந்து கொண்ட யூசப் கான் அவளை விட்டுப் பிரிய மனமில்லாமல் உடை மாறினான் ஒரு இந்துவாக. விஜயநகரத்திலே இந்தியர்களிலும் பலர் அழகுக்காக முஸ்லிம்களைப் போல இளந்தாடியை வளர்த்துக்கொள்வது வழக்கமாதலால் யூசப் கானின் அழகு தாடி அவன் ஏற்ற வேஷத்துக்குப் பொருத்தமாகவே இருந்தது. உருமாறிய பிறகும் குதிரையேறாமல் ஆயிஷாவையே நீர்த் திரை விட்ட கண்களால் பார்த்துக் கொண்டு நின்றான் யூசப் கான்.

அவன் உள்ளக் குறிப்பறிந்தவள், ''காதலரே! ஏன் இப்படிக் கலங்குகிறீர்கள்? எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த நம் இருவரையும் இங்கே சந்திக்க வைத்த அதே சக்தியினால் நம்மை மறுபடி ஒன்று சேர்க்கவும் முடியும். அல்லாஹ்வின் அருள் இருக்குமானால் எதுவும் சாத்தியமாகும். ஆகவே சோர்வடையாமல் சென்று வாருங்கள்'' என்று இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டவள் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் கலங்கினாள். உடனே அந்த நிலையை மாற்றி யமைக்க வேண்டி ஒரு மயக்குப் புன்னகையை இதழ்களில் மலர விட்டவளாக, ''அது சரி, உளவறிந்து போக வந்தீர்களே, என்ன சாதித்துக்கொண்டு திரும்புகிறீர்கள்?'' என்று கேட்டாள் கரும்பு மொழியாள் குறும்பாக.

''உன் அன்பைச் சுமந்து செல்கிறேனே அது போதாதா ஆயிஷா?''

''உளவாளியாக வந்தவர் என் இதயத்தைக் களவாடிச் செல்கிறீர்கள், உண்மைதான். ஆனால் உங்கள் சாம்ராஜ்யத்துக்கு உதவும் சங்கதியொன்றைச் சொல்லட்டுமா?''

''வேண்டாமென்றா சொல்லுவேன்?''

''பாமினி சுல்தானின் படைகளை நடத்திச் செல்லும் பொறுப்பேற்றிருக்கிறான்

ஆதில்ஷாவின் சேனாதிபதி — சித்திஹாஸன் என்ற அபிசீனியன். முஸ்லிம் அரசுகள் தங்கள் வெற்றிக்கு யாரை நம்பியிருக்கிறார்களோ அவன் ஒரு துரோகி. கூட்டணிப் படைகளை 'இங்குலிகி' என்ற இடத்துக்கு நடத்திச் செல்லப் போகிறான் அவன். அப்போது அங்கு மறைந்திருக்கும் ஆயிரமாயிரம் பீரங்கிகள் அனலைக் கக்கி அந்தப் படைகளையும் அழிக்கப் போகின்றன. இப்படியொரு ஏற்பாட்டை விஜயநகரத்துடன் செய்து கொண்டு போயிருக்கிறான் சித்திஹாஸன்'' என்றாள் ஆயிஷா. அன்று ராமராயர் தம் பத்தினிகளிடம் சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்த செய்தியை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தபடி விளக்கினாள்.

இதைக் கேட்ட அவன் உடலும் உள்ளமும் பதறியது. 'அப்படியானால் ஆதில்ஷா....?' என்று வினா எழுப்பிய உள்ளத்துக்கு விபரீதமான விளக்கம்தான் கிடைத்தது. இத்தகைய உபயோகமான செய்தியைக் கூறிய ஆயிஷாவை ஆனந்த மிகுதியால் அணைத்துக் கொண்டான். பிரிந்து செல்ல வேண்டுமே என்று வருந்தியவன் இப்போது கடமை வயப்பட்டவனாகிக் கலக்கத்தை உதறிவிட்டு, ''ஆயிஷா! என் அன்பே! எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த செய்தி தெரியுமா இது? விபரீதம் விளையுமுன் அதைத் தடுத்தாக வேண்டும். நான் வருகிறேன்'' என்று தாவி ஏறினான் குதிரைமீது. தாபமுடன் ஆயிஷாவை மறுபடியும் பார்த்தான். அப்படியே அவளைத் தாவி அணைத்துத் தூக்கிக் குதிரை மீது வைத்துக் கொண்டு போனால் என்ன என்று அவன் கைகள் பரபரத்தன.


''போரில் நம் இனத்துக்கே வெற்றி கிடைக்கும்படியாகச் செய்யுங்கள்; சென்று வாருங்கள்'' என்று கண்ணீர் வழிய விடை கொடுத்தாள் ஆயிஷா. கடமையை நினைத்தான்... காதலை மறந்தான். காற்றெனப் பறந்தான் யூசப் கான். அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த ஆயிஷாவின் பார்வைக்குக் கண்ணீர் வலை பின்னியது. நினைவிழந்து நெடுநேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தவள் அந்தப்புரத்துக்குத் திரும்பியதும் தன் படுக்கையில் விழுந்து 'ஹோ'வென்று வாய் விட்டு அழுதாள் விம்மி விம்மி. எதற்காக? தன் வாழ்வில் மின்னலாகத் தோன்றி மறைந்த யூசப் கானை நினைந்தா? அல்லது வேங்கடாத்திரி கொண்ட நம்பிக்கையை நாசமாக்கிவிட்டோமே என்ற வேதனையினாலா? அது அவளுக்கே தெரியவில்லை!

25. நதிக்கரை நாடகம்

துங்கபத்திரை ஆற்றின் வட கரையிலே நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் விஜயநகரின் படை வெள்ளம் குவிக்கப்பட்டிருந்தது. சாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பாளையக்காரர்கள் தங்கள் படைகளுடன் இன்னும் வந்த வண்ணமாகவே இருந்தார்கள். முஸ்லிம் அரசுகளின் படைகளோ கிருஷ்ணா நதியின் இரு கரையையும் தங்கள் எல்லைகளாக்கிக்கொண்டிருந்தன. கிருஷ்ணையாற்றின் வட கரையிலே அதன் கிளையாகிய 'தான்' என்ற சிற்றாறு வந்து கலக்கும் இடத்தின் மேல் கரையில் அலி ஆதில்ஷாவும் இமாத் உல் முல்க்கும் முகாமிட்டிருந்தார்கள். கிருஷ்ணா நதியைக் கடந்து முத்கலுக்கு அருகே தமது படைகளைக் கொண்டு வந்து குவித்திருந்தார் குதுப்ஷா. இந்த முஸ்லிம் அரசுகள் தங்கள் படைகளில் பெரும் பகுதியை சித்திஹாஸனின் தலைமையின்கீழ் போரிடுவதற்காக அனுப்பியிருந்தன. இந்தக் கூட்டணிப் படையை நடத்திச் சென்று, பாரதத்தின் பலம் பொருந்திய இந்துப் பேரரசை எதிர்க்க வேண்டுமென்பது பாமினி சுல்தான்களின் பேராசை. அந்தப் பொறுப்பை ஆதில்ஷாவின் பிரதிநிதியான சித்திஹாஸனிடம் ஒப்படைத்து விட்டு ஆவலோடு தங்கள் பாசறைகளில் காத்திருந்தார்கள் பாமினி சுல்தான்கள்.

சித்திஹாஸனோ வேறு விதமாகத் திட்டமிட்டிருந்தான். முஸ்லிம் இனத்தவனானாலும் அவன் நட்பும் நல்லெண்ணமும் ராமராயரின் பக்கமே இருந்தன. ஆதில்ஷாவின் அந்தரங்கத்தை அறிந்த அந்த அபிசீனியன் அவர் அன்பையும் நல்லெண்ணத்தையும் தன் பழிதீர்த்துக் கொள்ளும் பகை எண்ணத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு இனத்துரோகியாகவே மாறிவிட்டான். கிருஷ்ணா நதியின் ஆழமற்ற இங்குலிகி என்ற இடத்துக்குத் தன்னை நம்பி விடப்பட்டுள்ள படைகளை நடத்திச் சென்று நாசமாக்கத் தீர்மானித்திருந்தான். இந்தக் கூட்டணியிலே பீஜப்பூரின் படைகள் மிகக் குறைவாகவே கலந்திருந்தன. ஆழமற்ற அந்தப் பகுதியில் ஆற்றைக் கடந்து மறு கரையில் உள்ள மகா மண்டலேசுவரரின் படைகளைத் தாக்க வேண்டுமென்பது ஏற்பாடு. இப்படி ஒரு திட்டத்தை வகுத்தவனும் அவன்தான். அதை அப்படியே அரவீட்டாரிடம் அறிவித்து அழிவுக்கு வழி வகுத்திருந்தவனும் அவன்தான்.

கறுத்த முகமும், அரக்கனையொத்த ஆகிருதியும் கொண்ட அபிசீனியன் — சித்திஹாஸன் நீலக்கரி நிறக் குதிரையிலமர்ந்து மிடுக்குடன் முன்னே போய்க் கொண்டிருந்தான். குதிரைக்குரிய அலங்காரங்கள் அத்தனையிலும் தங்கம் பயன்படுத்தப்பட்டிருந்ததால் மினுமினுத்த அதன் உடலிலே அவைகள் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. அகமதுநகர், கோல்கொண்டா, பீடார் ஆகிய ராஜ்யங்களின் தளபதிகள் அவன் உத்தரவை எதிர்பார்த்து அவனைத் தொடர்ந்துகொண்டிருந்தனர். சித்திஹாஸனின் துரோக எண்ணம் அவர்களுக்குத் தெரியாது. ஒரு சிறந்த வீரனாகவே அவர்கள் அவனை அறிந்திருந்தார்கள். குறிப்பிட்ட இடத்தின் அருகே வந்ததும் எதிரிகளின் காவல் எப்படி



இருக்கிறது என்பதை அறிந்து வருபவன் போலத் தன் குதிரையைத் தட்டிவிட்டு முன்னே சில மைல்கள் சென்றுவிட்டுத் திரும்பி வந்தான் சித்திஞாலன். தன்னைத் தொடர்ந்து வரும் படையணித் தலைவர்களின் நம்பிக்கையை வளர்க்கவே இந்த நாடகமாடினான் அவன். ஆனால் உண்மையில் தன் வரவை ஒளிந்துகொண்டிருக்கும் விஜயநகரப் பீரங்கிப் படைகளுக்கு அறிவித்து எச்சரிக்கை செய்து தயாராகும்படி தகவல் தரவே அப்படித் தனித்துப் போனான் அவன். திரும்பி வந்தவன் எல்லாம் திருப்தியாக இருப்பதாகச் சொல்லி முன்னேறும்படி உத்தரவு அளிக்கும் அந்த வேளையில்...

அந்த அதிசயம் நிகழ்ந்தது. படைத் தலைவர்களின் கவனமெல்லாம், தங்களை நோக்கிப் பாய்ந்து வரும் அந்த ஒற்றைக் குதிரை வீரனின் மீதே பதிந்திருந்தன. கிழக்குத் திசையிலிருந்து வழக்கத்துக்கும் அதிகமான வேகத்துடன் இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான் அந்த வீரன். வரும்போதே எதையோ அறிவிக்கும் பரபரப்பு அவன் ஓங்கி உயர்த்திய கைகளின் துடிப்பிலே தெரிந்தது. துணுக்குற்ற சித்திஞாலன் தன் படை வீரர்களை முன்னேறி வரும்படி துரிதப்படுத்தினான். வேகமாக வரும் வீரன் ஏதாவது விசேஷமான செய்தி கொண்டு வரலாம். அதை அறிந்த பிறகு ஆற்றைக் கடப்பதே அறிவுடைமை என்று அபிப்பிராயப் பட்டார்கள் தளபதிகள். ஆனால் குற்றவாளி நெஞ்சோடு கூடிய சித்திஞாலனோ வரும் வீரனால் தன் திட்டம் குலைக்கப்படலாமோ என்று எண்ணிக் குமுறினான். இவர்களுடைய இந்த உரையாடல் ஒருநிலைப்படு முன்பே குதிரை வீரன், இவர்களால் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய தூரத்துக்கு நெருங்கிவிட்டான். அவனை இனம் கண்டுகொண்ட அத்தனை பேர் இதயங்களும் ஆனந்தத்தால் துள்ளின. சித்திஞாலனின் உள்ளமோ ஆத்திரத்தால் கருகியது.

வேகமாக வந்து கொண்டிருந்த வீரன் வேறு யாருமல்ல. விஜயநகரத்துப் பாதாளச் சிறையிலிருந்து விடுபட்ட யூசப் கான்தான் அவன். துங்கபத்திரை ஆற்றின் இரு கரையிலும் குவிந்து கிடந்த இந்துப் படைகளின் பார்வையிலிருந்து தப்புவதற்காக கிழக்கே வெகு தூரம் சென்று [illegible] நதியைக் கடந்து அவசரமாக வந்து கொண்டிருந்தான் அவன்.

வாயில் நுரை தள்ள, உடலில் வியர்வை வெள்ளமாக வழிய வந்து நின்ற குதிரையிலிருந்து குதித்தான் யூசப் கான். குதூகலமுடன் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள் கூட்டணி வீரர்களும் தளபதிகளும். அவன் கொண்டு வந்திருக்கும் செய்தியை, அதை

விட அவன் தப்பி வந்த அதிசயத்தை அறியவே ஆவலாக அவன் முகம் நோக்கினார்கள் அத்தனை பேரும்.

“அல்லாஹ்வின் திருநாமத்துக்கு ஆயிரம் சலாம்கள்! அளவற்ற கருணையாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அவனது திருநாமம் நம்மைக் காப்பதாக!” என்று கூறி மேற்கு நோக்கித் தரையில் மண்டியிட்டுத் தொழுது எழுந்தான். “சரியான சமயத்துக்கு வந்துவிட்டேன். சற்றுத் தாமதமாகி இருந்தாலும் நீங்கள் சதிக்குப் பலியாகி இருப்பீர்கள்” என்றான் சித்திஹுஸானை விழியோரத்தால் கண்காணித்தபடியே.

“அந்த வீணனோடு பேசி நேரத்தை ஏன் வீணாக்குகிறீர்கள். திட்டமிட்டபடி முன்னேறுங்கள் சீக்கிரம்!” என்று கொதித்தான் சித்திஹுஸான்.

கடகடவென்று சிரித்தான் யூசப்கான். “வேவுகாரன் என்று அந்நிய நாட்டுச் சிறையிலே அடைபட்டுக் கிடந்த நான் வீணன். சொந்த நாட்டு மக்களை விரோதிகளிடம் காட்டிக் கொடுக்கும் கயவர்கள் கண்ணியமானவர்கள். ஏன், அப்படித்தானே?” என்று கேட்டு அலட்சியமாக நின்றான் அவன்.

“நீ எங்கு அடைபட்டுக் கிடந்தாலென்ன? இங்கு வந்து எனக்கும் என் படை வீரர்களுக்குமிடையே ஏன் பிளவை உண்டாக்குகிறாய்? ஒதுங்கி ஓடிப்போய் உன் வேலையைப் பார்!” என்று கர்ஜித்தவனின் நெஞ்சமோ ‘இந்தப் பாவி விஜயநகரத்தின் பாதாளச் சிறையிலிருந்து எப்படித் தப்பி வந்தான்?’ என்று குமைந்து கொண்டிருந்தது.

சூழ்ந்து நின்ற படைத் தலைவர்கள் இவர்களுடைய வாக்குவாதத்தில் தலையிடவில்லை. பிரதம சேனாதிபதிப் பட்டத்தைச் சித்திஹுஸானுக்கு அளித்ததில் அநேகருக்கு விருப்பமே இல்லை. ஆதில்ஷாவிற்காக அடங்கிக் கிடந்தார்கள். அந்த நிலையில் யூசப்கானின் வருகையும் சித்திஹுஸானின் திமிரான பேச்சும் அவர்களை வேடிக்கை பார்க்கவே வைத்திருந்தன.

“என் வேலையைப் பார்க்கத்தான் ஓடோடி வந்திருக்கிறேன்” என்றான் யூசப்கான்.

“நாட்டிலே எங்காவது விளையாட்டு மைதானங்கள் இருந்தால் அங்கு போய் உன் திறமைகளைக் காட்டிப் பெருமைப்படு. இது போர்க்களம்” என்றான் அகம்பாவத்துடன் அபிசீனியன்.

“விளையாட்டு மைதானங்களிலேதான் தோல்வியடைந்தவர்களிடம் கருணை காட்டி உயிரோடு விட முடியும். போர்க்களத்திலே அதுவும் துரோகிகளை, அப்படி விட முடியாது” என்று யூசப்கான் குத்திக் காட்டிய போது சித்திஹுஸானின் முகத்துத் தழும்பிலே தணலிட்டது போலிருந்தது. தன்மானத்துக்கு ஏற்பட்ட அந்தத் தாங்க முடியாத அடியை அவனால் பொறுக்க முடியவில்லை.

“யாரடா துரோகி?” என்று கூறியவனின் கை உடைவாளை உருவி ஓங்கியது.


“விரோதிகளின் பீரங்கிப் படையை மறைந்திருக்கும்படி சொல்லி, அழிவை உண்டாக்கும் அவைகளின் முன்னால் என்ன நடக்கப் போகிறது என்பதை அறியாத பாமினிப் படைகளை அழைத்துக் கொண்டு போய்ப் பலியிடப் போகிறாயே அவன்தான் துரோகி! இன்னுமா விளக்க வேண்டும்? அற்ப குணம் படைத்த அபிசீனியனே! இனத் துரோகி என்பதை அறியாமல் உன் கட்டளையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் படைகளுக்கு முதலில் உத்தரவிடு, திரும்பிச் செல்லும்படி” என்று சீறினான் யூசப்கான். அவன் கூறியதைக் கேட்ட கூட்டத்தினர் திகைத்தார்கள். வெறுப்புடன் சித்திஹுஸானைப் பார்த்தார்கள்.

அபிசீனியனின் கறுத்த முகம் மேலும் கறுத்துச் சிறுத்தது. நிலைமை கட்டுக்கடங்காமல் போவதைக் கண்டவன் கொதித்தெழுந்தான். “டேய், அற்பனே! கற்பனை செய்து கண்டபடி ஏதேதோ பிதற்றி என் படை வீரரிடையே குழப்பத்தை உண்டாக்கும் உன்னைக் கொல்லாமல் விடப் போவதில்லை.” மூர்க்காவேசமாக முழக்கியபடி வாளைச் சுழற்றிக் கொண்டு ஓடி வந்தான்.


நிராயுதபாணியாக நின்றிருந்த யூசப்கான் “வாளிலே நீ காட்டும் வல்லமையைத்தான் நான் பார்த்து விட்டேனே!” என்று ஏளனமாகக் கூறியபடி லாகவமாக ஒதுங்கிக் கொண்டான். உடனே அங்கிருந்த தளபதிகளில் ஒருவன் தன் உடைவாளை உருவி அவனிடம் வீசினான். சித்திஹுஸானின் அடுத்த இலக்கு அவன் மீது விழுவதற்குள் அதைத் தடுக்க, வலிய வந்த வாளைப் பற்றிக் கொண்டு புயலாகப் பாய்ந்தான் யூசப்கான். வாளோடு வாள் மோதின. இல்லை, வஞ்சனையும் வன்மமும், கடமையும் இனப் பற்றும் மூர்க்கமாகப் போரிடலாயின. அவமானமடைந்த ஆத்திரமும், சூழ்ச்சி வெளிப்பட்டு விட்டதினாலே ஏற்பட்ட வெறியும் சேர்ந்து சித்திஹுஸானின் வாளை மின்னலாக வீச வைத்தது. மின்னலை இருள் விழுங்குவது போல அவனது அத்தனை வீச்சுக்களையும் விழுங்கிக் கொண்டிருந்தான் யூசப்கான். இருவரும் சுழன்று சுழன்று சாடிக் கொண்டார்கள். வாள் வீச்சிலே வல்லவர்களான இருவரும் ஒருவரை ஒருவர் மிஞ்ச முயன்ற போது போர் உக்கிரமான கட்டத்தை அடைந்தது. அழிப்பது அல்லது அழிந்துபடுவது என்ற முடிவோடு போரிட்டனர் அவ்விருவரும். இருவர் உடலிலும் பல இடங்களில் வாள்முனை பட்டுக் குருதியை வழியவைத்திருந்தது. அவர்களின் செயலைத் தடுக்கவோ விலக்கவோ யாருமே முயலவில்லை. அந்தப் போரின் முடிவிலே உண்மையை அறிந்து கொள்ளும் ஆவலுடன் காத்திருந்தனர் படை வீரர்கள். அவர்களை அதிக நேரம் காக்க வைக்கவில்லை யூசப்கான்.

தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தவன் சட்டென்று திறமையான ஒரு வீச்சிலே சித்திஹுஸானின் வாள் அவன் இரும்புப் பிடியிலிருந்து நழுவி எகிறிப் போய் விழும்படி செய்தான். இமைக்கும் நேரத்தில் இடைவெளியே கொடுக்காமல் தனது அடுத்த வீச்சை அந்த அபிசீனியனின் இதயத்திலும் பாய்ச்சி விட்டான். வாள் புகுந்த நெஞ்சை இரு கைகளாலும் அழுத்திக் கொண்டு மூச்சு


5 தலைசிறந்த ஏஸிஸி தயாரிப்புகள்




ஸில்விக்ரீட்
வெள்ளை ஸிமெண்ட்
தரைகளுக்கும், வீட்டின் உள்ளும் புறமும் பூச்சு வேலைகளுக்கும் இணையற்றது




அக்கோப்ரூஃப்
திறந்தவெளி மாடிகள், தண்ணீர் டாங்குகள், நீச்சல் குளங்கள் முதலியவற்றில் நீர் கசியாமல் தடுக்க ஸிமெண்டுடன் கலந்து உபயோகிப்பதற்கான மிகச் சிறந்த பொருள்



ரிஃப்ராக்டரிகள்
பிரத்தியேகமாக இரும்பு மற்றும் எஃகு, ஸிமெண்ட், செம்பு, கண்ணாடி மற்றும் இவை போன்ற தொழில்களுக்குத் தேவையான ஹை அலுமினா ஃபயர்பிரிக்குகள்



அக்கோஸெட்-50
எல்லாவிதமான தொழிற்சாலை உலைகளுக்கு ஏற்ற ஹை ரிஃப்ராக்டரி ஸிமெண்ட்



அக்கோஸிட்
ஆஸிட்கள் மற்றும் ரசாயனப் பொருள்களால் ஏற்படும் அரிப்பைத் தடுக்கிறது

ஏஸிஸி
உயர் தர
தயாரிப்புகளின்
உத்தரவாதச் சின்னம்

கீழ்க்கண்டவர்களிடமிருந்து எளிதில் கிடைக்கப் பெறும்:

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்
பம்பாய் . அஹமதாபாத் . பெங்களூர் . கல்கத்தா . கோயம்புத்தூர் . புதுடில்லி
இந்தோர் . கான்பூர் . மதராஸ் . பாட்னா . ஸெகந்திராபாத்

தி அஸோஸியேட்டட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்

மூட்டப் பரிதாபமாக ஓலமிட்டவாறு நிலத்தில் சரிந்தான் சித்திஹாஸன். அவன் இதயத்திலிருந்து உருவிய வாளில் படிந்த ரத்தத்தை அவன் உடைகளிலேயே துடைத்த பூசப்கானின் முகத்திலே வெறுப்பு வழிந்தது.

''இந்தத் துரோகியின் ரத்தத்தில் நனைந்த இந்தக் கத்தியைக் கூட இனி எந்த முஸல்மானும் தொடமாட்டான்'' என்று கூறி அவன் அருகிலேயே அதை வீசினான் பூசப்கான்.

''இவனது இந்த ஈனச் செயலுக்கு இவன் மன்னனும்கூட உடந்தையாக இருக்க வேண்டுமே. இதை நம் மன்னர்களுக்கும் எச்சரிக்க வேண்டாமா?'' என்று கேட்டான் ஒரு தளபதி.

இது காதில் விழுந்த போது மரண வல்லையிலிருக்கும் சித்திஹாஸன், ''இந்தச் செயலுக்கு என் சொந்த விருப்பு வெறுப்புக்கள்தான் காரணம். ஆதில்ஷா அவர்களுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர் நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்ட நான்....நான் மட்டுமே துரோகி'' என்று இனைறியபடியே ஓர் உண்மையை வெளியிட்டுவிட்டுப் பழி தீர்த்துக் கொள்ளமுடியாமலேயே உயிர் நீத்தான் அந்த ஒப்பற்ற வீரன்.

இதற்குள் ராமராயருக்குச் சித்திஹாஸனின் மரணம் அறிவிக்கப்பட்டு விட்டது. நதியின் படுகையில் நாணல் புதரில் மறைந்திருந்து நடந்தவற்றையெல்லாம் கவனித்து வந்த விஜயநகரத்து ஒற்றர்கள் மகாமண்டலேசுவரரிடம் போய் நிலைமையை விளக்கினார்கள். பாமினி சுல்தான்களைப் பதற வைக்கும் மகத்தானதொரு சதித் திட்டம் நாசமானதும் மறைந்திருக்கும் தமது வீரர்களை வெளிவந்து பாமினிப் படைகளைத் தாக்கும்படி கட்டளை பிறப்பித்தார். சலனமற்றிருந்த நதியின் மறு கரையிலே திடீரென்று ஆயிரம் பத்தாயிரம் என்று அளவிட முடியாத விஜயநகரத்துப் படைகள் தோன்றியதும்தான் பூசப்கானுடைய குற்றச்சாட்டின் உண்மை உறுதியாயிற்று. தக்க சமயத்தில் அவன் வந்து தடுத்திரா விட்டால் எதிர்க் கரைக்குச் சென்றிருக்கும் தங்கள் அத்தனை பேரையும் விஜயநகரப் பெரும் படை பலி கொண்டிருக்கும் என்பதை நினைத்துப் பார்த்து நெஞ்சம் நடுங்கினார்கள். தங்களைக் காட்டிக் கொடுக்கத் திட்டமிட்ட சித்திஹாஸன் பிணமாக விழுந்து கிடந்த இடத்தின் பக்கம் காறி உமிழ்ந்து தங்கள் வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டார்கள். இனத் துரோகியான அவனது உடலைக்கூடத் தீண்ட விரும்பாத அவர்கள் அதை எடுத்து அடக்கம் செய்யாமல் அப்படியே கழுகுகளுக்கு விருந்தாக்கி விட்டு விஜயநகரத்து பீரங்கிப் படைகளின் தாக்குதலிலிருந்து தப்ப வேகமாகப் பின் வாங்கினார்கள். சித்திஹாஸனின் துரோகத்தினாலும் மரணத்தினாலும் காலியான அவனது இடத்தை பூசப்கானுக்கே அளித்து நிறைவு செய்தார்கள் தளபதிகள். வெள்ளமெனப் பொங்கி வரும் விஜயநகரத்துச் சேனைகளின் வீராவேசத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சொற்ப சேதத்துடன் மிக்க சாமர்த்தியமாகத் தப்பிப் பிழைக்க வழி வகுத்து அத்தனை படைகளையும் நடத்திச் சென்று பத்திரமான இடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தான் பூசப்கான்.

இதற்குள் சித்திஹாஸனின் துரோகம் பற்றிய செய்தி பாமினிப் பட்டாளம் முழுவதும் பரவி விட்டது. பூசப்கானின் வரவு நிஜாம்ஷாவுக்கும் குதப்ஷாவுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தன. பூசப்கான் மூலம் சித்திஹாஸனின் துரோகச் செயலை அறிந்த அவர்களுக்கு ஆதில்ஷாவின் நல்லெண்ணத்திலே நம்பிக்கை தளர்வாயிற்று. சித்திஹாஸன் இறக்கும் போது 'இந்தச் செயலுக்கு ஆதில்ஷா ஆட்பட்டவரல்ல' என்று கூறினாலும் அதை நம்ப முடியாத சூழ்நிலையில் இருந்தார்கள், குதப்ஷாவும் நிஜாம்ஷாவும். தன் நாட்டில் பலவந்தமாக மற்றவர்கள் புகுந்து காட்டையும் மேட்டையும் அழித்துப் படைகளின் போக்குவரத்துக்குப் பாதைகள் அமைத்துக் கொண்டு தன்னையும் இந்தக் கூட்டிலே கட்டாயப்படுத்திச் சேர்த்திருப்பதாகவும் தான் என்றுமே விஜயநகரத்துக்கு விரோதமாக இருக்கப் போவதில்லை என்றும் வாக்களித்து ராமராயரின் பாசறைக்குத் தூதனுப்பிய செய்திகளெல்லாம் ஒற்றர்கள் மூலம் அவர்களுக்குக் கிடைத்திருந்தன. அதற்கேற்றாற்போல ஆதில்ஷா போர்க்களத்துக்குத் தம் படைகளுடன் வந்தும் செயல்படாது சோம்பி இருந்தார். ராமராயருக்கும் ஆதில்ஷாவுக்கும் இடையே அடிக்கடி தூதுகோஷ்டிகள் போய் வந்து கொண்டிருந்தன. பரிசுகளும் காணிக்கைகளும் இரு பக்கங்களிலும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவைகளையெல்லாம் கொதிப்போடு கவனித்து வந்தார்கள் கூட்டணிப் படையினர்.

குதப்ஷாவும் நிஜாம்ஷாவும் தங்கள் படையுடன் விஜயநகரப் படையணியைத் தாக்கிய போதும்கூட ஆதில்ஷா உதவிக்கு வந்து ஒத்துழைக்கவில்லை. தோற்றோடி வந்தவர்களைச் சித்திஹாஸனின் இந்தச் செயல் சீறியெழச் செய்தது. நட்புப் போர்வைக்குள் இருந்து கொண்டு நாச வேலை செய்யும் ஆதில்ஷாவிடம் நம்பிக்கை வைக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தவர்கள் அவரது வேஷத்தைக் கலைத்து விட்டு உண்மையாக நடந்து கொள்ளும்படி வற்புறுத்தி வயதிலே மூத்த மதத் தலைவர்களை மறுபடி தூதாக அனுப்பினார்கள். ''நாம் எல்லோரும் சேர்ந்துதான் விஜயநகரத்தை வீழ்த்துவதற்குத் திட்டமிட்டோம். எங்களோடு ஒத்துழைப்பதாக வாக்களித்த தாங்கள் ரகசியமாக ராஜ புன்ரா ராமராயருடன் தொடர்பு கொண்டிருப்பது நம் இனத்துக்கே இழிவான செயலாகும். எங்களுடன் தொடர்பு கொண்டு அதே சமயத்தில் விரோதியுடனும் நட்புக் கொண்டிருப்பது முறையல்ல. பல முறை தங்களிடம் பணிவாகக் கேட்டுக் கொண்டும் தங்கள் போக்கில் மாறுதல் ஏதுமில்லை. ஒன்றுபட்டு நிற்போமானால் வெற்றி நமக்கே, அது உறுதி. இறுதியாகக் கேட்கிறோம். ராமராயருடன் உள்ள தொடர்பை விடுத்து எங்களுடன் சேர்ந்து

விஜயநகரை வீழ்த்த வாருங்கள். இல்லா விடில் நாங்கள் உங்களை விட்டுப் பிரிந்து சென்று போரிடத் தீர்மானித்துள்ளோம். தாங்கள் இப்படி நாணயமற்ற முறையில் நடந்து கொண்டால் இஸ்லாம் இன மக்களும், அல்லாஹ்வும் தங்களுக்குத் தகுந்த பாடம் கற்பிப்பார்கள் என்பதை மட்டும் மறக்க வேண்டாம்.'' வாதிட்டு விவகாரம் பேசி ஆதில் ஷாவை வழிக்குக் கொண்டு வரத் தக்க வயோதிக மதத் தலைவர்களையும் மந்திரிகளையும் இத்தகைய கடிதத்துடன் அனுப்பினார்கள். ஆதில்ஷா இதற்கும் மறுப்பதானால் முடிவாகப் பழி தீர்த்துக் கொள்ளுவோம் என்று கூறி வரும்படியும் சொல்லி இருந்தார்கள். ஆனால்.....

தூதுவர்கள் விவகாரம் பேசுவதற்கே சந்தர்ப்பம் அளிக்கவில்லை ஆதில்ஷா. சித்தி ஹானவின் செயலும் மரணமும் அவரைச் சிந்திக்க வைத்து விட்டன. யாரைத் தம் நம்பிக்கைக்குப் பாத்திரமாக எண்ணி இருந்தாரோ அவனாலேயே தம் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டதை எண்ணிப் பார்த்தார். அவன் செயல் தம் மக்களிடமும் தம் இன மன்னர்களிடமும் தம்மைப் பற்றி எத்தகைய விபரீத மனப்போக்கை உண்டாக்கும் என்பதை உணர்ந்ததும் உள்ளம் நொந்து போனார். அல்லாஹ்வின் திரு உள்ளம் என்ன என்பது இப்போது அவருக்குப் புரியலாயிற்று. அப்போது நேரம் பிற்பகல், மூன்றாவது தொழுகைக்கான பதினோராவது 'டாலி' மண்டியிட்டார். உள்ளம் உருக அல்லாஹ்வை நினைந்து தொழுகை நடத்தினார். ''யா, அல்லாஹ்! யா, குதா! தங்கள் திருவுள்ளம் இதுதான் என்பதை இப்போது தான் புரிந்து கொண்டேன். இந்த நிமிடம் முதல் ராமராயரின் நட்பை உதறிவிட்டு இஸ்லாத்தின் ஏற்றத்துக்காகவே இந்த உயிரை அர்ப்பணிப்பேன். தாங்கள் மனம் வைத்து என் செயல்களை வெற்றியாக்கித் தர வேண்டும்'' என்று நமாஸ் செய்து எழுந்தார். உள்ளத்தை உறுதியாக்கிக் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தவரின் முன்னே நிஜாம் ஷாவின் தூதுவர்கள் வந்து வணங்கிக் கடிதத்தை நீட்டினார்கள். அதை வாங்கிப் படித்த ஆதில்ஷா தாம் தீர்மானித்த முடிவை அவர்களிடம் தெளிவாக்கி அனுப்பினார். ஆதில்ஷாவை இணங்க வைக்கச் சிரமப்பட வேண்டி இருக்கும் என்று வந்தவர்கள் சிந்தை மகிழ்ந்து திரும்பினார்கள்.

விஜயநகரத்துப் பாசறையிலே வெற்றிச் செருக்கோடு அமர்ந்திருந்த ராமராயரின் உள்ளத்தில் புயல் வீசிக் கொண்டிருந்தது. சாம்ராஜ்யத்தின் பாதாளச் சிறையிலிருந்து ஒரு கைதி தப்பிச் செல்வதென்றால் அதை விட அவமானம் வேறு என்ன வேண்டும்? கைதி தப்பிவிட்ட செய்திவந்த கையோடு சித்திஹானனுடன் அவன் போரிட்டு அவனைக் கொன்ற காட்சியையும் வந்து கூறினார்கள் ஒற்றர்கள். சித்திஹானனோடு தான் வகுத்திருந்த திட்டங்களெல்லாம் சீரழிந்ததை— எண்ணிச் சினங் கொண்டிருந்தார். இது பற்றி யாரையும் எதுவும் கேட்கவில்லை. ஆனால் பொறுப்புள்ள ஒவ்வொருவரின் உள்ளமுமே இதைப் பற்றிக் கேள்விகளால் குடைந்து கொண்டிருந்தது. ராமராயர் எந்த நிமிஷம் யாரைக் கூப்பிட்டு என்ன கூறுவாரோ என்று நடுங்கினார்கள்.

தனிமையிலே குழம்பிய உள்ளத்துடன் உட்கார்ந்திருந்தான் வேங்கடாத்திரி. அப்போது அவனைத் தேடிக் கொண்டு வந்தான் ஒரு வீரன். அவன் கையில் வேங்கடாத்திரியின் முத்திரை மோதிரம் இருந்தது. தன்னைக் காத்துக் கொள்ள ஓடி ஒளிந்த பாமினிப் படைகளை விரட்டிச் சென்ற விஜயநகரத்துப் படையணியில் போரிட்ட வீரன் அவன். வேங்கடாத்திரிதான் அதற்குத் தலைமை தாங்கிச் சென்றான்.

''தங்கள் கையிலிருந்து இந்த மோதிரம் போர்க்களத்திலே தவறி விழுந்து விட்டது போலிருக்கிறது. என் கண்ணில் பட்டது. கொண்டு வந்தேன்'' என்று கூறி அதை நீட்டிய வீரனை நிமிர்ந்து பார்த்தான் வேங்கடாத்திரி. சலனமற்றிருந்தது அந்த வீரனின் முகம். மௌனமாக மோதிரத்தை வாங்கிக் கொண்ட வேங்கடாத்திரியின் உள்ளத்திலோ சிந்தனைகள் சூறாவளியாயின. (தொடரும்)

கடல்

கலைபாரதி

பாரதனில் நீர்க்கடலைப்
    படைத்த ஆளெங்கோ? – அந்த
நீர்தியோ நீலவண்ணம்
    அடைத்த ஆளெங்கோ?
ஓரமெல்லாம் சிறுமணலை
    உகுத்த ஆளெங்கோ? – பரி
பூரணமாம் ''அவன்''கருத்தை
    வகுத்த ஆளெங்கோ?
கொட்டிக்கிடக்கும் நீர்முழுதும்
    கொள்ள ஆளெங்கோ?–அதைக்
கொண்டுபோய் உப்பாக்கி
    அள்ள ஆளெங்கோ?
எட்டுத்திசை மீன்பிடித்து
    ஏற்ற ஆளெங்கோ?–அதை
எங்கும்விற்றுக் காசாக்கி
    மாற்ற ஆளெங்கோ?
தும்பைமலர் மலையலையாய்த்
    தூற்றும் ஆளெங்கோ?–மாலை
தொடுத்ததனை நிலமகள்மேல்
    சாற்றும் ஆளெங்கோ?
எம்பெருமான் பள்ளியங்கே
    கொண்ட ஆளெங்கோ?
கும்பமுனி தமிழ்க்கடல்போல்
    கண்ட ஆளுண்டோ?

குடும்ப கௌரவம்

பி.எஸ்.ராமையா



பட்டண வாழ்க்கையில் பெரும்பாலோருக்கு அக்கம் பக்கங்களில் யார் வசிக்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள், எப்படி வாழ்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளப் பொழுது கிடையாது. அதில் கவனம் செலுத்திக் கட்டி வராது. ஆனால் அக்கம் பக்கங்களில் மட்டுமல்ல, கண்ணில் படுகிறவர்களை யெல்லாம் கவனித்து அவர்களைப் பற்றி அறிய முயலாவிட்டால் எனக்குக் கட்டி வராது. என் தொழில் அப்படிப்பட்டது. இருபத்துநாலாம் எண்ணில் வசிக்கும் ராகவலுவுக்குப் பக்கத்து வீட்டாரைப் பற்றி அறியாவிட்டால் தூக்கம் வராது. அது அவர் சுபாவம்.

அன்று காலையில் காப்பி சாப்பிடுவதற்கு முன்பே ராகவலு எங்கள் வீட்டுக்கு வந்து, ''இருபத்து மூணில் ஏதோ குடும்பத் தகராறு போலிருக்கிறதே'' என்று என்னுடைய வாயைக் கிளறினார்.

அந்தத் தெருவில் எங்கள் வீட்டு எண் இருபத்திரண்டு. அடுத்த கிழக்கு வீடு இருபத்து மூன்றில் திருவாரூர் சுந்தர்ராஜ் வசித்தார். அதற்கு அடுத்த வீட்டில் ராகவலு.

அவருடைய நண்பர்கள் முழுப் பெயரையும் சொல்லி, ''மிஸ்டர் சுந்தர்ராஜன் இருக்கிறாரா?'' என்று கேட்பது என் காதில் படும். அவருடைய மனைவி நாகரிகமாக அவரை 'ராஜ்' என்று கூப்பிடுவாள்.

அவர் சென்னைக்கு வந்து குடியேறி ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு மாதத்துக்கு முன்தான் முதன் முதலாக மரகதவல்லி அம்மாள் மகன் வீட்டுக்கு வந்தாள். அந்த அம்மாள் வந்ததிலிருந்தே அந்தக் குடும்பத்தில் கலங்கல் தொடங்கி விட்டது என்பது எனக்குத் தெரியும். மாமியாருக்கும், மருமகள் வசந்தாவுக்கும் ஒத்து வரவில்லை.

மரகதவல்லி வந்துசேர்ந்த அன்று மாலையில் என் மனைவி என்னிடம், ''பக்கத்து வீட்டுக்கு அவருடைய அம்மா வந்திருக்கிறாளே, பார்த்தீர்களோ? காதிலே வெப்பு ஓலையைத் தவிர வேறு நகையில்லை. சேலை கூட நூல்தான். இருந்தும் பார்த்தால் யாரோ ஜமீன்தாரிணி மாதிரி இருக்கிறது. முகத்தில் தான் என்ன களை! ரொம்பச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்களாம். இந்த மகன் தலையெடுத்துத் தாயை இந்தக் கோலமாக்கி விட்டார் என்று தெரிகிறது'' என்றாள்.

நானும்தான் அந்த அம்மாளைப் பார்த்தேன். நிறையச் சரிகை போட்ட ஒரு பட்டுச் சேலையைக்கட்டி, நாலைந்து நகைகளைப் பூட்டித் தலை மேல் ஒரு சிறிய கிரீடத்தையும் மாட்டி விட்டால் யாரோ மகாராணிதான் என்று யாரும் அவள் முன் மண்டியிட்டு வணங்கச் சித்தமாகி விடுவார்கள். அந்த அம்மாள் தோற்றத்திலும், முகத்திலும், நின்ற நிலையிலும் அப்படி ஒரு நிமிர்வு இருந்தது. எதிர்ப்பட்டவர் நெஞ்சில் பயபக்தியை மூட்டும் ஓர் ஒளியிருந்தது அவள் கண்களில்.

அந்த அம்மாள் மெய்யாகவே சீரும் சிறப்புமாக வாழ்ந்தவள்தான். பிறந்த வீட்டிலும் பெரும் செல்வத்தில் திளைத்து வளர்ந்து, கொடிமங்கலம் மேலைப் பண்ணையின் ஏராளமான சொத்தை ஆளப் புகுந்தவள். அவளுடைய மகன் தலையெடுத்து அவளை இந்தக் கோலமாக்கி விட்டான் என்று என் மனைவி செய்த ஊகம் முற்றிலும் சரியல்ல. மரகதவல்லியின் கணவர் கோவிந்தராஜுவே சொத்தில் பெரும் பகுதியைப் போக வாழ்வில் சூறையாடி விட்டார். மொத்தச் சொத்தில் ரூபாய்க்குப் பத்து பைசா அளவுதான் மகன் கைக்கு மாறியது. சுந்தர்ராஜ் தந்தையின் அடிச்சுவட்டிலேயே செல்லாவிட்டாலும் சொத்தைக் கரைக்கும் பணியை வேறு வழிகளில் முழுமையாக்கினார்.

சுந்தர்ராஜ் குடும்பத் தலைவன் ஆன பொழுது திருவாரூரில் அவர்களுடைய பெரிய வீட்டில் நாற்பது அறைகளில் (குளிக்கும் அறையையும் சேர்த்து) ஒன்பது தனித் தனி ரேடியோக்கள் இருந்தன. ஆறு மாதங்களுக்குள் அவர் ஏழு கார் மாற்றினார். ஏழாவது வண்டியை அவர் பெங்களூருக்குப் போய் இருபத்தையாயிரம் ரூபாய் அதிகம் கொடுத்து வாங்கி வந்தார். இந்தியாவிலேயே அந்த மாடல் வண்டி இரண்டுதான். ஒன்று சுந்தர்ராஜிடமிருந்தது. மற்றது வடக்கே யாரோ மாஜி மகாராஜாவிடம் இருந்தது.

பிழைப்புக்காகப் பொரிக பிடித்துச் சுந்தர்ராஜ் சென்னையில் வேலைக்குச் சேரும் மட்டத்துக்குத் தகப்பனும் மகனும் சொத்தை வைத்து விளையாடித் தீர்த்தார்கள்.

சொத்து முழுதும் கரைவதற்கு முன்பே சுந்தர்ராஜுக்குக் கலியாணம் ஆகி விட்டது. வசந்தாவைப் பெற்றவர்கள் செல்வந்தர்கள் அல்ல. மகள் செல்வத்தில் சிறந்து வாழ்வாள் என்ற ஆசையில் அவளைச் சுந்தரராஜுக்குக் கட்டி வைத்தார்கள். மூத்த மகளைக் கையில் ஏந்திக் கொண்டு அவள் கணவனுடன் சென்னையில் வாழ வந்து சேர்ந்தாள். பொரித, செல்வாக்கின் பயனுக

அவருக்கு மாதம் இருநூற்று இருபது ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. அரசாங்கச் சார்புகொண்ட ஒரு தொழில் நிறுவனத்தில்.

நீண்டு பழகிய கைகள் மாதம் இருநூற்றிருபது ரூபாய் அளவுக்குக் குறுகும்படி கட்டாயப்படுத்தப்பட்டதில் மூட்டுகளிலெல்லாம் நோவு கண்டது. சுந்தரராஜ் பல்லைக் கடித்து நோவைத் தாங்கிக் கொண்டு வாழ்க்கை நடத்தினார். அந்த வருமானத்திலிருந்து மாதா மாதம் தாய்க்கு முப்பது ரூபாய் அனுப்ப வேண்டியிருந்ததுதான் அவருடைய முதுகை முறிக்கும் சுமையாகத் தோன்றியது.

அவர் அந்த வீட்டுக்கு வந்து ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன. இப்போது அவருக்கு மூன்று குழந்தைகள். சம்பளத்தில் நாற்பத்து ஐந்து ரூபாய் உயர்வு.


மகனைச் சென்னைக்கு அனுப்பி விட்டு மரகதவல்லி அம்மாள் கொடிமங்கலத்திலேயே ஒரு சிறு வீட்டில் தனியாக நாளைக் கழித்துக் கொண்டிருந்தாள். இப்போதும் அவள் சென்னைக்கு வந்திருக்க மாட்டாள். மகனிடமிருந்து இரண்டு மாதங்களாகப் பணம் வரவில்லை. நெருக்கடி தாளாமல் அவள் மகனுக்குக் கடிதம் எழுதினாள். சுந்தரராஜ், ''இங்கே வீட்டில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல் சுகமில்லாமல் வைத்தியச் செலவு கட்டுமீறிப் போய் விட்டது. அதுதான் காரணம். அடுத்த மாதம் எப்படியாவது அனுப்பி வைக்கிறேன்'' என்று பதில் எழுதினார்.

மகன் உடம்புக்கு என்னமோ ஏதோ என்று பதறிப் போய் மரகதவல்லி அம்மாள் எஞ்சியிருந்த இரண்டொரு பாத்திரங்களை விற்று ரயில் செலவு செய்து வந்துவிட்டாள்.

அவரைப் பற்றிய இவ்வளவு விவரங்களும் வசந்தாவுடன் என் மனைவி பிடித்த நட்புறவின் பயனாகத்தான் எனக்குத் தெரியும். என் மனைவி ஏதாவது பத்திரிகையில் நிருபராகச் சேர்ந்திருக்க வேண்டியவள். கண்டதைக் கேட்டதை அவள் எவ்வளவு தெளிவாக ஒரு கமா, செமிக்கோலன்கூட விடாமல் மனத்தில் பதிய வைத்துக் கொண்டு வந்து 'ரிப்போர்ட்டு' செய்கிறாள்!

வசந்தா என் மனைவியிடம், ''உங்கள் சம்பளம் இங்கே குடும்பத்துக்கே பற்றவில்லை என்று எழுதி விடுங்கள் என்று மூன்று வருஷங்களாக வாதாடுகிறேன். அவருக்குத் தைரியமில்லை. கடைசியில் போய்ச் சாக்கு எழுதி அம்மாளையே வரவழைத்துக் கொண்டு விட்டார். இந்த மாதிரி ஆண் பிள்ளைகளைக் கட்டிக் கொண்டு என்ன செய்ய முடியும் ?'' என்று முறையிட்டாளாம்.

அதைச் சொல்லிவிட்டு என் மனைவி, ''அப்படி எழுதி விட்டால் அந்தக் கிழவி



பாவம் கிராமத்தில் தனியாகச் சாப்பாட்டுக்கு என்ன செய்வாளாம்?'' என்று என்னைக் கேட்டாள்.

''மகன் மாதிரி அவளும் உழைத்துப் பிழைத்துக் கொள்ளட்டுமே என்ற நினைப்பாக இருக்கலாம்'' என்றேன் நான்.

என் மனைவி, ''அந்தக் குடும்பம் இருந்த இருப்பையும், வாழ்ந்த வாழ்வைப் பற்றியும் வசந்தா சொல்வதைக் கேட்டால் அந்த வட்டாரத்தில் அந்த அம்மாளிடம் வேலை வாங்கிக் கொள்ள யாரும் முன்வர மாட்டார்கள் என்று தோன்றுகிறது. இந்த நிலையிலும் அந்த அம்மாள் தெரு வழி போனால் ஆண் பிள்ளைகள்கூட எழுந்து மரியாதையுடன் நிற்பார்களாம்'' என்றாள்.

அவளாகவே தொடர்ந்து, ''அந்த அம்மாளுடைய பார்வை, பேச்சு, குரல் எல்லாவற்றிலும் ஒரு பெரும் போக்குத் தெரிகிறது. கொஞ்சம்கூட அற்பத்தனம், சுரசுரப்பு எதுவும் கிடையாது. ராஜ களை என்பது அதுதான் போல் இருக்கிறது'' என்றாள்.

''ராணி களை என்று சொல்லு'' என்று சொல்லிச் சிரித்தேன்.

மரகதவல்லிக்கும் வசந்தாவுக்கும் ஒத்துக் கொள்ளவேயில்லை. முதியவளைப் பற்றி என் மனைவி சொன்னதிலிருந்தும், வசந்தாவின் மனப் போக்கைப் பற்றி ஓர் அளவு அறிந்திருந்தாலும் ஒத்துக் கொள்ளாததற்குக் காரணம் யார் என்பது எனக்கு விளங்கியது.

போன செப்டம்பர் அக்டோபரில் சென்னையில் திடீரென்று தோன்றிய அரிசிப் பஞ்சம் அந்தக் குடும்பத்தில் அடர்ந்திருந்த புகைச்சலுக்கு ஆதாரமான தீக் கங்கை ஊதிக் கனிய வைத்துச் சுவாலையாக எழுப்பிவிட்டது.

கொடிமங்கலம் மேலப் பண்ணை கோவிந்தராஜன் மகன் வீட்டில் அரிசிப் பஞ்சம்! வேளைக்கு ஐம்பது இலை போட்டுப் பரிமாறிய அந்த வீட்டுத் தலைவிக்கு அரிசித் தட்டு.

நல்ல காலமாகச் சுந்தரராஜ் வேலை செய்த நிறுவனத்தில் ஊழியர்களுக்காகச் சர்க்கார் வழியாக அரிசி வரவழைத்துப் பகிர்ந்து கொடுத்தார்கள். அந்தக் குடும்பத்துக்கு வாரத்துக்கு எட்டு லிட்டர் அரிசிதான் கிடைத்தது. அதாவது பழைய கணக்கில் நாலு படிக்குக் கொஞ்சம்கூட.

கணவன் மனைவியும், குழந்தைகளும் மட்டும் இருந்திருந்தால் அது ஒரு வேளை பற்றிப் போயிருக்கும். வசந்தாவால் பத்துப் பாத்திரம் தேய்த்து, வீட்டைப் பெருக்கிக் கழுவும் வேலைகளெல்லாம் செய்ய முடியாது. வேலைக்காரிக்குக் கட்டாயமாகச் சோறு கொடுத்தாக வேண்டும். மரகதவல்லியம்மாளும் வந்து சேர்ந்து விட்டதால் வாரத்தில் ஆறாவது நாளே உலைக்கு அரிசி இல்லை. கோதுமையைக் கொண்டு குறையைச் சமாளிக்க வசந்தாவுக்குச் சோம்பல். 'எனக்கு அதெல்லாம் தெரியாது' என்றாள்.

மரகதவல்லி, ''அதென்ன பெரிய வித்தையா வசந்தா? அக்கம் பக்கத்தில் கேட்டால் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஒரே ஒரு நாள் செய்தால் தானாகப் பிடிபட்டுப் போகிறது. பெண்ணாகப் பிறந்தவளுக்குச் சமையலில் புதுப் பக்குவமும், பணியாரமும் செய்யக் கற்றுக் கொள்ளுவது ஒரு பெரிதா?'' என்று கேட்டாள்.

வசந்தா, ''ஆமாம், புதுசு புதுசாக் கற்றுக் கொண்டு ஆக்கிப் போடத்தானே நான் இந்தக் குடும்பத்துக்கு வந்திருக்கிறேன்?'' என்று வாய்த் துடுக்காகப் பதில் சொன்னாள்.

மரகதவல்லி, ''அவரவர் கொடுத்து வைத்த அளவுக்குத்தான் பொசிப்பும். நீ வந்து சேர்ந்தபோது ராசாத்தியாக இருந்து ஆளற அளவிலேதான் இருந்ததனம்'' என்று பெருமூச்செறிந்தாள்.

வசந்தா அதைத் தவறாகவும் பொருள் செய்து கொண்டாள். அவள் ஆங்காரத்துடன், ''நான் காலடி வைப்பதற்கு நெடுநாளைக்கு முன்பே இந்தக் குடும்பத்தைத் துடைத்து வெறுமையாக்கும் வினை தொடங்கி விட்டது. அந்த அதிர்ஷ்டம் நான் கொண்டு வந்ததில்லை. இருந்ததாம்! மகன் தலையெடுத்து ஓர் அஞ்சு வருஷத்துக்குத் தாங்கல்லை, இருந்தது'' என்று சீறி விட்டாள்.

முதல் தடவையாக மரகதவல்லி அம்மாள் பேச்சில் சிறிது சூடு தட்டியது. அதுவும் ஓரிரு டிகிரி அளவுதான். ''இவன் செலவுக்கு இன்னொரு பத்து வருஷங்களுக்காவது இவங்க அப்பா விட்டு வைக்காமல் போனது தப்புத்தான்'' என்று சொல்லி ஒதுங்கினாள்.

எங்கள் பேட்டையில் அரிசி விற்கும் கடை ஒவ்வொன்றின் இரு பக்கங்களிலும் ஆண்கள் பெண்களின் தனித் தனி 'க்யூ' வரிசை இருநூறு மீட்டர் நீளம் நின்றது. காலையிலிருந்து இருட்டி ஒன்பது பத்து மணி வரையிலும் ஆண்களும் பெண்களும் கையில் ஒரு பையுடன் கடைத் தெருவை வட்டமிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

சுந்தரராஜ் வீட்டில் அரிசிக்குத் தட்டு. ஆனால் கடைத் தெருவுக்குப் போய் வரிசையில் நின்று கிடைத்தவரை வாங்கி வரலாமென்று அந்தக் குடும்பத்தில் யாருக்குமே தோன்றவில்லை போலும். அந்த வீட்டுக் குழந்தைகள் பள்ளிக்குப் போகும் போது வரும்போது கடைத் தெருவில் கண்ட காட்சிகளைப் பற்றி வீட்டில் வந்து சொல்லாமலா இருந்திருப்பார்கள்! பெரியவர்கள் வெளியே போய் வந்தபோது அதெல்லாம் கண்ணில் படாமல்தானிருந்திருக்குமா?

மற்றவர் கண்ணில் பட்டதோ என்னவோ, அது மரகதவல்லி அம்மாள் கண்ணில் பட்டிருக்கிறது. அதிலிருந்துதான் பூசல் எழுந்து முற்றியது.

அந்தக் குடும்பம் வளத்துடன் வாழ்ந்த காலத்தில் புரட்டாசி பிறந்தவுடன், அவர்கள் வீட்டில் ஒரு மூட்டை அரிசி எடுத்துத் தனியாக வைத்துவிடுவாள் மரகதவல்லி அம்மாள். வாசலில் வரும் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் ஆழாக்கு அளவு கொள்ளும் ஒரு கிண்ணத்தால் அள்ளிப் போடச் சொல்வாள். கடைசிச் சனிக்கிழமையன்று நூறு பேருக்காவது சாப்பாடு போடுவாள். பின்னால் நொடித்துப் போய் மகன் அனுப்பிய முப்பது ரூபாய்க்குள் வாழ்ந்த நேரத்திலும் அந்த அம்மாள் புரட்டாசி சனிக்கிழமைகளில் இயன்ற அளவு பிச்சை அரிசி போட்டு, கடைசிச்



வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க பேச, எழுத, சுலபமாகக் கற்க பெரிய புத்தகம்.

விலை தபால் செலவோடு ரூ. 6.25

ஐசுவரியம் (குடிசைத் தொழில்)

சோப், இங்கி, பத்தி, ஸ்னோ போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது.
விலை ரூ. 4-00. வி. பி. 0-85.

தமிழ் ஹிந்தி சுபோதினி

தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும்.
விலை ரூ. 2-50. வி. பி. 0-85.

குடும்ப இலகு வைத்தியம்

பச்சிலை மூலிகைகள் கொண்டு ஆரோக்கியம், பலம்பெற வழிகாட்டும்.
விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)


கால்நடைகளின் நோய்களைப் போக்கும்.
விலை ரூ. 2-00. வி. பி. 0-85.

வாணி புக் டிபோ (K)

3, மலைய பெருமாள் தெரு. ரூம் நெ. 5
சென்னை-1

எக்ஸிமா சொறி

உங்கள் சருமத்தில் சுமார் 5 கோடி மெல்லிய துவாரங்களும் மடிப்புகளும் உள்ளன. கிருமிகள் அவைகளில் மறைந்திருந்து, தாங்க முடியாத அரிப்பு, வெடிப்பு, மேலாகப் பரவும் படை, தோல் உரிதல், எரிச்சல், பருக்கள் படர்தாமரை காலில் அரிப்பு முதலிய உபாதைகளை உண்டு பண்ணுகின்றன. சாதாரண சிகிச்சைகள் தற்காலிகமான நிவாரணம் அளிக்கும். ஏனெனில், அதன் மூலம் உபாதைகளுக்கு மூலகாரணமான கிருமிகள் அழிவதில்லை. விஞ்ஞான முறையில் தயாரித்த இந்த மருந்து நிக்ஸோடெர்ம் (Nixoderm) துரிதமாக இந்தக் கிருமிகளைக் கொன்று விடுகிறது. மற்றும் உங்கள் சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் வசீகரமாகவும் இருக்கச் செய்கிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். சரும உபாதைகளின் மூலகாரணமான கிருமிகளை நிக்ஸோடர்ம் நிச்சயமாக அழிக்குமென்ற பூர்ண நம்பிக்கையுடன் வாங்குங்கள்.



தென் இந்திய ஆபீஸ்:
5/149, பிராட்வே, சென்னை-1



சனிக்கிழமையன்று. இரண்டு பேருக்காவது சாப்பாடு போட்டு வந்தாள்.

இந்த ஆண்டு புரட்டாசி பயங்கரமான அரிசிப் பஞ்சத்தை உடன் அழைத்துக் கொண்டு வந்து பிறந்தது. ''வாசலில் வந்து நின்று 'கோவிந்தா கோவிந்தா' என்று குரல் கொடுத்தவர்களுக்கு ஒரு பிடி அரிசி அள்ளிப் போட வகையில்லாமல் முடக்கி விட்டாயே, பெருமானே! இப்படி ஒரு விளையாட்டா உனக்கு?'' என்று அவள் மனத்துக்குள்ளேயே புழுங்கிக் கொண்டிருந்தாள்.

கடைசிச் சனிக்கிழமையில் நவராத்திரி விசேஷம் வேறு கூடிக் கொண்டது. அன்று ஒரு நாளாவது இரண்டு பேருக்காவது சாப்பாடு போடவேண்டும் என்று விரும்பினாள் மரகதவல்லி அம்மாள். வசந்தா அதற்குச் சம்மதிக்காவிட்டால் யாராவது இருவருக்கு அரிசியும் செலவுப் பணமுமாகவாவது கொடுத்துச் சமைத்துச் சாப்பிடச் சொல்லி விடலாம் என்று தீர்மானித்தாள்.

மகனிடம் கேட்டு இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு கையில் பையுடன் புறப்பட்டாள். அவள் என்ன வாங்கப் போகிறாள் என்பது சுந்தரராஜனுக்கும் வசந்தாவுக்கும் தெரியாது. ஒரு கடை வாசலில் நின்ற பெண்கள் 'க்யூ' வரிசையில் போய்ச் சேர்ந்து கொண்டாள் மரகதவல்லி அம்மாள். கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் விரல்கடை அளவாக நகர்ந்து கடை வாசலை நெருங்கிக் கொண்டிருந்தாள். அந்த நிலையில்தான் அந்தப் பெண் வந்து சேர்ந்தாள். இருபத்தெட்டிலிருந்து முப்பது வயதிருக்கும். பெரிய பணக்கார வீட்டுப் பெண் என்று சொல்ல முடியாவிட்டாலும் சீரான வாழ்வுக்கு வகையுடையவள் என்று காட்டும் தோற்றம். வலது கையில் ஒரு துணிப் பை தொங்கியது. இடக் கையில் ஒரு நாலு வயதுப் பையனைப் பற்றியிருந்தாள்.

மரகதவல்லி அம்மாளைத் தாண்டிச் செல்ல இருந்த அந்தப் பெண் அந்த முகத்தைப் பார்த்து நின்றாள். அந்த முகத் தோற்றம் அவள் நெஞ்சில், நம்பிக்கையை, ஆசையை மூட்டியது. அவள் மரகதவல்லி அம்மாளிடம் வந்து, ''நீங்கள் கார்டில்தானே வாங்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

மரகதவல்லி அம்மாளுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. ''கார்டா?'' என்றாள்.

அந்தப் பெண், ''இது கூட்டுறவுச் சங்கக் கடை. இதில் பணம் கட்டிப் பங்கு சேர்ந்திருப்பவர்களுக்கு ஒரு கார்டு கொடுப்பார்கள். நீங்கள் அப்படி வாங்கினால் அதில் எனக்கு இரண்டு லிட்டர் கொடுக்க முடியுமா என்று கேட்க நினைத்தேன். நாளைக்கே அரிசியைத் திருப்பிக் கொடுத்துவிடுவேன். நீங்கள்தான் கார்டு என்றால் என்ன என்று கேட்டுவிட்டீர்களே?'' என்றாள்.

''உன் பையையும் கொடு. உனக்கும் சேர்த்துக் கேட்டு வாங்குகிறேன்.''

''ஒவ்வொருத்தருக்கும் இரண்டு லிட்டர் தான் கொடுப்பார்கள். ஒருத்தரே இரண்டு குடும்பங்களுக்கு வாங்க முடியாது'' என்று சிரித்துக் கொண்டு தொடங்கிய அந்தப் பெண்ணின் முகம் சட்டென்று மாறியது; அதில் கவலை படர்ந்தது. அவள் ''நான் இந்த வரிசைக் கோடியில் போய்ச் சேர்ந்து கடை வாசலுக்கு வந்து சேருவதற்குள் இன்றைக்கு அரிசி அளந்து தீர்ந்தது என்று சொல்லி விடுவார்கள்...ஊம்...'' என்று பெருமூச்சு விட்டாள்.

அவள் முகத்திலிருந்த துன்பம் மரகதவல்லியம்மாளின் நெஞ்சைத் தொட்டது. ''ஏன்? வீட்டில் கொஞ்சம் கூட அரிசி இல்லையா?'' என்று கேட்டாள்.

அந்தப் பெண், ''ஒரு மணி அரிசிகூட இல்லை. குழந்தைகள் சோற்றைத் தவிர வேறு எதையும் தொட மாட்டோம் என்கிறார்கள். இவருடைய அப்பாவுக்கு ஆபீஸிலே அரிசி கொடுக்கிறார்கள். புதன்கிழமை வாங்க வேண்டும். திங்களன்று அவர் ஆபீஸ் வேலையாக வெளியூர் போனார். நேற்றே திரும்பி விடுவதாகச் சொன்னார். இன்றைக்கும் வரவில்லை. குழந்தைகள் இருவரும் கொலைப் பட்டினி. காலையில் அவர் வந்து விடுவார் என்று பார்த்திருந்து பெரியவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டு வருவதற்கு நேரமாகி விட்டது. அவனுக்குப் பள்ளிக்கூடத்திற்குச் சோறு கட்டி அனுப்ப வேண்டும்'' என்றாள் கவலை நிறைந்த குரலில்.

''நீ போய் வரிசையில் நிற்க வேண்டாம். அப்படிப் போய் நில்லு. நான் வாங்கி வந்து கொடுக்கிறேன்.''

அந்தப் பெண், ''உங்கள் வீட்டுக்கு?'' என்று கேட்டாள்.

மரகதவல்லி அம்மாள் ''அதைப் பற்றி என்ன? நீ இரு. இதோ வருகிறேன்'' என்றாள். பின்னாலிருந்த ஒருத்தி, ''ஊம், முன்னே நகரு பெரியம்மா. பேசிக்கிட்டே நின்றால் பின்னாலே நிக்கிறவங்க என்ன செய்யறது?'' என்று விரட்டினாள்.

மரகதவல்லி அம்மாள் வரிசையுடன் நகர்ந்து இரண்டு லிட்டர் அரிசியை வாங்கி வந்து அந்தப் பெண்ணிடம், ''இந்தா, உன் பையில் கொட்டிக் கொள்'' என்று நீட்டினாள்.

அந்தப் பெண், ''இன்று ஒரு நாளைக்கு எனக்கு ஒரு லிட்டர் இருந்தால் வெள்ளம். நாளைக்குள் அவர் வந்து விடுவார். வரா விட்டாலும் நான் வேறு யாரையாவது பிடித்து வாங்கிக் கொடுக்கச் சொல்லுகிறேன். பாதி கொடுங்கள்'' என்றாள்.

அவளே மரகதவல்லி அம்மாளைப் பக்கத்திலிருந்த ஒரு கடைக்கு அழைத்துச் சென்று படி வாங்கி அரிசியை அளந்து பாதி எடுத்துக்கொண்டு பணத்தை நீட்டினாள். மரகதவல்லியம்மாள் புன்னகை செய்து தலையை ஆட்டி, ''எங்கள் குடும்பத்தில் எதெதையோ விற்றோம். இன்னும் அரிசி விற்கவில்லை. பணத்தை வைத்துக் கொள். சீக்கிரம் வீட்டுக்குப் போய் வடித்துக் குழந்தைகளுக்குச் சோறு போட வழியைப் பார். உன் பெயர் என்ன?'' என்றாள்.

''ருக்மிணி. நீங்கள் எங்கே குடியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள். இது யாரோ உயர்தரத்து ஜீவன் என்று அந்தப் பெண்ணுக்குப் புரிந்து விட்டது.

மரகதவல்லி, ''ஏன், உங்கள் வீட்டுக்காரர் அரிசி வாங்கி வந்தவுடன் இதைக்

கொண்டு வந்து திருப்பிக் கொடுக்கவா?'' என்று கேட்டுச் சிரித்தான்.

ருக்மிணி, ''அதற்கு எனக்குத் தைரியம் வரவே வராது. உங்களை மறுபடியும் பார்த்துப் பேச வேண்டும் என்று தோன்றி விட்டது. அதுதான்'' என்றாள்.

மரகதவல்லி மகன் பெயரையும் தெரு, வீட்டு விவரங்களையும் சொல்லி விட்டு, ''இந்த அரிசியைப் பற்றிப் பேசாதிருப்பதானால் எப்போது வேண்டுமானாலும் வரலாம்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவள் வீட்டுக்குள் நுழைந்தபோது சுந்தரராஜின் மூத்த மகன், ''என்ன வாங்கி வந்தீங்க, அப்பம்மா'' என்று கூவிக்கொண்டு ஓடி வந்து பையைப் பற்றி இழுத்தான்.

மரகதவல்லி ''அரிசிடா ராஜா, கொட்டி விடப் போகிறது. விடு'' என்றாள்.

சுந்தரராஜுவும் வசந்தாவும் திடுக்கிட்டு ஒரே குரலில், ''அரிசியா?'' என்றனர்.

மரகதவல்லி பதில் சொல்லுவதற்குள் பையன் அவளிடமிருந்து பையை வாங்கிவிட்டான். வசந்தா அவன் கையிலிருந் து அதைப் பறித்து உள்ளே கைவிட்டுப் பார்த்து, ''என்ன இது வீடு வீடாகப் படி ஏறிப் பிச்சை எடுத்தீர்களா?'' என்று கேட்டாள்.

மரகதவல்லியம்மாளின் உடல் குன்றியது. மகனிடம் அவள், ''நாளை மறுநாள் புரட்டாசி கடைசிச் சனிக்கிழமை. இரண்டு பேருக்காவது சோறு போட வேண்டுமென்று தோன்றியது. எத்தனையோ ஆண்டுகளாக விடாமல் நடந்து வருகிறது. அதற்காக நானும் போய் வரிசையில் நின்று கடையில் வாங்கினேன்'' என்றாள்.

வசந்தா, ''பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும். கடையிலே தலா இரண்டு லிட்டர் அரிசி கொடுக்கிறார்களாம். இது மூன்று ஆழாக்குகூட இராது'' என்றாள்.

மரகதவல்லி அவளுக்குப் பதில் சொல்லவில்லை. ''அதைக் கொடு. இருப்பதை ஆக்கி இருவருக்காவது போடுகிறேன்'' என்று சொல்லிப் பையை வாங்கிக் கொண்டு அப்பால் போய் விட்டாள்.

வசந்தா, ''ஒரு மாதமாக வீட்டில் அரிசி இல்லாமல் குழந்தைகளும் நாலும் அரை வயிறும் கால் வயிறும் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். அப்போதெல்லாம் இந்த மாதிரி போய் வாங்கி வரவேண்டுமென்று தோன்றவேயில்லை. பெற்ற மகனையும் அவர் குழந்தைகளையும் விடச் சாமி பெரிதாகி விட்டது. சாமி கொண்டாட விரும்பறவங்க கிராமத்தோடே இருந்து கொண்டாடிக் கொள்ளலாம். இங்கே வந்து இப்படிக் கழுத்தை அறுக்க வேண்டாம்'' என்று குரலை உயர்த்திப் படபடவென்று பொழிந்தாள்.

மரகதவல்லியம்மாள் அவளுக்குப் பதிலே சொல்லாமலிருந்ததுதான் வசந்தாவின் நெஞ்சில் அடக்க முடியாத ஆங்காரத்தை மூட்டியது. மாலையில் அவனாக வந்து என் மனைவியிடம் முறையிட்டு விட்டுப் போனான்.

சனிக்கிழமையன்று மரகதவல்லி அம்மாளால் சமைத்துச் சோறாகப் போட முடியவில்லை. அதனால் அரிசியை இரண்டு கூறாகப் பிரித்து, நாலு நாலணாக் காசும் சேர்த்துக் காலையில் கண்ணில் பட்ட இரண்டு கோவிந்தாப் பிச்சைக்காரர்களை அழைத்துப் போட்டு, ''வீட்டில் கொண்டு போய் ஆக்கிச் சாப்பிடுங்கள்'' என்று அனுப்பினாள்.

அதைக் கண்ட வசந்தாவுக்கு மேலும் கோபம் பொங்கி வந்தது.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு ருக்மிணி அவள் கணவனையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டாள். அவள் கணவரைக் கண்டவுடன் சுந்தரராஜ் மரியாதையுடன் எழுந்து, ''வாருங்கள், என் வீடு உங்களுக்கு எப்படித் தெரிந்தது? உட்காருங்கள்'' என்று வரவேற்றார்.

கோவிந்தராஜ் வேலை செய்யும் இலாகாவில் எல்லோருக்கும் மேலதிகாரிக்கு அடுத்த படியில் இருப்பவர்தான் ருக்மிணியின் கணவன் ராஜகோபாலன்.

ராஜகோபாலன் நாற்காலியில் அமர்ந்து, ''உங்கள் தாயார் எங்கே மிஸ்டர் சுந்தரராஜன்? மூன்று நாட்களுக்கு முன் அவர்கள் அப்படி உதவி செய்திராவிட்டால் குழந்தைகளின் நிலைமை என்ன ஆகியிருக்குமோ? நான் ஒரு பெரிய முட்டாள்தனம் செய்தேன். ஆபீஸில் யாரிடமாவது அல்லது ஒரு பியூனிடமாவது சொல்லி வைத்துவிட்டுப் போயிருக்கலாம். புதன்கிழமை அரிசியை வாங்கிக் கொண்டு போய் வீட்டில் கொடுத்திருப்பார்கள். நான் புதனன்றே திரும்பி விடலாமென்று எதிர்பார்த்ததால் ஏமாந்து விட்டேன். வீட்டில் இவளுக்கு வேறு ஆண் துணையும் இல்லை. அக்கம் பக்கங்களில் ஒரு லிட்டர் அரிசி இருந்தால் கடனாகக் கொடுங்கள் என்று கேட்டதற்குக் கையை விரித்து விட்டார்களாம்'' என்று மட மட வென்று பேசினார்.

சுந்தரராஜுக்கு அவர் சொன்னதன் பொருள் விளங்கவேயில்லை. தன் கணவருடைய மேலதிகாரியின் மனைவியை வசந்தா மலர்ந்த முகத்துடன் வரவேற்று உபசரித்

மதராஸ் மாடு ...



தான். சுந்தரராஜின் மூத்த மகன் ''பாட்டி! உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க'' என்று கூவினான். மரகதவல்லியம்மாள் வெளியே வந்தாள். ருக்மிணியைக் கண்டவுடன் முகம் மலர்ந்தது. ''வா, அம்மா. இவர்தான் மருமகப்பிள்ளையா?'' என்று ராஜகோபாலனைப் பார்த்தாள்.

அப்படி அவள் உறவு கொண்டாடி அணைத்தது ராஜகோபாலன், ருக்மிணி இருவர் நெஞ்சங்களையும் உருக்கி விட்டது. இருவரும் எழுந்து அந்த அம்மாள் காலைத் தொட்டுக் கும்பிட்டார்கள். ''மேன் மக்கள் மேன் மக்களே'' என்று நேரடியாகச் சொல்லாமலே சொல்லி அந்த அம்மாளுக்கு நன்றி கூறினார் ராஜகோபாலன்.

அவர்கள் போன பிறகு, சுந்தரராஜ், ''ஏனம்மா, அன்றைக்கு அரிசி ரொம்பக் குறைவாக இருக்கிறதே, கடையில் வாங்கினதுதானா என்று வசந்தா கேட்டபோது இவர்களுக்குப் பாதி கொடுத்து விட்டு வந்ததைச் சொல்லி யிருக்க வேண்டாமா? நான்கூடத் தப்பாக அல்லவா நினைத்து விட்டேன்'' என்றான்.

''அந்தப் பெண் பெயர் மட்டும்தான் எனக்கு அப்போது தெரியும். யார் என்ன என்பது தெரியாது. அவசரம், நெருக்கடி என்பவனுக்கு ஓர் அரைப் படி அரிசி கொடுத்ததை வெளியில் சொல்லிக் கொண்டிருப்பார்களா சுந்தரம்?''

வசந்தா, ''இங்கே வீட்டில் அரிசிக்குத் தானம் போடுகிறது....'' என்று தொடங்கினாள். சுந்தரராஜ், ''வசந்தா! விவரம் புரியாமல் ஏதாவது பேசாதே, நிறுத்து'' என்று அவளை அடக்கினார்.

மகன் தன் கட்சியில் சேர்ந்து மனைவியை அடக்கியதைக் கண்டு மரகதவல்லிக்கு வியப்பாக இருந்தது. அதற்குக் காரணம் இரண்டு நாளைக்குப் பிறகுதான் புரிந்தது.

மாலையில் வேலையிலிருந்து திரும்பிய சுந்தரராஜ், ''ராஜகோபாலன் மனைவி அவர்கள் வீட்டுக்கு வரவேண்டுமென்று உன்னை வற்புறுத்தி அழைத்தாளே நீ போக வேண்டாமா அம்மா?'' என்று கேட்டார்.

வசந்தா ஆவலுடன், ''என்னைக் கூடத் தான் கட்டாயம் வர வேண்டும் என்று சொல்லியிருக்கிறாள். அத்தையை நான் அழைத்துப் போய் வருகிறேன்'' என்றாள்.

சுந்தரராஜ், ''நீ இன்னொரு நாள் போகலாம் வசந்தா. முன்னே அம்மா மட்டும் போய் வந்து விட்டும்'' என்று சொல்லி அவளுக்குக் கண்ஜாடை காட்டி அப்பால் அனுப்பினார். பிறகு தாயிடம், ''பாரம்மா, நான் இந்த வேலையில் சேர்ந்து ஒன்பது வருஷங்கள் ஆகப் போகிறது. இது அரசாங்கப் பதவியும் இல்லை. அரசாங்கத்துக்குத் தொடர்பு உண்டு. அந்த மாதிரி ஓர் இரண்டுங்கெட்டான் நிறுவனம். இதில் ஒருவன் படியேறி உயர்வது என்றால் அது சிபாரிசின் பேரில்தான் நடக்கும். எங்கள் இலாகாவுக்குப் பெரிய அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர் ராஜகோபாலன் காட்டுகிற இடத்தில் கையெழுத்துப் போடுகிறவர். ராஜகோபாலன் நினைத்தால் எனக்குப் பதவியும் உயர்ந்து மாதம் இன்னொரு இருநூறு ரூபாய் கூடக் கிடைக்கும். அவர் உன்னைப் பெற்ற தாய் என்று வாயாரச் சொல்லி உன் காலைத் தொட்டுக் கும்பிட்டார். நீ அவரிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும். நடந்து விடும். நீ அவர் மனைவியைச் சிறிது முடுக்கி விட்டாலும் போதும்'' என்றார்.

அந்த அம்மாள் '' இதெல்லாம் என்னைத் தவிவிடச் சொல்கிறாயே, சுந்தரம். யோசித்துச் சொல்லுகிறேன்'' என்று பதில் சொன்னாள்.

மேலும் மூன்று நாட்களாகியும் அந்த அம்மாள் யோசித்து முடிவுக்கு வரவில்லை என்று தோன்றியது. அதனால் சுந்தரராஜ் மறுபடியும் அவளிடம் அதைப் பற்றிப் பேசினார். அப்போது வசந்தாவும் உடனிருந்தாள். ''இவங்க போய் ஒரு சொல் சொன்னால் போதும். அவர் நாளைக்கே அதற்கு வழி செய்து விடுவார். அத்தையிடம் அவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்'' என்று அவள் கணவனுக்குப் பலம் கட்டினாள். மரகதவல்லியம்மாள் அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு மகனிடம், ''நான் போய் அவர்களிடம் இதையெல்லாம் கேட்கக் கூடாது; கேட்கவும் முடியாது'' என்று சொல்லிவிட்டாள்.

வசந்தாவுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''ஆமாம். சொந்த மகனும் அவர் குடும்பமும் அரிசி இல்லாமல் திண்டாடும்போது 'க்யூ'வில் நின்று அரிசி வாங்கி அதை அவர்களுக்குத் தானம் கொடுக்கலாம். அது கூடும். மீதி அரிசியை யாரோ தெருவில் போகிறவர்களுக்குத் தட்சிணை சேர்த்து வைத்துக் கொடுக்கலாம். அது கூடும். மகனிடம் இருக்கிறதோ இல்லையோ, அதற்கெல்லாம் வம்பு செய்து பணம் வாங்கிக்கொள்ளலாம். அது கூடும். அந்த மகன் நல்லபடியாக வாழ ஒரு சொல் சொல்வது மட்டும் கூடாது; முடியாது. அவர்களைப் போய்க் கேட்டால் இந்தச் செல்வச் சீமாட்டியின் கௌரவம் குலைந்து போகும். கொடிமங்கலம் மேலைப் பண்ணை வீட்டு அம்மாளுடைய ராஜ நடை பங்கப்பட்டுப் போகும். இவளுடைய பெரிய மனித



கௌரவத்தை நிலைநாட்டக் கொடுத்த அரிசி உங்கள் பணத்தில் வாங்கியது. ஆனால் உங்களுக்காக அவர்களிடம் ஒரு பேச்சு சொல்ல முடியாதாம்'' என்று இடித்துரைத்தாள்.

அன்று காலையில் நான் காப்பி சாப்பிடுவதற்கு முன்பே ராகவனு குடுகுடுவென்று வீட்டுக்குள் வந்து என்னிடம், ''இருபத்து மூணில் ஏதோ குடும்பத் தகராறு போலிருக்கிறதே'' என்று என் வாயைக் கிளறினார்.

''குடும்பமென்றால் ஏதாவது சில்லறைத் தொல்லைகள், உரசல்கள் எல்லாம் இருக்கத்தான் இருக்கும்!''

ராகவனு, ''இது சில்லறை இல்லை ஐயா, மொத்தம். முழுசு; பெரிசு. சற்று முன் சுந்தரராஜனின் தாயார் கையில் ஒரு பாத்திரத்துடன் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். ஊரெல்லாம் அரிசிக் கஷ்டம் இருக்கிறது. இருந்தாலும் திருப்பதியான் பெயரைச் சொல்லி ஒரு 'பிடி அரிசி போடம்மா' என்று கேட்டார்கள். என் மனைவி அரிசி போட்டாள். அதை வாங்கிக் கொண்டு அந்த அம்மாள் அடுத்த வீட்டுக்குள் போய் வந்ததைப் பார்த்தேன். அவர்கள் பிச்சை எடுக்கும்படி. அதிலும் இந்தத் தெருவிலேயே வீடு வீடாகப் படியேறி எடுக்கும்படி என்னவோ நேர்ந்திருக்கிறது'' என்றார்.

அதைக் கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். அவர் சொன்னதை நம்பாதது போலப் பார்த்தேன். அதே சமயம் சுந்தரராஜனே படபடப்புடன் வீட்டுக்குள் வந்து என்னிடம், ''சார்! என்னைப் பெற்றவள் என் மானத்தைக் குலைப்பதென்று கிளம்பி விட்டாள். உங்கள் மனைவிக்கு அம்மாளிடம் நல்ல பழக்கம் உண்டு. அவர்களிடம் சொல்லி அம்மாவைத் தடுத்து அழைத்து வரச் சொல்லுங்கள்'' என்றார் அழாக்குறையாய்.

நான் என் மனைவியை அழைத்து, ''பக்கத்து வீட்டுப் பெரியம்மாள் இந்தத் தெருவில் அந்தப் பக்கத்தில் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறாளாம். ஓடு. நீ போய்ப் பார்த்து, 'எதுவாயிருந்தாலும் எங்கள் வீட்டில் போய்ப் பேசிக்கொள்ளலாம்' என்று சொல்லி இங்கே அழைத்துக் கொண்டு வந்துவிடு'' என்றேன்.

அவள் போன பிறகு சுந்தரராஜ், ''என் மனைவிக்கு எவ்வளவு சொன்னாலும் புரியவில்லை. மனத்தை அடக்க முடியாமல் ஏதாவது சொல்லி விடுகிறாள். என்னிடம் பணம் வாங்கிவாங்கின அரிசியை என்குழந்தைகளுக்குக்கூட இல்லாமல் அம்மா யாருக்கோ தான தருமம் செய்து விட்டாளே என்ற கசப்பில் பேசுகிறாள். அம்மாவிடம் நான் ஒரு சிறு உதவி கோரினேன். முடியாதென்று சொன்னாள். இன்று காலையில் 'ஏன் முடியாது? அதில் என்ன கேவலம்?' என்று கேட்டேன். அம்மா கையில் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு விர்ரென்று வெளியே போய் விட்டாள். அப்புறம்தான் அவள் இப்படி என்னைச் சந்தி சிரிக்க அடித்து வழி செய்கிறாள் என்று தெரிந்தது. நானே போனால் முன் பின் தெரியாத ஒரு வீட்டார் எதிரில் வாதாட நேர்ந்து விடுமென்று உங்களிடம் ஓடி வந்தேன்'' என்று விவரம் சொன்னார்.

''நீங்கள் உள்ளே வாருங்கள். சொல்லுகிறேன். வாருங்கள்'' என்று என் மனைவி வற்புறுத்திய குரல் கேட்டு மூவரும் வாசல் பக்கம் பார்த்தோம். என் மனைவி மரகதவல்லி அம்மாளுடன் உள்ளே வந்தாள்.

சுந்தரராஜ், ''அம்மா! உனக்கே இதெல்லாம் நன்றாக இருக்கிறதா? நாம் எவ்வளவுதான் சிறுத்து விட்டாலும்...'' என்று முறையிடும் குரலில் தொடங்கினார்.

மரகதவல்லி அம்மாள் ஒரு கையை மேலே சிறிது உயர்த்தி அவரை அடக்கிக் கையிலிருந்த அரிசிப் பாத்திரத்தை அவர் முன் வைத்து, ''இந்தா சுந்தரம். உன்னிடம் வாங்கிய பணத்தில் வாங்கிய அரிசிக்குப் பதில் அரிசி. இதைக் கொண்டு உன் பெண்டாட்டியிடம் கொடுத்துவிடு. நான் ஊருக்குப் போய் வருகிறேன்'' என்றாள்.

''என்னைக் கேவலப்படுத்த வேண்டியதெல்லாம் படுத்தியாகிவிட்டது. ஊருக்குப் புறப்பட்டுவிட்டாயா?'' என்று கேட்டார்.

''உன்னைக் கேவலப்படுத்துவதா? அப்படி என்னடா செய்துவிட்டேன் சுந்தரம்?''


சுந்தரராஜ், ''இந்தத் தெருவிலேயே நீ வீடு வீடாகப் படியேறிப் பிச்சை எடுத்த கேவலப்படுத்துவது இல்லையென்றால் அது வேறு என்ன?'' என்றார்.

மரகதவல்லி அம்மாள் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்தது. ஆனால் அந்தப் புன்னகையின் பின்னால் எவ்வளவு மனவேதனை இருந்தது என்பதை அவள் கண்கள் வெளியிட்டன. அந்த அம்மாள் ஒரு நொடி மௌனமாக நின்றாள். பிறகு ''அன்று நான் கடையில் விலை கொடுத்து வாங்கி வந்த அரிசி குறைவாக இருந்ததைக் கண்டு உன் பெண்டாட்டி 'என்ன இது, வீடு வீடாகப் படியேறிப் பிச்சை எடுத்தீர்களா?' என்று கேட்டாளில்லையா? அவள் காட்டிய வழிதான். 'என் குழந்தைகள் பட்டினி' என்று வந்த ஒரு தாய்க்கு ஓர் அரைப் படி அரிசி கொடுத்துவிட்டு அவளிடம் போய், 'அதற்கு நீ பதில் உதவி செய். கைம்மாறு செலுத்து' என்று கேட்பதை விடப் படியேறிப் பிச்சை வாங்குவது கேவலமில்லையடா சுந்தரம். என்னால் அப்படிக் கேட்க முடியாது என்று நான் எத்தனை தடவை எப்படிச் சொன்னாலும் உனக்கும் உன் பெண்டாட்டிக்கும் புரியாது. நான் வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டாள்.

சுந்தரராஜ் அந்த அம்மாளைத் தடுத்து நிறுத்தக் கூட முயலவில்லை. அவள் போன பக்கமே வெறித்துப் பார்த்து அவர், ''அம்மா இன்றுவரை என்னிடம் நான் சிறுவனாக இருந்த நாட்களில் கூட 'டா'ப் போட்டுப் பேசியதேயில்லை. இப்போது அப்படிப் பேசியது 'என் வயிற்றில் நீ எப்படிடா வந்து பிறந்தாய்?' என்று கேட்டது போல இருக்கிறது சார்!'' என்று சொல்லி உள்ளக் கொந்தளிக்கும் வேதனையைத் தாங்க இயலாமல் கண்களை இறுக மூடினார்.

ஆதார நிலை

எஸ்.ரங்கநாயகி



வாசலைவிட்டுச் சந்திரா இன்னும் உள்ளே சென்றபாடில்லை.

"சந்திரா, என்னம்மா வாசலிலேயே நிற்கிறாயே!" — ஆனந்தம் தங்கள் போர்ஷனிலிருந்து கேட்டபடியே வெளியே வாசலுக்கு வந்தாள்.

சந்திரா பதில் கூறவில்லை. தெருக் கோடியிலேயே கண்கள் நிலைத்தன.

"ஓ. ராஜு இன்னும் வரவில்லையாக்கும்! மணி ஆகிவிட்டதா என்ன?"

"மணி ஆறாகி விட்டதே! ஐந்தரை மணிக்கே தினமும் வருவாரே!" சந்திரா வேதனையோடு கூறினாள்.

ஆனந்தம் மெள்ளச் சிரித்தாள். "நல்ல பெண்ணமடீ நீ! அரை மணி, ஒரு மணி முன்னே பின்னேதான் ஆகும். அதுக்காக இப்படி வாட்டமும் வருத்தமுமாக நின்றுவிடுவார்களோ? பளிங்கு போல் முகத்தை அழகாகத் துடைத்துக் கொண்டு நெற்றித் திலகம் பளிச்சிட நிற்கிறாய். அதில் வேதனையை இழையோட விடாதே. சோபிக்காது. உள்ளே போய் ஒரு முறை குழந்தை கோபுவைப் பார்த்துவிட்டு வா. விஷமக்காரப் பயல். நீ அவன் தூங்குவதாக நினைக்க, அவனோ விழித்துக் கொண்டு சத்தமிடாமல் விஷமத்தில் இறங்கியிருப்பான்!"

சந்திராவுக்கு அப்போதுதான் குழந்தையின் நினைவு வந்தது. உடனே உள்ளே ஓடினாள். ஆனந்தம் கூறியது சரியாகத்தான் இருந்தது. இப்போதுதான் நடக்கக் கற்றிருக்கும் அவள் அருமைச் செல்வன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு தத்தித் தத்தி நடந்து மேஜை அருகில் சென்று கொண்டிருந்தான். சற்றுத் தாமதித்திருந்தால் மேஜை விரிப்பை இழுத்திருப்பான். அதன் மேலுள்ள பொருள்களுக்கு நாசகாலம் ஏற்பட, அவன் முதுகிலும் அடி விழுந்திருக்கும்.

ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு மீண்டும் வாசலுக்கு வந்தாள் சந்திரா. "மாமி! உங்கள் வாய்க்குச் சர்க்கரைதான் போடணும். நான் சற்றுத் தாமதித்திருந்தால் மேஜை சாமான்களுக்கு முடிவு காலம் கிட்டியிருக்கும். இவன் அப்பாவிடம் எனக்குத் திட்டும் கிடைத்திருக்கும்.... அப்பப்பா, இவன் விஷமம் சகிக்கவில்லை."

தாவிய குழந்தையை ஆனந்தம் வாங்கிக் கொண்டு மார்போடு அணைத்து முத்தமிட்டாள்.

வீட்டில் ஒரு பக்கத்தை அவர்களுக்கு வாடகைக்கு விட முன் வந்தபோது அவர்கள் எப்படிப் பழகுவார்களோ என ஆனந்தத்துக்குத் தயக்கம்தான். அவள் வம்சத்தில் குழந்தைகளுக்குக் குறைவில்லை. மூன்று பிள்ளைகள், ஒரு பெண். அனைவருக்கும் விவாகமாகிக் குழந்தைகளும் உண்டு. வேலை நிமித்தம் வட இந்தியாவில் ஒவ்

வோர் இடத்தில் அவர்கள் சிதறிக் கிடந்தனர். அவர்களோடு சென்று தங்காமல் ஆனந்தம் கணவரோடு சென்னையிலேயே சொந்த வீட்டில் தங்கி விட்டாள். முதிர்ந்த வயது. கணவர் சீதாபதிக்கே வயது எழுபது இருக்கும்.

எழுபது வயது முதியவர் தளர்ச்சி கண்டுவிட்டார். வெளியில் தலை நீட்டினாலே மப்ளரைத் தலையைச் சுற்றிக் கட்டுவார். சூடான வெந்நீரில் குளித்தாலும் இரு முறை தும்முவார். நடுவில் மார்வலி எனத் துடிப்பார். ஒரொரு முறை காய்ச்சலும் எட்டிப் பார்க்கும். மாதத்தில் இருபது நாட்களாவது ஏதாவது ஒரு வியாதியில் படுக்கையில் இருப்பார். அத்தனைக்கும் ஆனந்தம் மனம் கோணாது பணிவிடை செய்வாள். அவளுக்கு மட்டும் வயசாகவில்லையா? அவரைவிட அவள் நான்கு வயதுதான் சிறியவள். அப்படி யிருந்தும் எழுந்து நடமாடிச் செய்யக்கூடிய சக்தி எங்கிருந்து கிடைத் திருக்கும்! நெஞ்சோடு பிணைந்த உறவு ஊட்டிய சக்தியாக இருக்குமோ!

கிழவர் சீதாபதியும் நல்லவர்தான். நிமிடத்துக்கொரு முறை 'ஆனந்தம்' என்று அவரால் கூப்பிடாமல் இருக்க முடியாது. என்றைக்கேனும் ஆனந்தம் தலைவலி என்று படுத்து விட்டால் அவர் தனியாய்த் தவிப்பார்.

''மாமி! இருவருக்கும் முதிர்ந்த காலம். இப்படித் தனித்து இருப்பதைக் காட்டிலும் மகனோடு இருக்கலாமே!'' என்று சந்திரா கேட்டுவிடுவாள்.


''இல்லாமலா போய்விடப் போகிறோம்?'' இப்படிக் கூறி ஆனந்தம் மழுப்பிவிடுவாள். பிள்ளைகளும் மாட்டுப்பெண்களும் ஒட்டிப் பழகுபவர்கள் என்பது சந்திராவுக்குத் தெரியும். கடிதங்கள் வரும். அவர்களும் வருவார்கள். தங்களோடு வந்திருக்க அழைப்பும் விடுப்பார்கள். ஆனந்தமோ இத்தனைக்கும் பிடிவாதமாகச் சென்னையிலேயே தங்கியிருந்தாள்.

தூரத்தில் ஸ்கூட்டரின் சத்தம் கேட்டது. ரகு வந்து விட்டான். ஆனந்தம் சந்திராவை நோக்கினாள். அவள் முகம் மலர்ச்சி கண்டிருந்தது.

''அப்பாடி! இப்பத்தான் தெளிவு பிறந்த தாக்கும். போ. உள்ளே போய் ஸ்டௌவைப் பற்ற வை. நேரம் கழித்து வருபவனுக்கு எத்தனை வேலையோ? களைத்துப் போயிருப்பான். காப்பியைக் கொடு'' என்று ஆனந்தம் கூறினாள்.

சந்திரா குதிப்புடன் உள்ளே ஓடினாள்.

ரகு உட்புறம் சென்றதும் சந்திராவும் பின் தொடர்ந்தாள். இருவருக்குமிடையே எத்தனையோ பேச்சுக்கள். குழந்தையை மையமாக வைத்துச் சிரிப்பு, பரிகசிப்பு. அனுபவிக்கும் வயது. அனுபவித்தார்கள். அவர்கள் குடியிருந்த பகுதிக்கும் ஆனந்தம் இருந்த பகுதிக்கும் சம்பந்தம் இல்லை. படியேறி வந்தால்தான் சந்திப்பு. வாசல் வராந்தாவிலும் சந்திப்புக்கு இடம் உண்டு. அதனால் தங்கள் குடியிருப்பு அரண்மனையில் அவர்களே அரசன், அரசி.



இரவு ஒன்பது மணிக்கு வாசற்பக்கம் வந்த ரகு திடுக்கிட்டான். ஆனந்தம் அங்கேயே அமர்ந்து கிடந்தாள்.

"என்ன மாமி, படுக்கப் போகவில்லையா?"

"அடுத்த தெருவில் பாகவத உபன்யாசம். எனக்குத் தலைவலி என்று போகவில்லை. ஒன்பது மணிக்கெல்லாம் பாகவதர் முடித்து விடுவாரே, இவரைக் காணுமே!"

சந்திரா வாசலுக்கு வந்து விட்டாள். "மாமி! என்னைப் பரிகசித்தீர்களே, இப்ப மாமா வராமல் உங்கள் மனம் எவ்வளவு பாடுபடுகிறது பாருங்கள்.... இந்த ஆண்களுக்கே வீட்டு மனைவியைப் பற்றிக் கவலையில்லை.... பெண்களுக்கு ஆதாரம் தாங்கள் தான் என்ற கர்வம் போதும்! நினைத்தபடியெல்லாம் வீடு திரும்புவார்கள்." ஆனந்தத்தைப் பரிகசித்ததில் ஆரம்பித்த பேச்சு மொத்தமாக ஆண்களைக் குற்றம் சாட்டுவதில் வந்து நின்றது.

"அதுக்குச் சொல்லவில்லையடி நான். இருட்டு வேளை. எங்கேனும் விழுந்து கை கால் மடங்கிவிட்டால் அவருக்கே அல்லவோ திண்டாட்டம்!" என்றாள் ஆனந்தம்.

தான் போய்ப் பார்த்து வருவதாக ரகு கிளம்பிய நேரத்தில் சீதாபதியே திரும்பி விட்டார். சீதாபதி பின்தொடர ஆனந்தம் தங்கள் பகுதிக்குள் நுழைந்தாள்.

படுக்கையை விரித்துக் கொண்டே சந்திரா ரகுவிடம் சிரித்தபடி கூறினாள். "தம்பதிகள் எனப் பிணைந்துவிட்டபோது வயதுக் கணக்கில் பேதப்படுவதில்லை பார்த்தீர்களா? அதுவும் புது மணத் தம்பதிகளும் கிழத் தம்பதிகளும் அநேகமாக ஒரே மாதிரியான வாழ்க்கையைத்தான் நடத்துகிறார்கள்."

"நீ சொல்வது புரிகிறது. நீ என் வருகைக்காக வாசலில் தவம் செய்து காத்திருப்பது போல் மாமியும் காத்திருப்பதைச் சொல்கிறாய்."

"அது மட்டுமா? நம்மிடையே காணும் அனைத்தையும் அவர்களிடையேயும் காண்கிறேன். காலையில் எழுந்ததும் உங்களுக்குக் குளிக்க வெந்நீர் எடுத்து வைப்பது. வேஷ்டி பனியனைக் கவனித்து வைப்பது. ஆபீசுக்குப் புறப்படும்போது துணிமணிகள் எடுத்துத் தருவது. திரும்பும்போது தயாராகக் காப்பியை நீட்டுவது அனைத்தும் அந்த மாமியும் மாமாவுக்காகச் செய்கிறார். ஒரு பேதம், நீங்கள் ஆபீசுக்குப் போகிறீர்கள். அந்த மாமா பொழுதுபோக்குக்காக வெளியே போகிறார்."

"ஒப்பிடுவதை அதோடு நிறுத்திவிட்டாயே! நான் உனக்குச் சமையலுக்குக் கறிகாய் நறுக்கித் தருவது, தண்ணீர் பிடித்துத் தருவது. இதெல்லாம் அந்த மாமா மாமிக்குச் செய்கிறார்."

"ஐயோ, போதுமே. உங்கள் பெருமையை நீங்கள்தான் கூறிக் கொள்ள வேண்டும்."

"பின்னே மாமாவின் பெருமையை அந்த மாமி கூறுவதுபோல் நீ என்றைக்கேனும் கூறியிருக்கிறாயா?"

"அதையே திருப்பிப் போடுங்கள். நீங்கள் என்றைக்காவது என்னைப் பற்றிப் பெருமையாகக் கூறியதுண்டா?"

"சந்திரா! இரு குடும்பத்து ஒற்றுமையைக் கூறினாயே, இங்குபோல் அங்கு சண்டை இருக்கிறதா பார்!"

"அது அந்த மாமாவைப் பார்த்து நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது."

இதே நேரத்தில் சீதாபதி ஆனந்தத்தைக் கடிந்துகொள்வது காதில் விழுந்தது. ரகு சந்திராவைப் பொருள்பட நோக்கிவிட்டுச் சிரித்தான்.

"சரி, சரி. சண்டையோ, ஒற்றுமையோ எதிலுமே எல்லா வயதிலும் கணவன் மனைவி ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள். ஏக்கமும், துயரமும், ஆனந்தமும் மகிழ்ச்சியும் கூடச் சமமாகத்தான் இருக்கிறது. அதோடு பெண்கள் எப்போதும் ஆண்கள் துணையில்தான் எந்தக் காலத்திலும் நிற்கிறோம்." சந்திரா முற்றுப்புள்ளி வைத்தாள்.

அன்றைய தினம் சந்திரா கணவனை ஆபீசுக்கு அனுப்பிவிட்டு, வராந்தாவிலேயே நின்று ஆனந்தத்தோடு பேசிக்கொண்டிருந்தாள். அப்போது வாசலில் ஒருவன் வந்து அந்தத் திடுக்கிடும் செய்தியைக் கூறினான். "ரகுவின் ஸ்கூட்டரில் ஒரு பஸ் மோதிவிட்டது. அவனை ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள்."

"ஐயோ!" சந்திரா அலறி விட்டாள். சீதாபதி உடனே சென்று ஒரு டாக்ஸியை அழைத்துவர மூவரும் குழந்தையுடன் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தனர்.

கணவனைப் பார்ப்பதற்குள் தன் மூச்சே நின்றுவிடும்போல் சந்திரா உணர்ந்தாள்.. அவள் பயந்தது போல் ரகு ஆபத்தான நிலையில் இல்லை. கீழே விழுந்த அதிர்ச்சியில் தலையில் அடி. உடலில் சில இடங்களில் சிராய்ப்பு. அவனுக்குக் கட்டுக்கள் போடப் பட்டிருந்தன.

கணவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு சந்திரா கண்ணீர் விட்டாள். ரகு மெள்ள அவள் தலையைக் கோதிவிட்டான். "அசடு போல் எதற்கு இப்படி அழுகிறாய்? ஆபத்தில்லாமல் தப்பி விட்டேனே. சீக்கிரம் வீடு திரும்பி விடுவேன்."

டாக்டரைச் சந்தித்த சீதாபதி ரகுவுக்கு ஆபத்தில்லை என்பதை அறிந்துகொண்டு நிம்மதியாக மூச்சுவிட்டார். சந்திராவைத் தேற்றி வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். அன்று முழுதும் அவளுக்குச் சாப்பாடே இறங்கவில்லை. ஆனந்தம் அவளைத் தேற்றினாள். "இப்படிப் பயப்பட இப்போது என்ன வந்துவிட்டதாம்? நீ செய்த பூஜா பலன் உயிருக்கு ஆபத்தில்லாமல் தப்பிவிட்டான், ரகு!"

"மாமி! நீங்களே நினைத்துப் பாருங்கள். அவர் இல்லாமல் என்னால் தனித்து வாழ முடியாது. படிப்பு இருக்கிறது, சம்பாதிக்கலாமே என்பார்கள். ஆனால் அதெல்லாம் ஒரு வாழ்வா?"

"எனக்குத் தெரியாதா சந்திரா? இளம் வயது. புருஷத் துணை அவசியம் வேண்டும்."

"வயதுக்கு மட்டுமில்லை மாமி. என்றைக்குமே பெண் ஒருத்தி புருஷனைச் சார்ந்துதான் நிற்கிறாள். கடவுள் வகுத்துள்ள வழி



யில் எந்த வயதிலும் புருஷன் தனித்து நிற்க முடிகிறது.''

ஆனந்தம் பதில் கூறவில்லை.

ஒரு வாரம் சென்றது. ஆஸ்பத்திரிக்குத் தவறாமல் போய் வந்தாள் சந்திரா. எத்தனையோ கோவில்களுக்குப் பிரார்த்தனைகள் செய்து கொண்டாள்.

ரகு வீட்டுக்கு வந்து விட்டான். சீக்கிரமே குணமடைந்து ஆபீசுக்கும் போக ஆரம்பித்து விட்டான். இல்லறம் பழையபடி இன்பத் தோணியில் சென்றது.

மாதங்கள் மேலே உருண்டன. ஒரு மாத லீவில் வெளியூர்களுக்கு மனைவி குழந்தையுடன் பயணம் கிளம்பினான் ரகு. சொல்லப் போனால் அது ஒரு க்ஷேத்திராடனம். அவன் விபத்தில் சிக்கிய போது சந்திரா நேர்ந்து கொண்ட பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பயணம்.

சுற்றுப் பயணம் முடிந்து ஒரு மாதத்துக்குப் பிறகு வீட்டில் காலடி வைத்ததுமே இப்படியொரு செய்தி கேட்க நேரிடும் என ரகுவும் சந்திராவும் நினைத்திருக்கவில்லை. அவர்கள் புறப்பட்டுச் சென்ற ஒரு வாரத்துக்குள் சீதாபதி திடீரென்று மாரடைப்பால் காலமாகி விட்டார். பிள்ளைகள் குடும்பமும், பெண் குடும்பமும் வந்து விட்டன. காரியமெல்லாம் நல்லபடி முடிந்து, இன்னும் இரண்டு நாட்களில் மீண்டும் அவர்கள் தங்கள் ஊருக்குப் போய்விடப் போகிறார்கள். சந்திரா தவித்து விடுவாள் என அவளுக்கு இது பற்றிக் கடிதம் எழுதவில்லை.

சந்திரா நேராக ஆனந்தத்திடம் சென்று கதறிக் கதறி அழுதாள். சமயத்தில் தங்கள் உதவியும் கிட்டாமல் போய்விட்டது குறித்து எல்லையற்ற வருத்தம். ஆனந்தம் மூலையோடு அமர்ந்து கிடந்தாள். பிள்ளைகள் வற்புறுத்திக் கூப்பிட்டும் ஆனந்தம் சென்னையை விட்டு நகராமல் அந்த இல்லத்திலேயே தங்கி விட்டாள். பெண், பிள்ளைகள் யாவரும் ஊருக்குப் போய்விட்டனர்.

சந்திராவுக்கு ஒரு விதத்தில் வியப்பு. ஆனந்தம் இனி எப்படித் தனித்து இயங்க முடியும்? ஆதரவு தரும் ஆதாரம் முறிந்து விட்டது. பற்றுக்கோடற்று அவளால் தனித்து இருக்க முடியுமா? ஆயினும் அவள் எதிர்பார்த்தபடி ஆனந்தம் தவித்துவிட வில்லை. வழக்கப்படி எழுந்தாள்; வேலைகளைக் கவனித்தாள். பூஜைக்கான நேரத்தை மட்டும் அதிகமாக்கிக் கொண்டாள்.

சந்திரா ஆனந்தத்திடம் ஆறுதல் அளிக்கும் வகையில் கூறினாள். ''மாமி! என் கணவரைக் காப்பாற்றிய ஆண்டவனுக்கு நான், காணிக்கை செலுத்திக் கொண்டிருந்த வேளையில், உங்கள் கணவரை ஆண்டவன் அபகரித்துக்கொண்டுவிட்டாரே! கணவனற்ற வாழ்வு பெண்களுக்கு நடு சமுத்திரத்தில் தத்தளிக்கும் நிலை.... ஆனாலும் நீங்கள் மனம் தேறியிருக்க வேண்டும். துயரத்தின் காரணமாக உங்களை வாட்டிக் கொள்ளக் கூடாது....''

ஆனந்தம் மெள்ளத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, ''சந்திரா! இப்பொழுது எனக்கு ஓரளவு அமைதி என்றுதான் சொல்லுவேன்'' என்றாள்.

சந்திரா திடுக்கிட்டு அவளை நோக்கினாள்: முகசாம்ராஜ்யத்தில் அரச பதவியில் வீற்றிருந்த குங்குமப் பொட்டும் வைர மூக்குத்தித் திருகும் விடைபெற்றிருந்த போதிலும் பொலிவு குறையவில்லை. ''மாமி; எனக்கு விளங்கவில்லை.''

''சந்திரா, மாமாவின் வயதும், உடல் நிலையும் உனக்குத் தெரியும்.''

''ஆமாம், அவருக்கு எப்போதுமே உடல் நிலைக் கேடு.''

''இந்த நிலையில் அவரை விட்டு விட்டு என் பிராணன் நின்று விடப் போகிறதே என்று என் மனத்தில் எப்போதும் அச்சம். அதனால் மாமா இருந்தவரை ஆண்டவனிடம் 'என்னை அழைத்துச் சென்றுவிடப்பா' என்று நான் பிரார்த்தித்ததில்லை. நீயே நினைத்துப் பார். நான் இல்லாவிடில் அவருக்குப் பிள்ளைகள் சேவை செய்ய முடியுமா? பிள்ளைகள் நல்லவர்கள்தான் என்றாலும், அவர்கள் ஆபீசைக் கவனிப்பார்களா, அப்பாவைக் கவனிப்பார்களா? மாட்டுப் பெண்கள் நான் படுத்து விட்டால் செய்வார்கள். ஆனால் மாமனார் ஸ்தானத்தில் இருக்கும் அவருக்குக் கூச்சமின்றிச் சேவை செய்ய முடியுமா? பெண்ணின் வீட்டில் மாப்பிள்ளையின் கீழ் நிற்க முடியுமா?''

சந்திராவுக்கு எல்லாமே புரிவதுபோல் இருந்தது. ''மாமி! எவ்வளவு ஆழ்ந்த யோசனை உங்களுக்கு?''

''சந்திரா! ஏதோ என் மனத்தில் படுவதைக் கூறுகிறேன். பெண்ணாகப் பிறந்தவள் முதலில் தந்தையிடம், பிறகு கணவனிடம், முடிவில் மகனிடம் ஆதரவு கண்டு ஒருவரைச் சார்ந்து நிற்பவள் என்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் பொருளாதாரப் பிரச்னையில் எழுந்தவையாக இருக்கலாம். உன்னைப் போன்ற இள வயதுப் பெண்கள் ஆண் துணையின்றிக் கண்டிப்பாகத் தனித்து நிற்க முடியாது என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் முதிர்ந்த வயதில் ஓர் ஆணுக்கு மனைவிதான் பெரிய ஊன்றுகோலாக, ஆதாரமாக நிற்க முடியும். அவளின்றி அவன் தனித்து நிற்க முடியாது என்பது என் எண்ணம். அதனால்தான் கடைசிக் காலத்தில் உடல் சக்தி இழந்திருக்கும் நேரத்தில் நான் இல்லாமல் அவர் தனித்து நின்று தவித்து விடப் போகிறாரே என்ற அச்சம் என் மனத்துள் இருந்து கொண்டே இருந்தது. அப்படி அல்லல்படாமல் போய் விட்டது அவர் செய்த பாக்கியம். இனிமேல் நானும் ஆண்டவனிடம் என்னையும் மேலேற்றிவிடப் பிரார்த்திக்க வேண்டும்...'' என்றாள் ஆனந்தம்.

சந்திரா தன் பகுதிக்குத் திரும்பினாள். இத்தனை நாட்களும் புரியாததைப் புரிந்து விட்டதாக நினைத்திருந்தோமே. மனைவிக்குப் புருஷனின் துணை ஒரு குறிப்பிட்ட வயதுவரை அவசியம் போல், முதிர்ந்த வயதில் புருஷன் மனைவியின் துணையில்தான் நிம்மதி காண முடியும் என உணர்த்திவிட்டாளே ஆனந்தம்! தாம்பத்திய வாழ்வில் இளமைக்கும் முதுமைக்கும் ஆதார நிலையில் எத்தனை வேறுபாடு!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

மக்ளீன்ஸ்


உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!



இவ்விதம் சோதியுங்கள்



1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.



மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த
பற்களை வெண்மையாக்குகிறது!

TERED No. M. 4392
ered as a Newspaper in Ceylon